www.tamilarangam.net

# தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு



ப.புஷ்பரட்ணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு

பரமு. புஷ்பரட்ணம்
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

குமரன் பப்ளிஷர்ஸ்
3, மெய்கை விநாயகர் தெரு,
வடபழனி, சென்னை - 600 026.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற்பதிப்பு : ஆகஸ்டு 2000
©

விலை: இந்தியா : ரூபா.100
இலங்கை : ரூபா.200

Title : SRILANKAN TAMIL CULTURE:
An Archaeological Perspective

Author : Paramu. Pushparatnam
Senior Lecturer, Department of History,
University of Jaffna

PUBLISHERS : KUMARAN PUBLISHERS
3, Meigai Vinayagar Street
Vadapalani,
Chennai - 600 026.

## சமர்ப்பணம்

அறுபதாவது அகவை அடையும் இலங்கைப்
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முன்னாள்
உபதலைவரும் உலகத் தமிழாராய்ச்சி இலங்கைக்
கிளைத் தலைவரும், தற்போதைய இந்து கலாச்சாரத்
திணைக்கழக கலைக்களஞ்சியப் பிரதம பதிப்பாசிரியரும்
இலங்கையின் தலைசிறந்த வரலாற்றறிஞர்களில்
ஒருவருமான எமது வரலாற்றாசான்

**பேராசிரியர் சி. பத்மநாதனுக்கு**
**இந்நூல் சமர்ப்பணம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

# வாழ்த்துரை

கலாநிதி எ. சுப்பராயலு
தொல்லியல் பேராசிரியர்
கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005.

இலங்கை வரலாறு பற்றி ஆங்கிலத்தில் பல நூல்கள் இருந்த போதிலும் தமிழில் ஒரு சிலவே உள்ளன. அந்த வகையில் திரு பரமு புஷ்பரட்ணம் அவர்களால் எழுதப்பட்டுள்ள இந்நூல் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. அவர், குறிப்பாக வட இலங்கை அல்லது வன்னிப்பகுதி வரலாறு, பண்பாட்டு வளர்ச்சி பற்றிய புதிய கருத்துகளைத் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் இந்நூலில் முன்வைத்துள்ளார். அவர் கையாண்ட பெரும்பாலான தொல்லியல் சான்றுகள் (நாணயங்கள், மட்பாண்ட எழுத்துக்கள் முதலியன) அவரே மேற்கொண்ட களஆய்வில் திரட்டப்பட்டவை என்பதை இங்கே குறிப்பிடல் வேண்டும். இலங்கையில் தமிழ், சிங்கள குடியேற்றங்கள் இந்தியாவிலிருந்து பெயர்ந்து சென்றவை என்ற கொள்கையின் அடிப்படையில் இதுவரை எழுதப்பட்டுள்ள நூல்களில் இலங்கை வரலாற்றின் தனித்தன்மை உணரப்படவில்லை என்று ஆசிரியர் கருதுகிறார். இந்தியத் தொடர்பை அவர் மறுக்கவில்லை. இருப்பினும் இலங்கைக்குள்ளேயே தோன்றி வளர்ந்த சில சிறப்புத் தன்மைகளை தென்னிந்திய அல்லது இந்தியக் கண்ணோட்டத்தில் மட்டும் புரிந்து கொள்வது கடினம் என்ற அவர் கருத்து கவனிக்கத்தக்கது.

இலங்கையில் உள்ள பண்டைய பிராமி எழுத்தில் எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான பிராகிருத கல்வெட்டுக்கள் பெரும்பாலும் இதுவரை ஒரு சார்புத்தன்மையில் ஆராயப்பட்டுள்ளன. செனிவரட்னா போன்ற ஒருசில வரலாற்று ஆசிரியர் இதற்கு விதிவிலக்கு. அவர்கள் போன்றோரின் ஆராய்ச்சி விரிவுபடுத்தப்பட்டு மேலெடுத்துச் செல்லப்படுகிறது இந்நூல். திரு பரமு புஷ்பரட்ணம் பிராகிருதக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கல்வெட்டுக்களில் வரும் வேள், பரத, ஆய், பருமக போன்ற சொற்களை பல கோணங்களில் ஆராய்வதோடு அண்மைக்காலத்தில் இவ்வாசிரியராலும் மற்றவர்களாலும் கள ஆய்வில் தொகுக்கப்பட்ட நாணயங்கள், மட்கலப் பிராமி எழுத்துகள் மற்றும் ஊர்ப்பெயர்கள் தரும் செய்திகளோடு ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்து அரிய முடிவுகளைத் தந்துள்ளார். தமிழகத்தில் சங்க காலத்தில் வளர்ந்து வந்த அரசு உருவாக்கத்திற்கு இணையாக இலங்கையிலும் அரசு உருவாகி வந்தது எனக் குறிப்பிடும் அவர் அது தென்னிந்தியாவிலிருந்து வந்த படையெடுப்பு என்பதைவிட தனித் தன்மை கொண்ட உள்நாட்டு வளர்ச்சி என வலியுறுத்துகிறார்.

வடஇலங்கையில் கி.பி.7ஆம் நூற்றாண்டிலேயே தமிழ் அரசு ஒன்று உருவாகி விட்டது என்பதை "பத்தாம் நூற்றாண்டில் கதிரமலையும் சிங்கை நகரும்" என்ற நீண்ட அதிகாரத்தில் பல வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் நிறுவியுள்ளார். இலங்கையில் எழுதப்பட்ட பாளி இலக்கியங்களில் ஒருசார்புத்தன்மை கொண்ட வரலாற்றுப் புனைவினால் புத்தமதம் சாராத பல செய்திகள் மறைக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் விட்டன என்பதால் இத்தமிழரசு பற்றிய செய்திகள் இதுவரை தெளிவற்று இருந்தன. அண்மைக்காலத் தொல்லியல் சான்றுகள் இந்த இருண்ட பகுதியைப் பற்றி ஓரளவு வெளிச்சம் தந்துள்ளன என்பது இந்நூலைப் படிப்பவர்கள் நன்கு உணரமுடியும். திரு. பரமு புஷ்பரட்ணம் மேலும் முயன்று இலங்கை வரலாற்றிற்கு புத்தொளி கொடுப்பாராக.

www.tamilarangam.net



# அணிந்துரை

கலாநிதி கா. இராஜன்
தொல்லியல் இணைப் பேராசிரியர்
கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005.

தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு என்ற இந்நூல் தொல்லியல் ஆய்வில் முதன்மைச் சான்றுளாகக் கருதப்படும் நாணயம், கல்வெட்டு, அகழ்வாய்வு மற்றும் மேற்பரப்பாய்வு ஆகியவற்றில் கிட்டும் தொல்பொருட்களின் அடிப்படையில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் குறிப்பாக வடஇலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையில் காணப்படும் வரலாற்றுரீதியான தொடர்பினை வரலாற்றுத் தொடக்ககாலம் தொட்டு காணப்படும் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துகிறது. ஒரு தொடர்ச்சியான காலவரை முறைப்பட்ட கட்டுரையின் தொகுப்பாக இல்லாதிருப்பினும் வரலாற்றில் நிரப்பப்படாத இடங்களை இனங்கண்டு அவற்றை முதன்மைச் சான்றுகள் மூலம் நிறைவு செய்ய முயன்றிருக்கும் விதம் பாராட்டுக்குரியது.

எந்தவொரு நாட்டின் வரலாறும் ஒரு குறிப்பிட்ட தன்மையதான சான்றின் அடிப்படையில் மட்டுமே எழுதப்படுவதை தவிர்க்க வேண்டும். காரணம், அவை உண்மை வரலாற்றுடன் முரண்படும் போக்கைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, சங்க இலக்கியங்கள் சமணமதம், நாணயம், எழுத்துக்கள் ஆகியன பற்றி அதிகமாகக் குறிப்பிடுவதில்லை. அதே போல் தமிழ்-பிராமி எழுத்துப் பொறித்த பாறைக் கல்வெட்டுக்கள் சமண மதம் தொடர்பானவையாக மட்டுமே இருப்பதை இங்கே குறிப்பிடலாம். எனவே இலக்கியம், நாணயம், கல்வெட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்ற ஏதாவதொரு சான்றை சார்ந்து ஆய்வு செய்தால் அது உண்மை வரலாற்றுடன் முரண்படும். இது இலங்கை வரலாற்றுக்கும் பொருந்தும் என்பதை புத்த மதச் சார்பான கல்வெட்டுக்கள், பாளி இலக்கியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே எழுதப்பட்ட வரலாற்றினைக் குறிப்பிடலாம். இம்முரண்பட்ட நிலையினை மனதில் நிறுத்தி இந்நூல் ஆசிரியர் அண்மைக்காலங்களில் கிடைத்த நாணயங்கள், மட்பாண்டக் கீறல்கள், எழுத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வரலாற்றின் தன்மையினை, போக்கினை ஈடுசெய்ய முயற்சிக்கிறார். இம்முயற்சிக்குப் பரந்துபட்ட கள ஆய்வும், செறிவானஅகழாய்வும் தேவை என்பதை இவரது ஆய்வுகள் உணர்த்துகின்றன. ஆயினும் கிடைத்திருக்கும் சான்றுகளின் அடிப்படையில் இதுவரை அறுதியிட்டுக் கூறப்பட்ட சில முடிவுகள் இவரது ஆய்வுகளால் கேள்வி குறியாக்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலங்களில் இவர் தமிழ்நாட்டு வரலாற்று ஆசிரியர்களுடனும், தொல்லியலாளர்களுடனும் கொண்டுள்ள தொடர்புகள் இதுவரை படித்து அறியப்படாமல் இருந்த முதன்மைச் சான்றுகளை படித்தறியவும், அதன் அடிப் படையில் இந்நூல் உருவாகவும் காரணமாக அமைந்துள்ளது என்பது பாராட்டத்தக்கது. பெருங்கற்படைக் காலத்தில் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே காணப்பட்ட பண்பாட்டுத் தொடர்பு எங்ஙனம் வேளிர் எழுச்சிக்கும், அரசு உருவாக்கத்திற்கும் அடிகோலியது என அவர் வாதிட்டாலும் இவை கருதுகோள் என்ற நிலையிலேயே நின்றுவிடுகிறது. இக்கருத்தை வலுவூட்ட எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் களஆய்வு முடிவுகளும், நிலவியல் அடிப்படையிலான பதிவுகளுமே நிலைநிறுத்தும். பரதவர் பற்றிய ஆய்வில் அனைவரும் தமிழர்களே என்ற கண்ணோட்டத்தில் மட்டும் அணுகாது காலங்காலமாக கடற்கரையோரங்களில் மீன்பிடித் தொழிலும் பின்னர் முத்து, குதிரை வியாபாரத்திலும் ஈடுபட்ட தொன்மைக் குடிகளான இவர்கள் மொழி, மதத்தின் அடிப்படையில் சிங்களவர், தமிழர் எனப் பிரிந்து இனங்காண ப்பட்டதை வரலாற்றுரீதியாக இவர் வலியுறுத்துகிறார்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் தமிழக அரசு தொடர்புடன் யாழ்ப்பாணத்தில் நிலையான அரசு உருவாவதற்கு முன்பே பத்தாம் நூற்றாண்டளவில் வட இலங்கையில் இரு அரசுகள் இருந்தன என்பதற்கான சான்றுகளை முன்வைத்து

www.tamilarangam.net



கருத்துக்களை வெளிப்படுத்தும் பொழுது முந்தைய வரலாற்றாசிரியர்களான முதலியார் இராசநாயகம், சுவாமிஞான ப்பிரகாசர், இந்திரபாலா, பத்மநாதன், தங்கேஸ்வரி ஆகியோரின் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு அவர்களின் கருத்துக்களில் காணப்படும் நிறைகுறைகளை சுட்டிக் காட்டி தனக்குள்ளேயே கேள்வியை எழுப்பி அதை நிறைவு செய்யும் வகையில் கருது கோள்களை எடுத்துச் சென்றுள்ள விதம் பாராட்டிற்குரியது.

இந்நூலாசிரியரே இந்நூலின் முன்னுரையில் குறிப்பிடுவது போல் சில கருத்துக்கள் மறுக்கப்படலாம், மாற்றப்படலாம், வலுவூட்டப்படலாம். அவற்றிற்கு எதிர்காலத்தில் முதன்மைச் சான்றுகளை முனைப்புடன் தேடவேண்டியது அவசியம் என்பதை இந்நூல் உணர்த்துகிறது. அந்தவகையில் முதன்மைச் சான்றுகளின் அடிப்படையில் எழுந்துள்ள இந்நூலும், இதில் காணப்படும் கருதுகோள்களும் எதிர்கால ஆய்விற்கு வழிவகுக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. இதுவரை ஆய்வுலகிற்கு வெளிக்கொணரப்படாத தொல்லியல் சான்றுகளுடன், நாணயங்களை ஒளிப்படங்கள், வரைபடங்கள் கொண்டு அணிசேர்த்த இந்நூலாசிரியரின் வரலாற்றுப்பணி மென்மேலும் தொடர வேண்டும்மென வாழ்த்தி மகிழ்கிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நன்றியுரை

இந்நூல் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் துறையின் ஆய்வு மாணவனாக இருந்து எழுதப்பட்ட ஒன்றாகும். அக்காலப்பகுதியில் தமிழ்நாட்டின் தொல்லியல் மற்றும் வரலாற்று அறிஞர்களுடன் ஏற்பட்ட நெருக்கமான தொடர்பும், கருத்துப்பரிமாறல்களும் இலங்கைத் தமிழர் பண்பாட்டை முதன்மைச் சான்றுகளின் அடிப்படையில் புதிய கண்ணோட்டத்தில் எழுதலாம் என்ற எண்ணக்கருவை ஏற்படுத்தியது. அதை ஏற்படுத்திக் கொடுத்தவர்களில் எனது கலாநிதிப்பட்ட ஆய்வு வழிகாட்டியாக இருக்கும் தொல்லியல் பேராசிரியரும், துறைத்தலைவருமான எ. சுப்பராயலு அவர்களுக்கு முக்கிய பங்குண்டு. ஆய்வு மாணவனான என்னைத் தன் துறைசார் ஆசிரியர்களுள் ஒருவன் போல் மதித்து கணினி உட்பட துறையின் கல்விசார் மூலவளங்களை உரிமையோடு பயன்படுத்த அனுமதி அளித்ததோடு வடஇலங்கையில் எம்மால் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகளை எவ்வாறு தமிழகத்தில் கிடைத்த சான்றுகளுடன் ஒப்பிட்டு இலங்கைத்தமிழர் பண்பாட்டை ஆராயலாம் என்பதற்கு பேராசிரியரின் நீண்டகால ஆய்வுப்புலமை, ஆலோசனைகள், கருத்துப் பரிமாறல்கள் பெரிதும் உந்துசக்தியக இருந்தது. அதேபோல் அவர் துறைசார்ந்த சிறப்புநிலைப் பேராசிரியர் புலவர் செ. இராசு, இணைப்பேராசிரியர்களான கா.இராஜன், அ.கிருட்ணன், ந.அதியமான், கலாநிதி ப.செயக்குமார் ஆகியோர் காட்டிய அக்கறை, உதவிகள், நட்புறவு என்பன என்னை ஆய்வுப்பணியில் அக்கறை கொள்ளச் செய்தது. இந்நூலுக்கு இன்றைய தலைசிறந்த கல்வெட்டு அறிஞர்களில் ஒருவரான எனது தொல்லியல் பேராசிரியர் எ. சுப்பராயலு அவர்கள் வாழ்த்துரையையும், தொல்லியியலாளர் மத்தியில் நன்கு பரீட்சயமடைந்து வரும் தமிழ் நாட்டின் இளம் தொல்லியலாளர்களில் ஒருவரான கலாநிதி கா. இராஜன் அவர்கள் அணிந்துரையையும் வழங்குவதுடன் இந்நூலைத் தமிழகத் தொல்லியல் கழக கருத்தரங்கில் வெளியிட அனுமதி அளித்தமையும் எனக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளன. அவர்கள் அனைவருக்கும் என் இதய பூர்வமான நன்றிகள்.

வட இலங்கையில் எனது கள ஆய்வின் போது கிடைத்த சிலவகை நாணயங்கள் மற்றும் தொல்லியல் சின்னங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பவற்றை ஆராய்வதற்குரிய வாய்ப்பு, வசதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருக்கவில்லை என்பதை 1993இல் வெளிவந்த எனது நூலின் முன்னுரையில் குறிப்பிட்டிருந் தேன். ஆனால் தமிழகத்தில் கிடைத்த அந்த வாய்ப்பையும், வசதியையும் முடிந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டதாகவே கருதுகிறேன். அவற்றுள் நாணயங்களை ஆராய்வதற்கு காரணமாக இருந்தவர்களுள் காலஞ்சென்ற முதுநிலைப் பூச்சியியலாளர் அளக்குடி ஆறுமுகம், அவர் மைந்தன் நாணயவியலாளர் திரு.ஆறுமுக சீதாராமன் ஆகியோர் காட்டிய ஆர்வம், உதவிகள் என்றும் நன்றிக்குரியவை. தமிழ் நாட்டு நாணயங்கள் பலவற்றைக் கண்டுபிடித்து ஆராய்ந்து அவற்றை நூல் உட்படக் கட்டுரைகளாகவும், பத்திரிகைச் செய்திகளாகவும் இருநூறுக்குமேல் பிரசுரித்த திரு. சீதாராமனின் அனுபவம் எமக்குக் கிடைத்தமை வட இலங்கை நாணயங்களை ஆராய் வதற்குப் பெரிதும் துணையாக இருந்தது.

இந்நூலை எழுதிய போது எனக்கு உதவியவர்கள் மேலும் பலர். அவர்களுள் தமிழ் நாட்டின் முதன்மைச் சாசனவியலாளர்களில் ஒருவரான ஐராவதம் மகாதேவன், தமிழ் நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை முதுநிலைக் கல்வெட்டாய்வாளர் கலாநிதி சு.இராசகோபால், தினமலர் ஆசிரியரும் நாணயவியலாளருமான திரு. இரா.கிருஷ்ணமூர்த்தி, தமிழ்ப் பல்கலைக்கழக சிற்பத்துறைப் பேராசிரியர். இராசு காளிதாஸ், கலாநிதி.இரா.சங்கரன், கலாநிதிப்பட்ட ஆய்வு மாணவி செல்வி மா.பவானி, திட்ட ஆய்வாளார்களான திரு. அ.சந்திரபோஸ், திரு. மு. ராஜேஸ், நிகர்நிலைக் கண்காணிப்பாளர் திருமதி. சு .செந்தமிழ்செல்வி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் அனைவருக்கும் என் நன்றிகள்.

யாழ்ப்பாணத்தின் அசாதாரண சூழ்நிலையிலும் பல்கலைக்கழக வளர்ச்சியில் தன்னை இணைத்துக் கொண்ட துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ் நாட்டில் கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொள்வதற்கு எனக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தமையை இவ்விடத்தில் நன்றியோடு நினைவுகூரவிளைகிறேன். மேலும் இக்கலாநிதிப்பட்ட ஆய்வைத் தொடர்ந்து மேற்கொள்ள உரிய விடுப்பை வழங்க அனுமதியளித்த முன்னாள் துறைத் தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், தற்போதைய துறைத் தலைவர் பேராசிரியர் ச.சத்தியசீலன் மற்றும் எனது ஆய்வுப்பணிக்கு என்றும் துணையாக இருந்து வேண்டிய பல உதவிகளைச் செய்துவரும் முது முனைவர் பேராசிரியர் வி.சிவசாமி, நூல்களை எழுதுமாறு அவ்வப்போது கடிதம் எழுதி என்னை ஊக்கப்படுத்திய பேராசிரியர்களான சு.சுசீந்தி ரராஜா, செ.பத்மநாதன் ஆகியோருக்கும் என் நன்றிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்நூல் வெளிவரும் நிலையில் வன்னிப்பிராந்தியத்தில் கள ஆய்வை மேற்கொள்ளப் பல நிலையில் உதவியாக இருந்த முன்னாள் துணைவேந்தர் அமரர் துரைராசா, கலைப்பீடாதி பதியாக இருந்த பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன், தற்போதைய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் ஆகியோரையும், எனக்கு வரலாறு, தொல்லியல் பாடங்களைக் கற்பித்த அனைத்து ஆசிரியர்களையும், எனக்குத் துணையாக இருந்த ஆசிரிய மாணவர்களையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

இந்நூல் கனடா நாட்டில் திருமணப்பதிவாளராகக் கடமையாற்றும் எனது மாமனாரின் (சிவராசா) சிவா வெளியீடாக வருகிறது. இவ்வுதவி உறவு முறைக்கு அப்பால் தமிழர் பண்பாட்டை தெரிந்து கொள்வதில் அவருக்குள்ள அக்கறையின் அடையாளமாகும். அவருக்கும் என் நன்றிகள். இந்நூல் குறுகிய காலத்தில் வெளிவரக் காரணமாக இருந்தவர் என் நாட்டுப் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான திரு.செ. கணேசலிங்கம் அவர்கள். அவருக்கும், அவரது குமரன் பப்ளிஷர்ஸ் நிர்வாகிகளுக்கும், ஒளிஅச்சுக் கோர்ப்பு செய்த நாம் பிராசஸ், சென்னை அவர்களுக்கும் இந்நூல் வெளிவர உறுதுணையாக இருந்த என் மனைவி நளினிக்கும் என் நன்றிகள்.

இந்நூலை இலங்கையின் தலைசிறந்த வரலாற்று அறிஞர்களில் ஒருவரான என் மதிப்புக்குரிய வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் கலாநிதி செ. பத்மநாதன் அவர்களின் அறுபதாவது அகவை முன்னிட்டுச் சமர்ப்பணம் செய்யச் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பெரும்பேறாகக் கருதுகிறேன்.

நன்றி

ப.புஷ்பரட்ணம்

தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்
தமிழ்நாடு
*18.7.200*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| 1. | இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலான சங்ககால அரசியலுறவு - ஒருமீள்பார்வை | 2 |
| 2. | இலங்கையில் சங்ககால வேள் ஆட்சி - கல்வெட்டுக்களை அடிப் படையாகக் கொண்ட ஆய்வு | 42 |
| 3. | பண்டைய இலங்கையில் பரதவ சமூகம்- சில தொல்லியல் சான்றுகள் | 59 |
| 4. | சங்ககால நாணயங்களும் இலங்கைத் தமிழ் மன்னர்களும் | 77 |
| 5. | இலங்கைத் தமிழரும் லஷ்மி உருவம் பொறித்த நாணயங்களும் | 94 |
| 6. | பத்தாம் நூற்றாண்டில் கதிரமலையும் சிங்கை நகரும் சில தொல்லியல் சான்றுகள் | 108 |
| 7. | கந்(தன்), ஆ(ரியச்சக்கரவர்த்தி) பெயரில் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் - புதிய சான்றுகள் | 197 |
| 8. | யாழ்ப்பாண அரசு கால சேது நாணய வகைகள் | 213 |
| 9. | உசாத்துணை நூல்கள் | 229 |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியரின் முன்னுரை

உலகில் இன்று பெருநிலப்பரப்புகளுக்கு அருகில் அமைந்துள்ள பிரித்தானியத்தீவுகள், ஜப்பானியத்தீவுகள், இந்தோனீசியத்தீவுகள், சான்ஸிபார் தீவு, மடகாஸ்கார் தீவு என்பவற்றில் வாழும் மக்களின் மூதாதையர் நெடுங்காலமாக அருகிலுள்ள பெருநிலப்பரப்பிலிருந்தும், பிற இடங்களில் இருந்தும் புலம்பெயர்ந்து வந்து குடியேறியவர்களாவர் என் பது பொதுவான வரலாற்று உண்மை. அதேபோல் இலங்கையில் இன்று இனம், மதம், மொழி, பண்பாடு என்பவற்றால் வேறுபடுத்திப் பார்க்கப்படும் தமிழ், சிங்கள மக்களின் மூதாதையினர் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தென்னிந்திய நிலப்பரப்பிலிருந்து காலத்திற்கு காலம் புலம்பெயர்ந்து வந்தவர் என்பதை சமீபகால ஆய்வுகள் புலப்படுத்தி வருகின்றன. காலப்போக்கில் கிரேக்க, உரோம நாடுகளும் பிற்காலத்தில் அரேபிய, தென்கிழக்காசிய, சீன நாடுகளும் இலங்கையுடன் ஏற்படுத்திக் கொண்ட வணிகத்தொடர்பால் அந்நாட்டுப் பழக்க வழக்கங்களும், பண்பாடும் கலந்து இலங்கைப் பண்பாடுகள் வளர்ந்தன. ஆயினும் பெருமளவுக்கு இலங்கை யின் பண்பாடு சமகால இந்திய நாகரிக வட்டத்திற்குள் உட்பட்ட நிலையிலேயே வளர்ச்சியடைந்ததைக் காணமுடிகிறது. கி.மு.3ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பௌத்த மதத்தின் அறிமுகம் இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் புதிய காலகட்டத்தின் தொடக்கம் எனக் கூறலாம். இம்ம தம் குறுகிய காலத்தில் பெரும் செல்வாக்குப்பெற்ற போது அம்மதத்தை இலங்கைத் தமிழ் மக்களில் ஒரு பிரிவினரும், மன்னர்களும் பின்பற்றியதற்கும், ஆதரித்ததற்கும் பல சான்று கள் உண்டு. ஆனால் பிற்காலத்தில் சிங்களமக்களில் பெரும்பான்மையானோர் பௌத்தர்களாகவும், தமிழர்கள் இந்துக்களாகவும் இருப்பதினால் பண்டைய காலத்திலும் அவ்வாறான நிலையே இருந்ததென நம்பப்பட்டது. இதனால் பண்டயகாலப் பௌத்தமத எச்சங்கள் ஒரு மதத்தின் பண்பாடாக நோக்கப்படாது ஒரு இனத்தின் பண்பாடாகப் பார்க்கப் பட்டது. இதனால் இலங்கைத் தமிழர் பண்பாட்டு வரலாறு ஒப்பீட்டளவில் பாளி நூல்களிலும், அவற்றை

www.tamilarangam.net



அடிப்படையாகக் கொண்டெழுந்த பிற்கால வரலாற்று நூல்களிலும் தெளிவற்ற பாத்திரமாகவே உள்ளன. இந்நிலையில் கடந்த இருசகாப்தகாலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகள் நம்பிக்கை ஊட்டுபவையாக உள்ளன. இவை தமிழர்களின் பூர்வீக பண்பாடும், அதன் வரலாறும் அவர்கள் வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற இடங்களில் இருந்து வெளிக்கிளம்ப வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளன.

வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்தியப்பண்பாட்டில் ஒரேகாலத்தில் பிரதேசம், வட்டாரம், வம்சம் என்ற அடிப்படையில் தனித்துவமான பண்பாடுகள் தோன்றி வளர்ந் ததைக் காணமுடிகிறது. இலங்கை புவிச்சரிதவியல் அடிப்படையில் தனிப்பட்ட நிலப்பரப்பாக இருப்பதினால் இங்கு வாழ்ந்த தமிழ், சிங்களப் பண்பாட்டில் தனித்துவமான போக்கும், ஒன்றின் மீது ஒன்றன் செல்வாக்கும் இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இலங்கைக்குரிய பௌத்த மதமும், பௌத்த பண்பாடும் இந்தியாவிலிருந்து புத்தாக்கம் பெற்று வந்தாலும் அதில் இலங்கைக்கேயுரிய தனித்துவமான மரபு தோன்றி வளர்ந்ததைப் பேராசிரியர் சேனகபண்டாரநாயக்கா போன்ற அறிஞர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர். ஆனால் தமிழர் பண்பாட்டை ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் அதற்குரிய சான்றுகளைத் தமிழகத்துடன் மட்டும் அழுத்தி அடையாளம் காணமுற்பட்டதையும், முடியாத பட்சத்தில் அவற்றை விதிவிலக்கான சான்றுகள் எனக் காரணம் காட்டி ஆய்விலிருந்து விலக்கிக் கொள்வதையும் காணமுடிகிறது. தமிழ்நாட்டில் பிற்கால இலக்கியங்களில் அறியப்படும் மகள், மருமகன் போன்ற வம்சவழி, உறவுமுறைப் பெயர்கள் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் கி.மு.3 ஆம் நூற்றாண்டிலிருந்து காணப்படுவதும், சங்ககால மரபுகள் சில தமிழகத்தில் மறக்கப்பட்ட நிலையில் அவை இலங்கைத் தமிழரிடையே இன்றும் புழக்கத்திலிருப்பதும் விதிவிலக்கான சான்றுகளாகக் கொள்ளமுடியாது. அண்மையில் அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது பல இந்து விக்கிரகங்கள் கிடைத்தன. இவை பற்றிப் பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் ஆராய்ந்து வருகிறார். அவற்றுள் அர்த்தநாரிஸ்வரர் எனக் கருதுப்படும் விக்கிரகம் ஒன்று மேற்கு நாட்டவரால் பல்வேறு காலக் கணிப்புகளுக்கு உட்படுத்தியதன் மூலம் அவ்விக்கிரகம் கி.பி.7 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வடிவமைக்கப்பட்டமை

www.tamilarangam.net



தெரியவந்துள்ளது. இது பல ஆண்டுகளுக்கு முன்னர் பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்கள் சோமாஸ்கந்த விக்கிரகத்தை வடிவமைக்கும் மரபு இலங்கையிலேயே ஏற்பட்டது எனக் கூறிய கருத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இவற்றிலிருந்து இலங்கைத் தமிழர் பண்பாட்டையும், தமிழகப் பண்பாட்டுடனான உறவையும் ஒருபக்க உறவாக நோக்காது இருபக்க உறவாகப் பார்க்க வேண்டியுள்ளமை தெரிகிறது. இவ்வுறவு பண்டு தொட்டு இருந்து வருவதை அண்மையில் தமிழகத்தில் கொடுமணல், அழகன்குளம், அரிக்கமேடு போன்ற இடங்களில் இருந்து பெறப்பட்ட இலங்கைத் தமிழர் தொடர்பான சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன.

இலங்கைத் தமிழர் தொடர்பாக ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் காலத்திற்குக் காலம் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இக்கருத்துக்கள் கால அடிப்படையில் வேறுபட்டவையாக உள்ளன. இதற்கு அவ்வக்காலகட்டத்தில் கிடைக்கப்பெற்ற சான்றுகளும் ஒரு காரணமாக அமைந்தன. ஆனால் 1960களின் பின்னர் இலங்கையில் தென்னிந் தியாவை ஒத்த பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் பற்றிய முன்னைய கருத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. 1971இல் பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் சிவசாமி, இன்றை தினக்குரல் பத்திரிகை ஆசிரியர் சிவநேசச்செல்வன் போன்ற அறிஞர்கள் பலரது முயற்சியால் உருவாக்கப்பட்ட "யாழ்ப்பாணத் தொல்லியல் கழகம்" வட்டார அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் பழமையை ஆராய்வதற்குச் சிறிது காலம் தூண்டுகோலாய் இருந்தது. 1980இல் கலாநிதி இரகுபதியால் ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டு மையத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் மேற்கொண்ட அகழ்வாய்வும், அதைத் தொடர்ந்து கலாநிதி. இரகுபதி யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட அகழ்வாய்வுகளும், களஆய்வுகளும் யாழ்ப்பாணத்தோடு தமிழ் மக்களுக்குள்ள உறவையும், பாரம்பரியத் தொடர்பையும் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் வெளிப்படுத்திய முக்கிய ஆய்வாக அமைந்தது. இத்தகைய வரலாற்றுப் பழமை யாழ்ப்பாணத்திற்கு வெளியே வன்னிப்பிராந்தியத்திற்கும் உண்டு என்பதை எமது கள ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது. அங்கு பெறப்பட்ட சான்றுகளே இந்நூலில்

www.tamilarangam.net



முன்வைக்கப்பட்ட பெரும்பாலான கட்டுரைகளுக்கும் முக்கிய சான்றாதாரங்களில் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எமது நூல் முன்னைய ஆய்வாளர்களால் கூறப்பட்ட சில கருத்துக்களை புதிய சான்றுகளின் அடிப்படையில் விரிவுபடுத்துவதாகவும், பல கருத்துக்களை மறு ஆய்வு செய்வதாகவும் அமைகின்றன. எதிர் காலத்தில் மேலும் புதிய சான்றுகள் கிடைக்கும் போது இக்கருத்துக்கள் விரிவுபடுத்தப்படலாம். சில முடிவுகள் மாற்றப்படலாம். ஆனால் எல்லாக் கருத்துக்களும் மாற்றப்பட முடியாது என்பதில் உறுதியான நம்பிக்கையுண்டு. இந்நூலில் உள்ள சில கட்டுரைகள் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக கலாநிதிப்பட்ட ஆய்வு மாணவனாக இருந்து தமிழ் நாட்டில் நடந்த கருத்தரங்குகளில் வாசிக்கப்பட்டவை யாகும். ஆனால் அக்கட்டுரைகள் அப்படியே இந்நூலில் பிரசுரிக்கப்பட வில்லை. அவை கருத்தரங்குகளில் கூறப்பட்ட புதிய கருத்துக்கள், திருத்தங்களுடன் விரிவுபடுத்தப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

முதலாவது கட்டுரையில் கூறப்பட்டுள்ள சங்ககால இலங்கை தமிழக அரசியல் உறவு பற்றிய புதிய கருத்துக்கள் 1992இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடந்த கருத்தரங்கில் நாம் முன்வைத்தபோது அறிஞர்கள் பலரும் அக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அதேகருத்தை மேலும் புதிய சான்றுகளுடன் 23. 3. 2000இல் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டுத்துறைக் கருந்தரங்கில் முன்வைத்த போது தமிழ் நாட்டு அறிஞர்கள் யாரும் அதை நிராகரிக்கவில்லை. மாறாக அக்கருத்தை வலுப்படுத்த மேலும் புதிய கருத்துக்களை வழங்கினார்கள். இந்நூலில் இடம்பெற்றுள்ள வேள், பரதவ சமூகம் பற்றி ஏற்கனவே பல அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். ஆயினும் இவைபற்றிய எமது அணுகுமுறைகள் முன்னைய ஆய்வுகளில் இருந்து வேறுபட்டதாக அமைந்துள்ளன. இலங்கைத் தமிழர் யாழ்ப்பாண அரசுக்கு முன்னோடியாக (கி.பி13நூற் றாண்டுக்கு முன்) நாணயங்கள் வெளியிடவில்லை என்ற கருத்தே நீண்டகாலமாக இருந்து வந்தது. ஆனால் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கைத் தமிழர்களிடையே நாணயங்களை வெளியிடும் மரபு இருந்து வந்துள்ளதை சில ஆய்வுக்கருத்தரங்குகளிலும், இந்நூலின் பெரும்பாலான கட்டுரைகளிலும் சான்றாதாரங்களுடன் நிறுவியுள்ளேன். அதன் அடிப்படையிலேயே வட இலங்கையில் கி.பி 7ஆம் நூற்றாண்டில் ஒரு மன்னன் ஆளுகைக்குட்பட்ட தமிழரசு


www.tamilarangam.net



தோன்றியதென்ற புதிய கருத்தை "பத்தாம் நூற்றாண்டில் கதிரமலையும் சிங்கை நகரும்" என்ற கட்டுரையில் முன்வைத்துள்ளேன். இதில் ஒரு அரச தலைநகருக்குரியதாகக் காட்டப்பட்டுள்ள வன்னியிலுள்ள இடங்களில் பல ஐரோப்பியர் ஆட்சியில் பூநகரி நிர்வாக வட்டாரத்திற்கு உட்பட்டவையாக இருந்தன. ஆனால் இங்குள்ள நிர்வாக மாவட்டத்தின் எல்லைகள் பிற்காலத்தில் அடிக்கடி மாற்றியமைக்கப்பட்டதால் பூநகரிக்குட்பட்டிருந்த பல இடங்கள் தற்போது மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் அடங்குகின்றன. இதனால் பொதுப்பட வன்னி என்ற பெயரையே பல இடங்களில் பயன்படுத்தியுள்ளேன். ஏழாம், எட்டாம் கட்டுரைகள் யாழ்ப்பாண அரசு காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் பற்றியதாகும். இதில் ஏழாவது கட்டுரையில் கூறப்பட்டுள்ள இரு நாணயங்கள் இதுவரை ஆய்வுக்கு உட்படுத்தப்படாத புதிய சான்றுகள் என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. எட்டாவது கட்டுரையில் கூறப்பட்ட சேது நாணயங்கள் பற்றிப் பலர் ஆராய்ந்துள்ளனர். அவர்களுள் பேராசிரியர் பத்மநாதன் அவர்களின் ஆய்வின் அடிப்படையில் ஆனால் அவர் ஆய்வுக்கு உட்படுத்தாத சில வகை நாணயங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

மொத்தத்தில் இந்நூலை எழுதியதன் நோக்கம் ஐரோப்பியர் ஆட்சிக்கு முந்திய இலங்கைத்தமிழர் பண்பாட்டின் முக்கிய சில அம்சங்களை வெளிப்படுத்து வதாகும். முடிந்த வரை நாம் கண்டுபிடித்த மற்றும் எனக்குக் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் அதைக் கூறவிழைந்துள்ளேன். இந்நூல் வேறுபட்ட தலைப்புக்களில் கட்டுரைகளாக எழுதப்பட்டதனால் சில இடங்களில் கூறியது கூறல் நூலின் குறைபாடாக அறிஞர்களுக்குத் தோன்றலாம். ஆனால் குறிப்பிட்ட ஒரு கட்டுரையை வாசிக்கும் ஒருவருக்கு பொருள் விளக்கத்திற்கு உதவும் எனக் கருதியதால் சில இடங்களில் கூறியது கூறலை நீக்கவிரும்பவில்லை. ஆயினும் எனக்குப்புலப்படாத பல குறைபாடுகள் இந்நூலில் இருக்கலாம். அவற்றை அறிஞர்கள் எனக்குத் தெரிவிப்பார் களானால் அவர்களுக்கு நன்றி உடையவனாக இருப்பேன். இந்நூல் இரண்டாவது பதிப்பாக வெளிவருமாயின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அவர்கள் கூறும் திருத்தங்களில் பொருத்தமானவற்றை ஏற்று நூலை வெளியிடுவேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




தமிழ்நாடு இலங்கை

www.tamilarangam.net

# இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலான சங்ககால அரசியலுறவு -ஒரு மீள்பார்வை

வரலாற்றுக்குமுற்பட்ட காலத்திலிருந்து இலங்கையின் பண்பாடு தென்னிந்தியாவின் தென்பகுதியுடன் குறிப்பாக தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்டு வளர்ந்ததை அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன. இத்தொடர்பு சங்ககாலத்திலும் இருந்ததை இலக்கியங்கள் மட்டுமன்றி இங்கு கிடைத்துவரும் முதுமக்கட் தாழிகள், தமிழ்ப்பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்பனவும் உறுதிப் படுத்துகின்றன. இதில் இலங்கையின் பண்டையகால அரசியல் உறவுகள் தென்னிந்தியாவின் ஏனைய வட்டாரங்களை விடத் தமிழகத்துடன் மட்டும் இருந்ததற்கே பாளி இலக்கியங்களில் சான்றுகள் உண்டு. இதற்கு இலங்கை தமிழகத்திற்கு அண்மையில் அமைந்திருப்பதும், பண்பாட்டால் தமிழகத்துடன் நெருங்கிய ஒற்றுமைகொண்டிருப்பதும் முக்கியகாரணங்களாகும். இதில் சங்ககால அரசியல் உறவு பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

தமிழகவரலாற்றை ஆராய்கின்ற வரலாற்றறிஞர்கள் பலரும்சங்க காலத்தை வரலாற்றுக்காலத்தின் தொடக்கமாகக் கொள்வர். ஆயினும் சங்ககாலம் எக்காலத்திற்குட்பட்டதென் பதில் ஒரு தெளிவான கருத்துநிலை இன்னும் தோன்ற வில்லை. இதற்கு சங்க இலக்கியம் குறிப்பிட்ட காலப்பகுதிக் குள் பாடிமுடிக்கப்படாது பல்வேறு காலப்பகுதிக்குள் பாடப் பட்டமை ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் வரலாற்றறி ஞர்கள் பலர் சங்க இலக்கியத்தோடு தமிழகத்தில் கிடைத்து வரும் தொல்லியல் சான்றுகளையும் பயன்படுத்தி கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தை சங்ககாலம் என வரையறை

www.tamilarangam.net



செய்துள்ளதால் இக்காலப்பகுதியை இவ்வாய்வுக்குரிய கால மாக எடுத்துக் கொள்ளலாம்.

இக்காலப்பகுதியில் இலங்கையில் பல சிற்றரசுகளும். குறுநிலத் தலைவர்களும் ஆட்சிபுரிந்ததை பிராமிக்கல் வெட்டுக்கள் கூறுகின்றன. ஆனால் பாளி இலக்கியங்கள் கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து அநுராதபுரத்தை தலைநக ராகக் கொண்டு ஆட்சிபுரிந்த மன்னாகளின் வரலாறே இலங்கையின் அரசியல் வரலாறெனக் கூறுகின்றன. இப்பாளி இலக்கியங்கள் இக்காலப்பகுதியில் இலங்கையோடு தமிழகத் திற்கிருந்த அரசியல் உறவை இரு வகையாகக் கூறுகின்றன. ஒன்று தமிழகத்திலிருந்து வர்த்தகர்கள், படையெடுப்பாளர் கள் என வந்து ஆட்சியைக் கைப்பற்றிய தமிழர்கள். இரண்டு இலங்கையில் ஆட்சியுரிமையை இழந்த மன்னர்கள் தமிழ்நாடு சென்று தமிழர் படையுடன் வந்து மீண்டும் ஆட்சியைக்கைப்பற்றுவது.

அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த முதல் தமிழ்மன்னர்களாக சேன (Sena) குத்தக (Guttaka) என்போர் குறிப்பிடப்பட் டுள்ளனர். இவர்கள் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த சூரதி ஸ்ஸ (Suratissa) மன்னனை பெரும் படையுடன் வந்து வெற்றி கொண்டு 22 வருடங்கள் (கி.மு.177-155) நீதிதவறாது ஆட்சிபுரிந்ததாக இலங்கையின் முதல் பாளி இலக்கியங் களில் ஒன்றான மகாவம்சம் கூறுகிறது (XXI :10-11). இவர்கள் குதிரை வர்த்தகம் செய்தவனின் பிள்ளைகள் எனப் பாளி நூல்கள் கூறுவதால் இவர்கள் அரசசார்பின்றிப் படை யெடுத்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இம்மன்னர்களைத் தொடர்ந்து மீண்டும் ஒரு தமிழர் படையெடுப்பு அசேலா மன்னன் ஆட்சியில் ஏற்பட்டது. சோழ உயர்குடியிற் பிறந்த எல்லாளன் (Elara-எல்லார) என்ற தமிழன் ஆட்சி யிலிருந்த அசேலா மன்னனை வெற்றி கொண்டு 44 ஆண்டு கள்(கி.மு. 145-101) தொடர்ச்சியாக ஆட்சி புரிந்தான். இலங்கை அரசியல் வரலாற்றில் நீண்டகாலம் ஆட்சிபுரிந்த முதல் மன்னன் என்ற பெருமை இவனுக்குரியது. இவனது நெறிதவறாத, நீதிமாறாத ஆட்சி பற்றிப் பல கதைகள் கூறப்பட்டுள்ளன (M.V. XXI :15-34). இவன் தனது ஆட்சியில் பௌத்த மதத்திற்கு ஆதரவு கொடுத்த போதிலும் பழைய மதநம்பிக்கையைக் கைவிடவில்லையென மகாவம்சம் கூறுகிறது (XXI :34). இம்மன்னன் துட்டகாமினி (Duttagamini) மன்னனால் தோற்கடிக்கப்பட்ட ஏழாவது நாள் இவனின் மரு

www.tamilarangam.net



மகன் பல்லுக (Balluka) தலைமையில் 6000 வீரர்களைக் கொண்ட படையொன்று மாதோட்டத்தில் வந்திறங்கி அநுராதபுரம் நோக்கி முன்னேறிய போது துட்டகாமினியின் படைததளபதி புஸ்ஸதேவ (Phussadeva) என்பவனால் கொலம்பகலா (Kolambahala) என்ற இடத்தில் தோற்கடிக்கப் பட்டது (M.V. XXV :76- 87).

வட்டகாமினி ஆட்சி செய்த காலத்தில் (கி.மு.104) ஏழு தமிழர்கள் தமது படையுடன் மாதோட்டத்தில் வந்திறங் கினர். அப்போது ரோகணத்திலிருந்து தனக்கு எதிராகப் போராடிய திஸ என்ற பிராமணனுடன் வட்டகாமினி சமாதானம் செய்து திஸனை தமிழருக்கு எதிராகப் போராடு மாறு தூண்டினான் (M.V. XXXIII :37-41). ஆயினும் படை யெடுத்து வந்த தமிழர்கள் கொலம்பகல என்ற இடத்தில் திஸனுடைய படைகளை வெற்றி கொண்டு அநுராதபுர அரசை வெற்றி கொண்டனர். இத்தமிழர்களி நவன் வட்ட காமினியின் மனைவியுடனும். இன்னொருவன் புத்தரது பிச்சாபாத்திரத்துடனும் மறுகரைக்குத் திரும்பிச் சென்றனர். ஏனைய ஐந்து தமிழர்களான புலகத்தா (Pulahattha). பாகியா (Bahiya), பணயமாற (Panaya mara), பிளையமாற (Pilayamara), தாடிக (Dathika) என்போர் மாறி மாறி 14 வருடம் 7 மாதங்கள் (கி.மு.102-87) ஆட்சி புரிந்தனர் (XXXIII :55-61). இத்தமிழ் மன்னர்களைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மகா திஸன் ஆட்சியில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. அரச மரபைச் சாராத சோரநாக தனக்கு புகலிடம் அளிக்காத விகாரைகளைத் தரைமட்டமாக்கினான். இதனால் இவன் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்த இவன் மனைவி அனுலாதேவி வடுக (Vatuka) என்ற தமிழனை அரசனாக்கினாள். இவன் 1 வருடம் 2 மாதங்கள் (கி.மு.47) ஆட்சி புரிந்தான். பின் இவனைக் கொன்றுவிட்டு அரண்மனைப் புரோகிதனாக விருந்த நீலிய ( Niliya) என்ற தமிழனை அரசனாக்கினாள். இவன் 6 மா தங்கள் ( கி.மு. 47) ஆட்சி புரிந்தான். இவர்கள் இருவரும் படையெடுப்பின்றியே ஆட்சிக்கு வந்துள்ளனர்.

கி.பி. 1 ஆம் நூற்றாண்டின் பின்னர் இலங்கை - தமிழக அரசியல் உறவில் சிறிய மாறுதல் ஏற்பட்டதைப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. இக்காலத்திலிருந்து முன்னரைப் போல் தமிழர் படையெடுத்து வந்து இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்றிய அதேவேளை இலங்கையில் அரசுரிமையை இழந்த மன்னர்கள் மற்றும் அரசவம்சத்தினர்

www.tamilarangam.net



சிலர் தமிழ்நாடு சென்று தமிழர் படையுடன் வந்து மீண்டும் ஆட்சியைக்கைப்பற்றும் நிலை காணப்படுகிறது. இலம்ப கர்ண மன்னனால் சிறையில் அடைக்கப்பட்ட இளநாக என்பவன் அங்கிருந்து தப்பி மறுகரைக்குச் சென்று 3ஆண்டு களின் பின்னர் பெரும் படையுடன் வந்து ஆட்சியைக் கைப்பற்றி 6வருடங்கள் (கி.பி. 38-44) ஆட்சிபுரிந்தான் (M.V. XXXV :45). இவனுடைய மனைவி தமிழாதேவி (Damiladevi) எனக் குறிப்பிடுவதிலிருந்து இவள் ஒரு தமிழ்ப்பெண் என்பது தெரியவருகிறது. வங்கநாகதிஸ மன்னன் ஆண்ட காலத்தில் (கி.பி. 110 -112) சங்ககால மன்னர்களில் ஒருவனாகிய கரிகாற் சோழன் இலங்கைமீது படையெடுத்து 12000 பேரைச் சிறை பிடித்து காவேரிக்கு அணைகட்டுவித்தான் எனக் கி.பி.13ஆம் நூற்றாண்டுக்குரிய இராசவலிய என்ற சிங்கள நூல் கூறு கிறது. இதற்குப் பதிலாக கஜபாகு மன்னன் தமிழ் நாட்டின் மீது படையெடுத்து இரண்டு மடங்கு தமிழர்களை இலங் கைக்கு கொண்டு வந்ததாக இந்நூல் மேலும் கூறுகிறது.

மேற்கூறப்பட்ட செய்திகளிலிருந்து சங்ககாலத்தில் இலங்கைக்கும் தமிழகத் திற்கும் இடையே இருந்த அரசியல் உறவு தெரியவருகிறது. இதில் தமிழ் மன்னர்களை அன்னியர். ஆக்கிரமிப்பாளர், சோழநாட்டவர், அக்கரையிலிருந்து வந்த வர்கள் என அவர்க ளின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறும் பாளி நூல்கள் ஏனைய மன்னர்களை இந்நாட்டுக்குரிய மன்னர்களாகக் குறிப்பிட்டு அவர்களின் வரலாற்றுச் சாதனை களை விபரமாகத் தருகின்றன. பாளி இலக்கியங்கள் தரும் இவ்வரலாற்றுச் செய்திகளை ஆராய்ந்த வரலாற்றாசிரியர்கள் பலரும் பாளி இலக்கியங்கள் கூறும் இந்நாட்டு மன்னர்களை சிங்கள இனத்தவராகவும், தமிழ் மன்னர்களை தென்னிந்தியா குறிப்பாகத் தமிழ்நாட்டிலிருந்து வர்த்தகர்களாக, படை யெடுப்பாளர்களாக அவ்வப்போது வந்து ஆட்சியைக் கைப் பற்றிய அன்னியர்கள் எனவும் விளக்கம் கொடுத்தனர். சிங்கள மன்னர்களை இந்நாட்டுக்குரியவர்களாகக் கூறு வதற்கு காட்டப்படும் காரணங்களில் ஒன்று இவர்களின் மூதாதையினரான விஜயனும் அவனது 700 தோழர்களும் கி.மு.5ஆம் நூற்றாண்டில் வட இந்தியா விலிருந்து வந்து குடியேறியவர்கள் எனப் பாளி இலக்கியங்கள் கூறும் கதையின் அடிப்படையிலாகும். இது ஒரு கட்டுக் கதையாக இருப்பினும் அதே பாளி நூல்கள் இவர்களுக்காக 700 மணப்பெண்களும், பதினெட்டுத் தொழில் தெரிந்த 1000 குடும்பங்களும் தமிழ் நாட்டிலிருந்து (பாண்டிநாடு) வந்து

www.tamilarangam.net



இலங்கையில் குடியேறியதை ஏன் தமிழர்கள் குடியேற்றம் நடந்ததற்குரிய சான்றாக எடுத்துக் கொள்வதில்லை என்பது புரியவில்லை.

பேராசிரியர் சுதர்சன் செனிவரட்னா இலங்கையில் முதல் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்களான சேன, குத்தக என்போர் குதிரை வர்த்தகர்களின் பிள்ளைகள் எனப் பாளி இலக்கியங்கள் கூறுவதையும், தமிழகத்தில் பரதவ சமூகம் குதிரை வர்த்தகத்தில் ஈடுபட்டதாக சங்க இலக்கியம் கூறுவதையும் சான்றாகவைத்து இம்மன்னர்களைத் தமிழகத்திலிருந்து வந்து ஆட்சியைக் கைப்பற்றிய பரதவ சமூகத்துடன் தொடர்புபடுத்துகின்றனர்(*1985: 51-54*). இலங்கையில் நீண்டகாலம் ஆட்சிபுரிந்த எல்லாளன் என்ற மன்னனை மகாவம்ஸம் என்ற நூல் சோழ நாட்டவன் எனக் கூறுவதால் இவனைச் சங்ககாலச் சோழவம்சத்துடன் தொடர்பு படுத்துகின்றனர். கி.மு. முதலாம் நூற்றாண்டில் 14 வருடம் 7 மாதம் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களை பாண்டியவம்சத்துடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். மென்டிஷ் என்ற வரலாற்றறிஞர் நக்கீரர் இயற்றிய சங்கப் பாடலில் வரும் சோழ அரசனை வெற்றி கொண்ட பழைய மாறனுக்கும், இக்காலத்தில் இலங்கையில் ஆட்சிபுரிந்த பணயமாற என்பவனுக்கும் இடையே தொடர்பிருக்கலாம் என்றார் (திருநாவுக்கரசு 1978: 49). கிருஷ்ணஐயங்கார் குறிஞ்சிப்பாட்டில் வரும் தமிழ்ப் பிரகதனும் இலங்கையில் ஆட்சி புரிந்த புலஹதனும் ஒருவனே எனக்குறிப்பிட்டுள்ளார் (*திருநாவுக்கரசு 1978 48*)

பாளி இலக்கியங்கள் கூறும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கூறப்பட்ட தமிழ்மன்னர்களை தமிழ்நாட்டோடு தொடர்பு படுத்திக் கூறினாலும் கூட காதலையும், வீரத்தையும் போற்றிப்பாடும் சமகாலச் சங்க இலக்கியத்தில் தமிழ் நாட்டு அரச வம்சத்தினரோ அல்லது தனிப்பட்டவர்களோ இலங்கைமீது படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றியது பற்றி எதுவித குறிப்புக்களும் காணப்படவில்லை. அத்துடன் இலங்கையுடனான வர்த்தக, பண்பாட்டு உறவுகள் பற்றி அரிதாகக் கூறும் சங்க இலக்கியம் இலங்கையுடனான அரசியல் உறவு பற்றி எதுவுமே கூறவில்லை. அதேவேளை தமிழ்நாட்டின் இயற்கை எல்லையைத் தாண்டி இன்னொரு நாட்டின் மீது படையெடுக்கும் அளவிற்கு இக்காலத்தில் தமிழ் நாட்டில் அரச உருவாக்கம்

www.tamilarangam.net




ஏற்பட்டிருந்ததற்கும் சான்றுகள் காணப்படவில்லை. மாறாக இனக்குழு நிலையிலிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக் கட்டமாக இருந்த தலைவர்களின் ஆட்சியும், சேர, சோழ, பாண்டிய சிற்றரசுகளின் ஆட்சியுமே காணப்பட்டன. ஏறத்தாழ இதையொத்த நிலையே இலங்கையிலும் இருந்ததைப் பாளி இலக்கியங்களும், கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்து கின்றன. இதனால் இக்காலத்தில் இலங்கைக்கும் தமிழகத் திற்குமிடையே அரசியல் உறவு இருக்கவில்லையென அர்த்தம் கொள்ளமுடியாது. ஆனால் அரச உருவாக்கத்திற்கு முந்திய இரு நாடுகளுக்குமிடையிலான உறவையும், ஒருமைப் பாட்டையும், நாடுகளுக்கிடையிலான தனித்துவத்தையும் புறக்கணித்த நிலையில் அரசியல் உறவைத் தமிழகத்துடன் மட்டும் அழுத்திக் கூறுவது பொருத்தமாகத் தோன்ற வில்லை. அவற்றை இணைத்துப் பார்ப்பதன் மூலம் இலங்கை யில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்களைத் தமிழகத்துடன் மட்டும் தொடர்புபடுத்தாது இலங்கையுடனும் தொடர்பு படுத்திப் பார்க்க இடமுண்டு.

இலங்கையில் தொல்லியல், மானிடவியல், சமூகவியல் போன்ற துறைகள் வளர்ச்சியடையாத நிலையில் பாளி இலக்கியங்கள் கூறும் வரலாறே இலங்கையின் உண்மை வரலாறென நம்பப்பட்டது. இவ்விலக்கியங்களை அடிப் படையாகக் கொண்டு தற்காலச் சிங்கள மக்களின் மூதாதை யினர் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியர்களின் வழித் தோன்றல்கள் எனவும், தமிழர்கள் தமிழ்நாட்டிலிருந்து அவ்வப் போது படையெடுப்பாளர்களாக, வர்த்தகர்களாக வந்து இலங்கையின் முக்கிய நகரங்களிலும், வர்த்தக மையங்களிலும் குடியேறிய சிறுபிரிவினர் எனவும் கூறப்பட்டுவருகிறது. இதனால் சிங்கள மக்களை வட இந்தியாவுடனும், தமிழ் மக்களைத் தமிழ் நாட்டுடனும் தொடர்புபடுத்தி ஆய்வு செய்யும் மரபு காணப்படுகிறது. ஆனால் அண்மைக்கால விஞ்ஞானபூர்வமான ஆய்வுகள் தற் கால தமிழ், சிங்கள மக்களின் மூதாதையினர் காலத்திற்கு காலம் தென்னிந்தியாவின் தென்பகுதியிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் என்பதையும், பௌத்தமதத்தின் வருகை யைத் தொடர்ந்து மொழி, மதம், பண்பாடு என்பவற்றால் வேறுபட்ட தமிழ், சிங்கள சமூகங்கள் தோன்றின என்பதை யும் பெருமளவுக்கு தெளிவுபடுத்துகின்றன.

www.tamilarangam.net






**இலங்கையின் முக்கிய தொல்லியல் மையங்கள்**

www.tamilarangam.net



இலங்கையில் இதுவரை கிடைத்த தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் இங்கு வாழ்ந்த ஆதிகால மக்கள் நுண் கற்காலப் பண்பாட்டிற்குரியவர்கள் என்பது தெரியவந்துள்ளது. இம்மக்கள் தாழ்நிலம் தொட்டு மலைநாடு வரை வாழ்ந்திருக்கலாம் என்பதை வட இலங்கையிலும் தென்னிலங்கையிலும் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன (Deraniyagala 1985:14-25). தமிழ்நாட்டில் திருநெல்வேலிக்கருகில் தேரிமணற்குன்றுப் பகுதியில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் பற்றி ஆராய்ந்த அல்சின் இங்கு கிடைத்த இருபக்க அலகுடைய கல்லாயுதங்கள் தமிழ்நாடு தவிர, இலங்கையில் மட்டும் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார் (1956:4-20). இவர் தமிழ்நாட்டில் இப்பண் பாட்டின் தோற்றக்காலம் கி.மு. 32,000 ஆண்டுகள் எனவும், இலங்கையில் கி.மு. 28,000 ஆண்டுகள் எனவும் கணித்துள்ளார். இவ்வொற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் வாழ்ந்த நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் தமிழ் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்திருக்க வேண்டுமெனத் தொல்லியலாளர் நம்புகின்றனர். இருநாடுகளிலும் இப்பண் பாட்டைப் பின்பற்றியவர்கள் ஆதிஔஸ்ரலோயிட் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என மானிடவியலாளர் நம்புகின்றனர். இவர்களின் மொழியும், பண்பாடும் பிற்கால நாகரிகத் தோற்றத்துக்கு அடிப்படையாக அமைந்தன எனலாம்.

நுண்கற்காலப் பண்பாட்டை அடுத்துப் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய சான்றுகள் காணப்படுகின்றன. இச்சான்றுகள் முன்னைய பண்பாட்டுச் சான்றுகளைவிட வட இலங்கையிலும், ஏனைய இடங்களிலும் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் தோற்றக்காலம் கி.மு.1000-க்குப் பிந்தியதாகும். இப்பண்பாடு தென்னிந்தியாவுடன் குறிப்பாக, தமிழகத்துடன் இலங்கைக்கு இருந்த நெருக்கமான தொடர்பைக் காட்டுகின்றது. தென்தமிழ் நாட்டில் நுண்கற்காலப் பண்பாட்டை அடுத்து தோன்றியிருக்க வேண்டிய புதியகற்கால, செம்புக் காலப் பண்பாட்டிற்குப் பதிலாக பல இடங்களில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகளே கிடைத்துள்ளன. இத்தகைய ஒரு போக்கு இலங்கையிலும் காணப்படுவது இலங்கைக் குரிய பண்பாடு தமிழகத் தொடர்பால் ஏற்பட்டதற்குச் சான்றாகும். வட இலங்கையின் பெருநிலப்பரப்பில் உள்ள சில இடங்களில்

www.tamilarangam.net



நுண்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய சான்றுகள் காணப்படு கின்றன. ஆனால் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் குடியேற்றத்தின் ஆரம்ப கட்டத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகளே இதுவரை கிடைத்துள்ளன. இப்பண்பாட்டை முன்பு இங்கு வாழ்ந்த நுண்கற்கால மக்கள் பின்பற்றியிருக் கலாம் அல்லது இவர்கள் பெருங்கற் கால மக்களுடன் கலந்து இருக்கலாம்.

பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய சான்றுகள் ஆசிய நாடுகள் பலவற்றில் காணப் பட்டாலும் இந்தியாவில் அது திராவிட மொழி பேசும் தென்னிந்தியப் பகுதியில் சிறப்புற்று விளங்கியுள்ளது (Ramachandran 1969:59-5). இப்பண்பாடு இறந்தவர்களை ஈமச் சின்னங்களில் புதைக்கும் வழக்கம் கொண்டது. இது ஆரியப் பண்பாடான எரிக்கும் வழக்கத் திற்கு முற்றிலும் மாறுபட்டது. இவை இலங்கைப் பெருங்கற் காலப் பண்பாட்டிற்கும் பொதுவாக இருப்பதினால் இங்கு இப்பண்பாட்டைப் பின்பற்றியவர்கள் தென்னிந்தியா விலிருந்து வந்து குடியேறிய திராவிட மக்கள் எனக் கூறலாம். இவை தொல்லியல், மானிடவியல், மொழியியல் என்பவற் றிற்கு இடையிலான ஒற்றுமையை உறுதிப்படுத்துகின்றன. இலங்கையில் பெருங்கற்கால மக்கள் இறந்தோரை அடக்கம் செய்ய நாட்டின் நிலவியல் அமைப்பிற்கு ஏற்ப கல்வட்டங் கள், குத்துக்கல், தாழி, புதைகுழி போன்ற ஈமச்சின்னங்களை அமைத்துள்ளனர். இவை தமிழ்நாடு, கேரளா போன்ற இடங்களில் கண்டு பிடிக்கப்பட்ட ஈமச்சின்னங்களோடு பொதுத் தன்மை கொண்டுள்ளன. இதில் வட இங்கையில் பின்பற்றப்பட்ட தாழியடக்கம், புதைகுழி என்பன பெரிதும் தென் தமிழ் நாட்டுடன் ஒற்றுமை கொண்டுள்ளன. இன்னமும் குறிப்பாகச் சுட்டுவதானால் தாழியடக்கம் தமிழகத்தின் கரை யோர மாவட்டங்களில், குறிப்பாகப் பெண்ணை ஆற்றுக்குத் தெற்கே சிறப்புற்று விளங்கியுள்ளமை இத்தாழியடக்கம் தமிழகக் கரையோர மக்கள் இங்கு குடிபெயர்ந்தமையைச் சுட்டுவதாக உள்ளது.

இச்சான்றுகள் சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்த ஆரியர்களின் வழித் தோன்றல்கள் என்ற பாரம்பரிய கருத்தை நிராகரிக்கும் அதே வேளை, இவர்களும் தமிழ் மக்களைப்போல் தென்னிந்தியா விலிருந்து புலம் பெயர்ந்த நுண்கற்காலப் பண்பாட்டிற்குரிய ஆதிஒஸ்ரலொயிட், பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய திரா

www.tamilarangam.net



விடர் ஆகிய இன மக்களின் வழிவந்தவர்கள் என்பதைத் தெளிவாகக்கோடிட்டுக் காட்டுகின்றன.

இப்பண்பாட்டு வழிவந்த மக்களில் பெரும்பான்மையோர் கி.மு.3 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து பௌத்த மதம் பரவிய போது அம்மதத்திற்கு மாறினர் என்பதை பெரும்பாலும் இப்பண்பாட்டு மையங்களை அண்டிக் காணப்படும் 1500க்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. இக்கல்வெட்டுக்களை ஆய்வு செய்த பேராசிரியர் பரணவிதான இதன் எழுத்திற்கு அசோக பிராமி எனப் பெயரிட்டு இவை சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவிலிருந்து வந்ததற்கு மேலும் ஒரு சான்று என்றார். அத்துடன் இக்கல்வெட்டு மொழியான பிராகிருதத்தை பழைய சிங்களம் எனக் குறிப்பிட்டு இக்கல்வெட்டுக்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் சிங்கள மக்களே வாழ்ந்தனர் என்றார்(1970:XVI). இதன் மூலம் சிங்கள மக்களே ஆதியில் இலங்கையில் வாழ்ந்தனர் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. ஆனால் இக்கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. ஏனெனில் இக்கல்வெட்டுக் களில் அசோக பிராமி எழுத்துக்கள் மட்டுமன்றி தமிழ்ப் பிராமி எழுத்துக்களும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிங்கள எழுத்துக்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பெர்ணாந்தோ(1969), கருணாரத்தினா (1960), அபய சிங்கா (1975) போன்ற அறிஞர்கள் பௌத்த மதத்தோடு அசோகபிராமி எழுத்துக்கள் அறிமுகமாகு முன்னரே தமிழகத் திலிருந்து பரவிய தென்பிராமி எழுத்துக்கள் புழக்கத்தில் இருந்தத்றகு தமிழ்மொழிக்கேயுரிய சிறப்பெழுத்துக்களை யும், எழுத்துக்களின் வடிவமைப்பில் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலான ஒற்றுமையையும் சான்றுக ளுடன் எடுத்துக்காட்டியுள்ளனர்.

கல்வெட்டு மொழியான பிராகிருதத்தை பழைய சிங்களம் எனக் கூறுவதும் பொருந்துமாறில்லை. ஏனெனில் இக்காலத்தில் பௌத்தமதம் பரவிய நாடுகளில் எல்லாம் பிராகிருதமே கல்வெட்டு மொழியாக இருந்துள்ளது. ஆந்திரா விலும், கர்நாடகத்திலும் சுதேசமொழிகள் இருந்தும் அங்கு கி. பி. 5ஆம் நூற்றாண்டு வரை பிராகிருதமே கல்வெ ட்டு மொழியாக இருந்துள்ளது (Ragupathy). இதன் தாக்கத்தை தமிழகத்திலும் காணமுடிகிறது. ஆனால் இலங்கையில் பௌத்தமதத்துடன் பரவிய பாளி, பிராகிருத மொழிச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net



சொற்கள் இங்கு ஏற்கனவே புழக்கத்திலிருந்த ஒஸ்றிக், திராவிட, தமிழ் மொழிச் சொற்களுடன் கலந்தே பிற்காலத்தில் சிங்களமொழி தோன்றியதென மொழியியலாளர்களில் சிலர் கூறுவது பொருத்தமாகத் தெரிகிறது. அதேபோல் சில தமிழ்ச் சொற்கள் பாளி, பிராகிருத மொழிச் சொற்களிலிருந்து தோன்றியது போல் தமிழிலிருந்தும் சில பிராகிருதச் சொற்கள் தோன்றின (சௌந்தரபாண்டியன் 1997 :36-42).

தமிழ் நாட்டில் தமிழ் மொழியின் தொடக்ககாலச் சான்றாக கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து புழக்கத்திற்கு வந்ததாகக் கருதப்படும் தமிழ்ப்பிராமிக் கல்வெட்டுக்கள் விளங்குகின்றன. ஆனால் இக்காலத்திற்கு முன்னரே தமிழ் மொழியின் பயன்பாடு இருந்திருக்கும் என நிச்சயப்படுத்திக் கூறலாம். தமிழ் நாட்டில் மட்டும் புழக்கத்திலிருந்த தமிழ்ப் பிராமி வரிவடிவத்திற்கே சிறப்பான இ. ம. ள. ழ. ற. ன போன்ற எழுத்துக்கள் பெருமளவுக்கு இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களிலும், மட்பாண்டங்களிலும் பயன்படுத்தப் பட்டிருப்பதினால் சமகாலத்தில் இங்கும் தமிழ் மொழியின் பயன்பாடு இருந்திருக்கும் எனக் கூறலாம் (அட்டவணை-1).

தமிழ்ப் பிராமி எழுத்து (அட்டவணை-1)

| ஒலிவடிவம் | இலங்கை | தமிழ்நாடு |
|---|---|---|
| இ - ஈ |  |  |
| ம |  |  |
| ன |  |  |

www.tamilarangam.net



| | | |
|---|---|---|
| ள |  |  |
| ழ |  |  |
| ற |  |  |

இதற்கு இத் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் மட்டுமன்றி, சங்க இலக்கியத்தில் வரும் பெயர்களோடு தொடர்புபடுத்தக் கூடிய ஆய், வேள், பருமக (பெருமகன்), பருமகள் (பெரு மகள்), மருமகன், சலஹ (சகலன்), பரத (பரதவர்,பரவர்), உதி, உதிய (உதியன்), குடி போன்ற சமூகம், வம்சம், பட்டம், தனிநபர் சார்ந்த பெயர்கள் சிறந்த எடுத்துக் காட்டாகும். இப்பெயர்களுக்குரியவர்கள் ஆளும்வர்க்கமாக, அதிகாரமிக்க தலைவர்களாக அக்காலச் சமூகத்தில் மதிக்கப்பட்டதை அவர்கள் வகித்த பதவிகள், பட்டங்கள் உறுதிப் படுத்துகின்றன (அட்டவணை-2).

இப்பெயர்களில் பல பிராகிருதமயப்படுத்தப்பட்ட தமிழ்ப் பெயர்களாக உள்ளன. இதற்கு பௌத்த மதத்திற்கு மாறிய மற்றும் ஆதரவு கொடுத்த தமிழர்கள் அம்மத மொழியான பிராகிருதத்தை கல்வெட்டு மொழியாகப் பயன் படுத்தியது காரணமாகும். இதற்கு தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் கிடைத்த பிராமிக் கல்வெட்டுக்கள், மட்பாண்ட எழுத்துக்கள் என்பனவற்றில் உள்ள தமிழ் மற்றும் பிராகிருத, தமிழ் மயப்படுத்தப்பட்ட பெயர்களுக்கிடையிலான ஒற்றுமை சிறந்த எடுத்துக்காட்டாகும் (அட்டவணை-3).

www.tamilarangam.net



**கி.மு.1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கல்வெட்டுக்களில் வரும் சில தமிழ்ப் பெயர்கள் (அட்டவணை - 2) (I.C.:1970)**

| க.வெ. பெயர் | தமிழ் வடிவம் | சமூகநிலை/பட்டம் | க.வெ.எண். | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ஆய், அய | ஆய், அய (நற்58: 5, புறம் 135:15) | அரசபட்டம் | 968,13,550,786,960 | 40 |
| வேள் | வேள்(புறம் 24:18 அகம் 61:15) | படைத்தளபதி, குதிரை வணிகன், தலைவன், வரிவசூலிப்பவன் | 778,647,121,335 | 21 |
| பருமக | பெருமகன் (அகம் 152:15 புறம் 88:3) | அமைச்சன், படைத்தள பதி, வரிவசூலிப்பவன், வணிகன், அரசதூதுவன் | 161,620,471,515,1054 | 374 |
| பருமகள் | பெருமகள், பெருமக னின் பெண்பால் வடிவம் | தலைவி | 147, 148, 331 | 8 |

www.tamilarangam.net





| | | | | |
|---|---|---|---|---|
| பரத | பரதவர், பரவர், பரதர் (சி6:155-160) | வணிகன், அரச தூது வன், படைத்தளபதி, தலைவன், கப்பலோட்டி | 94, 190, 336, 35, 9, 643, 1049, 1053, 1055 | 21 |
| குடி | குடி (புறம் 93,147) | வம்சம், குடியிருப்பு | 1175 | 1 |
| சுட,சுள | சோழ(புறம் 377) | வம்சம், தனிநபர் | 71, 968, 108 | 40 |
| சலக | சகலன் (Mahadevan 1966) | உறவுமுறை | 274 | 1 |
| மருக, மருமகன், மருமன் | மருமகன், மருகன் மருக(பதிற் 63, 16) | உறவுமுறை | 83, 289, 643 | 8 |

www.tamilarangam.net








## பிராமிச் சாசனங்களிடையே க்காணப்படும் சில ஒற்றுமை (அட்டவணை - 3)

| தமிழ்நாடு | சான்றாதாரம் | இலங்கை | சான்றாதாரம் |
|---|---|---|---|
|  அனிகன் | வேங்கடசாமி 1983:51 |  அணிக | I.C.:1970:77. 1099 |
|  அரஹ | Kasinathan:1996 |  அரக | I.C.:1970:75 |
|  அரட்ட | T.B.I. No.55 |  அரிட | I.C.:1970:269 |






www.tamilarangam.net



| | | | |
|---|---|---|---|
|  அஸ்டந்(ன்) | Rajan 1997:111 |  அஸட | I.C.:1970:3 |
|  அ(ஆ)ஸிரிய | T.B.I.No.1 |  அ(ஆ)சிரிய | I.C:1970:925 |
|  புதச | Mahadevan 1994:2-3 |  புதச | I.C.1970:13,106 |
|  கணதிகன் | T.B.I.No.34 |  கணதிச | I.C.1970:913, 914 |




www.tamilarangam.net



| | | | |
|---|---|---|---|
|  கணிய | T.B.I.No.1 |  கணிய | I.C.1970:997, 530, 534 |
|  கஸபன் | T.B.I.No.41 |  கசப | I.C.1970:93,671 |
|  காவிய | T.B.I.No.52 |  கவி | I.C.1970:1141 |

www.tamilarangam.net





| | | | |
|---|---|---|---|
|  கொடு | T.B.I.No.48 |  கொடு | Karunaratne 1984:No.81 |
|  கோவே | Rajan 1997:121 |  கோவேத | Ragupathy 1987:199 |
|  குலஸ | வேங்கடசாமி 1981:43 |  குலஸ | I.C.1970:282 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









| | | | |
|---|---|---|---|
|  குடும்பிகன் | T.B.I.No.51 |  குடுபிக | I.C.1970:33 |
|  குவிரன் | Rajan 1994:82 T.B.I-No.14 |  குபெர | I.C.1970:469, 807 |
|  ண(நா)கன் | T.B.I.No.67 |  நாக | I.C.1970:1120, 1198 |
|  பாணித | T.B.I.No.37 |  பணித | I.C.1970:1035 |







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்





www.tamilarangam.net



| | | | |
|---|---|---|---|
|  திசஅன் | இராசகோபால் |  திச.அயஹ | I.C.1970:424, 426, 556 |
|  வணிகன் | T.B.I.No.37 |  வணிச வணிச | I.C.1970:660, 897, 356, 357 |
|  வருணிய | Subbarayalu:48C |  வருண | I.C.1970:411 |

www.tamilarangam.net




| | | | |
|---|---|---|---|
|  வேள் | T.B.I.No.6 |  வேள் | I.C.1970:123, 169 |
|  விஸாகீ | Rajan 1997:82 |  விசகே | I.C.1970:365, 357 |
|  வியகன் | T.B.I.No.34 |  வியக 3 | I.C.1970:142 |

| | | | | |
|---|---|---|---|---|
|  சலகன் | T.B.I.No.2 |  சலஹ | I.C.1970:274, 700 |
|  சாமுத்ஹ | Mahadevan 1994:4-5 |  ச.முதஹ | I.C.1970:69, 1010, 1005 |
|  சாத்தன் | T.B.I.No.69 |  ச.தன்? | I.C.1970:896d |

www.tamilarangam.net

www.tamilarangam.net



| | | | |
|---|---|---|---|
|  | |  | |
| உபாசன் | T.B.I.No.8 | ஊபாஸக | I.C.1970:78 |
|  | |  | |
| கோபூதி | மகாதேவன் 1998:22 | கோ பூதி, பூதி | I.C.1970:1059-60 |

www.tamilarangam.net



## கி.பி.3ஆம் நூற்றாண்டுக்கு முன் புழக்கத்திலிருந்த சில இடப்பெயர்களின் முன்னொட்டு, பின்னொட்டு சொற்கள் (அட்டவணை -4)

| கல்வெட்டு பாளி இலக்கியச் சொற்கள் | தமிழ் வடிவம் | கல்வெட்டு எண்.(LC1970,1983) பாளிஇலக்கியச் செய்யுள் M.V.) |
|---|---|---|
| அடி | அடி(T.L.46) | (L.C:1970) 925, 1215) |
| ஆவி, அவி, வாபி | அவி, ஆவி, வாபி, (புறம் 105:8) | 1110, M.V.XV:52 |
| ஈள | ஈழம் (பட்டின 190-192, Mahadevan 1966:51 | (L.C:1970) 94 |
| ஊரா | ஊர் (தொல்.பொ.37) | M.V.XXXVII:47 |
| கர-கரா | கரை (T.L.767 | (I.C.:1983) 53 |
| கல, கல்ல | கல் (மலைபடு 191) பதிற் 842 | (I.C.:1970) 1202, (1983) 47, M.V.XXXVIII:8 |
| குடா | குடா (மலைபடு 501) | (1970) 656 |
| குலி-குளி | குழி (T.L.1032) | (I.C.:1970) 276, E.Z.VII:78) |
| சலிவய | சாலிவயல் (நெல்வயல்) மதுரை 8) | (I.C.:1970) 794 |
| தொட | தொடு (தொடுவாய்) புறம் 135 | (I.C.:1970) 86 |
| நகர-நகர் | நகர் (புறம் 23) | (I.C.:1970) 538, (1983) 15, M.V.X:42) |
| பட்டின | பட்டினம் (பட்டின 281) | M.V.320 |
| மங்கல | மங்கலம் (தொல்-பொரு-நூற்பா 48) | M.V.XXXV:113 |
| புர | புரம் (T.L.2270) | (I.C.:1970) 1002 |
| மடு | மடு (TI.L.3024) | (I.C.:1970) 837 |
| மல, மலய | மலை (மலைபடு-31) | M.V.VII:, XXI:7,XXVII:21 |

www.tamilarangam.net



மேலும் கி.பி 3ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இலங்கையில் புழக்கத்தில் இருந்த இடப்பெயர் தொடர்பாகப் பாளி இலக்கியங்கள் கல்வெட்டுக்கள் என்பவற்றில் வரும் இடப்பெயர்களின் பின்னொட்டு, முன்னொட்டுச் சொற்களை ஆராய்ந்தால் அவற்றுட் பல தமிழ் இடப் பெயர்களாக வுள்ளன (அட்டவணை-4).

இத்தமிழ்ப் பெயர்கள் இலங்கையில் புழக்கத்திலிருந் ததற்கு தமிழ்நாட்டிலிருந்து தமிழர்கள் அவ்வப்போது இங்கு வந்து குடியேறியமை காரணம் எனக் கூறுவதை விட, ஏற்கனவே தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து இங்கு வாழ்ந்த மக்களில் ஒருபிரிவினர் தமிழ்நாட்டோடு கொண்ட வர்த்தக, மொழி, பண்பாட்டுத் தொடர்பால் தமிழ்நாட்டில் புழக்கத்திலிருந்த ஆட்பெயர்களையும், இடப்பெயர்களை யும் தாமும் பயன்படுத்தியிருந்தமை முக்கிய காரணம் எனக் கூறுவதே பொருத்தமாகத் தெரிகிறது.

சங்ககாலப் புலவர்களில் ஒருவராக ஈழத்துப் பூதந் தேவனார் குறிப்பிடப்பட்டுள்ளார். இவரைத் தவிர சங்க காலப் புலவர்களில் மேலும் சிலர் ஈழத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது (வேலுப்பிள்ளை 1986:1-12). இவை மொழியடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள தொடர்பையும், ஒற்றுமையையும் சுட்டிக் காட்டுகின்றன. தற்காலத்தில் இலங்கையிலும், தமிழகத்திலும் வழக்கிலுள்ள தமிழ் மொழிச் சொற்களின் உபயோகத்தை ஆராய்ந்து வரும் அறிஞர்கள் சங்ககாலத்தில் வழக்கிலிருந்த பல சொற்கள் தமிழகத்தில் மறைந்துள்ள போதிலும் அவை இலங்கையில் இன்றும் புழக்கத்தில் இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். இச் சொற்கள் பிற்காலத்தில் தமிழகத்துடன் ஏற்பட்ட தொடர்பால் இலங்கைக்கு வந்ததெனக் கூறுவதை விட சங்ககாலம் தொட்டே இலங்கையில் புழக்கத்தில் இருந்து வருகின்றதென்பதற்கு இலங்கைப் பிராமிக் கல்வெட் டுக்களில் வரும் பல சொற்கள், பெயர்களைச் சான்றாகக் காட்டலாம். உதாரணமாக சங்க இலக்கியத்தில் மருக, மருமன், மகன் எனவும், பிற்காலத் தமிழ் இலக்கியங்களிள் மருமகன், மகள் எனவும் அறியப்படும் உறவுப் பெயர்கள் இலங்கை யில் கி.மு.3ஆம் நூற்றாண்டி லிருந்தே புழக்கத்திலிருந்ததற்கு பிராமிக்கல்வெட்டுக்களைச் சான் றாகக் காட்டலாம். ஆனால் கல்வெட்டுக்களில் வரும்

www.tamilarangam.net



இப்பெயர்களை வாசித்த பரணவிதானா தமிழ் மொழிக்கேயுரிய "ன" "ள" "ற" போன்ற எழுத்துக்களை அசோக பிராமியில் பயன்படுத்தப்படும் "ந" "ல" "ர" எனக் குறிப்பிட்டு அப்பெயர்களை முகலி, மகலு, மருமகந, மருமகநெ எனவாசித்து அவற்றை வடமொழி மற்றும் எலு போன்ற மொழிகளுக்குரிய பெயர்களாகக் குறிப்பிட்டுள்ளார்(1970:No 643. 825.289. 1161. 83. 289). பிற்காலத்தில் இக்கல்வெட்டுக்களை ஆராய்ந்த அறிஞர்களும் அவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இக்குறைபாடுகளை அவரது நூலில் உள்ள கல்வெட்டு மைப்பிரதிகளை வைத்து ஆராய்வதை விட கல்வெட்டுக்களை நேரில் ஆராய்வதன் மூலம் மேலும் பல தமிழ்ப் பெயர்களைக் கண்டு கொள்ளலாம் என்பதையே மேற்கூறப்பட்ட உதாரணங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

சிங்கள- தமிழ் மொழிகளுக்கிடையிலான ஒற்றுமையைச் சுட்டிக்காட்டி சிங்கள மொழிச் செல்வாக்கால் இலங்கைத் தமிழ் மொழி வளம் பெற்றதென்ற கருத்துண்டு. ஆனால் சிங்கள மொழியைக்காட்டிலும் தமிழ் மொழி இலங்கையில் மிகத் தொன்மையானது. தமிழிலிருந்து பல சிங்கள மொழிச் சொற்கள் தோன்றியதற்குப் பல சான்றுகள் உண்டு. அந்நிலை தமிழ் மொழியில் காணப்படவில்லை. இது பற்றி மொழியியல் பேராசிரியர் சுசீந்திரராஜா கூறிய கருத்தை இவ்விடத்தில் நோக்கலாம்(1999:153-4).

"இலங்கையில் தமிழ் மொழி பல நுற்றாண்டுகள் வழக்கில் இருந்து வந்த காரணத்தினாலே தமிழ் மொழி அறிவும் சிங்கள மொழி அறிவும் கொண்ட மக்கள் சமூதாயம் ஒன்று பண்டைய காலத்தில் உருவாகி இருந்தது. இச்சமூதாயத்தில் இருந்த இருமொழி அறிவு பெற்ற மக்கள் பற்றிக் கூறுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. ஆயின் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் ஏற்பட்ட தொடர்பையும் இத்தொடர்பால் சிங்கள மொழியில் தோன்றிய விளைவையும் நோக்கும் போது இருமொழி அறிவு கொண்ட மக்கள் சமூதாயம் ஒன்று இருந்ததென்பதையும் அச்சமூதாயம் மூலம் தமிழ் மொழியின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவிற்குச் சிங்கள மொழியில் பரவியதென்பதும் புலனாகிறது. தமிழ்ச் சொற்கள் பலவற்றையும் தமிழ் மொழி (திராவிட மொழி) அமைப்புகளையும் சிங்கள மொழியில் காண்கிறோம்.

www.tamilarangam.net



தமிழையும் சிங்கள மொழியையும் ஒப்பு நோக்கி ஆராய்வோர் சிங்கள மொழியையும் ஹிந்தி போன்ற வட இந்தோ ஆரிய மொழிகளையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்தால், தமிழ் மொழித் தொடர்பால் சிங்கள மொழியில் தோன்றிய மொழி விளைவுகளையும் எளிதில் உணர்வர்.---இத்தனைக்கும் இலங்கைத் தமிழ் மொழியில் சிங்கள மொழியின் செல்வாக்கு என்றோ, தொடர்பு என்றோ எதையும் விதந்து கூறுவதற்கு இல்லை எனலாம். முருங்கை என்னும் சொல்லைச் சிங்களச் சொல் என்று காட்டப்பட்டு வந்தது. ஆயின் அதுவும் திராவிட மொழிச் சொல் என்று அண்மையில் சான்றுகளுடன் நிலைநாட்டப்பட்டது. இலங்கையில் சிங்களவர் மத்தியில் நெடுங்காலம் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் பேச்சுத்தமிழில் மட்டும் ஒரு சில சிங்களச் சொற்கள் புகுந்துள்ளன."

இக் கூற்று தமிழ் மொழியின் தொன்மை, தனித்துவம், வளர்ச்சிப் போக்கு என்பவற்றை மேலும் பின்னோக்கி பெருங்கற்கால மக்களோடு தொடர்புண்டு காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்களோடு தொடர்பு படுத்தி ஆராயலாம் என்பதற்கு ஒரு வழிகாட்டுதலாக உள்ளது.

பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஏற்பட்ட குளநீர்ப் பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், நுண்ணிய தொழில்நுட்ப அறிவு, அயல்நாட்டுத் தொடர்பு என்பன இலங்கையில் நகரமயமாக்கத்திற்கும் அரச தோற்றத்திற்கும் காரணமாயின. இதில் நகரமயமாக்கம் ஏற்பட கடல்சார்ந்த வர்த்தகம் முக்கிய காரணமாக இருந்தது. இலங்கையில் இது வளர்ச்சிபெற பாண்டிநாட்டிற்கும் வடமேற்கிலங்கைக்கும் இடையில் நடைபெற்ற முத்து, சங்கு குளித்தல் பிரதான காரணமாக இருந்தது. அத்துடன் இங்கு கிடைத்த வாசனைப் பொருட்களும், அயல்நாடுகளுடன் இலகுவான கடல்வழித் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய இயற்கையான துறை முகங்கள் இருந்தமையும் பிரதான காரணங்களாகும். இதனால் இலங்கையில் அநுராதபுரம், மகாகமை, மாதோட்டம், பூநகரி, கந்தரோடை போன்ற இடங்கள் நகரமயமாக்கத்திற்கு உட்பட்டன. இதைப் பெருங்கற்காலப் பண பாட்டுடன் பரவலாகக் கிடைத்த இந்திய, உரோம நாணயங்கள், மட்பாண்டங்கள் பிராமி எழுத்து பொறித்த மட்பாண்ட ஓடுகள் என்பவை உறுதிப்படுத்துகின்றன. இச்சான்றுகளில்

www.tamilarangam.net



சில வட இலங்கையில் வல்லிபுரம், ஆனைக்கோட்டை, வரணி, உடுத்துறை, குருந்தலூர், முல்லைத்தீவு, பெரியபுளியங்குளம் போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. இவ்விடங்கள் முழுமையாக ஆராயப்படுமானால் இவ்விடங்களுக்கும் இக்கால நகரமயமாக்கத்திற்கும் இடையிலான தொடர்பு துலக்கம் பெறலாம்.

நகரமயமாக்கத்துடன் இணைந்த நிலையில் அரச உருவாக்கம் ஏற்பட்டது. இதற்கு கி.மு.3-ஆம் நூற்றாண்டில் இருந்து கிடைக்கும் கல்வெட்டுக்களைக் குறிப்பிடலாம். இக்கல்வெட்டுக்களில் அக்காலச் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றோர் மகாராஜா, ராஜா, பருமக (பெருமகன்), வேள், ஆய் என்ற பட்டப்பெயர்களால் அழைக்கப்பட்டு உள்ளனர். இப்பெயர்களுக்குரிய கல்வெட்டுக்கள் காணப்படும் இடங்களைக் கொண்டு இலங்கையில் 260-க்கு மேற்பட்ட இடங்கள் சிற்றரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளன (Gunawardana 1977:1-39). இவர்களைச் சிற்றரசர்கள் என்பதைவிட இனக்குழு நிலையிலிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாக இருந்த தலைவர்கள் எனக் கூறுவது பொருத்தமாக உள்ளது. இத்தலைவர்களில் பருமக (பெருமகன்), வேள், ஆய் போன்ற பட்டப் பெயர்கள் தமிழ் மொழிக்குரிய பெயர்களாகும். இதனால் இப்பெயருக்குரிய தலைவர்கள் அனைவரும் தமிழர்களாக இருந்தார்களா என்பது மேலும் ஆராயப்பட வேண்டியவை. ஆனால் இப்பெயர்களில் தமிழ்த் தலைவர்களும் இருந்துள்ளனர் என நிச்சயப்படுத்திக் கூறலாம். மகாவம்சம் என்ற நூல் துட்டகாமினி, எல்லாளன் என்ற தமிழ் மன்னனை அநுராதபுரத்தில வெற்றி கொள்ளும் முன்னர் தென்னிலங்கையில் ஆட்சிபுரிந்த 32 தமிழ் மன்னர்களை வெற்றிகொள்ள நேரிட்டதாகக் கூறுகிறது (XXV:25). இதில் தமிழ் மன்னர்கள் என அழைக்கப்பட்டோர் மேற்சுட்டப்பட்ட தலைவர்களை ஒத்தவர்களாக இருக்கலாம்.

அண்மையில் பொபி ஆராய்ச்சி, ராஜாவிக்கிரமசிங்கே இணைந்து தென்னிலங்கையில் மேற்கொண்ட கள ஆய்வின் போது கி.மு 3-2ஆம் நூற்றாண்டுக்குரிய பிராமி எழுத்துப் பொறித்த பல நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 40 நாணயங்களுக்குரிய புகைப்படங்கள் நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது (Bopearachchi 1999 :51-60). இவர்களது கண்டு பிடிப்பு இலங்கையின் பண்டைய கால மொழி,

www.tamilarangam.net



எழுத்து, அரசியல், பண்பாடு பொறுத்துப் பலவகையில் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கையில் இதுவரை கிடைத்த காலத்தால் முந்திய எழுத்துப் பொறித்த நாணயங்களாக இவை இருப்பதுடன் சங்ககாலத் தமிழகத்தைப் போல் சம காலத்தில் இலங்கையிலும் தமிழ்ப்பிராமி எழுத்தை நாணயங் களில் பொறிக்கும் மரபு இருந்ததென்பதற்கு இவை சிறந்த சான்றாகும். இந்நாணயங்களில் இருந்து இலங்கையின் பூர்வீக குடிகளாக வாழ்ந்த தமிழர்களுள் சமூகத்தில் உயர்வாக மதிக் கப்பட்ட அதிகாரமிக்க தலைவர்கள், குறுநில மன்னர்கள், சிற்றரசர்கள், வர்த்தகர்கள் போன்றோரால் நாணயங்கள் வெளியிடப்பட்டன என்பது தெளிவாகிறது.

இவ்வரிய கண்டுபிடிப்பைச் செய்த பொபி ஆராய்ச்சி இந்நாணயங்களில் இரண்டில் தமிழ்ப் பிராமி எழுத்து இருப்பதாகச் சுட்டிக்காட்டி இவற்றை உதிரானா, தசஸபிஜ னா என வாசித்துள்ளார்( 1999 :54-59). இப்பெயர்களின் இறுதியில் வரும் "ன" என்ற எழுத்து தமிழ் மொழிக்கேயுரிய சிறப்பெழுத்தாகும். இது "அன்" என்ற விகுதியில் முடியும் ஆண்மகனின் பெயரைக் குறிப்பதாகும். இதனால் இவரால் உதிரானா என வாசிக்கப்பட்ட பெயரை "உதிரன்" என வாசிப் பதே பொருத்தமாகும் (படம். 1.இல.1). அதேவேளை தசஸ பிஜனா என வாசிக்கப்பட்ட பெயரை தஸபிடன் அல்லது தஸபிட்டன் என வாசிப்பது பொருத்தமாகவுள்ளது(படம். 1,இல.2). இதையொத்த பெயர்கள் தமிழகப் பிராமிக் கல்வெட்டிலும் வருகின்றன.

இங்கு கிடைத்த மேலும் இரு நாணயங்களை இவ்வாசிரியர் மஹசிதஅபொ (Maha citaapo), கபதிகஜகஅபொ (kapatikajaapo) என வாசித்துள்ளார் (1999:54-55). ஆனால் இவற் றின் வாசிப்புக்கு சரியான பொருளை ஆசிரியரால் கொடுக்க முடியவில்லை. இவ்விரு நாணயங்களும் முதலிரு நாணயங் களைப் போல் பெயரின் இறுதி "அன்" என்ற விகுதியோடு முடிவதால் இவற்றையும் தமிழ்ப் பெயர்களாகக் கொள்ள முடியும் என்பதே இக்கட்டுரை ஆசிரியரதும், நாணய வியலாளர் அளக்குடி சீதாராமன் அவர்களதும் கருத்தாகும். இவற்றுள் முதல் நாணயத்தை "மஹாசாத்அன்" என வாசிக்கலாம் (படம். 1.இல.3). சாத்தன் என்பது தமிழ்ப் பிராமிக்கல்வெட்டுக்களில் பல இடங்களில் வந்துள்ளது (Mahadevan 1966 : 69 ). இது வணிகன் அல்லது வணிகக் குழுவைக் குறிக்கிறது. இதனால் இதேகருத்தை நாணயத்தில்

www.tamilarangam.net



வரும் பெயரும் கொண்டுள்ளதெனலாம். இதில் "மஹா" என்பது பெரிய அல்லது உயர்ந்த என்ற கருத்தைக் கொண்டுள்ளது. இச்சொல் இலங்கைப்பிராமிக் கல்வெட்டு களில் "மஹா உதி","மஹா ஆய்" போன்ற தமிழ்ப் பெயர்க ளுடன் இணைந்து வருவதைக் குறிப்பிடலாம். இங்கே "மஹாசாத்அன்" என்பது பெரும் வணிகன் அல்லது பெரும் வணிககுழு என்ற கருத்தைக் கொண்டிருக்கலாம். இரண்டா வது நாணயத்தை "கபதிகஸபஅன்" என வாசிக்கலாம் (படம். *1*, இல.*4*). இதில் கபதி என்பது பட்டப் பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது குடும்பத் தலைவன் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. அநுராதபுரத்தில் உள்ள கல்வெட்டொன்று தமிழ்க் கபதி பற்றிக் கூறுகிறது (Parana vithana1970:No94). இது குடும்பிகன் என்ற பட்டத்திற்கு சமனான கருத்துடையது. தமிழ் நாட்டிலுள்ள திருப்பரங் குன்றக் கல்வெட்டொன்று ஈழத்தைச் சேர்ந்த குடும்பிகன் பற்றிக் கூறுகிறது (Mahadevan1966:No 51). "கஜபஅன்" என்பது கபதி என்ற பட்டத்திற்குரியவரின் பெயராகும். "கஜப" என்பதற்கு யானை என்ற கருத்துண்டு. இதன் மூலம் இவனை யானைப்படையின் தலைவன் எனக்கொள்ளலாம். இந்திய தொல்லியல் ஆய்வுத்துறை முதுநிலைக் கல்வெட்டாய்வாளர் ராஜவேலு இப்பெயரைக் "கடல்அன்" என வாசிக்கலாம் எனக் கூறுகிறார்[(1)]. இதற்கு தமிழ் நாட்டிலுள்ள மாங்குளக் கல்வெட்டில் வரும் "கடலன்" என்ற பெயரைச் சான்று காட்டுகிறார். ஆனால் கல்வெட்டில் "ல" வாகவுள்ள எழுத்து நாணயத்தில் "ப" வாக இருப்பதினால் இது மேலும் ஆராயப் படவேண்டும். எவ்வாறாயினும் இவ்விருபெயர்களை ஒத்த பெயர்கள் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது ( Mahadevan 1966 :69, 41 ).

தென்னிலங்கையில் கிடைத்தவற்றை ஒத்த நாணயங்கள் சமகாலத்தில் வட இலங்கையிலும் புமக்கத்திலிருந்ததை கந்த ரோடையில் கிடைத்த நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வரிய கண்டுபிடிப்பைச் செய்த நாணயவியலார் சே யோன் நாணயத்தில் உள்ளவற்றை எழுத்துக்களா எனக் கேள்வி எழுப்பி அவற்றைச் சோமர் வெளியிட்டிருக்லாம் எனக் குறிப்பிட்டுள்ளார் (1998: 84). இது போன்ற நாணயங் கள் பிற இடங்களில் அதுவரை கண்டு பிடிக்கப்படாத கால கட்டத்தில் இவ்வாறான சந்தேகம் அவருக்கு ஏற்பட்டிருக் கலாம். ஆனால் அவர் நூலில் உள்ள நாணயங்களுக்குரிய

www.tamilarangam.net




புகைப்படங்களை ஆராய்ந்த போது அவற்றுள் சில நாணயங்களில் தெளிவற்ற நிலையில் பிராமி எழுத்துக்கள் இருப்பதை அவதானிக்க முடிகிறது (1998: 84,Nos.3-10). அவற்றுள் ஒரு நாணயத்தை மட்டும் இங்கு குறிப்பிடலாம். இதுவும் தென்னிலங்கையில் கிடைத்த நாணயங்களைப் போல் ஈய நாணயமாகும். அவற்றின் எழுத்தமைதி கொண்டு இதன் காலம் கி.மு.2ஆம், கி.மு.1ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தெனக் கூறலாம். நாணயத்தின் முன்புறத்தில் சிவலிங்கம் இருப்பதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்(1998: 84). ஆனால் அதை ஸ்ரீவக்ஸா எனக் கூறுவதே பொருத்தமாகும். இவ்வடிவத்தை சங்ககாலப் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களில் சிறப்பாகக் காணமுடிகிறது. இதற்கு இடப்புறத்தில் வலப்புறம் நோக்கிய நிலையில் மயில் ஒன்று காணப்படுகிறது. வலப்புறத்தில் மனிதன் போன்ற உருவம் இருப்பதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். நாணயத்தின் பின்புறத்தில் விளிம்பை ஒட்டி ஒரு மிருகத்தின் தலை காணப்படுகிறது. இதன் இடது வலது புறமாக ஏழு பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. அதில் மூன்று எழுத்துக்கள் தெளிவற்றுள்ளன. ஏனைய எழுத்துக்களை உதிஹன் என வாசிக்கலாம். ஆறுமுக சீதாராமன் உதிபன் என வாசிக்கிறார் (படம். *1*,இல.*5*). வாசிப்பில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் நாணயத்தில் வரும் பெயரின் இறுதி "அன்" என்ற விகுதியோடு முடிவதால் இது ஒரு தமிழ் பெயர் என்பது தெளிவாகிறது. இதே காலத்திற் குரிய மேலும் பல நாணயங்க்ள் இங்கிருக்கலாம் என்பதை அண்மையில் களஆய்வை மேற்கொண்ட கிருஷ்ணராஜா கண்டு பிடித்த "சிவ" என்ற பெயர் பொறித்த நாணயம் ஒன்று உறுதிப்படுத்துகிறது(1998:51-2).

*(படம்-1)* இலங்கையில் கிடைத்த பண்டைய தமிழ் நாணயங்கள்

உதிரன் *(இல.1)*







*(இல.2)* தஸபிடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | |
|---|---|
| (இல.3) மஹா சாத்அன்  | (இல.4) கபதி கடலஅன்  |
| (இல.5) உதிபன் (உதஹன்)  | (இல.6) பரத திஸஹ  |
| (இல.7) மஜிமஹ  | (இல.8) சுடண(ந)கஸ  |

இவற்றிலிருந்து இலங்கையில் பண்டுதொட்டு வாழ்ந்த தமிழர்களுள் பல்வேறு காரணங்களால் அக்காலச் சமூகத்தில் உயர்நிலைக்கு வந்த தலைவர்கள் இலங்கையின் சிற்றரசர்களாக, குறுநில மன்னர்களாக, வர்த்தகர்களாக அல்லது அதிகாரமிக்க தலைவர்களாக இருந்து இந்நாணயங்கள் வெளியிட்டமை தெரிகிறது. இந்நாணயங்கள் பிராமிக்கல்வெட்டுக்களைப் போல் தமிழர்கள் இலங்கையில் செறிவாகவும், செல்வாக்குடனும் பண்டு தொட்டு வாழ்ந்து வருகிறார்கள் என்பதைக் காட்ட மேலும் வலுவுள்ள உறுதியான சான்றாதாரங்களாக அமைகின்றன (புஷ்பரட்ணம் 1999அ:55-70). இதனால் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த தமிழ மன்னர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அனைவரையும் வரலாற்றறிஞர்கள் கூறுவது போல் தமிழ் நாட்டுடன் மட்டும் தொடர்பு படுத்தாது இங்கு வாழ்ந்த தமிழ்த் தலைவர்களுடனும், குறுநில மன்னர்களுடனும் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு. இத்தகைய வரலாற்று ஆதாரங்களின் பின்னணியில் இலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்களின் வரலாற்றை நோக்கலாம்.

செனிவரட்னா அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த முதல் தமிழ் மன்னர்களான சேன, குத்தக என்போர்களின் தந்தை குதிரை வர்த்தகனாக இருந்ததினால் இம் மன்னர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்த பரதவ சமூகத்தில் இருந்து வந்தவர்களாக இருக்கலாம் எனக் கூறுகின்றார் (1985: 49-4). ஆனால் இலங்கையிலுள்ள கி.மு.1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 21 கல்வெட்டுக்களில் பரத என்ற பெயர் காணப்படுகின்றது. மலோனி என்பவர் தென்தமிழ் நாட்டிலும், வட, வட மேற்கு இலங்கையிலும் தற்காலத்தில் வாழ்ந்து வரும் பரதவ சமூகத்தின் தோற்றத்தை சங்க இலக்கியத்தில் வரும் பரவர், பரதவர் சமூகத்துடன் தொடர்பு படுத்தி சங்க இலக்கியத்தில் வரும் பெயர்களும் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் பரத என்ற பெயரும் ஒன்றென்றார் (1969 :224-240). இக் கருத்தை ஏற்கும் செனிவரட்னா இவர்களின் தோற்றம் பெருங் கற்காலப் பண்பாட்டுடன் ஏற்பட்டிருக்கலாம் என்பதற்கு இப்பெயர் தொடர்பான கல்வெட்டுக்கள் இலங்கையில் அப்பண்பாட்டு மையங்களை அண்டிக் காணப்படுவதைச் சான்றாகக் காட்டினார் (1985:49-54). சங்க இலக்கியத்தில் இப்பரதவ சமூகத்தின் முக்கிய தொழிலாக வர்த்தகம், முத்து சங்கு குளித்தல், மீன்பிடித்தல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கைப் பிராமிக்கல்வெட்டுகள் கூட இப்பெயர்களுக்குரியவர்கள் பெரும்பாலும் வர்த்தகர்களாக, கப்பல் ஓட்டிகளாக, அரச தூதுவர்களாக செயல்பட்டதைக் கூறுகின்றன ( Paranavithana 1970 :Nos270, 368, 1049, 1053, 1055). அநுராதபுரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று ஈழத்தைச் சேர்ந்த பரத என்பவன் (ஈள பரத) பிற தமிழ் வணிகர்களுடன் கூட்டாக இணைந்து வர்த்தகத்தில் ஈடுபட்டதாகக் கூறுகிறது. (Paranavithana 1970 :94).

அண்மையில் தென்னிலங்கையில் கிடைத்த கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய நாணயம் ஒன்றின் முன்புறத்தில் பரத திஸஹ என்ற பெயரும், பின்புறத்தில் இரு மீன்கோட்டுருவமும், சுவஸ்திகா சின்னமும் இடம் பெற்றுள்ளன

www.tamilarangam.net



(படம்-1.இல.6). அம்பாறை மாவட்டத்தில் குடுவில் என்ற இடத்தில் கிடைத்த கி.மு.2 ஆம் நூற்றாண்டிற்குரிய கல்வெட்டொன்று தீகவாபி என்ற இடத்தில் வாழ்ந்த திஸய என்ற தமிழ் வணிகன் பௌத்த சங்கத்திற்கு அளித்த தானம் பற்றிக் கூறுகிறது (Paranavithana 1970 :No 480). அநுராதபுரத்தில் கிடைத்த கல்வெட்டொன்று தமிழர்கள் ஒன்றுகூடி வணிகம் தொடர்பான ஆலோசனை நடத்த மண்டபம் அமைத்ததாகக் கூறுகிறது. இந்த வணிகக் குழுவில் திஸ என்ற பெயருக்குரிய தமிழனும் ஈடுபட்டதாகக் கூறுகிறது (Paranavithana 1970: 94). இதன் மூலம நாணயத்தில் வரும் திஸ என்ற பெயரில் தமிழர்களும் வாழ்ந்துள்ளமை தெரிகிறது. இதற்கு தமிழ் நாட்டில் அழகன்குளம் என்ற இடத்தில் கிடைத்த "திசஅன்" என்ற பெயர் பொறித்த மட்பாண்டச் சாசனம் மேலும் ஒரு சான்றாகும் (இராசகோபால்). இதேபெயரில் சில மன்னர்களும், பல குறுநில மன்னர்களும் இலங்கையில் ஆட்சி புரிந்ததற்குச் சான்றுகளுண்டு (Paranavithana 1970 :No 251,424, 425,621). இதில் வரும் மீன்கோட்டுருவம் பரதவ சமூகத்தினர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டதாக சங்க இலக்கியம் கூறுவதை நினைவு படுத்துகிறது. இலங்கையில் இன்றும் பரதவ சமூகத்தினர் பலர் இத்தொழிலில் ஈடுபாடு கொண்டிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

சேன, குத்தக என்ற பெயர் சங்ககாலத்தில்/தமிழகத்தில் புழக்கத்தில் இருந்ததற்குச் சான்றுகள் இல்லை. ஆனால் சமகாலத்தில் இலங்கையில் புழக்கத்தில் இருந்ததற்கு கி.மு. 3-2 ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுக்களில் வரும் சேன (Paranavithana 1970: Nos 64, 246, 609) குத்தக (Paranavithana 1970: Nos 43, 143, 177, 617, 646, 828, 842) என்ற பெயர்கள் சான்றாகும். பரத என்ற பெயரின் இன்னொரு வடிவமாகக் கல்வெட்டுக்களில் வரும் பத என்ற சொல் கூறப்படுகிறது( Paranavithana 1970 :116). இதற்குக் கல்வெட்டுக்களில் வரும் பத. பரத ஆகிய பெயர்களுக்குரியவர்கள் வகித்த பதவி, சமூக அந்தஸ்து என்பவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமை சான்றாகக் காட்டப்படுகிறது ( Seneviratne 1985: 49-54). இதில் பத, பரத என்ற பட்டம் அல்லது சமூகப் பெயருடன், சேன, குத்திக (Paranavithana 1970 :43,100,760, 177, ) என்ற பெயர்கள் இணைந்து வருவது இவர்களைப் பரதவ சமூகத்துடன் தொடர்புபடுத்த சாதகமாக இருக்கிறது. எனவே சேன, குத்தக மன்னர்களை பரதவ சமூகத்தினர் எனக் கொண்டால் அவர்களை தமிழகத்தில் வாழ்ந்த பரதவ சமூகத்தினருடன் தொடர்பு

www.tamilarangam.net



படுத்துவதை விட சமகாலத்தில் இலங்கையில் வாழ்ந்த பரதவசமூகத்தினருடன் தொடர்புபடுத்துவதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

எல்லாளன் என்ற தமிழ் மன்னனைச் சோழ நாட்டவன், சோழ வம்சத்தவன். வெளி நாட்டவன் எனக் கூறப்படுகிறது (சிறிவீரா 1985 : 119-140). ஆனால் பண்டைய கால இலங்கையில் நீண்ட காலம் (44 வருடங்கள்) ஆட்சி புரிந்தவன் என்ற பெருமைக்குரிய இவனைப் பற்றித் தமிழ்நாட்டு வரலாற்று மூலங்களில் எதுவித சான்றுகளும் காணப்படவில்லை. சிங்கள இனத்தின் விடுதலை வீரனாகப் பாளி இலக்கியங்களில் வருணிக்கப்படும் துட்டகாமினி எல்லாள மன்னனை எதிர்த்து பெரும் படையெடுப்பை நிகழ்த்திய போது தென்னிலங்கையில் இப்படைவீரர்களை எதிர்த்து 32 தமிழ் மன்னர்கள் போரிட்டதாக மகாவம்ஸம் என்ற நூல் கூறுகிறது (XXV :75). துட்டகாமினி எல்லாளன் போரா த்தை தமிழ் சிங்கள இனப்போராட்டமாக சித்தரிக்கும் இந்நூல் போரில் எல்லாளன் இறந்ததும் அந்த இடத்தில் நினைவு கல் எழுப்பி அவ்விடத்தால் செல்லும் மக்களும், வாகனங்களும் இறந்த மன்னனுக்கு மரியாதை செலுத்துமாறு துட்டகாமினி கட்டளையிட்டான் எனக் கூறுகிறது (XXV : 73). இச்செய்திகளை நோக்கும் போது எல்லாளனை இந்நாட்டுக்குரிய மன்னனாக மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர் எனக் கூறலாம்.

இலங்கையிலுள்ள 40 பிராமிக் கல்வெட்டுக்களில் சுட, சுள போன்ற சொற்கள் வம்சம், பட்டம், தனிநபர் சார்ந்த பெயர்களாக வருகின்றன. தமிழில் "ட" க்குப் பதிலாக "ழ" பயன்படுத்தும் மரபு பௌத்த நூலாகிய வீரசோழியத்தில் காணப்படுவதால் தமிழில் இச் சொல் சோழரைக் குறித்த தென்ற கருத்துண்டு (Ragupathy). இதற்கு அசோகனது 2வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் சோழ, பாண்டிய அரசுகள் சோட, பாட எனக் கூறப்பட்டுள்ளதை இங்கு சுட்டிக் காட்டலாம் (Hultzsch 1969 :XXXIXX). இலங்கையில் செருவல என்ற இடத்தில் கிடைத்த கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டில் சுட என்ற பெயரிலுள்ள தமிழன் பௌத்த மதத்திற்கு தானமளித்ததாகக் கூறுகின்றது (Seneviratne 1985 :52). மேலும் இதே காலகட்டத்திற்குரிய சில கல்வெட்டுக்களில் இச்சொல் ஆய், மாற போன்ற தமிழ்ப் பெயர்களுடன் வருகின்றது (Paranavithana 1970 :No 968).

www.tamilarangam.net



தென்னிலங்கையில் கிடைத்த கி. மு. 1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாணயம் ஒன்றின் முன்புறத்தில் புலிபோன்ற உருவமும், பின்புறத்தில் சுட நாகஸ என்ற பெயரும் இடம் பெற்றுள்ளன (படம்-7). இந்நாணயம் இலங்கையில் வெளியிடப்பட்டதென்பதில் எதுவித சந்தேகமும் இல்லை (Bopearachchi 1999 :51-0). இந்நாணயத்தில் காணக்கூடிய சிறப்புக்கள் என்னவெனில் சுட என்பது ஒரு பட்டமாக அல்லது வம்சப் பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும். இந்த அம்சத்தை சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணமுடிகிறது. இன்னொன்று நாக என்ற பெயரில் வடமொழிக் "ஹ" வுக்குப் பதிலாக தமிழ்க் "க" பயன்படுத்தப்பட்டுள்ளது. நாணயத்தின் முன்புறத்தில் புலிபோன்ற உருவம் இடம் பெற்றுள்ளது. சங்ககாலச் சோழமன்னர் தமிழகத்தில் வெளியிட்ட நாணயங்களில் புலியுருவம் அவர்களின் அரச இலட்சனையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (சீதாராமன் 1994 :13). அதுபோன்று இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயத்தில் சோழ (சுட) என்ற பெயரோடு புலியுருவமும் இடம்பெற்றுள்ளமைக்கு சோழ மரபில் வந்த மக்கள் இங்கும் வாழ்ந்தது காரணமாக இருக்கலாம்.[2]

கி.மு. 1ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த ஐந்து தமிழ் மன்னர்கள் பாண்டி நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பது அறிஞர்கள் பலரது கருத்தாகும். இதற்கு இம்மன்னர்கள் சிலரது பெயர்களுக்கும் சமகாலத்தில் பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்த மன்னர்களது பெயர்களுக்குமிடையேயுள்ள ஒற்றுமை முக்கிய சான்றாகக் காட்டப்படுகிறது. ஆனால் இதே பெயர்கள் சமகால இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. இதற்கு மாற, பழைய, புலய, ஆய் போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம் ( Paranavithana 1970 : Nos 968. 58.159.712.270.). அசோகனது கல்வெட்டில் பாண்டியர் பாட என அழைக்கப்பட்டுள்ளனர். இப்பெயர் இலங்கையில் ஒரு கிராமத்தின் பெயராக பிராமிக் கல்வெட்டில்( படகம) குறிப்பிடப்பட்டுள்ளது ( Paranavithana 1970 :No1152).

தென்னிலங்கையில் உள்ள கி.மு. 1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பத்துக் கல்வெட்டுக்கள் மஜிமகாராஜா வழிவந்த பத்து சகோதரர்களின் ஆட்சிபற்றிக் கூறுகின்றன ( Paranavithana 1970 : Nos 556-569). பாளியில் மஜிமகாராஜா என்றால் தமிழில் மீன் அரசன் என்பது பொருள். இதையுறுதிப்

www.tamilarangam.net



படுத்தும் வகையில் இக்கல்வெட்டுக்களில் மீன்கோட்டுருவங்கள் வரையப்பட்டுள்ளன. மென்டிஉஷ் என்ற வரலாற்றறிஞர் மீன் கோட்டுருவங்களுடன் கூடிய இக்கல்வெட்டுக்கள் ஆதிகாலத்தில் இந்தியாவிலிருந்து குடியேறிய தமிழர்களின் வழிவந்தவர்களைக் குறிக்கின்றன என்றும், இவர்கள் சிங்கள மன்னர்களுக்கு கட்டுப்படாமல் சுதந்திரமாக ஆட்சிபுரிந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளார் (வேங்கடசாமி 1983:610).

அண்மையில் இலங்கையில் நான்கு வகையான நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அமைப்பு, சின்னங்கள், பெயர்கள் என்பன பாண்டிய வம்சத்தோடு தொடர்புடையன. இவற்றுள் தென்னிலங்கையில் கிடைத்த முதலாவது வகை நாணயம் கி.மு. 1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது (Bopearachchi 1999 :51-60). இதன் முன்புறத்தில் யானை உருவமும், பின்புறத்தில் மஜிமஹ என்ற பெயரும் இடம்பெற்றுள்ளன (படம்-8). பரணவிதானா மஜிமஹ என்பது இக்காலத்தில் இலங்கையில் வாழ்ந்த மக்களின் பெயராகக் கருதுகின்றார் (Paranavithana 1970 :117). ஆனால் இதற்கு மீன் என்ற கருத்தும் உண்டு. பாண்டியர் தமது குலச்சின்னமான மீனை நாணயங்களில் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் இலங்கையில் மீன்சின்னத்திற்குப் பதிலாக அதைக்குறிக்கும் பெயரையும் பயன்படுத்தியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இதற்கு பாண்டியர் வெளியிட்ட நாணயங்களைப் போல் இந்நாணயங்களின் முன்புறத்தில் யானை இடம்பெற்றிருப்பதைச் சான்றாகக் காட்டலாம். ஏனைய மூன்று வகை நாணயங்களும் பூநகரியில் கிடைத்தவை. இதில் இரண்டாவது வகை நாணயங்கள் அநுராதபுரத்திலும் கிடைத்துள்ளன (Codrington 1924 :19). இதன் முன்புறத்தில் யானையும், பின்புறத்தில் மீன் சின்னமும் இடம் பெற்றுள்ளது. ஏனைய இருவகை நாணயங்களில் ஒன்றின் முன்புறத்தில் ஐந்துதூண்கள் கொண்ட கூரைக் கோயிலும், மற்றையதில் ஸ்ரீவத்ஸ சின்னமும் பின்புறத்தில் மீன் கோட்டுருவச் சின்னமும் இடம்பெற்றுள்ளன (புஷ்பரட்ணம் 1999 :51-72). இவ்வகை நாணயங்கள் இலங்கைக்குவெளியே இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இவற்றைப் பாண்டிநாட்டிலிருந்து படையெடுத்து வந்து ஆட்சியைக் கைப்பற்றிய தமிழர்கள் இலங்கையில் வெளியிட்டிருக்கலாம் எனக்கூற இடமுண்டு. ஆனால் தமிழ் நாட்டில் சங்க காலப் பாண்டியர் வெளியிட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாணயங்கள் இலங்கையில் கிடைக்கும் போது இங்கு ஆட்சிபுரிந்த தமிழர்கள் சமகாலத்தில் பாண்டியவம்சத் திலிருந்து வந்தவர்களாயின் அவர்கள் இலங்கையில் வெளியிட்ட நாணயங்கள் தமிழகத்திலும் கிடைத்திருக்க வாய்ப் புண்டு. இதனால் இவற்றை இலங்கைத் தமிழ் மன்னர்கள் வெளியிட்ட இலங்கைக்கேயுரிய தனித்துவமான நாணயங்கள் எனக் கூறலாம். எனவே இலங்கையோடு தமிழ் மக்களுக்குள்ள பாரம்பரிய உறவைக் காட்டும் மேற்கூறப் பட்ட சில சான்றாதாரங்களை வைத்து நோக்கும் போது இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களைச் சங்க காலத் தமிழ் நாட்டு அரசவம்சங்களுடனும், மக்களுடனும் மட்டும் தொடர்பு படுத்தாது இலங்கையில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களுடனும் தொடர்பு படுத்திப் பார்க்க இடமுண்டு.

கி.பி 3ஆம் நூற்றாண்டுக்கு முன் தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் அநுராதபுரத்தை மாறிமாறி ஆட்சி புரிந்ததைப் பாளி இலக்கியங்கள் குறிப்பாக மகாவம்ஸம் என்ற நூல் கூறுகிறது. அரசியல் வரலாற்றின் முதல் 200 ஆண்டு காலம் இவ்வரசையாண்ட 22 மன்னர்களுள் 10 பேர் தமிழ் மன்னர்கள். இவர்கள் 80 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளனர். இது அநுராதபுர அரசு தமிழ் மன்னர்களுக்கா, சிங்கள மன்னர்களுக்கா என்ற அதிகாரப் போட்டி நிலையைக் காட்டுகிறது. ஆனால் சிங்கள மன்னர்களின் வரலாற்றுச் சாதனைகளைப் பல ஆயிரம் செய்யுள்களில் கூறும் இந்நூல் தமிழ் மன்னர்களின் வரலாற்றை ஒருசில செய்திகளில் மட்டும் கூறுகின்றது. குறிப்பாக 44 ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி புரிந்த எல்லாள மன்னனின் சாதனைகளை 21 செய்யுள்களில் கூறும் மகாவம்ஸம் 26 ஆண்டுகள் மட்டும் ஆட்சி புரிந்த துட்டகாமினியின் வரலாற்றை 823 செய்யுள்களில் கூறு கின்றது. இதற்கு இந்நூல் எழுந்த காலப்பின்னணி, நூலாசி ரியரின் இன, மத உணர்வுகள், நோக்கம் என்பன காரணமாக அமைந்தன.

இந்நூல் எழுந்த கி.பி. 6ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் தமிழ் நாட்டில் பௌத்த மதம் வீழ்ச்சியடைந்து சைவ, வைஷ்ணவ மதங்கள் மறுமலர்ச்சிய டையத் தொடங்கின. இதன் தாக்கம் சமகாலத்தில் இலங்கையில் ஏற்பட்டதோடு பல்லவ அரசின் எழுச்சியும்,

www.tamilarangam.net



வணிககணங்களின் தோற்றமும் அரசியல்ரீதியாக சிங்கள மன்னர்களுக்குப் பாதகமாக அமைந்தன. சில சந்தர்ப்பங்களில் யார் மன்னனாக வரவேண்டும் என்பதை அநுராதபுரத்தில் வாழ்ந்த தமிழர்களே தீர்மானித்ததாகச் சூளவம்சம் கூறுகிறது. இவைகளே இலங்கையில் இந்து, பௌத்த என்ற சமயவேறுபாட்டை ஏற்படுத்தி இன முரண்பாட்டிற்கு வழிவகுத்ததாக பேராசிரியர் கே.எம்.டி.சில்வா கூறுகிறார் (1981: 20-21). காரணம் எதுவானாலும் இம்மாற்றங்கள் தேரவாத பௌத்த மதத்தின் தலைமைப் பீடமான மகாவிகாரையிலிருந்து இம்மதத்தைப் போதித்த மகாநாமதேரருக்கு பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இலங்கையின் நீண்டகால வரலாற்றில் இன உணர்வை விட, மத உணர்வே மேலோங்கிக் காணப்பட்டது. இலங்கையின் ஆரம்பகால மன்னர்களுள் ஒருவனான மகாசேனன் நீர்ப்பாசன விவசாயத்திற்குப் பெரும் தொண்டாற்றியதால் வரலாற்றில் மின்னேரியத்தெய்வம் என அழைக்கப்படுகிறான். அவன் சிங்கள மன்னனாக இருந்தும் பௌத்த மதத்தின் இன்னொரு பிரிவான மகாயான பௌத்தத்திற்கு ஆதரவு அளித்ததால் தேரவாத பௌத்தத்தை முதன்மைப்படுத்திக் கூறும் மகாவம்சத்தில் அவனது வரலாற்றுச் சாதனைகள் மறைக்கப்பட்டும், முன்பு ஆட்சியிலிருந்த துட்டகாமினி போன்ற மன்னர்களுக்குரிய சாதனைகளாக திரிவுபடுத்தப்பட்டும் கூறப்பட்டுள்ளன. இந்நிலையில் தமிழர்களால் நாட்டிற்கும், பௌத்த மதத்திற்கும் அச்சுறுத்தல் என்ற அச்சம் மகாவம்ச ஆசிரியருக்கு ஏற்பட்டதால் தமிழரிடமிருந்து நாட்டையும், பௌத்த மதத்தையும், அம்மதம் சார்ந்த இனத்தையும், பாதுகாப்பது முக்கிய நோக்காக இருந்தது. இதை இந்நூலாசிரியர் நூலின் பெரும்பாலான அத்தியாயத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் குறிப்பிட்டுள்ளார். இதன் விளைவேதான் மகாவம்ச ஆசிரியர் தான் வாழ்ந்த காலத்திற்கு முற்பட்ட வரலாற்றை இன, மத உணர்வோடு நோக்கி தமிழர்களையும், தமிழ் மன்னர்களையும் இலங்கைக்கு அன்னியவர்களாகக் காட்ட முக்கிய காரணமாகும். இந்நிலையில் ஒரு பக்கச்சார்புடன் தேரவாத பௌத்தத்தையும், அம்மதத்திற்கு தொண்டாற்றிய மன்னர்களின் வரலாற்றையும் முதன்மைப்படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட இந்நூலை மட்டும் அடிப்படை மூலாதாரமாகக் கொண்டு இலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்களின் வரலாற்றை சங்ககாலத் தமிழகத்துடன் மட்டும்

www.tamilarangam.net



தொடர்புபடுத்தி ஆராயாது இலங்கையில் வாழ்ந்த தமிழர்களுடனும் தொடர்புபடுத்தி ஆராய இடமுண்டு என்பதையே மேற்கூறப்பட்ட புதியசான்றுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

அடிக்குறிப்பு

1. 24.3.2000 அன்று தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டியல் துறையில் நடந்த கருத்தரங்கில் வெளியிட்ட கருத்து.

2. இந்நாணயத்தில் வரும் உருவத்தை திரு.ஓ.பொப்பி ஆராய்ச்சி அவர்கள் சிங்கம் எனக் கூறுகிறார். ஆனால் இவ்வுருவத்திற்கும் பிற்காலத்தில் சிங்கள மன்னர் வெளியிட்ட சிங்க உருவம் பொறித்த நாணயங்களின் உருவத் திற்கு மிடையே சில வேறுபாடுகள் உள்ளன. சிங்கத்தின் வாற் பகுதியில் வரவேண்டிய குஞ்சம் இதில் இல்லையெனதிரு. அளக்குடி ஆறுமுக சீதாராமன் அவர்கள் சுட்டிக் காட்டு கிறார்.

www.tamilarangam.net

# இலங்கையில் சங்ககால வேள் ஆட்சி - கல்வெட்டுக்களை அடிப்படையாக கொண்ட ஆய்வு

இலங்கைத் தமிழரின் வரலாற்றைத் தமிழகப் பின்னணியில் வைத்து ஆராயும் மரபு நீண்ட காலமாக இருந்து வருகின்றது. ஆயினும் அவற்றில் பெரும்பாலான ஆய்வுகள் இருநாட்டு வரலாற்று இலக்கியங்களை அடிப்படையாக வைத்தே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதில் இலங்கையின் முதல் வரலாற்று இலக்கியங்களான தீபவம்சம், மகாவம்சம் முதலான பாளி நூல்கள் பௌத்த, சிங்கள வரலாற்றை முதன்மைப்படுத்தும் நோக்கில் எழுதப்பட்டதினால் அவை தமிழர் வரலாற்றையிட்டு பெருமளவுக்கு மௌனம் சாதிக்கின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை அதன் வரலாற்று மரபு இலங்கையைக் காட்டிலும் பிற்காலத்தில் தோன்றிய ஒன்றாகும். இதனால் இங்கு தோன்றிய வரலாற்றிலக்கியங்கள் குறிப்பாக சங்க இலக்கியங்கள் இலங்கைத்தமிழர் வரலாற்றை அறிய குறைந்தளவு தானும் உதவில்லை. இந்நிலையில் இவ்விரு நாட்டு இலக்கியங்களை அடிப்படை மூலாதாரமாகக் கொண்டு எழுந்த வரலாற்று நூல்களில் இலங்கைத் தமிழரின் வரலாறு மிகத் தொய்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. ஆயினும் அண்மைக்காலமாக இருநாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் தமிழர் வரலாற்றிற்குப் புது வெளிச்சமூட்டுபவையாக உள்ளன. இதில் தமிழ் நாட்டு அரச உருவாக்கம் பற்றி இலக்கியங்களோடு தொல்லியல் சான்றுகளையும் பயன்படுத்தி ஆராய்ந்த அறிஞர்கள் பலர் தமிழ் அரசுகளின் தோற்றத்திற்கான சான்றுகள் தமிழ் நாட்டில் மட்டுமன்றி சமகாலத்தில் இலங்கையிலும் இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளமை இங்கு சிறப்பாக குறிப்பிடத்தக்கது. இவற்றுள் இலங்கையில் இருந்த வேள் ஆட்சி பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

www.tamilarangam.net



தமிழ் நாட்டைப் போல் இலங்கையிலும் வேள் என்ற சொல் பாளி இலக்கியங்களிலும், பிராமிக் கல்வெட்டுக் களிலும், மட்பாண்ட ஓடுகளிலும் காணப்படுகின்றது. இச் சொல் வெள், வெளி, ஒளி ஆகியவற்றின் அடியாகத் தோன்றியதெனக் கூறப்படுகிது. வேள் என்பதன் பன்மை வடிவமே வேளிர் என்பதாகும். இவர்களின் எழுச்சி தமிழக அரசியல் வரலாற்றில் திருப்பு முனையாகக் கருதப்படுகிறது. இவர்களின் ஆட்சி தமிழ் நாட்டில் கி.மு.4ஆம் நூற்றாண்டி லேயே ஏற்பட்டுவிட்டதென்பதற்கு தாரநாதரின் இந்தியாவில் புத்த சமய வரலாறு என்ற நூலில் சான்றுகள் காணப்படு கின்றன. இக்காலத்தில் வட இந்தியாவில் மௌரியத் தலைநகரிலிருந்து ஆட்சி புரிந்த பிந்துசாரன் தமிழக வேளிர், வேந்தர்களுடன் தொடர்பு கொண்டதாக இந்நூல் கூறுகிறது. சங்க இலக்கியம் வேளிரை தொல் குடியினர் எனவும், தன்னிக ரில்லாத் தலைவர்கள் எனவும் கூறுகின்றது. அறிஞர் இராவக அய்யங்கார் தொட்டு இலங்கை நாட்டுப் பேராசிரியர் சுதர்சன் செனிவரட்னா வரை தமது தமிழ் நாட்டு அரச உருவாக்கம் பற்றிய ஆய்வில் இந்த வேள், வேளிர் ஆட்சின் பங்களிப்பை முக்கியப்படுத்திக் கூறத்தவறவில்லை. அண்மையில் பண்டைய தமிழகத்தில் அரச உருவாக்கம் என்ற தலைப்பில் கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொண்ட தமிழ் நாடு தொல்பொருள் துறையின் முதுநிலை ஆய்வாளர் திரு. பூங்குன்றன் அரச உருவாக்கத்தில் வேள், வேளிருக்குரிய பங்களிப்பை பொருத்தமான சான்றுகளுடன் புதிய கண் ணோட்டத்தில் நோக்கியிருப்பதோடு, இதையொத்த அரச உருவாக்கம் சமகாலத்தில் இலங்கையிலும் ஏற்பட்டிருக்க லாம் என்பதற்கு இலங்கைப்பிராமிக் கல்வெட்டுக்களோடு அண்மைக்காலத்தில் ஆனைக்கோட்டை, பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த தொல்லியல் சின்னங்களையும் சான் றாகக் காட்டியுள்ளார்(1999). இது இலங்கைத் தமிழரிடையே அரச உரு வாக்கம் ஏற்பட்டதையும், அதன் தோற்ற காலத்தை தமிழகத்தின் சமகாலத்திலிருந்து தொடங்க வேண்டும் என்பதையும் சுட்டிநிற்பதாக உள்ளது.

தமிழ்நாட்டில் வேள், வேளிர் என்ற சொல்லை சங்க இலக்கியத்திலும், வேள் என்ற சொல்லை கி.மு.3-2ஆம் நூற்றாண்டுக்குரிய மாங்குளம், மேட்டுப்பட்டி, கரூர், மறு கால்தலை ஆகிய இடங்களில் உள்ள பிராமிக் கல்வெட்டுக் களிலும் காணமுடிகிறது (Mahadevan 1966:61). இவர்கள் தமிழக

www.tamilarangam.net



அரசதோற்றம் பற்றிய ஆய்வில் பிற குறுநில மன்னர்கள் பெறாத முக்கியத்துவத்தை பெறுகின்றனர். தமிழகத்தில் வேந்தர் ஆட்சிக்கு முன் வேளிர் ஆட்சி தோன்றியதெனக் கூறும் பூங்குன்றன் இவர்கள் ஐந்து திணைகளிலும் தனித்தனியே உருவான குடித்தலைவர்கள் எனக் கூறுகிறார் (1999). இவர்கள் அரசியலிலும், சமூகத்திலும் மிகுந்த செல்வாக்குடன் விளங்கியதைச் சங்க இலக்கியத்தில் வரும் இளங்கோவேள், மாவேள் எவ்வி, நெடுவேள் ஆவி என்ற பெயர்களும், வேந்தரும் வேளிரும் போன்ற சொற்றொடர்களும் உணர்த்துகின்றன. சங்க இலக்கியத்தில் நன்னன், கங்கன், கட்டி, வாணன் போன்ற வேளிர்த் தலைவர்கள் பேசப்படுகின்றனர் (அகம் 44 325). ஒவ்வொரு ஊருக்கும் ஒரு வேள் தலைவனாக இருந்திருக்க வேண்டும். அவன் கீழ் வாழ்ந்த குடிகள் இரத்த உறவினால் பிணைக்கப்பட்ட ஒரு குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம். தமிழ்நாட்டில் உள்ள வேள்கலிநாடு, வேள்நாடு, வேளூர் என்பன வேள் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடாக, ஊராக இருந்திருக்க வேண்டும். வேணாடு என்பது வேள் ஆட்சிக்குட்பட்ட நாட்டை குறிப்பதாகும் (Subbarayalu 1973). வேள், வேளிர் என்பதற்குப் பதிலாக ஒளி, ஒளியர் எனப் பயன்படுத்தப்பட்டுள்ளதை சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. இங்கே வேணாடு என்பது சில இடங்களில் ஒளி நாடு எனக் கூறப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

சங்க இலக்கியத்தில் வரும் தொன்முதிர் வேளிர் (புறம் 201:11-12), தொன்று முதிர் வேளிர் (புறம் 24:21) பற்றிய சான்றுகள் தமிழகத்தின் மிகத் தொன்மையான இனக்குழுக்களில் ஒன்றாக வேளிரைக் கருத இடமளிக்கிறது. சிந்துவெளியிலிருந்து கி.மு.800 அளவில் தென்னகம் வந்து குடியேறியவர்களே வேளிர் என்பது சுப்பிரமணியத்தின் கருத்தாகும் (1966:258). இவர்களின் வழி வந்தவர்களே பிற்கால வேளார் என ஆரோக்கியசாமி கருதுகிறார். தக்காணத்தில் அறுநூறு ஆண்டுகள் சிறப்புற்று விளங்கிய சாளுக்கியரை வேளிர் என்று பிங்கல நிகண்டும், வேண்புல அரசர் எனத் திவாகரமும், வேள் குலச் சாளுக்கியர் எனச் சோழக் கல்வெட்டும் கூறுகின்றன. இதற்கு தமிழ்நாட்டிற்குரிய வேளிர் தமிழகத்திற்கு வெளியேயும் பரவியதே காரணம் என கிருஸ்ணசுவாமி ஐயங்கார் விளக்கம் கூறுகிறார் (1941:11). தமிழகத்திலிருந்தே இலங்கைக்குப் பெருங் கற்காலப் பண்பாடு பரவிய தென்ற கருத்துடைய பேராசிரியை செண்பகலட்சுமி வேளிரின்

www.tamilarangam.net



தோற்றத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்பு படுத்துகிறார். இப்பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள் தமிழ் நாட்டிற்குரிய சிறப்பம்சம் எனக் கூறும் இவர் வேளாண்மையுடன் தொடர்பு உடையவர்களே இப்பண்பாட்டை உருவாக்கியவர்கள் எனக் கூறி வேளிர் வாழ்ந்த இடங்களுக்கும், இப் பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படும் இடங்களுக்கும் இடையிலான ஒற்றுமையைத் தொடர்புபடுத்தலாம் என்றார் (1978:52). செனிவரட்னா வேளிர் வாழ்ந்த இடங்களுக்கும் பெருங்கற்கால ஈமத்தாழிகள் காணப்படும் இடங்களுக்கும் இடையிலான ஒற்றுமையைச் சுட்டிக் காட்டியுள்ளார் (1993:70). இராஜன் பெருங்கற்கால நடுகற்களுக்கும் வேளிரின் தோற்றத்திற்கும் தொடர்பிருக்கலாம் என்பதற்கு செங்கம், தருமபுரி நடுகற்களைச் சான்றாதாரம்காட்டுகிறார் (1996 :220).

சங்க இலக்கியத்தில் வேளிர் வேளாண்மையுடன் தொடர்புடையவர்களெனக் கூறுவதற்கு சான்றுகள் மிகக் குறைவு. மாறாக கால்நடை வளர்ப்பிலும், பெருமளவு போர் நடவடிக்கையிலும் ஈடுபட்டதற்கே சான்றுகள் அதிகம். போர்க்காலங்களில் பங்கெடுத்த வேளிர் ,பற்றி சங்க இலக்கியம் கூறும்போது ஐம்பெரும் வேளிர், பதினொரு வேளிர் எனக் கூறுவதைக் காண்கிறோம் (அகம் 36,135). கரிகாற் சோழன் பதினொரு வேளிர்களுடன் போரிட்டான் என அகநானூறு கூறும். எனவே பெருங்கற்காலப் பண் பாட்டில் வேளாண் மையில் ஈடுபட்ட மக்களை வேளிருடன் தொடர்புபடுத்துவது பெருமளவு பொருத்தமாகத் தெரிய வில்லை. றோமிலாதாபர் வேளாண்மை மக்களும், போர் மறவரும் இருபிரி வினராக இருப்பினும் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்ந்தனர் என்றார். இதில் வேளாண்மையில் ஈடுபட்ட மக்களைப் பாதுகாக்கும் போர் மறவராக வேளிர் இருந்திருக்கலாம் (Thapar 1984:32).

வேள், வேளிர் என்ற சொல் குலம் குறித்து வந்த பெயர்கள் அல்ல, ஒரு பட்டப் பெயர் என்ற கருத்துண்டு. சங்க இலக்கியத்தில் வேள் என்ற சொல் குறிப்பிட்ட ஒரு குலத்தைக் குறிக்காது ஆய், மலையமான், போசானியர் குலத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளமை சான்றாகக் காட்டப்படுகிறது (பூங்குன்றன் 1989 220). உலகில் ஆநிரை கவர்தல் மக்களிடையே ஏற்பட்ட போட்டி, பூசல்களிடையே தலைமை தாங்கி நடத்திய தலைவன் காலப்போக்கில் குலத்

www.tamilarangam.net



தலைவனாக நிலைபெற்றான். இதில் தெளிந்த சிந்தனையும், வலிமையும், வீரமும் உள்ள தலைவன் பெற்ற பெயர்களில் ஒன்றே வேள் எனக் கருதப்படுகிறது. காலகதியில் வேள் என்பது சமூகத்தில் உயர்ந்து நிற்போருக்கு அளிக் கப்பெற்ற விருதாகிவிட்டது.

ஆநிரை கவர்தல் ஆப்பிரிக்க கால்நடை வளர்ப்பாளரிடையேயும், வேதகால கால்நடை மேய்ப்பாளரிடையேயும் காணப்பட்ட பொதுவான அம்சம் எனக் கூறும் றோமிலா தாபர் வடமொழியில் ராஜா என்பவன் ஆகொள் பூசல் தலைவனாகக் கூறப்படுகின்றார் என்றார் (1984:24). மூல திராவிட மொழியில் வேள் என்பதற்கு விருப்பம், தலைமை, ஒளிவிடு என்ற பொருள் உண்டு. ஏறத்தாழ இதே கருத்தை வடமொழி ராஜாவும் கொண்டிருப்பதால் இரண்டும் தலைவன் என்ற கருத்தைக் கொண்டதாகக் கருதலாம். இவர்கள் பிற மக்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்பதைக் காட்டும் வகையில் உருவான சொற்களில் ஒன்றே வேள் என்பதாகும். யாழ்ப்பாணப் பேரகராதியில் வேள் என்பதற்கு மண், தலைவன் என்ற கருத்துண்டு. இதில் மண் என்பது மண்ணை ஆழ்பவன் (நாட்டை) என்ற கருத்தில் ஏற்பட்டிருக்கலாம். எல்மன் என்பவர் இனக்குழு வாழ்க்கையிலிருந்து அரசு உருவாகும்போது இடைக்கட்டமாக வேள் இருந்ததென்றார் (1975:37).

இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஏற்பட்ட குளநீர்ப்பாசன விவசாய உற்பத்தி, அயல்நாட்டுத் தொடர்பு, தமிழ்நாட்டுடன் இணைந்த கடல்சார்ந்த வர்த்தகம் என்பவற்றால் பொருளாதார வளமுள்ள இடங்களில் வேள் தோன்றியதெனக் கூறலாம். இதை உறுதிப்படுத்தும் வகையில் வேள் என்ற சொல் பொறித்த மட்பாண்ட ஓடு ஒன்று பூநகரியிலுள்ள பெருங்கற்கால மையத்திலிருந்து கிடைக்கப் பெற்றிருப்பதுடன், வேள் பற்றிய பெரும்பாலான பிராமிக் கல்வெட்டுக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கிடைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கன.

கி.பி.1880-இல் வட இலங்கையில் பெரியபுளியங்குளக் கல்வெட்டில் வேள் என்ற சொல்லை அவதானித்த பாக்கர் இதை வேளா என வாசித்து இதில் இரண்டாவதாக வரும் தமிழுக்குரிய 'ள'வை தமிழ்மக்கள் இங்கு வாழ்ந்ததற்குரிய சான்றாகக் காட்டினார் (1981: 436). ஆனால் இலங்கைக்குரிய

www.tamilarangam.net



பிராமி எழுத்து வட இந்தியாலிருந்து வந்தவை என்ற கருத்துடைய அறிஞர்கள் பலரும் இதை தமிழ்ச் சொல்லாகவோ, தமிழ்ப் பிராமிக்குரிய எழுத்தாகவோ கருதவில்லை. மாறாக இவரின் வாசிப்போடு உடன்படாத கோல்சிமித். முல்லர், பெல் போன்றோர் இவ்வெழுத்தை அசோக பிராமிக்குரிய 'லு' எனக் கூறி இச்சொல்லை வேலு என வாசித்தனர். இவர்களின் வாசிப்பே பொருத்தம் எனக் கூறும் இலங்கையின் முதன்மை வரலாற்று அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் பரணவிதானா கல்வெட்டுக்களில் வரும் இச்சொல்லும், பாளி இலக்கியங்களில் வரும் வேளு என்ற சொல்லும் ஒன்றெனக் கூறினார். ஆனால் இலங்கையில் 'ள' எழுத்துப் பயன்படுத்தும் மரபு கி.பி.2-ஆம் நூற்றாண்டின் பின் ஏற்பட்டதெனக் கருதும் இவர் பாளி இலக்கியங்களில் 'லு'வுக்குப் பதிலாக 'ளு' பயன் படுத்தப்பட்டது தவறு என்றார் (I.C. 1970:XXV). இதற்கு ஆரம்பகாலக் கல்வெட்டுக்களில் வரும் கட (Kada), அடி (aḍi) போன்ற சொற்கள் கி.பி.2-ஆம் நூற்றாண்டின் பின் அளி (aḷi), களி (Kali) என மாற்றமடைந்ததைச் சான்றாகக் காட்டினார். ஆனால் ஆரம்பகாலக் கல்வெட்டுக்களில் 'ள'வுக்குப் பதிலாக 'ட' பயன்படுத்தும் மரபு காணப்பட்டாலும் காலத்தால் முந்திய இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் இரு எழுத்துக்களும் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். இலங்கையில் வடபிராமிக்கு முன் தென்பிராமி எழுத்து(தமிழ்ப் பிராமி) புழக்கத்தில் இருந்ததாக கூறும் கருணாரத்தினா கி.மு.3-2-ஆம் நூற்றாண்டில் 'ள' என்ற எழுத்து பயன் பாட்டில் இருந்ததைச் சான்றுகளுடன் சுட்டிக் காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (Karunaratne 1984:32).

தமிழுக்குரிய வேள் என்ற சொல்லை வடமொழிக்குரிய வேலு என வாசித்த பரணவிதானா இச்சொல் வடமொழி Vailva என்ற சொல்லின் அடியாக தோன்றியதெனவும், இது தனிநபர் (Personal name) பெயரைக் குறிப்பதாகவும் கூறுகிறார் (I.C.1970:122). தென்னிந்திய அரச உருவாக்கம் பற்றி ஆராய்ந்த செனிவரட்னா சங்க இலக்கியத்தில் வரும் வேள், வேளிர் என்ற சொல்லும் இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் வரும் வேள் என்ற சொல்லும் ஒன்றெனக் கூறி இது திராவிட மொழிக்குரியதெனக் குறிப்பிட்டுள்ளார். (1985: 54). வேள் என்ற சொல் குலத்தைக் குறிப்பதாகக் கருதும் பேராசிரியர் சிற்றம்பலம் இதையடியொற்றித் தோன்றியதே பிற்கால வேளாளர் எனக் கூறுகிறார் (1993:546). சங்ககாலத்தில் புழக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கத்தில் இருந்த வேள் என்ற தமிழ்ச் சொல்லை ஒத்த சொற்களே சமகாலத்தில் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக் களிலும் காணப்படுகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தமிழ் நாட்டில் முதலில் தலைவனைக் குறித்த வேள் என்ற சொல் பின்னர் வேள்குலம், வேள்குடி என அழைக்கப்பட்ட தற்குச் சான்றுகள் இருப்பதுபோல இலங்கையில் இதுவரை கிடைக்கவில்லை. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் குல(ம்), குடி போன்ற சொற்கள் காணப்பட்டாலும் அவை வேள் என்ற சொல்லுடன் இணைந்து வந்ததற்குச் சான்றில்லை. மேலும் கி.மு.1-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கல்வெட்டுக்களில் வரும் இச்சொல் பிற்பட்ட கல்வெட்டுக் களில் படிப்படியாக மறைந்து போவதைக் காணமுடிகிறது. வேளுக்கும் பிற்கால வேளாளருக்கும் தொடர்பில்லை என்பதற்கு நெல்லை நெடுமாறன் ஆய்வு சிறந்த எடுத்துக் காட்டாகும்.(1999 :139-152)

இலங்கையில் வேள் என்ற சொல் 21 கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. பேராசிரியர் வேலுப்பிள்ளை மேலும் 5 கல்வெட்டுக்களில் உள்ள இச்சொல்லைப் பரணவிதானா தவறாக சுலு (Culu) என வாசித்துள்ளதாகச் சுட்டிக்காட்டி யுள்ளார் (1980:12). இவற்றுள் 13 கல்வெட்டில் வேள் என்பது தலைவன் என்ற பொருளிலும், இரண்டில் கிராமஅதிகாரி, ஒன் றில் குதிரை மேற்பார்வையாளன் (Superintendent of Horse), இரண்டில் பௌத்தமத விசுவாசி (Lay- devotee), ஒன்றில் குடும்பத்தலைவன் (House holder), இன்னொன்றில் வரிசேகரிப் பாளன் (Revenue officer) என்ற பதவிக்குரிய நிலைகளில் இருந்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

மகாவம்சம் இலங்கையிலிருந்த வேள் நாடு பற்றிக் கூறுகிறது. பாளி மொழியில் இது "வெளோஜானபதொ தஸிய" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது(M.V.XIII:69). இதற்கு "அவர்களது வேள் அவர்களது நாடு" என்ற பொருளாகும் (பூங்குன்றன் 1999:79). இவற்றிலிருந்து தமிழகத்தைப் போல் இலங்கையிலும் வேளிர் ஆட்சி இருந்தமை உறுதியாகிறது. இதனால் வேள் என்ற பட்டத்திற்குரிய அனைவரும் குறுநில மன்னர்களாக அல்லது ஆட்சியாளர்களாக இருந்தனர் எனக் கூறமுடியாது. சங்க இலக்கியத்தில் 2400 பாடல்களில் இருபதுக்கும் குறைவான பாடல்களில் வேள், வேளிர் பற்றிப் பேசப்படுகிறது. ஆனால் இப்பெயர் குறிப்பிட்ட குடித் தலைவர்களை மட்டுமன்றி சமூகத்தில் செல்வாக்கு மிக்க பிற

www.tamilarangam.net



## கல்வெட்டுக்களில் வேள் என்ற பட்டப் பெயரின் சமூக நிலை (I.C.1970)

| கல் எண் | மாவட்டம் | முன்னொட்டுப் பெயர் | பின்னொட்டுப் பெயர் | சமூக நிலை |
|---|---|---|---|---|
| 121 | அநுராதபுரம் | | | பரதவ சமூகத்தவன் |
| 123 | " | ஹபதி | பூதன்? | குடும்பத் தலைவன் |
| 169 | " | பருமக | பூதன்? | தலைவன் |
| 250 | " | பருமக | | தலைவன், அரச அதிகாரி |
| 1125 | " | பாகிநெ | | தலைவன், நிதிசேகரிப்பாளன் |
| 271 | பொலநறுவை | பருமக | மருமக | தலைவன், தந்தை |
| 319 | " | தபர | திஸ | தலைவன், தந்தை |
| 353 | வவுனியா | நுஸாய | பூதன்? | தலைவன், |
| 355 | " | அஸஅதே தகா | திஸய | குதிரை மேற்பார்வையாளன் |
| 403 | மட்டக்களப்பு | பருமக | | தலைவன் |
| 477 | அம்பாறை | பருமக | பருமக | தலைவன் |
| 529 | " | சுமண | திஸ | தலைவன் |
| 612 | அம்பாந்தோட்டை | பருமக | பருமக | தலைவன், தந்தை |
| 647 | " | பருமக | பருமக | தலைவன், நிதிசேகரிப்பாளன் |
| 672 | " | ஊபஸக | | பௌத்த விசுவாசி |
| 745 | மொனராகலை | கமணி | தேவ | கிராம அதிகாரி |
| 795 | " | ஊபஸிக | | பௌத்த மத விசுவாசி |
| 880 | மாத்தளை | ஹமிக | தமய | அதிகாரி |

www.tamilarangam.net



தலைவர்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளமைக்கு சான்றுகள் உண்டு. இது இலங்கைப்பிராமிக் கல்வெட்டுக் களில் வரும் வேளுக்கும் பொருத்தமாக உள்ளது.

சங்க இலக்கியத்தில் குறுநில மன்னர் பெயரின் பின்னொட்டுச் சொல்லாக வரும் இச்சொல், சில குறுநில மன்னர்களின் பெயரின் முன்னொட்டுச் சொல்லாக பயன் படுத்தப் பட்டதற்கு வேள் எவ்வி, வேள் பேகன், வேள் ஆய், வேள் பாரி, நெடு வேள் ஆதன் போன்ற மன்னர்களின் பெயரைக் குறிப்பிடலாம் (புறம் 24:18, அகம் 61:15, புறம் 105:8,13:12) இச்சொல் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் பெரும்பாலும் பின்னொட்டுச் சொல்லாகப் பயன்படுத்தப் பட்டபோதிலும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்வெட் டொன்றில் சுமண என்ற பெயரின் முன்னொட்டுச் சொல் லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (I.C. 1970: No.647). இவ்விரு சொற்களும் (வேள், சுமண) தனியாகவும், இணைந்தும் (வேள் சுமண) கல்வெட்டுக்களில் வருவது போல மகாவம்சம், மனோரதபுரானி (Manorathapurani), சபஸ்ஸவண்டு (Sabassavanhu), ராஜவாகினி (Rajavahini) முதலான நூல்களிலும் வருகின்றன (Ellawala 1969:61,112,115). மன்னர்களினதும், அரச தலைவர்களினதும் வரலாற்றை முதன்மைப்படுத்திக் கூறும் இப்பாளி இலக்கியங்களில் வேள் என்ற சொல்லை முன்னொட்டுப் பெயராகக் கொண்ட நபரை படைத் தளபதியாக, வணிகத்தலைவனாக, அரச வருவாய் பெறும் அதிகாரியாக, மன்னனாக வரக்கூடிய தலைவனாக கூறப் படுவது வேள் என்ற சொல் ஒரு பட்டப்பெயராக பயன் படுத்தப்பட்டதைக் காட்டுகிறது.

இங்கே வேள் என்ற பட்டப் பெயரினைப்பெற்ற சுமண. திஸ என்ற பெயர்களுக்குரிவர்கள் வேறு பல கல்வெட்டுக் களில் ராஜ, கமணி, பருமக போன்ற பட்டப்பெயர்களைப் பெற்றுள்ளனர் (I.C. 1970: No 204. 624.647). வரலாற்றாய் வாளர்கள் இப்பட்டங்களை உடையோரை அக்கால இலங்கையின் சிற்றரசர்களாகக், குறுநில மன்னர்களாகக் கூறுகின்றனர். இவர்களை இக்குழு நிலையிலிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாக இருந்த தலைவர்களுக் குரிய பட்டமாகக் கூறலாம். இதே நிலையை வேள் என்ற பட்டமும் பெற்றிருந்ததெனக் கருதலாம்.

சங்க இலக்கியத்தில் வேள், வேளிர் போர் மறவர்களாகப் பல இடங்களில் வருணிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில்

www.tamilarangam.net



கேகாலை மாவட்டத்திலுள்ள கல்வெட்டு ஒன்றில் கொடயவேள் என்ற சொல் காணப்படுகிறது. கொடய என்பதை கோட்டை என மொழி பெயர்த்த பரணவிதானா இச் சொல்லின் மூலம் வடமொழியில் கொஸ்டிகா எனக் கூறி கொடய வேள் என்ற சொல்லுக்கு கோட்டையின் படைத் தளபதி வேலு என விளக்கம் கொடுத்துள்ளார் (I.C.1970:778). வேலு என்பதைத் தமிழச்சொல்லான வேள் எனக் கூறும் வேலுப்பிள்ளை கொடய என்ற பிராகிருதச்சொல்லிற்கு தமிழில் கோட்டை என விளக்கம் கொடுக்கிறார் (1980:13). எல்லாளன், துட்டகாமினி போராட்டத்தில் துட்டகாமினி படையில் இருந்த தளபதியாக வேளுசுமண என்பவன் குறிப்பிடப்படுகிறான். இவ்வாறான தளபதிகள், தலைவர்கள் எல்லாளன் படையிலும் இருந்ததாகத் தெரிகிறது. துட்ட காமினி எல்லாளனை வெற்றி கொள்ளுமுன் அவனுக்குச் சார் பான 32 தமிழ்ச் சிற்றரசுகளை (தலைவர்களை) வெற்றி கொள்ள நேரிட்டதாக மகாவம்சம் கூறுகிறது (XXV:1-14). இச்சிற்றரசுகளில் வேள் சிற்றரசும் இருந்திருக்க இடமுண்டு. ராஜவாகினி என்ற நூல் வேளுசுமண என்ற ஒற்றன் காக்க வண்ணதிஸ்ஸனை சிறைப்பிடித்து அடிமை ஆக்குவதாக எல்லாள மன்னனிடம் உறுதி கூறியதாகக் கூறுகிறது (Ellawala 1969:61). இங்கே வேள், வேளுசுமண என்ற பெயர்கள் படைத்தளபதியாகக் கூறப்படுவது சங்க இலக்கியத்தில் வேள், வேளிர் போர் மறவர்களாக வருணிக்கப்படுவதை அப்படியே நினைவு படுத்துகின்றன.

சங்க இலக்கியத்தில் வரும் வேள்கலிநாடு. வேள்நாடு, வேளூர் என்பன வேள் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடு, ஊர் எனக் கூறப்படுகிறது. இது அரசியலிலும். சமூகத்திலும் செல் வாக்குப் பெற்ற தலைவர்களை நினைவு படுத்தும் வகையில் அவர்கள் வாழ்ந்த இடங்களுக்கு சங்ககாலத்திலேயே பெயரிடப்பட்டதைக் காட்டுகிறது. இம்மரபு இலங்கையிலும் இருந்ததற்குப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் உதிநகர, சிவநகர, நாகநகர் போன்ற இடப்பெயர்களை உதாரணமாகக் கூறலாம் (I.C.1970:No796. 538.1129). திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கி.பி.2ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டொன்றில் வேலகம என்ற இடம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. (I.C. 1983:78). இக்கல்வெட்டிலுள்ள தமிழுக்குரிய "ள" என்ற எழுத்தை அசோக பிராமிக்குரிய "ல" வாக வாசிக்கப்பட்டது தவறு. இதை வேள்கம என வாசிப்பதே பொருத்தமாகும். இதில் வரும் "கம" என்பது தமிழில் கிராமம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்ற சொல்லின் பிராகிருத வடிவமாகும். இக்கல்வெட்டு பிராகிருத மொழியில் எழுதப் பட்டிருந்தாலும் எழுதியவர் தமிழ் தெரிந்த ஒருவர் என்பதற்கு கல்வெட்டில் வரும் விகார, பூசிய போன்ற தமிழ்ச் சொற்கள் சான்றாக உள்ளன(I.C.1983: 78). இக்கல்வெட்டில் இருந்து வேள் என்ற குறுநில மன்னனின் அல்லது குடித்தலைவனின் பெயரில் சங்க காலத் தமிழக த்தைப் போல் இலங்கையிலும் இடப்பெயர்கள் இருந்தமை தெரிகிறது.

சங்க கால சமூகத்தில் தலைமை தாங்கியவனை வேள் என்ற சொல் குறித்து நின்றாலும் காலப்போக்கில் வேள் வழி வந்தவர்கள் தம்மை வேள் குலமாக, குடியாக கருதி யிருக்க இடமுண்டு. இதையே சங்க இலக்கியத்தில் வரும் வேள் குலம், வேள் குடி போன்ற சொற்கள் உணர்த்துகின்றன. இது முதலியார் பட்டம் பெற்ற ஒருவரின் வழி வந்தவர்கள் பிற்காலத்தில் தம்மை முதலியார் குலம், வம்ச [illegible]ாக் கூறிக் கொள்வதற்கு ஒப்பானதாகும். அம்பாறை [illegible]ட்டத்தில் உள்ள கல்வெட்டில் பருமகவேள் சுமணனின் மகன் பருமகவேள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (I.C.1970:No.647). இங்கே வேள் என்பது வம்சப்பெயராக அல்லது குலப்பெய ராகப் பயன்படுத்தப்பட்டதெனக் கருத இடமளிக்கிறது. இதை உறுதிப்படுத்த மேலும் சான்றுகள் தேவை.

சங்க இலக்கியத்தில் பெருவேள், மாவேள் என்று கூறப் படுவது வேளிருக்குள்ளும் அதிகார அடுக்கு உருவாகி விட்டதைக் காட்டுகிறது. முருகன் பெருவேள் என பெருங் கதையில் குறிக்கப் பெறுகிறான். இது வேள், வேளிரையும் கடவுளரையும் பெருவேள் என்று கூறும் மரபு உருவாகி விட்டதைக் காட்டுகிறது (பூங்குன்றன் 1999: 89). இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வேள் என்ற சொல்லின் முன்னொட்டாக வரும் பத, பருமக போன்ற சொற்கள் இந்த அதிகார வேறுபாட்டைக் காட்டுவதாக கருத இடமளிக்கிறது. பத என்ற சொல் பரத குடியை அல்லது இனத்தைக் குறிக்கிறது. ஒரு குடியின் பெயரோடு வேள் இணைந்து வருவது அந்தக் குடியின் தலைவனாக வேள் இருந்ததைக் காட்டுகிறது.

பருமகவேள் என்பதில் வரும் பருமக என்பது சங்க காலத்தில் வழக்கிலிருந்த பெருமகன் என்ற தமிழ்ச் சொல்லின்

www.tamilarangam.net



பிராகிருத வடிவம் என்பது அறிஞர்கள் பலரின் கருத்தாகும். இதன் பெண்பால் வடிவமாகக் கல்வெட்டுக்களில் வரும் பெருமகள் என்ற சொல்லைக் குறிப்பிடலாம்(I.C. 1970 No148, 260, 331, 610, 910, 1096). சில கல்வெட்டுக்களில் மருமகன், மருமான போன்ற சொற்கள் காணப்படுகின்றன (I.C. 1970: Nos643, 1161). ஆனால் பரணவிதானா இக்கல்வெட்டுக்களில் உள்ள தமிழ்மொழிக்கே உரிய "ன" என்ற எழுத்தை வட மொழிக்குரிய "ந" எனக் கொண்டு இச்சொல்லை மருமகநெ, மருமகநக எனவாசித்துள்ளமை தவறாகும். இவற்றிலிருந்து சங்ககாலத் தமிழகத்தைப் போல் இலங்கையிலும் மகன், மான் போன்ற சொற்கள் பெயரின் இறுதியில் வருவதைக் காணமுடிகிறது. இதில் பெருமகன் என்ற சொல் உயர்ந்தவன், அரசன், பெரியமகன், அண்ணன் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. இதே கருத்தை மலையாளம், கன்னட மொழி களிலும் காணமுடிகிறது. அரசு ஏற்படுவதற்கு முற்பட்ட நிலையிலிருந்து அரச சமூகத்திற்கு மாறும் தமிழகத்தை (Prestae to state society) ஆய்வு செய்த இலங்கை நாட்டு அறிஞர் செனிவரட்னா ஒருநிலைக்கு உட்பட்ட இடத்தில் தங்கும் குடும்பக் குழுக்களில் அக்குழுக்களின் தலைவனின் வழிவரும் மகன் பெருமகன் என்ற சிறப்புப் பெறுவதும், அதன் அடிப்படையில் தலைவன் பெருமகன் என அழைக்கப்படுவதும் இயல்பு என்றார் (1993:68-9). சங்க இலக்கியத்தில் பெருமான், பெருமகன் என்ற சொற்கள் ஓரி கொற்றன் ஏழை, பேகன் எருமை ஆகியோரின் பெயரின் பின் னொட்டுச் சொல்லாக வருகிறது. இச் சொற்கள் குடித்தலைவர் களையும், சங்ககால அரசியலில் ஏற்பட்ட வளர்ச்சியையும் காட்டுகிறது. இதில் மகன், மான் என வரும் அடைமொழிகள் வேள் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னர் உருவான இனக்குழுத் தலைவர்களைக் குறித்ததாகக் கூறப்படுகிது (பூங்குன்றன் 1999: 90). இலங்கையில் ஐம்பது விழுக்காட்டிற்கு மேற்பட்ட கல்வெட்டுக்களில் வேள் என்ற சொல் பருமக என்ற (பெருமகன்வேள்) சொல்லோடு இணைந்து வருகின்றது (அட்டவணை). சங்க இலக்கியத்தில் வரும் நெடுவேள், மாவேள், பெருவேள் என்பன வேள்களிடையே அதிகார அடுக்கு உருவாகிவிட்டதைக் காட்டுகிறது எனக்கொண் டால், இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் பருமக வேள் (பெருமகன்வேள்) என்பதும் இத்தகைய நிலைக்கு உட்பட்டதைக் காட்டுகிறதா? அல்லது பெருமகன் போன்ற தலைமை நிலை மாறி வேள் ஆட்சி ஏற்பட்டதைக் காட்டு கிறதா? இதை அறிஞர்கள் ஆராயவேண்டும்.

www.tamilarangam.net



பூநகரியில் வேளிர் ஆட்சி

தமிழ் நாட்டில் உள்ள கொடுமணல் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது பெருங்கற் காலப் பண்பாட்டிற்குரிய இருமட்பாண்ட ஓடுகளில் வேள் என்ற சொல் பெறப்பட்டுள்ளது. இவை பெருங்கற்காலப் பண்பாட்டுடன் வேளிர் ஆட்சியின் தோற்றத்தை தொடர்பு படுத்தக் காரணமாக அமைகிறது. அண்மையில் இக்கட்டுரை ஆசிரியரால் வட இலங்கையில் பூநகரி வட்டாரத்திலுள்ள பரமன்கிராய் என்ற இடத்தில் மேற்கொண்ட கள ஆய்வின் போது பெருங்கற்கால மட்பாண்ட ஒடொன்றில் வேள் என்ற சொல் பெறப்பட்டது. இம்மட்பாண்ட ஓடு உடைந்த நிலையில் காணப்படுவதனால் இதை ஒரு முழுச் சாசனமாகக் கொள்ளமுடியவில்லை. ஆனால் இதில் எஞ்சியுள்ள எழுத்துக்களைக் கொண்டு இச்சாசனத்தை வேள் அல்லது வேளா என வாசிக்க முடிகிறது (புஷ்பரட்ணம் 1993:41). தமிழ் நாட்டின் முதன்மைச் சாசனவியலாளர்களில் ஒருவரான ஐராவதம் மகாதேவன் இதை வேளான் என வாசித்து சங்க காலத்தை ஒத்த வேளிர் அல்லது வேளார் கி. மு. 3-2 ஆம் நூற்றாண்டில் பூநகரியில் வாழ்ந்ததை இச்சாசனம் உறுதிப் படுத்துவதாகக் கூறியுள்ளார் (1995:25). ஆயினும் சங்க காலத்தில் வேளான் என்ற சொல் புழக்கத்தில் இருந்ததற்குச் சான்றில்லை. வேளான் என்ற சொல்லின் முன்னோடி வடிவமாக வேள் என்ற சொல் இருந்திருக்கலாம்.

வேள் என்ற இம்மட்பாண்ட எழுத்துப் பொறிப்போடு மேலும் பல எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள் இவ்வட்டாரத்தில் உள்ள பரமன்கிராய், மண்ணித்தலை, வெட்டுக்காடு, ஈழஊர் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன (Pusparatnam 2000 :57-2). இவ்வளவு எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள் பூநகரி வட்டாரத்தைத் தவிர இலங்கையின் ஏனைய இடங்களில் கிடைத்ததாகத் தெரிய வில்லை. அண்மையில் இலங்கையின் புராதன இராசதானி இருந்த அநுராதபுரத்தில் எழுத்துப் பொறித்த பல மட்பாண்ட ஒடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Seneviratna 1994: 16-8). ஆயினும் அது பற்றிய அறிக்கை இன்னும் முழுமையாக வெளியிடப்படவில்லை. கந்தரோடையிலும் தமிழப்பிராமி எழுத்துக்களுடன் கூடிய மட்பாண்ட ஓடுகள் சில சமீபத்தில் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது (கிருஷ்ணராஜா 1998)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பூநகரியில் கிடைத்த பெரும்பாலான மட்பாண்ட ஓடுகளில் இரண்டு மூன்று எழுத்துக்களும். சில மட்பாண்ட ஓடுகளில் அரிதாக நான்கு எழுத்துக்களும் உள்ளன. மட்பாண்டங்களில் எழுத்துப் பொறிக்கப்பட்டமைக்கு அதன் உரிமையாளரின் பெயரையும், இடத்தையும் சுட்டிக்காட்டுவது முக்கிய நோக்கமாக இருக்கலாம் என்பதை மட்பாண்டத்தில் இடம்பெற்றுள்ள சில சொற்களை, பெயர்களைக் கொண்டு ஊகிக்க முடிகிறது. பெரும்பாலான எழுத்துக்கள் தமிழ்ப்பிராமியில் உள்ளன. இவற்றில் தமிழ் மொழிக்கே உரிய ஈ, ம, ற. ன, ள, ழ போன்ற எழுத்துக்கள் பயன்படுத்தப் பட்டுள்ளமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. சில பெயர்கள் "அன்", "ன்" என்ற விகுதியோடு முடிகிறது. இவை ஆட்பெயராக வருவதினால் ஆண்மகனைக் குறிக்க "அன்" என்ற விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காட்டுகிறது. இந்த அம்சத்தைத் தமிழ்நாட்டில் கொடுமணல், அழகன் குளம், காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு, உறையூர் போன்ற இடங்களில் கிடைத்த மட்பாண்டங்களிலும் காணலாம். இவற்றிலிருந்து இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வட்டாரத்தில் தமிழ் மொழி பேசிய மக்கள் வாழந்துள்ளனர் என்பது தெரிகிறது.

வேளிர் எழுச்சியுடன் நாடு என்ற அரசியல் புவியியல் தமிழ் நாட்டில் உருவாகியதற்குச் சங்க இலக்கியத்தில் இருந்து சான்றுகள் காட்டப்படுகின்றன (Seneviratne 1993:56-73). இலங்கையில் வேள் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடு பற்றி மகாவமசம் என்ற பாளி நூல் கூறுகிறது (M.V. XXII: 69). நாடு என்ற சொல் நட. நடு என்ற மூலத்திராவிட மொழியில் இருந்து தோன்றியதாகும் (D.E.D 3012). இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் "நட" "நடு" என்ற சொற்கள் பல இடங்களில் வருகின்றன (I.C. 1970: No376. 642.910. 1005. 1010). பரணவிதானா இச் சொல் வடமொழியில் நடனத்தைக் குறிக்கும் "நல" (Nala), "நட" ( Naa) என்ற செல்லின் அடியாகப் பிறந்ததாகக்கூறுகிறார் *(1970 113)*. ஆனால் கல்வெட்டுக் களில் கூறப்படும் சந்தர்ப்பத்தை பார்க்கும் போது இச்சொல் பல இடங்களில் இடத்தைக் குறிப்பதாகவே உள்ளன.

தமிழ்நாட்டில் ஆநிரை கவர்தல் அல்லது பொருளாதார உற்பத்தியில் ஏற்பட்ட போட்டி இனக்குழுக்களிடையே வேள் தோன்றக் காரணம் எனக் கூறப்படுகிறது. இவற்றைத் தவிர வணிக வளமுள்ள பகுதிகளை வைத்திருப்பதற்காக

www.tamilarangam.net



நடந்த பூசல்களும் வேள்கள் தோன்ற ஒரு காரணம் எனக் கூறலாம். சங்க இலக்கியச் சான்றுகளோடு, அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வில் பெறப்பட்ட சான்றுகளையும் வைத்து நோக்கும் போது நகரமயமாக்கமும், வேளின் தோற்றமும் பெருமளவுக்கு இணைந்த நிலையில் முக்கிய வர்த்தக மையங்களிலும், கனிவளம் மிக்க பகுதிகளிலும் ஏற்பட்டதைக் காணமுடிகிறது. இதற்கு கொடுமணல், கருவூர், கொற்கை போன்ற இடங்களில் பெறப்பட்ட விலையுயர்ந்த கற்கள், கல்மணிகள், உள்நாட்டு வெளிநாட்டு மட்பாண்டங்கள், கண்ணாடி வகைகள், அலங்காரப் பொருட்கள், கிரேக்க, உரோம மற்றும் உள்நாட்டு அயல்நாட்டு நாணயங்கள் சிறந்த சான்றுகளாகும்.

தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்ட இச்சொல் சமகாலத்தில் இலங்கையில் பயன்படுத்தப்பட்டமைக்கு முதலில் வெளிநாட்டு வர்த்தகம் காரணமாக இருக்கலாம். இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான நெருக்கமான வர்த்தகத் தொடர்புக்கான சான்றுகள் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து தெளிவாகக் காணமுடிகிறது (Champaka lakshmi 1996: 114). அநுராதபுரம், அக்குறுகொட, மாந்தை, கந்தரோடை, அண்மையில் பூநகரி போன்ற இடங்களில் பெருங்கற்காலச் சின்னங்களுடன் விலையுயர்ந்த பல வகையான கல்மணிகள் பெறப்பட்டன. இவை தமிழ நாட்டிலுள்ள காரைக்குடி, கொடுமணல், அழகன்குளம், உறையூர் போன்ற இடங்களிலிருந்தும், ஆந்திரநாட்டிலுள்ள அமராவதியிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டவையாக உள்ளன. பூநகரில் இச்சான்றுகளுடன் செறிவான உரோம மட்பாண்ட ஓடுகள், மதுச் சாடியின் பாகங்கள், கிரேக்க, உரோம நாணயங்கள் கிடைத்துள்ளன (புஷ்பரட்ணம் 1993 :47-2). இந்த அம்சத்தைத் கந்தரோடை, மாந்தை, அநுராதபுரம் போன்ற இடங்களிலும் காணமுடிகிறது. இச்சான்றுகள் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில், ஏற்பட்ட அயல்நாட்டு வர்த்தகத் தொடர்புகளையும், நகரமயமாக்கத்தையும் சுட்டிக்காட்டும் அதேவேளை இலங்கையின் பொருளாதார உற்பத்தியில் வெளிநாட்டு வர்த்தகம் பெற்ற முக்கியத்துவத்தையும் கோடிட்டுக்காட்டு கின்றன. இவ்வெளிநாட்டு வணிகவளத்தில் ஏற்பட்ட போட்டி வணிகக் குழுக்களிடையே வேள் தோன்றக் காரணமாக இருந்திருக்கும். புகளூர் கல்வெட்டில் ஆதன் என்ற வணிகன் பெயரின் முன்னொட்டு சொல்லாக வேள் குறிப்பிடப்பட்டுள்ளது (வேங்கடசாமி

www.tamilarangam.net



1983:50-59). இது தமிழ் நாட்டு வணிகக் குழுக்களிடையே வேள் தோன்றியதைக் காட்டுகிறது.

இலங்கைப் பிராமிக்கல்வெட்டுக்களிலும், பாளி இலக்கியங்களிலும் வரும் வேள் பெருமளவுக்கு வர்த்தகத் தோடு தொடர்புடையவர்களுகிடையே தோன்றிய ஒன்றாக உள்ளது. வட இலங்கையில் பெரியபுளியங்குளத்தில் உள்ள கல்வெட்டில் பருமகவேள் என்பவன் குதிரை மேற்பார்வையாளன் (Horses Superintendent) எனக் கூறுகிறது (I.C.1970 :No.355). மகாவம்சம் கிரிமாவட்டத்தைச் சேர்ந்த வேளுசுமண என்ற தலைவன் சிறந்த குதிரை ஓட்டியெனக் கூறுகிறது (XXX:68-77). ராஜவாகினி என்ற நூல் வெளிநாட்டில் இருந்து குதிரைகளை இறக்குமதி செய்பவனாக வேளுசுமணவைக் குறிப்பிடுகிறது (Ellawala 1969:61,115). அம்பாறையிலும், அநுராதபுரத்திலும் உள்ள கல்வெட்டுக்கள் வேள் என்பவனை வரிவசூலிப்பவனாகக் கூறுகின்றன(I.C. 1970: 647. 1125). இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் அரசியலிலும், சமூகத்திலும் செல்வாக்குப் பெற்ற தலைவர்கள் பௌத்த சங்கத்திற்கு அளித்த குகை, நிலம், குளம், கால்வாய் பற்றிக் கூறுகின்றன. இவற்றுள் வேள் பற்றிக் கூறும் 21 கல்வெட்டுக்கள் குகையைத் தவிர நிலத்தையோ, குளத்தையோ தானமாகக் கொடுத்ததாகக் கூறவில்லை. இந்த வேறுபாடு வேளுக்கும் வேளாண்மைக்கும் தொடர்பு இல்லையெனப் பூங்குன்றன் கூறுவதை உறுதிப்படுத்தும் அதேவேளை இவர்கள் பெரும்பாலும் வர்த்தகத்தோடு தொடர்புடையவர்கள் என்பதையும் காட்டுகிறது. இங்கே வேள் என்பவன் பெரும்பாலும் வணிகனாக, வரிவசூலிப்பவனாக கூறப்பட்டிருப்பது வெளிநாட்டு வணிக வளத்தால் ஏற்பட்ட போட்டி இலங்கையில் வேள் தோன்றக் காரணம் என்ற கருத்தை வலுப்படுத்துவதாக உள்ளது. இலங்கையின் ஆரம்பகால பொருளாதார உற்பத்தியில் நீர்ப்பாசன விவசாயம் முக்கிய இடம் பெற்றாலும், வெளிநாட்டு வர்த்தகம் கணிசமான பங்கு வகித்ததை பாளி இலக்கியங்களிலும், தொலமி, பிளினி போன்ற வெளிநாட்டவரது குறிப்புக்களிலும் காண முடிகிறது. இவ்வர்த்தகத்தில் முத்து முக்கிய ஏற்றுமதிப் பொருளாகவும், குதிரை முக்கிய இறக்குமதிப் பொருளாகவும் திகழ்ந்தன. இங்கே வேள் என்பவன் பெரும்பாலும் குதிரை வர்த்தகத்தோடு தொடர்பு படுத்திக் கூறப்பட்டுள்ளான். சங்ககாலத்தில் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் தேவையான

www.tamilarangam.net



குதிரைகள் வட இந்தியாவில் இருந்தும், மேலைநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்டதாகப் பாளி நூல்களும், சங்க இலக்கியமும் கூறுகின்றன. கி.மு.3ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ஆட்சி புரிந்த முதல் தமிழ் மன்னர்களான சேன, குத்தக என்போரின் பெற்றோர் வெளிநாட்டிலிருந்து குதிரை களை கொண்டு வந்து இலங்கையில் விற்பனை செய்தவனின் பிள்ளைகள் என மஹாவம்சம் கூறுகிறது. இவ்வரலாற்றுச் சான்றாதாரங்களின் அடிப்படையில் இலங்கையில் ஏற்பட்ட வேள்களின் தோற்றத்தையும், வேள் ஆட்சியையும் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பண்டைய இலங்கையில் பரதவ சமூகம்-சில தொல்லியல் சான்றுகள்

இலங்கைத் தமிழரின் மொழி, எழுத்து, பண்பாடு என்பவற்றை அறிய உதவும் நம்பகரமான தொடக்க கால சான்றுகளுள் கி-மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுக்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. ஆயினும் இக்கல்வெட்டுக்கள் பெருமளவுக்கு பௌத்த மதம் தொடர்பான செய்திகளைக் கூறுவதால் இவற்றிலிருந்து பெறக் கூடிய சான்றுகளை வட இந்தியாவுடன் தொடர்பு படுத்திப் பார்க்கும் மரபே நீண்டகாலமாக வரலாற்று அறிஞர்கள் பலரிடையே இருந்து வந்துள்ளது. இதற்கு இன்றைய பௌத்த, சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவிலிருந்து வந்தவர்கள் எனப் பாளி இலக்கியங்கள் கூறும் கதைகளில் உள்ள நம்பிக்கைத் தன்மையும் ஒரு காரணமாகும். இதற்குப் பேராசிரியர்களான பரணவிதானா(1970), எல்லாவல(1969) போன்ற அறிஞர்களின் ஆய்வுகளைக் குறிப்பிடலாம். ஆனால் 1960களில் இருந்து மேற்கொள்ளப் பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகளின் மூலம் பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டதுடன் இலங்கையின் பண்டைய கால வரலாற்றைத் தென்னிந்தியப் பின்னணியிலும் பார்க்கப்படவேண்டும் என்ற கருத்துச் சூழ்நிலை உருவாகியது. இதற்கு பேராசிரியர்களான சத்தமங்கல கருணாரத்தினா (1960, 1984), பெர்ணாந்தோ (1969), ஆரிய அபயசிங்கே (1965), வேலுப்பிள்ளை (1980, 1981), சிற்றம்பலம் (1980, 1993), சுதர்சன் செனிவரட்னா (1984, 1985, 1993), எஸ்.யு.தெரணியகலா (1984,1990) அண்மையில் கலாநிதி இரகுபதி (1987, 1991) போன்றோரது ஆய்வுகள் சிலவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாய்வுகளில் சில மொழி, எழுத்து என்பவற்றோடு கல்வெட்டுக்களில் வரும்

www.tamilarangam.net



குலம், சமூகம், தொழிற் பிரிவுகள் என்பவையும் சமகாலத் தமிழ்நாட்டு இலக்கியங்களில் வரும் சான்றுகளுடன் கொண்டுள்ள ஒற்றுமையைச் சுட்டிக்காட்டுபவையாக அமைந்துள்ளன. அவற்றுள் சங்க இலக்கியத்தில் வரும் பரதவ சமூகத திற்கும் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் பரத என்ற பெயருக்கும் இடையிலான பெயர், சமூக அந்தஸ்து, தொழில், வாழ்விடங்கள் என்பவற்றில் காணக் கூடிய ஒற்றுமையை ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

இலங்கையில் இதுவரை கிடைத்த கி.மு.1ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட 1500 கல்வெட்டுக்கள் பௌத்த குருமாருக்கு, சங்கத்திற்கு சமூகத்தின் உயர் நிலையில் இருந்த பலதரப்பட்ட பிரிவினர் அளித்த நிலம், குளம், கால்வாய், குகை, கற்படுக்கை, நாணயங்கள், உணவுத்தானியம் என்பன பற்றிக் கூறுகின்றன. இவற்றைப் பௌத்தர்கள் அல்லாத பிற மதத்தவரும். ஒருவட்டாரத்திலிருந்து இன்னொரு வட்டாரத்திற்கு வர்த்தகம், பொருளாதாரம் போன்ற நடவடிக்கைகளுக்காகச் சென றோரும் அளித்துள்ளனர் என்பதைக் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகளில் இருந்து அறியமுடிகிறது. அவ்வாறு தானமளித்தோரில் பலர் தமது பெயருடன் தமது மூதாதையினர், சமூக அந்தஸ்தைக் குறிக்கும் பட்டம், பதவி, தொழில் என்பவற்றையும். மதம், வாழும் இடம் போன்ற தகவல் களையும் கல்வெட்டுக்களில் பதிவு செய்துள்ளனர். இவை சுருக்கமான வரலாற்றுத் தகவல்களாக இருப்பினும் அக் காலச் சமூக அமைப்பை விளங்கிக் கொள்ள உதவும் நம்பகரமான வரலாற்றுச் சான்றுகள் என்ற வகையில் அதிக முக்கியத்துவம் உடையன.

இலங்கையில் இதுவரை கிடைத்த பிராமிக் கல்வெட்டுக்களில் 21 கல்வெட்டுக்களில் பரத என்ற சொல் பட்டம், சமூகம், வம்சம், தனிநபர் சார்ந்த பெயராக வருகின்றது. இக்கல் வெட்டுக்களில் பெரும்பாலானவை வட, வடமேற்கு இலங் கையில் காணப்படுகின்றன (அட்டவணை-1). இதே போல் நாட்டின் பல பகுதியில் உள்ள 155-க்கும் மேற்பட்ட கல் வெட்டுக்களில் பத என்ற பெயர் பயன்படுத்தப் பட்டுள்ளது. இச்சொல் பரத என்ற சொல்லின் இன்னொரு வடிவமாகக் கூறப்படுகிறது. இதன் பெண்பாற் சொல்லாக கல்வெட்டுக் களில் வரும் பதி என்ற பெயர்காணப்படுகிறது (I.C.1970:CV). இவ்விரு பெயர்களும் பெரும்பாலான கல் வெட்டுக்களில் ராஜா, பருமக, வேள் போன்று ஒரு பட்டப்

www.tamilarangam.net



பெயருக்குரிய நிலையில் பயன்படுத்தப்பட்டிருப்பதால் இவை பற்றிய ஆய்வு ஆதிகால இலங்கையின் மொழி, சமூகம், பண்பாடு பற்றிய ஆய்வில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இப்பெயரின் மூலமொழியையிட்டு அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. பாக்கர் இச்சொல் வடமொழி பர்த (bhrta) என்ற சொல்லின் அடியாக பிறந்த தெனக் கூறி பரத என்பது அரச தூதுவனையும், பத என்பது வேலையாளையும் (Worker) குறிப்பதாக விளக்கம் கொடுத்துள்ளார் (1981:426). இதே கருத்துடைய விக்கிரம சிங்கா இது சகோதரன், பிரபு போன்றோரைக் குறிக்கலாம் என்றார் (E.Z.I: 140-141). பெல் இச்சொல் இந்தியாவிலிருந்து குடியேறிய Bharata என்ற சமூகத்தைக் குறிக்கலாம் எனக் கருதுகிறார் ( 1917-18:204). பத, பரத ஒரே கருத்துடைய இருசொற்கள் எனக் கருதும் பரணவிதானா இவையிரண்டும் வடமொழியில் உள்ள bhatr, bhattu என்ற சொற்களின் அடிப் படையில் வந்ததெனவும், இவை பிரபு என்ற கருத்தில் பட்டப்பெயராகப் பயன்படுத்தப்பட்டது எனவும் விளக்கம் கொடுத்துள்ளார்(1970:CV).

திராவிட சொல்லகராதியில் பரத என்ற சொல்லுக்கு சமமாக பரதர், பரதவர், பரவர் என்ற சொல் கூறப்பட்டுள் ளமை இங்கு நோக்கத்தக்கது (D.E.D.No.3262).[1] .மலோனி என்ற அறிஞர் தென்தமிழ்நாட்டிலும், வட. வடமேற்கு இலங்கையிலும் தற்காலத்தில் வாழ்ந்து வரும் பரதவ சமூகத் தின் தோற்றத்தை சங்க இலக்கியத்தில் வரும் பரவர், பரதவர் சமூகத்துடன் தொடர்புபடுத்தி சங்க இலக்கியத்தில் வரும் பெயர்களும், கல்வெட்டுக்களில் வரும் பரத என்ற பெயரும் ஒன்றென்றார் (1969:224-240). இவரின் கருத்தோடு உடன பாடுடைய செனிவரட்னா இதற்கு ஆதாரமாகத் தொல்லியல் சான்றுகளையும் சுட்டிக்காட்டி இச்சமுகத்தின் தோற்றத் தைப் புதியகற்கால, பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புபடுத்தியுள்ளார் (1985:49-50). மொழி அடிப்படை யில் பெயர்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமையையும், பயன்பாட்டில் இருந்த காலப்பகுதியையும், கல்வெட்டுக்கள் காணப்படும் இடங்களையும், இலங்கை தமிழக பண்பாட்டுத் தொடர்பின் பின்னணியில் நோக்கும் போது மலோனியின் கருத்து பெருமளவு பொருத்தமாகவே தெரிகிறது.

www.tamilarangam.net



சங்ககாலத்தில் கடலும், கடல் சார்ந்த பகுதியிலும் வாழ்ந்த நெய்தல் நில மக்களாகப் பரதவர் குறிக்கப் படுகின்றனர். இவர்கள் சில இடங்களில் பரவர் எனவும், பல இடங்களில் பரதவர் எனவும் குறிக்கப்படுகின்றனர். இவற்றில் இருந்து தென்தமிழ்நாட்டின் கிழக்குக் கரையில் அமைந்த காவிரி நதிப்படுக்கைக்கும், தாமிரபரணி ஆற்றிற்கும் இடைப்பட்ட பகுதியில் இச்சமூகம் வாழ்ந்ததை அடை யாளம் காணமுடிகிறது (Seneviratne 1985:49-50). இவை தற்கால திருநெல்வேலி, இராமநாதபுர மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி எனக் கூறலாம். தொலமி, சோழ நாட்டிற்கும், பாண்டி நாட்டிற்கும் இடைப்பட்ட கடல்சார்ந்த பகுதியில் வாழ்ந்த மக்களை பதை (Patai) எனக் கூறுகிறார். இது பரதவரைக் குறிக்கலாம் (Velupillai 1980:13). பரதவரின் முக்கிய தொழிலாக சங்க இலக்கியத்தில் சங்கு, முத்துக் குளித்தல், மீன்பிடித்தல், வர்த்தகம் என்பனவும் குறிக்கப்படுகின்றன. பாண்டி நாட்டு செல்வமாக இருந்த முத்து பற்றி சங்க இலக்கியத்திலும், வடமொழி இலக்கியத்திலும் பல குறிப்புகள் உள்ளன. புறநானூறு முத்துக் குளித்தலில் ஈடுபட்ட பரதவரை பாண் டிய மன்னன் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த போதிலும் சோழ மன்னருக்கு அவர்கள் சவாலாக விளங்கியதாகக் கூறுகிறது (புறம் 378:1). பெரிபுளஸ் என்ற நூலில் முத்துக் குளித்தலில் ஈடுபட்ட மக்களைப் பாண்டிய மன்னன் சிறையில் அடைத்ததாகவும், சிறைத்தண்டனை பெற்ற மக்களைப் பாண்டிய மன்னன் முத்துக் குளித்தலில் ஈடுபடுத் திய தாகவும் கூறுகிறது (Schoff 1912:46). முத்துக் குளித்தலில் பாண்டிய மன்னருக்கும் பரதவருக்கும் பிற்காலத்திலும் பகை மை இருந்ததை நெடுஞ்செழியன் பராந்தகன் வேள்விக்குடிச் செப்பேட்டில் வரும் 'பரவரைப் பாழ்படுத்தும்' என்ற சொல் உறுதிப்படுத்துகிறது (முருகானந்தம் 1990:3). முத்துக் குளித்தலைப் போல் சங்கு குளித்தலும் முக்கிய தொழிலாக விளங்கியது. பரதவர் சங்குகளுக்காக கடலுக்குள் மூழ்கியதை யும் அவற்றை கள்ளுக்காக விற்றது பற்றியும் அகநானூறு கூறுகிறது (அகம் 296:8-9, 350:11-13). பாண்டி நாடு நெடுகிலும் சங்கும், முத்தும் விற்பனை செய்யப்பட்டதை மதுரைக்காஞ்சி கூறுகிறது. பாண்டிய மன்னர் வெள்வளை தரித்ததாக சின்னமன்னூர் செப்பேடு கூறுகிறது (S.I.I. 3:4).

பரதவரின் இன்னொரு தொழிலாக மீன்பிடித்தலும், வர்த்தகமும் விளங்கியது. முத்து பாண்டியரின் சொத்தாக விளங்கியது போல் மீன் பாண்டியரின் பிரதான உணவாக

www.tamilarangam.net



இருந்தது. சங்க இலக்கியத்தில் மீன் என்ற சொல் பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறுந்தொகையில் வரும் மீன்வேட்டம், திமில் வேட்டுவர் என்ற சொல்லாட்சி மீன்பிடித் தொழிலின் சிறப்பைக் காட்டுகிறது (குறு 123). பரதவர் காயவிட்ட மீனை (உப்புக்கண்டம்) விற்பனைக்காக படகுகளில் கொண்டு வந்ததாக மதுரைக்காஞ்சி கூறுகிறது. வர்த்தகத்தில் குதிரை வெளிநாட்டு வர்த்தகப் பொருளாகவும், உப்பு உள்நாட்டு வர்த்தகப் பொருளாகவும் திகழ்ந்தன. பட்டினப்பாலையும் (பட்டினப் 185-193), மதுரைக்காஞ்சியும் (மதுரை 321-323) மேலை நாட்டுக் குதிரைகளும், வடஇந்தியக் குதிரைகளும் தென்னிந்தியத் துறைமுகங்களுக்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறுகின்றன. மதுரைக் காஞ்சி பாண்டி நாடு நெடுகிலும் குதிரை வர்த்தகம் நடந்ததாகக் கூறுகிறது (மதுரை 315-24). இலங்கைப் பாளி நூல்கள் தமிழ்நாட்டு வணிகர் இலங்கையில் குதிரை வர்த்தகம் செய்ததாகக் கூறுகின்றன. இவ்வர்த்தகத்தில் பரதவர் ஈடுபட்டதாக செனிவரட்னா கருதுகிறார் (1985:51-54). பரதவர் கடலிலிருந்து எடுத்த உப்பை உமணர் உள்நாட்டில் விற்பனை செய்தனர். நற்றிணையில் உமணர் வருகையை எதிர்பார்த்து உழாத உழவர் (பரதவர்) உப்பைக் குப்பைகளாக வைத்துக் காத்திருந்தனர் என்ற குறிப்புள்ளது (நற்138:1-2). பாண்டி நாட்டிலுள்ள சில பிராமிக் கல்வெட்டுக்கள் உப்பு வணிகர் பற்றிக் கூறுகின்றன (Mahadevan 1966).

இவ்வாறு பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கையில் பரதவர் ஈடுபட்டதினால் செல்வம் இவர்களிடத்தே குவிந்தன. சங்க இலக்கியத்தில் இவர்களது இருப்பிடங்கள், மாளிகைகள், கப்பல்கள், அலங்காரவண்டிகள், வாகனங்கள் பற்றி வரும் குறிப்புகள் இவர்களின் செல்வ நிலையைக் காட்டுகின்றன (மதுரை 315-323, பெரும்பாண் 319-324, அகம்86). புறநானூறில் வரும் 'தென்பரதவர் மிடல் சாய' என்ற சொற்றொடர்களும், பாண்டிய நெடுஞ்செழியனை 'கொற்றவன் காவலன்' 'பரதவ தலைவன்' எனவும் கூறப்படுவது சங்ககால அரசியலிலும், சமூகத்திலும் பரதவருக்கிருந்த மதிப்பைக் காட்டுகிறது.

இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் பரத என்ற பெயருக்குரியவர்கள் ஆற்றிய தொழில்கள், பதவிகள், சமூக அந்தஸ்து என்பவற்றை நோக்கும் போது சங்க இலக்கியத்தில் வரும் பரதவ சமூகத்தை அப்படியே நினைவுபடுத்து

www.tamilarangam.net



வதாக உள்ளன. சங்க இலக்கியங்களில் பரதவ சமூகம் வர்த்தகத்தில் ஈடுபட்டது பற்றிக் கூறப்படுவது போல் இலங்கை வரலாற்று இலக்கியங்களில் எந்தவித குறிப்பும் காணப்படவில்லை. ஆனால் இக்காலத்தில் தமிழர்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டது பற்றி ஆங்காங்கே சில குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. செனிவரட்னா இலங்கையில் பரதவர் பற்றிவரும் பெரும்பாலான கல்வெட்டுக்கள், பெருங்கற்கால கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் காணப்படும் இடங்களை அண்டிய பகுதியில் காணப்படுவதை சான்றாதாரம் காட்டி வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து பரதவர் இலங்கை வர்த்தகத்தில் ஈடுபட்டதாகக் கூறுகிறார் (1985:49). அநுராதபுரத்தில் மேற்கொள்ளப் பட்டுவரும் அகழ்வாய்வில் குடியேற்றத்தின் ஆரம்பகாலச் சான்றுகளுடன் இலங்கையில் கிடைக்கப்பெறாத பளிங்குக் கற்கள், மணிகள், குதிரை எலும்பின் எச்சங்கள் கிடைத்துள்ளன (Coningham 1996:81). இவை வணிக குடியேற்றம் நிகழ்ந்ததை உறுதிப்படுத்துவதாகக் கருதப்படுகிறது.

தமிழ்நாட்டில் பரதவர் வாழ்ந்த இடங்களில் ஒன்றாகப் பாண்டி நாட்டிலுள்ள தாமரபரணியாற்றங்கரை அடையாளம் காணப்பட்டுள்ளது. இதே இடப்பெயர் வடமேற்கிலங்கையில் உள்ள ஒரு இடத்தின் பெயராக கி.மு.6-ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டு பின்னர் முழு இலங்கைக்குரிய பெயராக மாறியதை அசோகன் காலக் கல்வெட்டிலும், கி.பி.1,2-ஆம் நூற்றாண்டுக்கு உரிய வெளிநாட்டார் குறிப்புக்களிலும் காணமுடிகிறது. இவ்விடப்பெயர் ஏற்பட பாண்டி நாட்டிலுள்ள தாமரபரணியாற்றங்கரையிலிருந்து ஏற்பட்ட வர்த்தகக் குடியேற்றம் ஒரு காரணமாக இருக்கலாமெனக் கூறுவோருமுளர். ஆனால் இலங்கையில் கி.மு.6ஆம் நூற்றாண்டிலிருந்து அறியப்படும் இப்பெயர் தமிழ் நாட்டு வரலாற்று மூலங்களில் கி.பி.12ஆம் நூற்றாண்டின் பின்னரே காணப்படுகின்றன[(2)]. இவற்றை நோக்கும் போது இருபிராந்தியத்திலும் வாழ்ந்த பரதவ சமூகத்தினருக்கிடையிலான வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்பால் இங்கிருந்தே அப்பெயர் தமிழ் நாட்டிற்குச் சென்றதா என எண்ணத் தூண்டுகிறது.

www.tamilarangam.net



## அட்டவணை - 1 பிராமிக் கல்வெட்டுக்களில் பரத என்ற பெயரின் சமூக நிலை

| கல் வட்டு எண் | சமூக அந்தஸ்து | பின்னொட்டுப் பெயர் | சமூக நிலை | இடம் |
|---|---|---|---|---|
| 43 | பட்டம் (தலைவன் | திஸ | மாணவன் | அநுராதபுரம் |
| 101 | ,, | நாகஹ | | ,, |
| 114 | ,, | திஸ | | ,, |
| 137 | ,, | திஸ | | ,, |
| 144 | ,, | திஹகஜப | | ,, |
| 146 | ,, | சவித்த்த்த | தந்தை | ,, |
| 270 | ,, | சஹரகிதிஸ | வணிகன் | பொலநறுவை |
| 330 | ,, | திஸ | | வவுனியா★ |
| 335 | ,, | திஸ | | ,, ★ |
| 336 | ,, | திஸ | | ,, ★ |
| 349 | ,, | உத்தரகஸப | | ,, ★ |
| 359 | ,, | சுமண | | ,, ★ |

www.tamilarangam.net



| | | | | |
|---|---|---|---|---|
| 361 | ” | அஹலி | | ” ★ |
| 368 | ” | மஹாதிஸ | வணிகன் | ” ★ |
| 371 | ” | மஹாதிஸ | | ” ★ |
| 643 | தனிநபர்பெயர் | உத(தி)ர | குடும்பத் தலைவன் | அம்பாந்தோட்டை |
| 989 | ” | சுஜத | | குருநாகல் ★ |
| 1011 | ” | திஸ | | ” ★ |
| 1049 | ” | மஹாதிஸ | அரசதூதுவன் | ” ★ |
| 1049பி | ” | மஹாதிஸ | அரசதூதுவன் | ” ★ |
| 1073 | ” | ஜோதிய | | புத்தளம் ★ |

★ தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வட, வடமேற்கிலங்கை

www.tamilarangam.net



பரத பற்றி வரும் கல்வெட்டுக்களில் பொலநறுவை மாவட்டத்தில் உள்ள தூவகெல என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. வழக்கத்திற்கு மாறாக இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாக எழுதப்பட்டுள்ள இக்கல்வெட்டில் பரதஸஹகிதஸ என்பவன் (Baratasaga kitasa) கொடுத்த குகை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (I.C. 1970:No.270). இதில் பரத என்ற பெயருக்கு முன்னால் கப்பலின் உருவம் வரையப்பட்டுள்ளது (படம்-1,இல.1). ஏறத்தாழ இதையொத்த கப்பல் உருவம் தமிழ்நாட்டில் அழகன்குளம் அகழ்வாய்வின்போது கி.மு.2-1-ஆம் நூற்றாண்டுக்குரிய ரௌலட்டட் மட்பாண்டத்தில் பெறப்பட்டுள்ளது. இது பரத என்பவனை கப்பல் தலைவனாக, அல்லது வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட வணிகனாகக் கருத இடமளிக்கிறது. தொலமி பாண்டி நாட்டுக் கடற்கரைப் பகுதியில் தரித்து நின்ற கப்பல் பற்றி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார் (Cald well 1961:95). சங்க இலக்கியத்தில் அம்பி, நாவாய், வங்கம், படகு, தோணி, பஙறி, திமில் என்பன கடற்போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்ட கலன்களாகக் குறிப்பிடப்பட்டு உள்ளன. இதில் திமில், அம்பி என்பன மீன் பிடித்தலுக்கும், பெரிய கப்பலிலிருந்து பொருட்களைத் துறைமுகங்களுக்கு கொண்டு வரவும் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது. வங்கம், நாவாய் நீண்ட கடற்பயணத்திற்கும், வர்த்தகத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன (சுப்பராயலு 1983:161-162). இலங்கையில் தமிழ் வணிகனாகிய நாவாய் தலைவன் தென்னிந்தியாவிலிருந்து குதிரையைக் கொண்டு வந்து விற்பனை செய்ததாகப் பாளி நூல்கள் கூறுகின்றன (M.V.XXI:10). நாயன்மார் பாடல்கள் வங்கம் நிறைந்த துறை முகமாக வட இலங்கையில் உள்ள மாதோட்டத்தைக் கூறு கின்றன (மயினைகிளார் 1953). இதனால் பொலநறுவைக் கல்வெட்டில் வரும் கப்பல் உருவத்தை பாளி, தமிழ் இலக்கியங்கள் கூறும் நாவாய் அல்லது வங்கமாகக் கருதலாம்.

கல்வெட்டுக்கள் சிலவற்றில் நாவிக என்ற பெயருடன் படகெ. தொட என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பரணவிதானா இவை கடற்போக்குவரத்திற்குப் பயன் படுத்தப்பட்ட கலன்கள் எனக் கூறுகிறார் (1970:XCIX). இதில் படகெ, தொட என்ற சொற்கள் தமிழில் வழக்கில் உள்ள படகு, தோணி போன்ற சொற்களுடன் தொடர்புபடுத்த இடமுண்டு. அண்மையில் பிரித்தானிய, ஜேர்மன் ஆய்வுக் குழுவினர் அநுராதபுரப் பகுதியில் மேற்கொண்ட அகழ்வாய்வின்போது

www.tamilarangam.net




கி.மு.3-ஆம் நூற்றாண்டுக்குரிய சங்ககால நாணயங்களையும், கடற்போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்ட கலம் ஒன்றின் உருவம் பொறித்த நரைநிற மட்பாண்ட ஓடு ஒன்றையும் கண்டு பிடித்துள்ளனர் (Coningham 1996.92). இதில் உள்ள கடற்கலத்தை கல்வெட்டுக்களில் வரும் படகெ, தொட போன்ற சொற்களுடன் தொடர்புபடுத்தலாம். இதையொத்த உருவத்தை தமிழ்நாட்டில் புதிய கற்கால ஓவியங்களிலும், சாதவாகனர் கால நாணயங்களிலும் காணமுடிகிறது. இவ்வாதாரங்களிலிருந்து சங்ககாலத்திற்கு முன்பு இருந்தே இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே கடல் வாணிபத் தொடர்புகள் இருந்த தென உறுதிப்படுத்தலாம். இவை பொலநறுவைக் கல்வெட்டில் வரும் பரத என்பவனை அயல் நாடுகளுடன் கடல் வாணிபத்தில் ஈடுபட்டவனாகக் கருத இடமளிக்கிறது.

படம் *1*



(இல.*1*) கல்வெட்டில் உள்ள கடற்கலம் (பொலநறுவை)



(இல.*2*) மட்பாண்டத்தில் உள்ள கடற்கலம் (அநுராதபுரம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடஇலங்கையில் ஏழு கல்வெட்டுக்களில் பரத என்ற சொல் காணப்படுகிறது. இவற்றுள் பெரியபுளியங்குளத்தில் உள்ள கல்வெட்டு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதில் கல்வெட்டு வாசகத்தைத் தொடர்ந்து 'ம' என்ற பிராமி எழுத்தை ஒத்த குறியீடும், நந்திபாதம், சுவஸ்திகா, நேர்கோட்டுடன் கூடிய முக்கோணம் என்பனவும் காணப்படுகின்றன (I.C.1970:No.368). இக்குறியீடுகளில் சில பெருங்கற்கால மட்பாண்டங்களிலும் காணப்படுகின்றன. இவற்றை இலங்கையில் கிடைத்த அச்சுக்குத்தப்பட்ட நாணயங்களிலும், சங்ககாலப் பாண்டிய நாணயங்களிலும் சிறப்பாகக் காணமுடிகிறது. நாணயங்களில் பயன்படுத்தப்பட்ட இக்குறியீடுகள் பரத பற்றிக் கூறும் கல்வெட்டில் இடம் பெற்றிருப்பது இப்பெயருக்குரியவரின் வர்த்தக நோக்கத்தைப் புலப்படுத்துவதாக உள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் உள்ள கல்வெட்டில் தலைவன் என்ற பட்டத்துக்கு உரிய பரத என்பவன் (Parumaka Barata) அரசதூதுவனாகக் கடமையாற்றியமை கூறப்பட்டுள்ளது (I.C.1970:No.1049). நாடுகளுக்கிடையே நடைபெற்ற வர்த்தகத்தில் அதன் தலைவன் இரு அரசுகளுக்கும் இடையே இராஜதந்திரியாகச் செயல்பட்டதை வரலாற்றிலக்கியங்களிலிருந்து காணமுடிகிறது. இதனால் இக்கல்வெட்டில் வரும் பரத என்ற வணிகனே தூதுவனாகவும் செயல்பட்டான் எனக் கூறலாம். வணிகனாகச் செயல்பட்ட ஒருவன் தூதுவனாகவும் இருந்தான் என்பதற்கு மேலும் வடமேற்கு இலங்கையில் பரமன்கண்ட என்ற இடத்தில் உள்ள இரு கல்வெட்டுக்களை ஆதாரமாகக் காட்டலாம் (I.C.1970: Nos.1053,1055). இதில் ஒரு கல்வெட்டு தலைவன் என்ற பட்டத்தையுடைய கப்பல் தலைவனான திஸ என்பவன் தூதுவனாக (Duta Navika) செயல்பட்டானெனக் கூறுகிறது. இரண்டாவது கல்வெட்டில் தலைவன் என்ற பட்டத்தையுடைய திஸ தூதுவனாகக் கடமையாற்றினான் எனக் கூறப்பட்டுள்ளது. இவ்விரு கல்வெட்டுக்களிலும் காணக் கூடிய இன்னொரு சிறப்பு பெரியபுளியங்குளக் கல்வெட்டில் வரும் குறியீடுகளில் இரண்டு இக்கல்வெட்டுக்களிலும் இடம் பெற்றிருப்பதாகும்.

அநுராதபுரத்தில் அபயகிரிப் பகுதியில் உள்ள கல்வெட்டு பரத என்பவன் பிற தமிழ் வணிகர்களுடன் ஒன்றுசேர்ந்து வர்த்தகத்தில் ஈடுபட்டது பற்றிக் கூறுகிறது (I.C.1970

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



:No.94). இதில் ஈளபரத, தமிழ்சமண ஆகியோர் வணிகர்கள் ஒன்று கூடி ஆலோசனை நடத்தும் மண்டபத்தை அமைத்தவர்களாகக் கூறப்பட்டுள்ளனர். மண்டபத்தின் இருக்கைகளில் சாக, நசத, திஸ்ஸ, குபிரசுஜத, ஹரவ ஆகிய வணிகர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு உள்ளன. இதில் குடும்பத் தலைவனின் பெயராகக் கரவ என்பவன் குறிப்பிடப்பட்டுள்ளான். அத்துடன் இவன் நாவிக (கப்ப லோட்டி) என்ற இன்னொரு பெயரையும் பெற்றுள்ளான். இவனது பெயர் உயரமான இருக்கையில் எழுதப்பட்டு இருப்பதால் இவனே வணிக குழுவின் தலைவனாக இருந்து இம்மண்டபத்தில் வணிகம் தொடர்பாக ஆலோசனை நடத்தி யவனாகக் கருத இடமுண்டு. இதில் வரும் கரவ என்ற சொல் கடற்கரையை அண்டி வாழ்ந்த கரையார் சமூகத்தின் முன னோடி வடிவமாகக் காணப்படுகின்றது (Raghavan 1966:8-9). இதில் பரத என்ற பெயருக்கு முன்னால் வரும் ஈள என்ற சொல்லை இலு என வாசித்த பரணவிதானா இது இலங்கை யிலுள்ள இலுபரத என்ற இடப்பெயரைக் குறிப்பதாகக் கருதுகிறார் (I.C.1970:No.94). செனவரட்னா ஈளபரத என வாசித்து தென்னிந்தியாவில் பரதவ சமூகத்தின் கட்டுப் பாட்டில் இருந்த ஒரு வர்த்தகத் துறைமுகத்தின் இடப் பெயராக இது இருக்கலாம் என்றார் (1985:51). மகாதேவன் (1994:8-9), சிற்றம்பலம் *(1998:114-115)* ஈள, பரத என்பனவற்றை இரு வேறு சொற்கள் எனக் குறிப்பிட்டு இது ஈழம் என்ற நாட்டுக்குரிய பரதவரைக் குறிக்கிறது என்றனர்.

இதில் நெடிலாக வாசிக்கப்பட்ட 'ஈ' வடிவம் இலங்கை தமிழகப் பிராமி கல்வெட்டில் சொல் அமைதிக்கு ஏற்பக் குறிலாகப் பல இடங்களில் வாசிக்கப்பட்டுள்ளது. இக்கல் வெட்டில் வரும் 'ஈள' என்ற இரு வரி வடிவங்களும் தமிழ நாட்டில் மாங்குளம், சித்தன்னவாசல் பிராமிக் கல்வெட்டுக் களில் இள எனப் பெயரின் முன்னொட்டுச் சொல்லாக வாசிக்கப்பட்டுள்ளது (Mahalingam 1967:248). இது இளை யவன் என்ற கருத்தில் அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தில் வரும் இளநாக, இளங்கோசர், இளங்குமணன் போன்ற பெயர்கள் இவ்வகையைச் சேர்ந்தன. இலங்கைப் பாளி இலக்கியங்களிலும் இம்முறை பின்பற்றப்பட்டதற்கு இளநாக என்ற பெயரைக் குறிப்பிடலாம் (M.V.XXXV:45). இதனால் கல்வெட்டில் ஈளபரத என வாசிக்கப்பட்டதை இளபரத என வாசிக்கவும் இடமுண்டு. ஈளபரத என்ற வாசிப்பே சரியெனக்

www.tamilarangam.net



கொண்டாலும் அப்பெயர் முழு இலங்கையைக் குறித்ததெனக் கூறுவதும் பொருத்தமாகத் தெரியவில்லை. இலங்கையில் 90-க்கும் மேற்பட்ட பிராமி கல்வெட்டுக்களில் பௌத்த சங்கத்திற்கு தானமளித்தவரின் நகரம், கிராமம் போன்ற இடப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. எந்த ஒரு கல்வெட்டிலும் இந்த நாட்டுக்குரிய ஒருவர் தன்னை அடையாளம்காண முழு நாட்டையும் குறிக்கும் ஈழம் என்ற பெயரைப் பயன்படுத்திய தாகத் தெரியவில்லை. தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டில் கூட இந்நிலையைக் காணமுடிகிறது. இதனால் கல்வெட்டில் வரும் ஈள என்பதை இடப்பெயராகக் கொண்டால் அது முழு இலங்கையைக் குறிக்காது, இலங்கையின் குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்தைக் குறிப்பதாகக் கொள்வது பொருத்தமாகத் தெரிகிறது[(3)]. இக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள பெயர்கள் அனைத்தும் தமிழரைக் குறிப்பதாக செனிவரட்னா கூறுகிறார் (1985:51-52). ஆனால் கல்வெட்டில் சமண, ஹகபதி ஆகிய பெயர், பட்டம் என்பவற்றிற்கு முன்னால் மட்டும் தமிட என்ற சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயர் இனத்தைக் குறிக்காது, தமிழ்நாட்டைக் குறித்ததெனக் கூறலாம். இதற்கு கி.பி.3-ஆம் நூற்றாண்டுக்குரிய இக்ஷ்வாகு வம்சக் கல் வெட்டில் தமிழ்நாடு தமிலா எனவும், இலங்கை தம்பபண்ணி எனவும் கூறப்பட்டுள்ளதைச் சான்றாகக் காட்டலாம் (கிருஷ்ணமூர்த்தி 1978:12). எனவே மேற்கூறப்பட்ட கல்வெட்டில் இருந்து உள்நாட்டு, வெளிநாட்டு தமிழ்வணிகர்கள் ஒரு குழுவாக செயல்பட்ட போது அதில் இளபரத என்பவர் அல்லது ஈள(ஈழம்) என்ற இடத்தைச் சேர்ந்த பரத என்பவர் பங்கெடுத்தார் எனக் கூறலாம்.

சங்க இலக்கியத்தில் பரதவரின் முக்கிய தொழில்களில் ஒன்றாக முத்து, சங்கு குளித்தல் குறிப்பிடப்பட்டுள்ளது. இத் தொழில்கள் பாண்டி நாட்டிற்கும் வடமேற்கு இலங்கைக்கும் இடைப்பட்ட கடற்பிராந்தியத்தில் நடந்ததற்குப் போதிய சான்றுகள் உண்டு. இந்தியாவைக்காட்டிலும் இலங்கையில் தரமான முத்து கிடைத்தாக கி.மு.4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெகத்தனிஸ் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்காலப்பகுதியில் ஆட்சிபுரிந்த இலங்கை மன்னர்கள் சிலர் இந்திய மன்னர்களுக்கு முத்தைப்பரிசாகக் கொடுத்த தாகப் பாளி நூல்கள் கூறுகின்றன(M.V. VII:72-3). பண்டு தொட்டு வடமேற்கு இலங்கையிலுள்ள சிலாபம் என்ற இடம் முத்துச் சிலாபம் என்ற பெயரை பெற்றிருந்ததற்கு இங்கு நடைபெற்று வரும் முத்துக் குளித்தலே முக்கிய காரணமாகும். .பரத என்ற

www.tamilarangam.net



பெயருக்குரிய பிராமிக் கல்வெட்டுக்களில் கணிசமானவை இப்பிராந்தியத்திலிருந்து கிடைத்திருப்பது இத்தொழில் களோடு இவர்களுக்கிருந்த தொடர்பைக் காட்டுகிறது எனலாம்.

பண்டைய இலங்கையில் மீன்பிடித் தொழிலோடு பரத என்ற பெயருக்குள்ள தொட ர்பைக் காட்ட கல்வெட்டுக் களிலோ அல்லது பாளி இலக்கியங்களிலோ இதுவரை சான்று கள் கிடைக்கவில்லை. ஆனால் அண்மையில் தென்னிலங்கை யில் கிடைத்த கி.மு. 2ஆம் நூற்றாண்டிற்குரிய நாணயம் ஒன்றில் இதற்குரிய சான்று கிடைத்துள்ளது. இங்கு இதே காலத்திற்குரிய உதிரன், தஸபிடன், மஹசாத்தன், கபதிகடலன் போன்ற தமிழ் நாணயங்களுடன் பரததிஸ என்ற பெயர் பொறித்த நாணயம் ஒன்றும் கிடைத் துள்ளது (Bopearachchi 199953, புஷ்பரட்ணம்1999: 55-70). இதில் காணக்கூடிய சிறப்பு என்னவெனில் பின்புறத்தில் பரததிஸ என்ற பெயரும் முன்புறத்தில் இருமீன்கோட்டுருவமும் இடம் பெற்றிருப் பதாகும் (படம்-2, இல1). இதில் வரும் மீன் சின்னங்கள் மீன்பிடித் தொழிலோடு பரததிஸ என்பவனுக்குள்ள தொடர் பைக் காட்டுகிறது. இதில் முன்னொட்டுச் சொல்லாக வரும் பரத என்பது பரதவ சமூகத்தைக் குறிக்கலாம். பின்னொட்டுச் சொல்லாக வரும் திஸ என்ற பெயருக்கு பூசநட்சத்திம் என்ற பொருள் உள்ளது (இராசகோபால்). இப்பெயர் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களிலும், பாளி இலக்கியங்களிலும் பல இடங்களில் வருகின்றது. இப்பெயரில் குறுநில மன்னர்களும், சிற்றரசர்களும் இருந்துள்ளனர். இது பிராகிருத மொழிக்குரிய பெயராக இருப்பினும் இப்பெயரில் தமிழர்களும் இருந்ததற் குப் போதிய சான்றுகள் உள்ளன. அம்பாறை மாவட்டத்தில் குடுவில்என்ற இடத்திலு ள்ள கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டொன்று தீகவாபி என்ற இடத்தில் வாழ்ந்த திஸ என்ற தமிழ் வணிகன் பற்றிக் கூறுகிறது (C.I.1970:480). அநுராதபுரத்தில் கிடைத்த கல்வெட்டொன்று திஸ என்ற தமிழன் தமிழ் வணிகர்களுடன் ஒன்று சேர்ந்து ஒரு குழுவாக வர்த்தகத்தில் ஈடுபட்டதாகக் கூறுகிறது (I.C.1970:94). அண்மையில் தமிழ்நாட்டில் அழகன்குளம் என்ற இடத்தில் கிடைத்த மட்பாண்ட ஒட்டில் தீசன் என்ற பெயர் பெறப்ப ட்டுள்ளது(இராசகோபால்).

பேராசிரியர் சிற்றம்பலம் சங்க இலக்கியத்தில் வரும் திரையர் என்ற சொல் ஒரு இனக் குழுவைக் குறித்ததெனக்

www.tamilarangam.net



கொண்டால் அச்சொல்லிற்கும் இலங்கையில் பயன்பாட்டிலிருந்த திஸ, திஸ்ஸ என்ற பெயர்களுக்கும் இடையிலான தொடர்பு ஆராயப்படக் கூடியதென்பதற்கு சில சான்றாதாரங்களைக் காட்டியுள்ளர்(1993:73-4). திரை என்ற சொல்லுக்கு கடல், கடலலை, குளம் என்ற பல கருத்துக்கள் உண்டு. இலங்கையில் கிடைத்த பரத பற்றிய 21 கல்வெட்டுக்களில் 12 கல்வெட்டுக்கள் திஸ என்பவனை பரதவ (பரத) சமூகத்துடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றன. இதில் கல்வெட்டுக்களில் வரும் வணிகன், அரச தூதுவன், கப்பல் தலைவன் போன்ற பதவிகள் அனைத்தும் பரததிஸ என்பவனோடு தொடர்புடையதாக உள்ளன. தென்னிலங்கையில் கிடைத்த கி.மு.2ஆம் நூற்றாண்டிற்குரிய நாணயம் ஒன்று மீன் அமைப்பில் வடிவமைக்கப்பட்டு அதன் மத்தியில் "திஸஹ" என்ற பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது (Bopearachchi 1999:60,No43) இதை நாணயமாகக் கொள்வதை விட திஸ என்பவனுக்குரிய முத்திரை எனக் கூறலாம். இவற்றிலிருந்து மீன் பிடித்தலோடு பரதவ சமூகத்திற்கும் திஸ என்ற பெயருக்கும் உள்ள தொடர்பு தெரியவருகிறது. இச்சான்றுகள் கடல் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளோடு பரதவ சமூகத்திற்கும், திஸ, திஸய என்ற பெருக்கும் உள்ள தொடர்பைக் காட்டுவதால் திரையர் என்ற இனக்குழுவுடன் திஸ என்ற பெயருக்குள்ள உறவைத் தொடர்புபடுத்திப் பார்க்கலாம் என்ற கருத்திற்கு இவை மேலும் சான்றாக உள்ளன. செனிவரட்னா இலங்கையில் பரதவ சமூகத்தின் தோற்றத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடப்புபடுத்துகிறார். இதற்கு இச்சமூகம் பற்றிய கல்வெட்டுக்கள் இப்பண்பாட்டு மையங்களை அண்டிக் காணப்பட்டதையே சான்றாகக் காட்டுகிறார். இன்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் பரதவ சமூகம் வாழ்ந்து வரும் இடங்களில் வட, வடமேற்கிலங்கை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவற்றுள் பூநகரி வட்டாரத்திலுள்ள மண்ணித் தலை என்ற கடற்கரைக் கிராமத்தில் மேற்கொண்டகள ஆய்வின் போது பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய பலசான்றுகளுடன் குறிப்பாக கறுப்பு சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Blackand red Ware), தமிழ் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஒடுகள், இரும்புக் கருவிகள் என்பவற்றுடன் மீன்பிடிப்பதற்கான ஊசிகளும் (Fish Hooks) கிடைத்துள்ளன (புஷ் பரட்ணம் 1993:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



19-2)(படம்.2,இல.3). இச்சான்றுகள் பண்டுதொட்டு இவ்வட்டாரத்தில் மீன்பிடித்தலில் ஈடுபட்ட பரதவசமூகம் வாழ்ந்து வருவதை எடுத்துக் காட்டுவதாக எடுத்துக் கொள்ள இடமுண்டு.




இல.1




இல.1



இல.3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரத என்ற சொல்லின் இன்னொரு வடிவமாகக் கல்வெட்டுக்களில் வரும் பத என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் இப்பெயருக்குரியவர்கள் இலங்கையில் பரந்து பட்ட அளவில் வாழ்ந்தனர் எனக் கூறலாம். இவர்கள் வர்த்தகத்தில் மட்டுமன்றி அரசியல், கிராம நிர்வாகம், நீதி, படைத்துறை, கலை போன்ற பல துறைகளில் ஈடுபட்டிருந் தமை தெரிகிறது. குத்திகுளம் என்ற இடத்தில் உள்ள கல்வெட்டு பதகுமார என்பவன் பௌத்த சங்கத்திற்கு அளித்த தானம் பற்றிக் கூறுகிறது (I.C.1970.No.190). இதில் வரும் பதகுமர என்பதை பரதகுமார என எடுத்துக் கொள்ளலாம். சங்ககாலத்தில் வணிகத்தால் பெரும் செல்வ மீட்டிய பரதவரை சிலப்பதிகாரம் பரதவ குமாரன் என அழைத்ததற்கு சான்றுண்டு (சிலப் 156). அண்மையில் சேருவில் என்ற தமிழ்க் கிராமத்தில் கிடைத்த கல்வெட்டில் பதமக திஸ்ஸவும், தமிழ் சோழவும் (தமிட சுட) இணைந்து பௌத்த சங்கத்திற்கு தானம் அளித்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது (Seneviratne 1985:52). இதில் சோழர் தமிழராக குறிப்பிடப்பட்டமை சிறப்பாக நோக்கத்தக்கது. வட இலங்கையில் பதசுட என்ற சொல் சில கல்வெட்டுக்களில் வருகின்றன.

மேற்கூறப்பட்ட கல்வெட்டுக்களில் இருந்து சங்ககாலத் தைப் போல் சமகாலத்தில் இலங்கையிலும் பரதவ சமூகம் வாழ்ந்ததெனக் கூறலாம். சங்க இலக்கியத்தில் பரவர், பரதவர் என வரும் பெயர்கள் இலங்கைக் கல்வெட்டு மொழிக்கு ஏற்ப பத, பரத என மாற்ற மடைந்திருக்கலாம். இதற்கு கல்வெட்டுக் களில் வரும் பிராகிருத மயப்படுத்தப்பட்ட தமிழ்ப் பெயர் கள் சமகாலத்தில் வெளியிட்ட நாணயங்களில் தமிழில் இடம் பெற்றிருப் பதைச் சான்றாகக் கூறலாம். செனிவரட்னா பரத என்ற முன்னொட்டுச் சொல் திராவிட மொழிக்குரிய ஆய், மாற, மருமக என்ற பெயர்களுடனும், பிராகிருத மொழிக்குரிய சுமண, உதர, சுமலி போன்ற சொற்களுடனும் வருவதைச் சுட்டிக்காட்டுகிறார் (1985:52). ஆரம்பத்தில் இனக் குழுவைக் குறித்த பரதவ என்ற பெயர் பின்னர் சமூகப்பெயராக மாறியதாக ஒரு கருத்துண்டு. ஜேம்ஸ் ஆர்னலின் பரதவர், பரவர், பரதர் ஆகியோர் நாக இனக் குழுவைச் சார்ந்தவர் எனக் கூறுகிறார் (முருகானந்தம் 1990 3). வட இலங்கை நாகதீவு எனவும், நாகர்கள் வாழ்ந்த இடம் எனவும் கூறும் வரலாற்று மரபுண்டு. இலங்கையில் பரத பற்றி வரும் கல்வெட்டுக்கள் பெருமளவுக்கு வடஇலங்கையிலும், வடமேற்கிலங்கை

www.tamilarangam.net



யிலும் காணப்படுவதுடன் சில கல்வெட்டுக்களில் பரதநாக என்ற பெயர் இணைந்து வருவதையும் காணலாம். இதனால் பரத என்ற சமூகப் பெயர் இலங்கையில் வேறுபட்ட இனக் குழுக்களிடையே சமூகப் பெயராகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் அதன் செல்வாக்கு கூடிய அளவுக்கு வட, வடமேற்கு இலங்கையில் இருந்ததெனக்கூறலாம். இன்று பரதவ சமூகம் தமிழ்நாட்டில் மட்டுமன்றி தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய திராவிட மொழி பேசும் பிராந்தியங்களிலும், இலங்கையில் சிங்கள, தமிழ் மொழி பேசும் வட்டார மக்களிடமும் காணப்படுகின்றன. வட, வடமேற்கிலங்கையில் இப்பரதவ சமூகம் நீண்ட காலமாக வாழந்து வருவதை இடைக்கால, மத்தியகால வரலாற்று ஆவணங்களிலிரு ந்து அறியமுடிகிறது. இதனால் இச்சமூகத்தின் தொடக்ககால ஆதாரமாக இப்பிராந்தியத்தில் காணப்படும் கல்வெட்டுக்களில் வரும் பரத என்ற பெயரைக் குறிப்பிடலாம்.

அடிக்குறிப்பு

1) தமிழ் நாட்டில் பிராமி எழுத்தில் பரதன் எனற பெயர் பொறிக்கப்பட்ட சுடுமண் அச்சு ஒன்று கிடைத்துள்ளது.

2) தமிழ்ப்பல்கலைக்கழக தொல்லியல் பேராசிரியர் எ. சுப்பராயலு அவர்கள் கூறிய தரவு

3) பூநகரி மண்ணித்தலையில் கிடைத்த இரு மட்பாண்ட ஓடுகளில் ஈல, ஈழ என்ற சொற்கள் பெறப்பட்டுள்ளன. இவை ஈழம் என்ற இடப்பெயரைச் சுட்டுகின்றன எனக் கருதலாம். இவ்வட்டாரத்தில் உள்ள ஒரு இடம் இன்றும் ஈழஊர் என்ற பெயரில் அழைக்கப்படுவதைக் காணலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சங்ககால நாணயங்களும் இலங்கைத் தமிழ் மன்னர்களும்

தமிழ் நாட்டு நாகரிக வரலாற்றை ஆராய்கின்ற பலரும் அதன் தொடக்ககாலமாக சங்ககாலத்தைக் கொள்வர். ஆனால் அக்காலம் எக்காலப்பகுதிக்கு உரியதென்பதை யிட்டு அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. இருப்பினும் முன்னர் குறிப்பிட்டது போல் கி.மு. 3க்கும் கி.பி 3க்கும் இடைப்பட்ட 600 ஆண்டு காலத்தை பொதுப்பட சங்ககாலத்தின் ஆய்வுக்குரிய காலமாக எடுத்துக் கொள்ளலாம். இக்காலத்தில் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையே அரசியல் உறவைக்காட்டிலும் வர்த்தகம், மதம், பண்பாடு ஆகியவற்றின் உறவுகளுக்குரிய சான்றுகளே அதிகமாகக் கிடைத்துள்ளன. இதில் வர்த்தகத் தொடர்புகளுக்குரிய சான்றுகளாகப் பெருங்கற்காலப்பண் பாட்டில் கிடைத்த கல்மணிகள், அலங்காரப்பொருட்கள், மட்பாண்டங்கள், நாணயங்கள், பிராமிக்கல் வெட்டுக்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். அவற்றுள் சங்ககால மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் பற்றியும், அவை இலங்கைத்தமிழ் மன்னர்களிடையே ஏற்படுத்திய மாற்றங் கள் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

தென்னிந்தியாவின் முதன்மை ஆய்வாளர்களில் ஒரு வரான பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி தொட்டு அண்மைக் காலம் வரை தமிழ் நாட்டு வரலாற்றை ஆராய்ந்த பலரும் பண்டமாற்று முறை நிலவிய சங்ககாலத்தில் நாணயங்கள் புழக்கத்தில் இருக்கவில்லை என்ற கருத்தையே கொண்டிருந் தனர். ஆனால் அண்மைக் காலங்களில் தமிழ்நாட்டில் கரூர், காவிரிபூம்பட்டினம், மதுரை, உறையூர், கொற்கை, அரிக்கமேடு, திருக்கோவலூர், அழகன்குளம் போன்ற இடங்களிலிருந்து பெருமளவு நாணயங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து சங்ககாலத்தில் ஆட்சி புரிந்த

www.tamilarangam.net



மன்னர்களால் முத்திரை நாணயங்களும், வார்ப்பு நாணயங்களும் வெளியிடப்பட்டமை தெரியவந்துள்ளது. வார்ப்பு நாணயங்களை மூவேந்தர் மட்டுமன்றி குறுநில மன்னர்களும் வெளியிட்டுள்ளனர். இந்நாணயங்களின் பின்புறத்தில் அதை வெளியிட்ட வம்சத்தின் குலச் சின்னங்கள் இடம் பெற்றுள்ளமை சிறப்பான அம்சமாகும். அதில் பாண்டியருக்கு மீன் கோட்டுருவமும், சோழருக்கு புலியும், சேரருக்கு அம்பு வில்லும், மலையமான் மன்னருக்கு ஆற்றுச் சின்னமும் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளன. சில நாணயங்களில் அதை வெளியிட்ட மன்னன் பெயர் இடம்பெற்றுள்ளது. அவற்றுள் பெருவழுதி, அதிரன், எதிரன், சேந்தன், கொல்லிரும்புறை, கொல்லிரும்புறைய போன்ற மன்னர்கள் குறிப்பிடத்தக்கனர் (*சீதாராமன் 1994:1 -15*). வேறுசில நாணயங்களில் மன்னன் பெயரோடு அவன் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாக்கோதை, குட்டுவன்கோதை போன்ற மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் குறிப்பிடத்தக்கன (Krishnamurthy 1997:97-105). இம்மரபு கிரேக்க, உரோமச் செல்வாக்கால் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. கிருஷ்ணமூர்த்தி தம் ஆய்வில் பெருவழுதி மன்னன் உருவம் பொறித்த நாணயம் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் குறுநில மன்னர்களுள் மலையமான், மலையன், காரி போன்றோர் பெயர் பொறித்த நாணயங்கள் உண்டெனக் குறிப்பிட்டுள்ளார் (Krishnamurthy:131-134). இதையிட்டு அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் இருப்பினும் காரி என்ற மன்னன் பெயரை நாணயத்தில் தெளிவாக அடையாளம் காணமுடிகிறது.

சங்ககாலத்தில் வெளிநாட்டு வர்த்தகம் பெருவளர்ச்சி கண்டிருந்தபோதும் சங்ககால மன்னர் வெளியிட்ட நாணயங்கள் தமிழ்நாட்டிற்கு வெளியே அதிகம் கிடைத்ததாகத் தெரியவில்லை. இதனால் இவை வெளிநாட்டு வர்த்தகத்திற்குப் பயன்படுத்தப்படவில்லை எனக்கூறுவோரும் உளர். ஆனால் இலங்கையிலும், அண்மையில் தாய்லாந்திலும் இம்மன்னர் கால நாணயங்கள் கிடைத்து இருப்பதினால் இவை வெளிநாட்டு வர்த்தகத்திற்கும் பயன்படுத்தப்பட்டு உள்ளதெனக் கூறலாம் (Shanmugam 1994:95-100). இலங்கையில் அநுராதபுரம், மாதோட்டம், கந்தரோடை, பூநகரி ஆகிய இடங்களில் பாண்டிய, சோழ நாணயங்கள் கிடைத்துள்ளன (Codrington 1924:18, புஷ்பரட்ணம் *1998:114-119*). இவற்றுள்

www.tamilarangam.net



பாண்டிய நாணயங்கள் தொகையிலும் வகையிலும் அதிகம் ஆகும். இதுவரை சங்ககாலச் சேர நாணயங்கள் கிடைத்த தாகத் தெரியவில்லை. ஆனால் சேயோன் என்ற நாணவிய லாளர் சங்ககாலப் பாண்டிய நாணயங்களுடன் சேரநாணயங் கள் சில மாதோட்டத்தில் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட் டுள்ளார் (1998:57-63). ஆனால் அவர் நூலில் கொடுத்துள்ள புகைப்படத்தில் நாணயத்தின் பின்புறத்தில் மீன் கோட் டுருவமே காணப்படுவதால் இவற்றைப் பாண்டிய நாணய மாகக் கொள்வதே பொருத்தமாகும். எனவே இதுவரை இலங்கையில் கிடைத்தவற்றை அடிப்படையாகக் கொண்டு சங்ககாலத்தில் வழக்கிலிருந்த பாண்டிய. சோழ நாணயங் களே சமகாலத்தில் இங்கும் புழக்கத்தில் இருந்ததெனக் கூறமுடியும்.

பாண்டிய நாணயங்கள்

மூவேந்தர் ஆட்சிக்குட்பட்ட தமிழகத்தில் பாண்டி நாட்டிற்கு தனித்துவமான சிறப்பம்சங்கள் உண்டு. தமிழ் நாட்டின் ஆரம்பகால மொழி, எழுத்து, இலக்கியம் என்பன இங்கு தோன்றியது போல் சங்ககால மன்னருள் முதலில் நாணயம் வெளியிட்ட பெருமை பாண்டியருக்கே உரிய தாகும். ஆயினும் இவ்வம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள் எந்தெந்த நாணயங்களை வெளியிட்டனர் என்பது இன்னும் தெளிவாகவில்லை. சங்க நூல்களில் இருபது பாண்டிய மன்னர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் பெருவழுதி என்ற பெயர் பொறித்த நாணயங்களே கிடைத்ததாகத் தெரிகிறது. இவை வட்டம், சதுரம் வடிவில் அமைந்த செப்பு, ஈய நாணயங்களாகும். இந்நாணயங்கள் சிலவற்றில் பெருவழுதி என்றபெயர் காணப்படுவதால் இவற்றை வழுதி கிளையைச் சேர்ந்த அரசர்கள் வெளியிட்டதாக அடை யாளம் காணப்பட்டுள்ளது (Krishnamurthy 1997:20-23). வேறுசில நாணயங்களில் பெருவழுதி பெயர் பொறித்த சின்னங்களுடன் ஆமை, பிறை வடிவில் அமைந்த கூரை க்கோயில் போன்ற சின்னங்கள் இருப்பதைக் கொண்டு அவற்றைப் பெருவழுதி நாணயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது. பல நாணயங்களில் முன்புறம் யானை யும், பின்பு றம் மீன் கோட்டுருவமும் இடம் பெற்றுள்ளன. இக்கோட்டுருவச் சின்னத்தை அறிஞர் எல்லோரும் மீன் சின்னமாக எடுத்துக் கொள்ளவில்லை. இலங்கையில் கிடைத்த இவ்வகைச் சின்னத்தை பல அறிஞர் பௌத்த

www.tamilarangam.net



சக்கரமாகக் கருதினர். டூல்பே என்ற அறிஞர் மீன் சின்னமாக எடுத்துக் கொண்டபோதும் பௌத்த சக்கரம் என்ற கருத்தை நிராகரிக்கவில்லை. தேசிகாச்சாரியார் இவ்வுருவம் மதுரை நகரின் அமைப்பைப் பிரதிபலிப்பதாகக் கருதுகிறார். நாக சாமி, சட்டோபாத்தியா இதை மீன் உருவம் என எடுத்துக் கொண்டபோதிலும் முன்புறம் யானையுள்ள சின்னத்தை யுடைய நாணயத்தை சேர மன்னர்களே வெளியிட்டதாகக் கருதினார்கள் (Nagaswamy 1981:76). ஆனால் கி.பி.1989-இல் கிடைத்த சேர மன்னர் பெயர் பொறித்த நாணயத்தில் அவர்களின் குலச்சின்னமாக அம்பும் வேலும் இடம் பெற்றுள்ளது. பெருவழுதி பெயர் பொறித்த நாணயத்தில் பாண்டியரின் குலச்சின்னமாக மீன் கோட்டுருவம் இடம் பெற்றுள்ளது. இதன் காரணமாக முன்புறம் யானையும், பின்புறம் மீன் கோட்டுருவமும் உள்ள நாணயத்தை பாண்டியர்களே வெளியுட்டுள்ளனர் என்ற முடிவு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் கிடைத்துள்ள சங்ககால நாணயங்களில் பாண்டிய நாணயங்கள் வகையிலும், தொகையிலும் அதிகமாகும். ஆயினும் இந்நாணயங்கள் எதிலும் பாண்டிய மன்னன் பெயரோ அல்லது எழுத்தோ இருந்ததாகத் தெரியவில்லை. அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாய்வில் மேலும் பல சங்ககால நாணயங்கள் கிடைத்துள்ளன. இவ்வகை நாணயங்கள் 1917 இல் கந்தரோடையில் கிடைத்துள்ளன. ஆனால் அப்போது அவற்றைச் சங்ககால நாணயங்களாகக் கருதாது அவற்றில் உள்ள மீன் சின்னத்தை பௌத்த சக்கரமாகக் கருதினர் (Hettiaratchi 1956:49-7). அண்மையில் சங்கால நாணயங்கள் பற்றி ஆராய்ந்த கிருஷ்ண மூர்த்தி கந்தரோடையில் கிடைத்த நாணயங்களை பாண்டிய மன்னர் வெளியிட்ட பெருவழுதி நாணயவகைகள் எனக் குறிப்பிட்டுள்ளார்(1997:36) சமீபகாலமாக கந்தரோடையில் கள ஆய்வினை மேற்கொண்ட எம்துறை சார்ந்த ஆசிரியர்களில் ஒருவரான கிருஷ்ணராஜா அங்கு சில சங்காலப் பாண்டிய நாணயங்களைக் கண்டுபிடித்துள்ளார் (1998:63). இவற்றுள் முதலிரு நாணயங்களும் சதுரவடிவிலும் மற்றையது வட்டவடிவிலும் உள்ளன (நூலில் இவற்றின் பக்கம், இலக்கம் போடப்படவில்லை). இதில் சதுர வடி விலுள்ள முதலிரு நாணயங்களும் பாண்டியபெருவழுதி நாணயவகையைச் சேர்ந்தவை என்பதில் சந்தேகமில்லை. இவை பாண்டி நாட்டிற்கும் கந்தரோடைக்கும் இடையே

www.tamilarangam.net



யிருந்த தொடர்புக்கு மேலும் சான்றாகும். ஆனால் வட்ட வடிவில் உள்ள மூன்றாவது வகை நாணயம் இலங்கையில் பல இடங்களில் கிடைத்துள்ளன. இவை 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் திஸ என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழாய்வின் போது முதன் முதலாகக் கண்டெடுக்கப்பட்டதால் திஸ நாணயங்கள் என்ற பெயரைப் பெற்றன (Parkar 1981:475). கொட்றிங்ரன் இவற்றிற்கு யானை, சுவஸ்திகா நாணயம் எனப் பெயரிட்டுள்ளார் (Codrington ,1924:20). இதில் பாண்டியரின் குலச்சின்னமான மீன்கோட்டுருவமோ அல்லது ஆய்வாளர் கூறுவது போல் வரிவடிவமோ காணப்படவில்லை. அத்துடன் இவை இலங்கைக்கு வெளியே வேறு எந்த இடத்திலும் கிடைத்ததாகவும் தெரியவில்லை. இதனால் இவற்றைப் பாண்டிய நாணயங்கள் எனக் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை.

*1989-95* காலப்பகுதியில் இக்கட்டுரை ஆசிரியர் வட இலங்கையில் மேற்கொண்ட கள ஆய்வின் போது பூநகரி வட்டாரத்திலிருந்து 17 சங்ககாலப் பாண்டிய நாணயங்களையும், இரு சோழ நாணயங்களையும் பெறமுடிந்தது. அவற்றுள் பாண்டிய நாணயங்களின் எடை, அளவு, சின்னங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் வருமாறு.

*1)* இடம் :ஈழவூர்
உலோகம் :செப்பு
வடிவம் :சதுரம்
அளவு :*2.3x2.1* செ.மீ.
எடை :*7.7* கிராம்

முன்புறம்: மேல்வரிசை இடப்புறம் - மூன்று முகடுள்ள மலை. நடுப்பகுதி - கவிழ்ந்த பிறை வடிவுள்ளகூரைக் கோயில். கூரையை ஐந்து தூண்கள் தாங்கி நிற்கின்றன. வலப்புறம் - மூன்று முகடுள்ள மலை, அதன்மேல் வேலியிடப்பட்ட மரம். கீழ்வரிசையில் இடப்புறம் - கொடிமரம். நடுப்பகுதி - வலப்புறம் நோக்கிய யானை. வலப்புறம் - உடைந்தநிலையில்.வேலியிடப்பட்ட மரத்தின் பாகம்.

பின்புறம் :மீன் கோட்டுருவம்(படம்-*1*,இல.*1*).

www.tamilarangam.net



2) இடம் : மண்ணித்தலை
அளவு : 1.1 x0.9 செ.மீ.
எடை : 1.4 கிராம்.
முன்புறம் : இடப்புறம் நோக்கி நிற்கும் யானை.
பின்புறம் : மீன் கோட்டுருவம்(படம்-1,இல,2)

3) இடம் : கல்முனை
உலோகம் : செப்பு
வடிவம் : சதுரம்
அளவு : 16 x1.6 செ.மீ
எடை : 1.7 கிராம்.

முன்புறம் : இடப்புறம் நோக்கிய யானை, விளிம்போடு சில கோடுகள். அவை எழுத்தாக அல்லது சின்னமாக இருக்கலாம்.

பின்புறம் : மீன் கோட்டுருவம் (படம்-1,இல3).

4) இடம் : மண்ணித்தலை
உலோகம் : செப்பு
வடிவம் : சதுரம்
அளவு : 2.4 x2.0 செ.மீ.,
எடை : 7.9 கிராம்.

முன்புறம் : வலப்புறம் நோக்கி நிற்கும் யானை. யானையின் முன்பாகஅங்குசம், மேற்பகுதியில் கும்பம், சக்கரம் ஸ்ரீவக்ஸா முதலான எண் மங்கலப் பொருட்கள்.

பின்புறம் : மீன் கோட்டுருவம்(படம்-1,இல.4).

சோழ நாணயங்கள்

சங்ககாலச் சோழர்கள் தமிழகத்தின் தென்பகுதியில் உள்ள சோழ மண்டலத்தில் உள்ள உறையூரையும் காவிரிப் பூம்பட்டினத்தையும் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந் தனர். இவர்களைப் பற்றி இலக்கியத்திலும், இலங்கைப் பாளி நூல்களிலும் ஆங்காங்கே சில செய்திகள் காணப் படுகின்றன. அவர்களுள் சங்க இலக்கியத்தில் வரும் எட்டு மன்னர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனர். பாண்டியரோடு ஒப்பிடுகையில் சோழ நாணயங்கள் தமிழ்நாட்டில் மிக

www.tamilarangam.net



அரிதாகவே கிடைத்துள்ளன (Krishnamurthy 1997:111). இதுவரை சங்க கால சோழமன்னன் பெயர் பொறித்த நாணயம் எதுவும் கிடைத்ததாகத்தெரிய வில்லை. சங்க இலக்கியத்தில் புலி இவர்களது கொடியாகவும், இலச்சினை யாகவும் கூறப்படுவதைக் கொண்டு இம்மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் அடையாளம் காணப்பட் டுள்ளன. இவர்கள் வெளியிட்ட நாணயங்களின் முன் புறத்தில் பொதுவாக யானை, அணிசெய்யப்பட்ட தேர், வேலியிடப்பட்ட மரம், விலங்கும் மரமும், குடையும் வேலா யுதமும் உள்ளன. நாணயத்தின் பின்புறத்தில் புலி தனது வலது காலை உயர்த்தி அதன் நுனி வளைந்திருக்கும் அமைப்பிலும் உள்ளது (Krishnamurthy 1977:112-130). ஒருசில நாணயங்களில் கதிரவன் சின்னமும் காணப்படுகிறது. இதற்கு காவிரிப்பூம்பட்டின அகழாய்வில் கிடைத்த நாணயங்கள் சிறந்த சான்றாகும் (Nagaswamy 1981:32-33).

தமிழ்நாட்டில் கிடைத்துவரும் இந்நாணயங்கள் தமிழ் நாட்டிற்கு வெளியே மிக அரிதாக தாய்லாந்திலும், இலங்கை யிலும் கிடைத்துள்ளன. இலங்கையில் பரவலாகக் கிடை த்து வரும் சிங்க உருவம் பொறித்த நாணயத்தை புலியுருவம் பொறித்த நாணயமாகக் கொண்டு அவற்றைச் சங்ககாலச் சோழர் வெளியிட்ட நாணயமாகப் பலரும் கருதி வந்துள் ளனர் (Mitchiner 1997:161). ஆனால் அவை சிங்கள மன்னர் களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் என்பதற்குப் போதிய சான்றுகள் உண்டு (புஷ்பரட்ணம் 1999அ). இலங்கையில் கந்தரோடை (Seyone 1998 :58), பூநகரி ஆகிய இடங்களில் மட்டும் சோழ நாணயங்கள் கிடைத்ததாகத் தெரிகிறது. பூநகரியில் கிடைத்த நாணயங்களில் ஒன்றில் இடம் பெற்றுள்ள புலியுருவம் சோழ நாணயங்களில் வழக்கமாக இடம்பெறும் இடப்பக்கம் நோக்கி நிற்கும் நிலைக்கு மாறாக வலப்பக்கம் திரும்பியுள்ளது. மற்றைய நாணயம் தமிழ்நாட்டில் கிடைத்துள்ள அதேவடிவத்தை அப்படியே ஒத்துள்ளன. அதன் விபரம் வருமாறு :

இடம் : பள்ளிக்குடா

உலோகம் :செப்பு
அளவு : 1.7x1.7 செ.மீ
எடை : 1.9 கிராம்.
முன்புறம் :யானை, தேரின் சக்கரம் (தெளிவு குறைவு),

www.tamilarangam.net



**பின்புறம்: இடம்புறம் திரும்பி நிற்கும் புலி வாயைப் பிளந்த நிலையில் வாலை உயர்த்தி நிற்கிறது (படம்-1,இல.5).**

இல.-1



இல.-2



இல.-3



இல.-4



இல.-5



www.tamilarangam.net



இதுவரை கூறப்பட்ட சங்ககால நாணயங்களிலிருந்து இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான உறவு ஓரளவு தெளிவாகிறது. ஒரு நாட்டில் வெளியிடப்பட்ட நாணயம் இன்னொரு நாட்டில் புழக்கத்தில் இருப்பதற்கு வர்த்தகம் ஒரு முக்கிய காரணமாக இருப்பினும் இலங்கையில் சங்ககால நாணயங்கள் புழக்கத்திலிருந்தமைக்கு வர்த்தகத்தோடு அரசியல் பண்பாட்டுத் தொடர்புகளும் காரணமாக இருந்துள்ளன எனக் கூறலாம். இதில் பெரும்பாலான நாணயங்கள் வட இலங்கையில் கிடைத்திருப்பது இதன் அமைவிடம் தமிழகத்திற்கு அண்மையில் அமைந்திருப்பதும், இலங்கையுடனான உறவுகள் இப்பிராந்தியமூடாக நடந்ததும் காரணங்களாக உள்ளன. இதற்கு மாதோட்டம் முக்கிய துறைமுகமாகப் பயன்படுத்தப்பட்டதைப் பாளி, சிங்கள இலக்கியங்கள் உறுதிசெய் கின்றன. ஆனால் அங்கு அரிதாகக் கிடைத்த சங்ககால நாணயங்கள் பூநகரியிலும், கந்தரோடையிலும் பெருமளவில் கிடைத்திருப்பது இவ்விடங்களின் வரலாற்றுப் பழமையை ஆராயத்தூண்டுகின்றன.

## இலங்கைத் தமிழ்மன்னர்கள்

மேற்கூறப்பட்ட சங்ககால நாணய வடிவங்களை ஒத்த மேலும் மூன்று வகையான நாணயங்கள் இலங்கையில் அதிலும் சிறப்பாக வட இலங்கையில் கிடைத்துள்ளன. தோற்ற அமைப்பில் இவை சங்ககால, பல்லவர் கால நாணயங்களை ஒத்திருப்பதினால் இவை தமிழகத்திலிருந்தே கொண்டு வரப்பட்டதென்ற கருத்து இற்றைவரை இருந்து வருகிறது. ஆனால் நாணயங்களின் பின்புறத்தில் இடம்பெற்றுள்ள சின்னங்களை, குறியீடுகளை ஆராய்ந்தால் இவற்றிற்கும் சங்க கால மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களுக்கும் இடையே அடிப்படையான வேறுபாடுகள் இருப்பதைக் காண முடிகிறது. இதனால் இவற்றை இலங்கைக்குரிய நாணயங்களாகக் கொள்ளலாம். இதற்குச் சான்றாகப் பூநகரியில் கிடைத்த நாணயங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### மீன்கோட்டுருவ நாணயம்

பூநகரிவட்டாரத்தில் உள்ள பள்ளிக்குடா, மண்ணித்தலை, வீரபாண்டியன்முனை ஆகிய இடங்களில் இருந்து மீன் குறியீட்டுச் சின்னமுடைய இருவகை நாணயங்கள் கிடைத்

www.tamilarangam.net



துள்ளன. இவை சதுர வடிவில் அமைந்த செப்பு நாணயங்கள் ஆகும். இவற்றுள் மூன்று நாணயங்களின் முன்புறத்தில் கவிழ்ந்த பிறை வடிவுள்ள கூரைக்கோயிலும், இரண்டு நாணயங்களின் முன்புறத்தில் ஸ்ரீவக்ஸா உருவமும் இடம் பெற்றுள்ளன. நாணயங்கள் சதுரவடிவில் அமைந்திருப்பது இவற்றைச் சங்ககால நாணயங்களுடன் தொடர்புபடுத்தக் காரணமாக உள்ளது. ஆனால் நாணயத்தின் முன்புறத்தில் உள்ள சின்னங்கள் சங்ககால நாணயங்களிலிருந்து வேறுபடுகின்றன (புஷ்பரட்ணம் 1998:114-119). அவற்றின் பொதுவான விபரம் வருமாறு :

1. இடம் : பள்ளிக்குடா
உலோகம் : செப்பு
அளவு : 1.5x1.3 செ.மீ.
எடை : 2.3 கிராம்.

முன்புறம் ஐந்து தூண்கள் தாங்கி நிற்கும் கவிழ்ந்த பிறை வடிவுள்ள கூரைக் கோயில்.

பின்புறம் :மீன் குறியீட்டுச் சின்னம் (படம்-2, இல1).

2. இடம் : வீரபாண்டியன்முனை
உலோகம் : செப்பு
அளவு : 1.6x1.4செ.மீ.,
எடை : 2.0கிராம்.
முன்புறம் : ஸ்ரீ வக்ஸா
பின்புறம் : மீன் குறியீட்டுச்சின்னம் (படம்-2,இல.2).

நாணயங்களின் பின்புறத்தில் மீன் குறியீட்டுச் சின்னம் இருப்பதினால் இவற்றைச் சங்ககாலப் பாண்டியர் வெளியிட்டதாகக் கருதலாம். ஆனால் முன்புறத்தில் உள்ள கவிழ்ந்த பிறைவடிவுள்ள கூரைக்கோயிலும், ஸ்ரீவக்ஸாவும் சங்க்காலப் பாண்டிய நாணயங்களிலும் பொதுவாக இந்திய நாணயங்களிலும் பிற சின்னங்களுடன் சேர்ந்து வருகின்றதே தவிர தனித்து இடம் பெற்றிருந்ததற்கு இதுவரை சான்றில்லை. மேலும் இலங்கையில் கிடைத்து வரும் இந்நாணயங்கள் இதுவரை தமிழகத்தில் கிடைத்ததாகத் தெரியவில்லை. பாண்டியரால் தமிழகத்தில் வெளியிடப்பட்ட இந்நாணயங்கள் தமிழகத்தில் கிடைக்காமல் இலங்கையில் கிடைத்திருக்கலாம் என வாதிட இடமுண்டு. ஆனால் தமிழகத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாண்டியர் வெளியிட்ட நாணயங்கள் பரவலாகக் கிடைக்கும் போது அந்நாணயங்கள் இலங்கையில் அரிதாகவே கிடைத்துள்ளன. இந்நிலையில் இலங்கையில் கிடைக்கும் நர்ணயங்கள் தமிழகத்தில் கிடைக்காமல் இருப்பது வியப்புக்குரிய ஒன்றாகும். இதனால் இந்நாணயங்களை இலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் வெளியிடப்பட்டதாகக் கூறுவதே பொருத்தமாகும். ஆனால் இவற்றை வெளியிட்ட தமிழ் மன்னர்கள் பாண்டிய வம்சத்தோடு தமக்குள்ள பாரம்பரிய உறவை நினைவுபடுத்த பாண்டியரின் குலமரபுச் சின்னமான மீனைத் தாம்வெளியிட்ட நாணயங்களிலும் பயன்படுத்தியிருக்காலாம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இலங்கை தமிழ்நாட்டில் ஏனைய பிராந்தியங்களை விட அருகிலுள்ள பாண்டிநாட்டுடனும், பாண்டிய வம்சத்துடனும் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்ததற்குப் போதிய சான்றுகள் உண்டு. கி.மு.5,4-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட தென்னிந்தியக் குடியேற்றம், அரச தோற்றம், ஆரம்பகால மன்னர்கள் என்பன பாண்டிநாட்டுத் தொடர்பால் ஏற்பட்டதைப் பாளி இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம் (M.V.VIII). இலங்கையிலுள்ள கி.மு.3.2-ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுக்கள் பாண்டிய வம்சம் பற்றியும், பாண்டியக் கிராமம் பற்றியும் கூறுகின்றன. சில கல்வெட்டுக்களில் பாண்டிய வம்சத்துடன் தொடர்புடைய புலைய, பழைய, மாற போன்ற பெயர்கள் காணப்படுகின்றன (I.C.1970: Nos. 58, 159, 610, 968, 1097). ஏறத்தாழ இதே காலமளவில் பழையமாறன், பிழையமாறன் போன்ற தமிழ் மன்னர்கள் இலங்கையில் ஆட்சிபுரிந்ததைப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன (M.V.V:61).

பாண்டிய மன்னர்கள் தமது குலமரபுச் சின்னமான மீனை அரசகொடிகளிலும், நாணயங்களிலும், பிற்காலத்தில் கல்வெட்டுக்களிலும் பயன்படுத்தியதற்குச் சான்றுகள் உண்டு. ஆனால் தமிழ் நாட்டின் பெரும்பாலான பிராமிக் கல்வெட்டுக்கள் பாண்டி நாட்டில் காணப்பட்டும் அக்கல வெட்டுக்கள் ஒன்றில்தானும் பாண்டிய வம்சத்தோடு தொடர்பு படுத்தக் கூடிய மீன் குறியிட்டுச் சின்னம் காணப்படவில்லை, ஆனால் தென்னிலங்கையில் மீனரசன் (மஜிமகாராஜா) பற்றிக் கூறும் கி.மு.3-2-ஆம் நூற்றாண்டுக்

www.tamilarangam.net



குரிய 16 கல்வெட்டுக்களிலேயே மீன் கோட்டுருவச் சின்னங்கள் காணப்படுகின்றன (I.C.1970:556-568). மெண்டிஸ் என்ற வரலாற்றறிஞர் இக்கல்வெட்டுக்களில் உள்ள மீன் சின்னங்கள் ஆதிகாலத்தில் இலங்கையில் குடியேறிய தமிழர்களின் வழி வந்தவர்களைக் குறிக்கிறது எனவும், இவர்கள் சிங்கள மன்னர்களுக்கு கட்டுப்படாமல் சுதந்திர மாக ஆட்சிபுரிந்தனர் எனவும் கூறுகிறார் (வேங்கடசாமி 1983:60). இலங்கையில் சிற்றரசர்களாக இருந்தவர்களே பின்னர் இலங்கை மன்னர்களாக வந்ததை வரலாற்றில் காண் கிறோம். இதனால் பூநகரியில் கிடைத்த மீன் குறியீட்டுச் சின்னத்துடன் கூடிய நாணயங்களை பாண்டிய வம்சத்தின் வழி வந்த இலங்கைத் தமிழ்மன்னர்கள் சிற்றரசராக அல்லது அநுராதபுர மன்னராக இருந்தபோது வெளியிட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. நாணயத்தின் முன்புறத் திலுள்ள கூரைக்கோயில், ஸ்ரீவத்ஸம் தமிழ் மன்னர்களின் சமய நம்பிக்கையைப் பிரதிபலிக்கலாம். பாளி இலக்கியங்கள் தமிழ் மன்னர்கள் பௌத்த மதத்திற்கு ஆதரவு கொடுத்து ஆட்சிபுரிந்தபோதிலும் தமது பழைய மத நம்பிக்கையைக் கைவிடவில்லை எனக் கூறியிருப்பது இங்கு நினைவுகூரத் தக்கது.

காளையுருவம் பொறித்த நாணயங்கள்

இலங்கையில் கிடைத்து வரும் பண்டைய கால நாணயங் களில் காளையுருவம் பொறித்த சதுர நாணயங்கள் சிறப்பாக நோக்கத்தக்கன. அண்மையில் தென்னிலங்கையிலுள்ள அக்குறுகொட என்ற இடத்தில் இவ்வகை நாணயங்கள் சிலவற்றிற்குரிய சுடுமண் அச்சுக்கள் கிடைத்துள்ளன (Bopearachchi 1999:plate 12. No.H26.Plate 23.Nosk14-k21). இவற்றிலிருந்து இந்நாணயங்கள் இலங்கையிலேயே வார்க்கப்பட்டதென்பதை உறுதிப்படுத்த முடிகிறது. இந் நாணயங்கள் இலங்கையில் பல்வேறு இடங்களில் புழக்கத் திலிருந்ததை அநுராதபுரம், கந்தரோடை, வல்லிபுரம் (Codrington 924:24), யாழ்ப்பாணம் (Seyone 1998:31). அண்மை யில் பூநகரி (புஷ்பரட்ணம் 1998:114-9) ஆகிய இடங்களில் கிடைத்த நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன. இந்நாணயங் களின் வடிவமைப்பு, சின்னங்களை அடிப்படையாகக் கொண்டு இருவகையாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவு நாணயங்கள் சற்றுப் பெரியவை. இதில் இடப்புறம் நோக்கி நிற்கும் காளை உருவத் திற்கு வெளியே இரு சதுரக் கோடுகள்

www.tamilarangam.net



உள்ளன. இக்கோடுகளுக்கு இடையிலும், வெளியிலும் சில புள்ளிகள் காணப்படுகின்றன. காளையின் பாதத்திற்கு முன்னால் பலிபீட மும், காளைக்கு மேலே முன்பக்கமாக சுவஸ்திகா உட்பட நான்கு சின்னங்களும் காணப்படுகின்றன. பின்புறத்தில் மூன்று அல்லது நான்கு புள்ளிகளும், அதைச் சுற்றி வட்டமும். வட்டத்திற்கு வெளியே இரு சதுரக் கோடுகளும் உள்ளன. இரண்டாவது வகை நாணயம் சற்றுச் சிறியது. இதன் முன்புறத்தில் இடம் அல்லது வலப்புறம் நோக்கி நிற்கும் காளை யுருவம் காணப்படுகிறது. காளை உருவத்தின் முகத்திற்கு கீழே பூரணகும்பம் போன்ற பொருள் உள்ளது. காளைக்கு வெளியே ஒன்று அல்லது இரண்டு சதுரக் கோடுகள் காணப்படுகின்றன. பின்புறத்தில் முதலாவது வகை நாணயத்திற்குரிய சின்னங்கள் காணப்படுகின்றன. பூநகரியில் கிடைத்த நாணயங்கள் இரண்டாவது வகையைச் சார்ந்தது. அவற்றின் பொதுவான விபரம் வருமாறு :

இடம் : வீரபாண்டியன்முனை
உலோகம் : செம்பு
அளவு : 1.6X1.3 செ.மீ.,
எடை : 2.3 கிராம்.

முன்புறம்: இடப்புறம் நோக்கி நிற்கும் காளை. முகத்திற்குக் கீழேபூரணகும்பம், வெளியே இரு சதுரக் கோடுகள்

பின்புறம் நான்கு புள்ளிகள் அதைச் சுற்றி வட்டம். வட்டத்திற்கு வெளியே இரு சதுரக் கோடுகள். கோட்டுக்குள் சிலபுள்ளிகள் (படம்.2, இல.3).

இலங்கைத் தமிழ் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள்(படம்.2)

இல.1



www.tamilarangam.net



இல-2



இல-3



நாணயத்தில் காளை உருவத்தைப் பயன்படுத்தும் மரபு தென்னாசியப்பண்பாட்டில் மிகத் தொன்மையானது. இதன் ஆரம்பத்தை இந்தியாவில் வெளியிடப்பட்ட முத்திரை வார்ப்பு நாணயங்களில் காணமுடிகிறது. மூவேந்தர் வெளியிட்ட நாணயங்களில் இடம்பெற்றிருப்பதுடன் பல்லவ மன்னர்கள் தமது நாணயங்களில் காளை உருவத்தையே தமது அரச இலட்சனையாகப் பயன்படுத்தினர். இவ்வாறு இந்திய நாணயங்கள் பலவற்றிலும் காளை இடம்பெற்றிருப்பதால் இலங்கையில் கிடைத்துவரும் மேலேகுறிப்பிட்ட நாணயமும் இந்தியாவில் இருந்தே இலங்கை வந்ததாக நாணயவியலாளர்கள் பலரும் கூறிவருகின்றனர். குறிப்பாக இந்நாணயம் பல்லவரால் வெளியிடப்பட்டு பல்லவர் இலங்கையுடன் கொண்ட வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்பால் இலங்கை வந்ததாகக் கூறுகின்றனர் (Codrington 1924:24, Mitchiner 1997:135, Seyone 1998: 27, சிற்றம்பலம்1993:501). ஆனால் இதுவரை தமிழகத்தில் கிடைத்த பல்லவ நாணயங்கள் அனைத்தும் சதுரவடிவில் உள்ளன. சதுரவடிவில் நாணயங்களை வெளியிடும் மரபு பெரும்பாலும் சங்ககாலத்திற்குரியது, பல்லவர் வெளியிட்ட நாணயங்களின் முன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புறத்தில் காளை உருவத்தோடு பகாபிடுகு, ஸ்ரீநிதி, வபு, ஸ்ரீபரமே, சங்கீத, பூமி, ஸிகோச போன்ற பெயர்களும். நாணயத்தின் பின்புறத்தில் சங்கு, சக்கரம், கூட்டல்குறி, நண்டு, கப்பல், மீன், விளக்கு, சைத்தியம் போன்ற சின்னங்களும் இடம்பெற்றுள்ளன (காசிநாதன் 1995:52-8). அண்மையில் தமிழ்நாட்டில் அழகன் குளத்திலும், இலங்கையில் அக்குறுகொட என்ற இடத்திலும் பூநகரியில் கிடைத்தது போன்ற நாணயங்கள் கிடைத்துள்ளன. ஆனால் இவற்றின் பின்பக்கத்தில் மீன் கோட்டுருவம் காணப்படுவதால் இவற்றைச் சங்ககாலப் பாண்டியர் வெளியிட்டதெனக் கூற முடிகிறது. ஆனால் பூநகரியில் கிடைத்தநாணயத்தில் மீன்கோட்டுருவத்திற்குப் பதிலாக நான்கு புள்ளிகள் கொண்ட வட்டமொன்று காணப்படுகிறது. இதையொத்த வடிவத்தை இதுவரை இந்தியாவில் கிடைத்த நாணயங்கள் எதிலும் காணமுடியவில்லை. இதனால் இவற்றை சங்க காலத்தின் சமகாலத்தில் இலங்கையில் ஆட்சி புரிந்த மன்னர்கள் வெளியிட்டார்கள் எனக் கூறலாம்.

காளையுருவத்தை நாணயங்களில் பயன்படுத்தும் மரபு இந்திய வம்சங்களிடையே பண்டு தொட்டு இருந்து வந்தாலும் அம்மரபு இலங்கையிலும் கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்தாவது ஏற்பட்டிருக்கலாம் என்பதற்கு தென்னிலங்கையிலிருந்து சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கு 15க்கு மேற்பட்ட காளையுருவ நாணயங்களை வடிவமைப்பதற்குரிய சுடுமண் அச்சுக்களும், சுடுமண் முத்திரைகளும் கிடைத்துள்ளன. இதைமேலும் உறுதிப்படுத்தும் வகையில் பூநகரியில் கிடைத்தது போன்ற சதுர வடிவிலான செப்பு நாணயங்களும் கிடைத்துள்ளன (Bopearachchi 1999:plate 12. No.H26.Plates 23.Nosk14-k31). நாணயங்களின் பின்புறத்தில் வரும் மூன்று அல்லது நான்கு புள்ளிகள். அதைச் சுற்றி வட்டம், அதற்கு வெளியே இரு சதுரக் கோடுகள் கொண்ட சின்னம் இலங்கைக்குரிய தனித்துவமான மரபாகும். ஆந்திராவின் ஆரம்ப கால நாணயங்களில் இதன் சாயல் ஓரளவுக்கு காணப்பட்டாலும் அழகிலும், வடிவமைப்பிலும். இலங்கையில் கிடைத்த நாணயங்கள் தனித்தன்மை கொண்டவை. இவ்வடிவமைப்பை இந்தியாவில் வெளியிடப் பட்ட எந்த நாணயத்திலும் காணப்படவில்லை. ஆனால் இலங்கையில் இவ்வடிவம் சிங்க உருவம் பொறித்த நாணயங்களில் காணப்படுகிறது. இவ்வகை நாணயங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அநுராதபுரம், கந்தரோடை, மாதோட்டம், பூநகரி போன்ற இடங்களில் கிடைத்துள்ளன . இவை சதுர வடிவில் மட்டு மின்றி வட்ட வடிவிலும் வெளியிடப்பட்டன. இவற்றை கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மகாசேனன் போன்ற சிங்கள மன்னர்கள் வெளியிட்டதாக கொட்றிங்ரன் கூறுகிறார் (1924:25). இதன் காலம் மேலும் முற்பட்டதாக இருக்கலாம் என்பதை அண்மைக்கால அகழாய்வில் பெறப்பட்ட நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன. இந்நாணயங்களுக்கும் காளை உருவம் பொறித்த நாணயங்களுக்கும் இடையே பின்புறச் சின்னங்களில் ஒற்றுமை காணப்படுவதால் சிங்க உருவ நாணயங்களைப்போல காளை உருவ நாணயங்களும் இலங்கையில் வெளியிடப்பட்டதாகக்கூற இடமுண்டு.

இலங்கையின் பௌத்த, சிங்களப் பண்பாட்டில் சிங்கத்தை அரச இலச்சனையாக, புனிதப் பொருளாக பயன் படுத்தியுள்ளனர். இதற்கு சிங்கள மக்களின் பூர்விக வரலாறு சிங்கத்தோடு தொடர்புபடுத்திக் கூறப்படும் வரலாற்று ஐதீகமும் ஒரு காரணமாகும். சிங்கள மன்னர்கள் பலரும் தாம் வெளியிட்ட நாணயங்களில் சிங்கத்தை ஒரு சின்னமாகப் பயன்படுத்தியதற்குச் சான்றுகள் உண்டு. அத்தகைய முக்கி யவத்துவத்தைக் காளை உருவம் பெற்றதாகத் தெரிய வில்லை. ஆனால் இலங்கைத் தமிழர் வரலாற்றில் காளை யுருவம் ஒரு புனிதப் பொருளாகப் பயன்படுத் தியதற்குச் சான்றுகள் உண்டு. இடைக்காலத்தில் வடஇலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் காளையை தமது அரச இலட் சனையாக நாணயங்களிலும், அரச கொடிகளிலும் பயன் படுத்தியுள்ளனர். இலங்கையில் கி.மு.3ஆம், 2ஆம் நூற்றாண்டிலேயே தமிழர்கள் எழுத்துப் பொறிப்புக்களுடன் கூடிய நாணயங்களை வெளியிட்டிருப்பதால் காளை உருவம் பொறித்த மேற்கூறப்பட்ட நாணயங்களை பண்டைய காலத்தில் இலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் வெளியிட்டார்கள் எனக் கூறலாம். அவற்றை வெளியிட சங்ககால நாணய வார்ப்பு முறையும், தமிழ் நாட்டு வம்சங்களுடன் இலங்கைத் தமிழ் மன்னர்களுக்கிருந்த பாரம்பரிய வரலாற்றுத் தொடர்புகளும் காரணமாக இருந்திருக்கலாம். இந்நாணயங்களை எந்த மன்னன் வெளி யிட்டான் எனக் கூறுவதற்கு நாணயங்களில் எழுத்தாதாரங் கள் காணப்படவில்லை. ஆனால் இலங்கை வரலாற்றுடன் நாணயம் பற்றிய முதலாவது செய்தி எல்லாளன் என்ற தமிழ் மன்னன் ஆட்சியில்(கி.மு161-) தான் காணப்படுகிறது. இவன்

www.tamilarangam.net



தவறான மதநம்பிக்கை உடையவனாக இருந்தாலும் தன்னால் இடிந்து போன பௌத்த விகாரையைத் திருத்தியமைக்க 1500 நாணயங்களை வழங்கினான் என மகாவம்சம் என்ற பாளி நூல் கூறுகிறது. இவனே இலங்கையில் நீண்ட காலம் ஆட்சி புரிந்த (44ஆண்டுகள்) முதல் தமிழ் மன்னன். இதனால் காளையுருவம் பொறித்த நாணயத்தை இவன் ஆட்சியோடு தொடர்படுத்திப் பார்க்க இடமுண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கைத் தமிழரும் லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயங்களும்

ஆதிகாலத்தில் பண்டமாற்று முறையில் எழுந்த சிக்கல் நாணயத்தின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தது. அன்று தொட்டு பொருட்களின் அளவு கோலாக விளங்கும் நாண யங்கள் இன்று வரலாற்றாய்வில் முக்கிய மூலாதாரங்களில் ஒன்றாகக் கணிக்கப்படுகிறது. இலங்கையைப் பொறுத்த வரை அதன் புராதன வ்ரலாறு பற்றிய ஆய்வில் நாயணங்கள் அதிகம் கவனத்தில் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஆயினும். இவை பண்டு தொட்டு புழக்கத்தில் இருந்து வருவதற்குப் பாளி இலக்கியங்களில் வரும் கஹபண(M.V. XX:3). பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் கஸபநெ (I.C.1970:No791) போன்ற சொற்றொடர்கள் சான்றாகும். இவற்றை உறுதிப்படுத்தும் வகையில் குடியிருப்பின் ஆரம்ப கட்டத்திலேயே பல நாணயங்கள் கண்டுபிடிக்கப பட்டுள்ளன.

இலங்கையின் ஆரம்பகால நாணயங்கள் முதலில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டதாகவும், காலப் போக்கில் இந்திய நாணய வார்ப்பு முறையைப் பின்பற்றியே இலங்கையில் நாணயங்கள் வெளியிடப்பட்ட தாகவும் கூறப்படுகிறது. இதற்குச் சான்றாக இலங்கை, இந்திய நாணயங்களுக்கிடையே வடிவமைப்பு, சின்னங்கள், குறியீடு கள் என்பவற்றில் காணப்படும் ஒற்றுமைகள் சான்றாகக் காட்டப்படுகிறது. கெட்றிங்ரன் நாணயங்களில் இடம் பெற்றுள்ள சின்னங்கள், குறியீடுகள் என்பவற்றிற்கும் பௌத்த சிங்களப் பண்பாட்டிற்கும் இடையிலான தொடர்பைச் சுட்டிக்காட்டி கி.பி 2ஆம் நூற்றாண்டிலிருந்து சிங்கள மன்னர்களால் நாணயங்கள் வெளியிடப்பட்டதாகக் கூறுகிறார் (1924:25). அதே வேளை பௌத்த சிங்களப் பண்பாட்டுடன் தொடர்பில்லாத நாணயங்கள் தென்னிந்

www.tamilarangam.net



தியா குறிப்பாக தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்பு காரணமாக தமிழகத்திலிருந்து இலங்கை வந்ததாகக் கூறுகிறார். ஆனால் தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கும் பண்டைய தமிழ் நாட்டு நாணயங்கள் இலங்கையில் அரிதாகக் கிடைக்கும் போது, இலங்கையில் பரவலாகக் கிடைக்கும் நாணயங்கள் தமிழகத்தில் கிடைக்காமலும், சிலவகை நாணயங்கள் ஓரிரு இடங்களில் அரிதாகவும் கிடைத்துள்ளன. அவ்வகை நாணயங்களில் ஒன்றான லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயம் பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

*1885* இல் முதன் முதலாக லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது (Parkar 1981 :463-81). இதையடுத்து *1917* இல் கந்தரோடையில் நூற்றுக்கு மேற்பட்ட நாணயங்கள் பெறப்பட்டன. இவற்றைக் கண்டுபிடித்த போல்பீரிஸ் இவற்றில் இடம்பெற்றுள்ள பெண் உருவத்திற்கு கஜலக்ஷ்மி எனப் பெயரிட்டார் (1917:40-67). அப்பெயரே இற்றைவரைக்கும் இந்நாணயத்திற்குரிய பெயராக வழங்கி வருகிறது. கந்தரோடையைத் தொடர்ந்து மேலும் பல நாணயங்கள் மாதோட்டம், நல்லூர், வல்லிபுரம், நாகர்கோயில், ஆனைக்கோட்டை போன்ற இடங்களிலும், வடஇலங்கைக்கு வெளியே அநுராதபுரம், நிந்தவூர், புத்தளம், திசமாறகம போன்ற இடங்களில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. இந்நாணயங்கள் சிலவற்றை ஆய்வு செய்த பிரித்தானிய நாட்டு இரசானவியலாளர் றோஷ் என்பவர் இந்நாணயங்களில் நான்கு பங்கு ஈயம், ஒரு பங்கு செம்பு மிகச் சிறிய அளவில் சிலிக்கா, இரும்பு நிக்கல் போன்ற உலோகங்கள் கலந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார் (Codrington 1924 ).

அண்மையில் கட்டுரை ஆசிரியரால் பூநகரி, தென்மராட்சி வட்டாரங்களில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட நாணயங்கள் கண்டுபிடிக்க முடிந்தது. இவற்றிலிருந்து லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயங்கள் ஒரு காலகட்டத்தில் இலங்கையின் பல்வேறு வட்டாரங்களில் புழக்கத்திலிருந்ததெனக் கூற முடிகிறது. நாணயத்தின் முன்புறத்தில் பெண் உருவம் முக்கிய சின்னமாக இருந்தாலும், நாணயங்களுக்கிடையே பெண்ணின் அமைப்பு, சின்னங்கள், குறியீடுகள், அளவு, எடை என்பவற்றில் பல வகை வேறுபாடுகள் உள்ளன. இந்த வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில்

www.tamilarangam.net



குறிப்பாக வட இலங்கையில் பூநகரி வட்டாரத்தில் கிடைத்த நாணயங்களைப் பதினொரு வகையாகப் பிரித்துள்ளேன்.

1) இடம் - மண்ணித்தலை
அளவு - 2.6 x 1,5 செ.மீ
எடை - 3.9 கிராம்

முன்புறம் - நிற்கும் நிலையில் பெண்ணின் உருவம். இது ஸ்ரீவத்ஸம் நிலையிலிருந்து சற்று வளர்ச்சியடைந்த நிலையைக் காட்டுகிறது. இதில் பிற நாணயங்களில் காணப்படும் கீழ் நோக்கி வரும் இருகரங்கள் காணப்படவில்லை. ஒடுங்கிய இடை, திரட்சி குறைந்த அகன்ற மார்பகம் இந்நாணயத்தில் காணக்கூடிய பிற சிறப்பியல்புகளாகும்.

பின்புறம்- சுவஸ்திகா (தெளிவற்ற நிலையில்)

2) இடம் - பள்ளிக்குடா
அளவு - 2.4 x 1.5 செ.மீ
எடை - 3 கிராம்

முன்புறம் - நிற்கும் நிலையில் லக்ஷ்மி உருவம். இருகரங்களும் தொங்கவிடப்பட்ட நிலையில் உள்ளன. வலது பக்கமாக தலையின் உயரத்திற்குச் செல்லும் தண்டு வேல் அல்லது அம்பாக ஆக இருக்கலாம். இடது கையோடு காணப்படும் தண்டைக் குத்து விளக்காக அல்லது சூலமாகக் கருத இடமுண்டு. முகமும், இடுப்புக்கு கீழேயுள்ள பாகம் அகன்றும் இருப்பது இவ்வுருவத்தில் காணக்கூடிய தனிப்பண்பாகும்.

பின்புறம் - சுவஸ்திகா (தெளிவற்ற நிலையில்)

3) இடம் - பள்ளிக்குடா
அளவு - 2.5 x 1. 6 செ.மீ
எடை - 3. 2 கிராம்

முன்புறம் - பிற லக்ஷ்மி உருவங்களிலிருந்து சற்று வேறுபட்ட நிலையில் இவ்வுருவம் வலப்புறம் திரும்பி சற்று முன்னோக்கி நிற்கும் நிலையில் உள்ளது. வலது கரம் காற்பகுதியிலிருந்து வெளிவரும் தாமரைத் தண்டினைப் பிடித்தவாறு உள்ளது. இடதுகைப் பக்கத்தில் கையை ஒட்டியவாறு உள்ள உருவம் குத்து விளக்காக அல்லது திரிசூலமாக இருக்கலாம்.

www.tamilarangam.net



பின்புறம் - சுவஸ்திகா

4) இடம் - ஈழஊர்
அளவு - 2.7 x 0.4 செ.மீ
எடை - 1.5 கிராம்

முன்புறம் - நிற்கும் நிலையில் லக்ஷ்மி உருவம். இதன் முகம், காது, திரண்ட மார்பகம் என்பன புள்ளிகளாலும், தோள், கை என்பன கோடுகளாலும் வடிவமைக்கப் பட்டுள்ளன. தலையின் பின்புறமாக புள்ளிகளாலான அரை வட்டம் காணப்படுகிறது. இது ஒளி வட்டமாக இருக்கலாம்.

பின்புறம் - பீடத்தின் மேல் தண்டுடன் கூடிய சுவஸ்திகா உள்ளது. இதற்கு இடப்புறமாக தொட்டியுடன் கூடிய மரக்கிளை காணப்படுகிறது.

5) இடம் - ஈழஊர்
அளவு - 1.6 x 0.4 செ.மீ
எடை - 1.4 கிராம்

முன்புறம் - இடப்புறம் திரும்பி நிற்கும் நிலையில் லக்ஷ்மி உருவம் காணப்படுகிறது. இதில் கால் மடிக்கப்பட்ட நிலையிலும், வலது கை மடிக்கப்பட்ட நிலையில் முகத்தை தாங்கியவாறும் உள்ளது.

பின்புறம் - தெளிவில்லை.

6) இடம் - மண்ணித்தலை
அளவு - 1.4 x 0.4 செ.மீ
எடை - 1.4 கிராம்

முன்புறம் - நிற்கும் நிலையில் லக்ஷ்மி உருவம். திரண்ட மார்பகம், ஒடுங்கிய இடை, நீண்ட காதணி என்பன இவ்வுருவத்தில் காணக்கூடிய சிறப்பம்சங்களாகும். இவ் வுருவத்திற்கு வலப்புறமாக தோள்ப்பகுதி வரை தாமரைத் தண்டு செல்கிறது. இதற்கு மேல் "ம" என்ற அசோக பிராமி எழுத்தை ஒத்த குறியீடு உள்ளது. தலைக்கு மேல் புள்ளிகளால் வடிவமைக்கப்பட்ட கோடு ஒன்று காணப படுகிறது. இடது தோளுக்கு அருகில் மூன்று புள்ளிகள் காணப்படுகின்றன.

பின்புறம் - சுவஸ்திகா சின்னம்.

www.tamilarangam.net



7) இடம் - கல்முனை
அளவு - 1.2 x 1 செ.மீ
எடை - 2.0 கிராம்

முன்புறம் -இருகைகளையும் தொங்க விட்ட நிலையில் நிற்கும் லக்ஷ்மி உருவம் காணப்படுகிறது. வலது கரம் தோள் வரை செல்லும் தாமரைத் தண்டினைப் பிடித்தவாறு உள்ளது. இடது கைப்பக்கத்தில் பாதத்தின் கீழிருந்து புறப்பட்ட தாமரைக் கொடியில் பூக்களும், இலைகளும் காணப்படுகின்றன. இன்னொரு தாமரைக் கொடி லக்ஷ்மியின் இடதுபக்கமாகவுள்ளது. ஒடுங்கிய இடை, அகன்ற மார்பகம், காலில் உள்ள வளையல்கள் என்பன இவ்வுருவத்தில் காணக்கூடிய சிறப்பியல்புகளாகும்.

பின்புறம் - பீடத்தின் மேல் தண்டுடன் கூடிய சுவஸ்திகா உள்ளது.

8) இடம் - மண்ணித்தலை
அளவு - 1.4 x 0.4 செ.மீ
எடை - 1.4 கிராம்

முன்புறம் - நிற்கும் நிலையில் லக்ஷ்மி உருவம் உள்ளது (தலைப்பகுதி உடைந்து விட்டது). இருகரங்களும் கீழ்நோக்கிய நிலையில் வலது கரம் தாமரைத் தண்டினைப் பிடித்தவாறு உள்ளது. திரண்ட மார்பும் இடுப்புக்கு கீழே முழங்கால் வரை உள்ள பாகமும் ஆடையணியப்பட்டுள்ளது. இது ஏனைய உருவங்களில் இருந்து இவ்வுருவத்தை வேறுபடுத்துகின்ற அம்சமாகும்.

பின்புறம் - கிடையாக மூன்று கோடுகள். அதன் மேல் சதுரக் கோடும் அதற்குள் சக அடையாளமும் உள்ளன. இதற்கு வலப்புறமாக கும்பம் அல்லது "ம" என்ற அசோக பிராமிக்குரிய குறியீடு காணப்படுகிறது.

9) இடம் - ஈழஊர்
அளவு - 2.4 x 1.3 செ.மீ
எடை - 2.5 கிராம்

முன்புறம் -நிற்கும் நிலையில் லக்ஷ்மி உருவம். இருகரங்களும் பாதத்திலிருந்து மேல் நோக்கி வரும் தாமரைத் தண்டினைப்பிடித்தவாறு உள்ளன.

பின்புறம் - தண்டுடன் கூடிய சுவஸ்திகா உள்ளது.

www.tamilarangam.net



இதற்கு வலப்பக்கமாக சிவலிங்கம், சக்கரம் காணப்படுகின்றன.

10) இடம் - கல்முனை
அளவு - 2.4 x 1.7 செ.மீ
எடை - 5.8 கிராம்

முன்புறம் - தாமரை மலரில் நிற்கும் நிலையில் லக்ஷ்மி உருவம். இருகரங்களும் பாதத்திலிருந்து தோள் வரை செல்லும் தாமரைத்தண்டினைப் பிடித்தவாறு உள்ளன. இடப்புறமாக அம்பு அல்லது வேல் போன்ற உருவம் உள்ளது. தலையின் பின்புறத்தில் ஒளிவட்டம் காணப்படுகிறது.

பின்புறம் - மூன்று கோடுகள். அதன் மேல் பீடமும் தண்டுடன் கூடிய சுவஸ்திகா சின்னமும் காணப்படுகின்றன. வலப்புறமாக சில எண் மங்கலப் பொருட்கள் உள்ளன.

11) இடம் - மண்ணித்தலை
அளவு - 3.2 x 2.4 செ.மீ
எடை - 2 4 கிராம்

இலங்கையில் கிடைத்த லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயங்கள்



www.tamilarangam.net



முன்புறம் - தாமரை மலரில் நிற்கும் லக்ஷ்மி உருவம். பாதத்திலிருந்து தோள் வரை செல்லும் தாமரைக் கொடியில் பூத்துக் குலுங்கும் தாமரை மலர்கள். இருபக்கங்களிலும் பூவின் மேலுள்ள இரு யானைகள் தும்பிக்கையால் லக்ஷ்மியின் மேல் நீர் சொரிந்து அபிஷேகம் செய்யும் காட்சி இடம்பெற்றுள்ளது.

பின்புறம் - வேலியிடப்பட்ட மரம் காணப்படுகிறது.

மேலே விபரிக்கப்பட்ட நாணயங்கள் அனைத்திலும் பெண் உருவம் முக்கிய சின்னமாகக் காணப்படுகிறது. இவை நாணயங்களை வெளியிட்டவர்களின் சமய நம்பிக் கையைப் பிரதிபலிக்கலாம். இப் பெண்வடிவத்தைப் பலரும் கஜலக்ஷ்மி உருவமாகவே எடுத்துக்கொண்டுள்ளனர். ஆனால் எல்லாப் பெண் உருவங்களையும் கஜலக்ஷ்மி உருவ மாகக் கொள்ளலாமா என்பதை உறுதிப்ப ந்த முடிய வில்லை. முதலாவது நாணயத்தில் உள்ள பெண்ணின் முகபாவம், திரட்சியற்ற அகன்ற மார்பகம், நெடிய கால்கள் என்பன புதியகற்கால, பெருங்கற்கால மற்றும் வரலாற்று ஆரம்பகாலப் பண்பாட்டில் கல்உருவங்களாகவும், கோட்டு ருவங்களாகவும் பெறப்பட்ட ஸ்ரீவத்ஸ்சா அமைப் பிலிருந்து சற்று வளர்ச்சியடைந்த நிலையைக் காட்டுகிறது. இவ்வமைப்பிலிருந்தே காலப்போக்கில் பெண் தெய்வ வடிவங்கள் தோன்றின என்பது கலை வரலாற்றாசிரியர்களின் பொதுவான கருத்தாகும். 2ஆம், 3ஆம், 10ஆம் நாணயங் களில் உள்ள பெண் உருவங்களுக்குப் பக்கத்தில் வழக்கமாக வுள்ள தாமரைத்தண்டிற்குப் பதிலாக வேல், அம்பு, சூலம் போன்ற சின்னங்கள் காணப்படுகின்றன. 11வது நாணயத்தில் வரும் பெண்உருவத்தை தாமரை மலரில் இருக்கும் இரு யானைகள் தும்பிக்கையால் நீர் தெளித்து அபிஷேகம் செய்யும் காட்சி இடம்பெற்றுள்ளது. இது ஸ்ரீசூக்கத்தில் கஜலக்ஷ்மி பற்றி வரும் வர்ணனையை ஒத்துள்ளது (சிவசாமி 1974:29). மற்றைய நாணயங்களில் உள்ள பெண் உருவங்களில் ஆடை, திரண்ட மார்பகம், நீண்ட காதணி, கைவளையல்கள், காற்சலங்கைகள், ஒளி வட்டம் போன்ற அம்சங்களுடன், சில நாணயங்களில் உள்ள பெண் உருவங்களில் கை, கால் மடிக்கப்பட்டு இடம் அல்லது வலப்பக்கம் திரும்பிய நிலையில் அங்க அசைவு களோடு காணப்படுகின்றன .அநுராதபுரம் கந்தரோடை ஆகிய இடங்களில் கிடைத்த இவ்வகை நாணயங்கள்

www.tamilarangam.net



சிலவற்றில் உள்ள பெண் உருவங்கள் தலைவிரி கோலமாக இடதுகாலை மடித்து குந்தியிருக்கும் நிலையில் காணப் படுகின்றன (Parkar 1981:: 463-82, Seyone 1998:45.

பீடத்துடன் கூடிய சுவஸ்திகா நாணயத்தின் பின் புறத்தில் உள்ள முக்கிய சின்னமாகும். ஆனால் எல்லா நாணயங்களிலும் இதுவே முக்கிய சின்னமாக இருந்ததெனக் கூறமுடியாது. மண்ணித்தலையில் கிடைத்த 11வது நாணயத்தில் சுவஸ்திகாவுக்குப் பதிலாக வேலியிடப்பட்ட மரம் இடப்பெற்றுள்ளது. 8ஆம், 9ஆம் நாணயங்களில் சுவஸ்திகாவுடன் விளக்கு, சிவலிங்கம், கும்பம், சக்கரம் சில வகைக் குறியீடுகள் இடம்பெற்றுள்ளன. நிந்தவூரில் கிடைத்த இதேவடிவுள்ள நாணயத்தில் சுவஸ்திகாவுடன் எட்டுக்கு மேற்பட்ட குறியீடுகள் காணப்படுகின்றன (Sitrampalm 1192: 151-8). முல்லைத்தீவில் கிடைத்த நாணயங்களில் மலரும், எருதும், (Parkar 1981:463-82) கந்தரோடை. மாதோட்டம் ஆகிய இடங்களில் கிடைத்த நாணயங்களில் வேல். சேவல், மயில், நந்திபாதம் போன்ற சின்னங்களும் இடம் பெற்றுள்ளன (Seyone 1998:45). இந்த வேறுபாடுகளை வைத்து நோக்கும் போது நாணயங்களின் முன்புறத்தில் இடம் பெற்றுள்ள பெண் உருவம் கஜலக்ஷ்மி உருவத்தை மட்டும் குறிக்காது பிற பெண் தெய்வங்களையும் குறித்திருக கலாம் எனக் கருத இடமுண்டு. அதேவேளை இந்நாணயங் கள் பண்டைய காலத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் புழக்கத்தில் இருந்தாலும் அவற்றிற்கு இடையே காணப் படும் வேறுபாடுகள் அவற்றை வெளியிட்டதில் உள்ள கால. பிரதேச வேறுபாட்டைக் காட்டுகிறது எனக் கூறலாம். அத்துடன் நாணயங்களில் உள்ள சின்னங்கள், குறியீடுகள் இவற்றை வெளியிட்டவர்களின் மத நம்பிக்கையை வெளிப் படுத்தி நிற்கின்றன.

இந்நாணயங்கள் இந்தியாவிலிருந்தே இலங்கை வந்த தாக அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர். பேராசிரியர் கெட்டி யாராய்ச்சி நாணயத்தின் முன்புறத்தில் உள்ள பெண் மற்றும் யானை உருவம் மாயாதேவி கனவையும், நாணயத்தின் பின்புறத்தில் வரும் சுவஸ்திகா புத்தரது பிறப்பு. போதனை யைக் குறிப்பதாகவும் கூறி இந்நாணயத்தை வெளியிட் டவர்களை பௌத்த மதத்தோடு தொடர்பு படுத்துகிறார். இதற்குச் சார்பாக வட இந்தியாவில் புத்தகாயா, பாருட்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாஞ்சி இலங்கையில் அபயகிரி ஆகிய இடங்களில் உள்ள பௌத்த விகாரைகளில் காணப்படும் சிற்பங்களைச் சான்று காட்டுகிறார் (1950: 104-22). ஆனால் இந்திய நாகரிகத்தில் சுவஸ்திகா சின்னத்திற்கு தொன்மையான வரலாறு உண்டு. இது பௌத்த மதம் தோன்ற முன்னரே தென்னிந்திய, இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டில் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டதற்குச் சான்றுகள் உண்டு. இதன் தொடர்ச்சியை கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணமுடிகிறது. பின்னர் இது பௌத்த மதத்தின் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டது போல், இந்து சமண மதங்களிலும் பயன்படுத்தப் பட்டுள்ளது. யானை உருவம் இந்திய நாணயங்களில் பண்டு தொட்டு முக்கிய சின்னமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. சங்ககாலத்தில் மூவேந்தர் மற்றும் குறுநில மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் யானையைப் பொதுச்சின்ன மாகப் பயன்படுத்தியுள்ளனர். இதனால் இச்சின்னத்தை குறிப்பிட்ட மதத்தின் அல்லது வம்சத்தின் சின்னமாக எடுத்துக்கொள்வது பொருத்தமாகத் தெரியவில்லை. சங்ககாலப் பாண்டியர் தாம் வெளியிட்ட நாணயங்களில் தமது குலச்சின்னமான மீனுடன் யானையையும் முக்கிய சின்னமாகப் பயன்படுத்தி யுள்ளனர். ஆனால் இலங்கையில் சிங்கள மன்னர் தாம் வெளியிட்ட நாணயங்களில் பௌத்த சின்னங்களுடன் சிங்கத்தைப் பயன்படுத்திய அளவுக்கு யானையைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. இதனால் யானையைப் பௌத்த மதத்திற்கு மட்டும் உரிய சின்னமாகக் கொள்ள முடியாது.

நாணயத்தில் இடம்பெற்றுள்ள பெண் உருவத்தை பௌத்த விகாரைகளில் இடம்பெற்றுள்ள யக்ஷி உருவத் தோடு தொடர்பு படுத்துவதும் பொருந்து மாறில்லை. எனெனில் இவ்வுருவத்தின் தோற்றம் நாணயங்களின் தோற்ற காலத்தை விட காலத்தால் பிற்பட்டது. கி.பி 1ஆம் நூற்றாண்டின் பின்னர் ஆந்திராவிலிருந்து மகாயான பௌத்தம் இலங்கைக்கு பரவியதன் பின்னரே இங்குள்ள விகாரைகளில் யக்ஷி உருவம் சிற்பங்களாக செதுக்கப் பட்டன. இச்சிற்பங்களுக்கும் நாணயங்களில் வரும் பெண்வடிவங்களுக்கும் இடையே தோற்றமைப்பில் ஒற் றுமை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் நாணயங்

www.tamilarangam.net



களின் தோற்றத்திற்கு முன்னரே பெண்தெய்வ வழிபாடு இலங்கையில் இருந்ததற்குச் சான்றுகள் உண்டு. இதற்குப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கிடைத்த சுடு மண் உருவங்கள் சிறந்த சான்றாகும். இவற்றை இலங்கையின் சக்தி வழிபாட்டுக்குரிய தொடக்ககாலச் சான்றாக சிரான் தெரணியகலா கூறுகிறார் ( 1989:). இதன் இன்னொரு கட்டவளர்ச்சியாக பிராமிக் கல்வெட்டுக்களிலும், மேற்குறிப்பிட்ட 1ஆம் நாணயத்திலும் வரும் ஸ்ரீவத்ஸம் உருவத்தைக் கொள்ளலாம். இதை இவ்வுருவத்துடன் வரும் வேல், சூலம், சிவலிங்கம், குத்துவிளக்கு, மயில், சேவல் போன்ற சின்னங்களும் உறுதிப்படுத்துகின்றன. இதனால் இந் நாணயங்களை வெளியிட்டவர்கள் புராண வழிபாட்டு மரபில் (இந்து மதத்தில்)நம்பிக்கை உடையவர்கள் எனக் கூறலாம்.

இந்நாணயங்கள் எப்போ ? எங்கே ? யாரால் வெளியிடப் பட்டதென்பதில் அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துக் கள் நிலவுகின்றன. ஒருசாரார் பிற்கால உரோம நாணயங்க ளுடன் இவை கிடைக்கப் பெறுவதால் இவற்றின் தோற்ற காலம் கிறிஸ்தவ சாகாப்தத்திற் குப் பிற்பட்டதாக இருக் கலாம் எனக் கருதுகின்றனர். முல்லைத்தீவில் கிடைத்த நாணயங்களை ஆய்வு செய்த பாக்கர் நாணயங்களில் வரும் சின்னங்களையும், இலங்கையின் பண்டைய கால அரசியல் வரலாற்றையும் தொடர்பு படுத்தி இவற்றின் தோற்ற காலம் கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாக இருக்கலாம் என்றார் (1981:494). ஆனைக்கோட்டையில் பெருங் கற்காலப் புதைகுழியிலிருந்து ஒரு நாணயம் பெறப்பட்டது. இப் புதைகுழியில் கிடைத்த சாசன முத்திரையொன்றின் காலம் கி.மு3ஆம், .2ஆம் நூற்றாண்டெனக் கணிப்பிடப் பட்டுள்ளது (Ragupathy 1987:124). அண்மையில் அநுராதபுர அகழ்வாய்வில் பெறப்பட்ட கலாச்சாரச் சின்னங்களுடன் இவ்வகை நாணயங்களும் கிடைத்துள்ளன. இக்கலாச்சாரப் படையின் காலம் கி.மு.2ஆம் நூற்றாண்டெனக் கணிப்பிடப பட்டுள்ளது (Bope arachchi 1999:154). இக்காலக் கணிப்புக களை வைத்து நோக்கும் போது இந்நாணயங்களின் தோற்ற காலம் கி.மு.2ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதெனக் கூற முடியும். ஆயினும் பல இடங்களில் பிற்பட்ட உரோமர் கால நாணயங்களுடன் இவை கிடைத்து வருவதால் இவற்றின் புழக்கம் கி.பி.5ஆம் நூற்றாண்டு வரை இருந்ததெனக் கூறலாம்.

www.tamilarangam.net



இந்நாணயங்கள் இந்தியாவுடனான வணிகத்தொடர்பால் அங்கிருந்தே இலங்கை வந்ததாகப் பலரும் கருதுகின்றனர். இதற்கு இந்நாணயங்களில் இடம்பெற்றுள்ள பல சின்னங்கள் இந்திய நாணயங்களோடு பொதுத்தன்மை கொண்டிருப்பது சான்றாகக் காட்டப்படுகிறது. அண்மையில் தமிழ்நாட்டில் கரூர் என்ற இடத்தில் இவ்வகை நாணயங்கள் சில கிடைத்துள்ளன (Nagaswamy 1995:37-9). இவை பற்றி ஆராய்ந்த தினமலர் ஆசிரியரும், நாணயவியலாளருமான கிருஷ்ணமூர்த்தி இந்நாணயங்கள் தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையிலான வணிகத் தொடர்பால் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குச் சென்றிருக்கலாம் என்றார் (Vol. LII:59-1). தமிழ் நாட்டு வம்சங்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் தமிழ் நாட்டில் பரவலாகக் கிடைத்திருக்கும் போது, அவை இலங்கையில் அரிதாகவே கிடைத்துள்ளன. அதேவேளை இலங்கையில் பரவலாகக் கிடைக்கும் லஷ்மி உருவம் பொறித்த நாணயம் தமிழ் நாட்டில் கருவூரைத் தவிர இந்தியாவின் வேறு எந்த இடத்திலும் கிடைத்ததாகத் தெரியவில்லை. இவை இந்தியாவில் வெளியிடப்பட்டிருக்குமாயின் இலங்கையைக் காட்டிலும் அங்கேயே கூடுதலாகக் கிடைத்திருக்க வாய்ப்புண்டு. மேலும் நாணயத்தில் வரும் பீடத்துடன் கூடிய சுவஸ்திகா இலங்கைக்குரிய தனித்துவம் ஆகும். இதன் தொடக்கத்தை பெருங்கற்கால மட்பாண்ட ஓடுகளில் காணலாம். இந்திய நாணயங்களில் சுவஸ்திகா சின்னம் காணப்பட்டாலும் பீடத்துடன் கூடிய சுவஸ்திகா எந்தவொரு நாணயத்திலும் இதுவரை காணப்படவில்லை. இந்தியாவில் பல வடிவங்களில் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்குச் சான்றுகள் காணப்பட்ட போதிலும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாணய வடிவங்களை ஒத்த நாணயங்களை இந்தியாவில் இதுவரை காணமுடியவில்லை. சிலர் வட இந்திய நாணயங்களுடன் தொடர்பு படுத்துகின்றனர் (Bopearachchi 1999:29). ஆனால் அவற்றில் வரும் பெண் உருவங்கள் முற்றிலுமாக இந்நாணயங்களில் இருந்து வேறுபட்டிருப்பதுடன் அவை வட்டவடிவங்களிலும் உள்ளன. இச்சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நாணயங்கள் இலங்கையிலேயே வெளியிடப்பட்டதென்ற கருத்தை முன்வைக்க முடிந்தது (புஷ்பரட்ணம் 1998: 1-12). இதை உறுதிப்படுத்தும் வகையில் மிகச் சமீபத்தில் இந்நாணயங்களுக்குரிய சுடுமண் அச்சுக்கள் பல தென்னிலங்கையில்

www.tamilarangam.net



கிடைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (Bopearachchi 1999:Plate.Nos.12-3).

இந்நாணயங்களை இலங்கைக்குரியதாகக் கொள்ளும் போது இவற்றை வெளியிட்டவர்கள் யார் என்ற கேள்வி எழுகின்றது. அண்மையில் பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள் பல தென்னிலங்கையில் கிடைத்துள்ளன. இவை கி.மு.3 ஆம் . 2ஆம் நூற்றாண்டிலிருந்து வெளியிடப் பட்டதாகக் கணிக்கப்பட்டுள்ளது (Bopearachchi 1999:). இந்நாணயங்களில் அதை வெளியிட்டவர்களுக்குரிய பெயர் கள் பட்டப்பெயருடனும், தனிப்பெயராகவும் தமிழ், பிராகிருத மொழிகளிலும், பிராகிருதப்படுத்தப்பட்ட தமிழ் மொழியிலும் உள்ளன. பிராகிருத மொழியில் அமைந்த பெயர்களில் பல பிற்காலச் சிங்கள, தமிழ் மொழிப் பெயர்களுக்கு முன்னோடியாக இருந்ததென்பது மொழியிய லாளர்களின் கருத்தாகும். இவற்றின் மூலம் கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் தமிழரும் மற்றையோரும் நாணயங்களை வெளியிடுகின்ற மரபைக் கைக்கொண்டனர் என உறுதிபடக் கூறலாம். இவ்வகை நாணயங்கள் வட இலங்கையிலும் புழக்கத்தில் இருந்துள்ளன. இந்நாணயங் களில் வரும் பெயர்களை ஒத்த பல பெயர்கள் சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. கல் வெட்டுக்களில் அவர்கள் சிற்றரசர்களாக, குறுநிலமன்னா களாக, அரசஅதிகாரிகளாக, வணிகர்களாக குறிப்பிடப் பட்டுள்ளனர். இதனால் இவற்றை ஆட்சியாளர்கள் மட்டு மன்றி அக்காலச் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்பட்ட பல்வேறு பிரிவினரும் வெளியிட்டனர் எனக் கூறலாம். இருப்பினும் தென்னாசியாவில் பண்டைய காலத்தில் ஆட்சியாளர்களும், வணிகக் குழுக்களும் நாணயங்களை வெளியிட்டதற்குச் சான்றுகள் காணப்படுவதால் இலங்கை யிலும் அம்மரபு இருந்திருக்கும் எனக் கூறலாம்

இலங்கையின் பண்டையகால வெளிநாட்டு வர்த்தகத் தில் தமிழர்கள் முக்கிய பங்கு வகித்ததற்கு கல்வெட்டுக் களிலும், பாளி இலக்கியங்களிலும் பல சான்றுகள் காணப் படுகின்றன. இதற்கு தமிழ் நாட்டுடன் இணைந்த உரோம வர்த்தகம் முக்கிய காரணமாகும். காலப்போக்கில் இத்தமிழ் வணிகர்கள் ஆட்சியாளர்களாக மாறியதற்கும், அரசவம்சத் துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததற்கும் பல

www.tamilarangam.net



சான்றுகள் உண்டு. கி.மு. 3ஆம் நூற் றாண்டிலிருந்து இலங்கையில் பௌத்த மதம் பரவிய போது தமிழர்களில் ஒரு பிரிவினர் அம்மதத்திற்கு மாறினர் மற்றும் ஆதரவு கொடுத் தனர். இதற்கு தமிழ் மன்னர்களும், வர்த்தகர்களும் உட்பட் டிருந்தனர் என்பதைக் கல்வெட்டுக்களிலும். பாளி இலக்கியங்களிலும் வரும் சான்றுகள் உறுதிப்படுத்து கின்றன. இவர்களில் பலர் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும் தமது பாரம்பரிய வழிபாட்டு நம்பிக்கை களைக் கைவிட்டதாகத் தெரியவில்லை. பாளி நூல்கள் தமிழ் மன்னர்கள் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும் தமது பழைய மத நம்பிக்கையைக் கைவிடவில்லை எனக் கூறுகின்றன.

இங்கே லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயத்தில் வரும் சுவஸ்திகா, யானை, தாமரைமலர் போன்ற சின்னங்கள் பல மதங்களுக்குப் பொதுவாக இருப்பினும், இவற்றில் வரும் எருது, சிவலிங்கம், வேல், சூலம், குத்துவிளக்கு, மயில், ஒளிவட்டம், சேவல் போன்ற சின்னங்கள் இந்துமதத்தின் தொடக்ககாலச் சான்றுகளாக உள்ளன. தென்னிலங்கையில் கிடைத்த நாணயமொன்றின் முன்புறத்தில் மஹாசாத்தன் (பெரியவணிகன்) என்ற பெயரும், பின்புறத்தில் சேவல் சின்னமும் இடம்பெற்றுள்ளது. இங்கே தமிழன் வணிகனாக வும், சேவல் அவன் வெளியிட்ட நாணயத்தின் சின்னமாவும் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. கந்தரோடை யில் கிடைத்த இதேகாலப்பகுதிக்குரிய தமிழ் நாணயத்தின் முன்புறத்தில் சக்தியின் ஆரம்ப தோற்றமான ஸ்ரீவத்ஸம் இடம்பெற்றுள்ளது. ஏறத்தாழச் சமகாலத்தில் தமிழ் மன்னர்கள் வெளியிட்ட ஏனைய சில நாணயங்களில் எருதினை தமது சின்னமாகப் பயன்படுத்தியதற்குச் சான்று கள் உண்டு (புஷ்பரட்ணம் 1999:55-70).

இலங்கையில் ஆட்சி புரிந்த சிங்கள மன்னர்களும் மற்றையோரும் தாம் வெளியிட்ட நாணயங்களிலும், பிற கலைப்படைப்புகளிலும் பௌத்த சிங்களப் பண்பாட்டைப் பிரதிநிதிப்படுத்துகின்ற சின்னங்களைப் பொறிக்கத் தவற வில்லை. அதில் சிங்க உருவம் முக்கிய சின்னங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. ஆனால் இதுவரை கிடைத்த லக்ஷ்மி உருவம் பொறித்த எந்தவொரு நாணயத்திலும் சிங்க உருவம் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்ததாகத் தெரியவில்லை. இக்காரணங்களை அடிப்படையாக வைத்து இந்நாணயங்

www.tamilarangam.net



களை இலங்கைத் தமிழர்கள் வெளியிட்டார்கள் என்ற முடிவுக்கு வரலாம். இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் பொறியியலாளராகக் கடமையாற்றிய பாக்கர் என்ற ஆங்கிலநாட்டு அறிஞர் தமிழ்நாட்டிலிருந்து வந்து ஆட்சியைக் கைப்பற்றிய எல்லாளன் என்ற தமிழ் மன்னனுக்கும், இந்நாணயங்களின் தோற்றத்திற்கும் தொடர்பு இருக்கலாம் எனக் குறிப்பிட்டிருந்தார்(1981:494). ஆனால் அக்கருத்தை யாரும் கவனத்தில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கையின் பூர்விக வரலாற்றோடு தமிழ் மக்களுக்குள்ள உறவைக் காட்டும் அண்மைக்காலத் தொல்லியல் சான்றுகளின் பின்னணியில் வைத்து நோக்கும் போது பாக்கர் கூறிய கருத்து முற்றிலும் பொருத்தமாகவே தோன்றுகிறது.

www.tamilarangam.net

# பத்தாம் நூற்றாண்டில் கதிர மலையும் சிங்கை நகரும் - சில தொல்லியல் சான்றுகள்

இலங்கைத் தமிழருக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு குறையாத நீண்டகால வரலாறு உண்டு. இதை அடையாளம் காணும் தொடக்ககாலச் சான்றாக கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுக்களைக் குறிப்பிடலாம். இக்காலகட்டத்திலிருந்தே அரச உருவாக்கம் ஏற்பட்டதற்கான சான்றுகள் கல்வெட்டுக்களிலும்,பாளி இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. இதில் தமிழர்கள் சிற்றரசர்களாக, குறுநிலமன்னர்களாக, அரசநிலையடையாத ஆதிக்குழுக்களாக (tribes) இலங்கையின் பல பாகங்களில் இருந்துள்ளனர். அக்காலகட்டத்திலிருந்தே இவர்களில் சிலர் தமது பெயர் பொறித்த நாணயங்களை வெளியிட்டு வந்ததற்கு அண்மைக்காலங்களில் தென்னிலங்கையிலும் (அக்குறுகொட). வட இலங்கையிலும் (கந்தரோடை) சான்றுகள் கிடைத்துள்ளன. அநுராதபுரம் பலம்மிக்க அரசாக எழுச்சியடைந்த போது அதைத் தமிழ் சிங்கள மன்னர்கள் மாறிமாறி ஆட்சி செய்தனர். பாளி இலக்கியங்கள் இவ்வரசின் வரலாற்றை மையமாக வைத்து இலங்கையின் அரசியல் வரலாறாகச் சித்தரித்துக் காட்டிய போதும் இவ்வரசிற்குத் தெற்கே உருகுணைப்பிரதேசத்தில் மகாகமையைத் தலைநகராகக் கொண்ட அரசும், வடக்கே யாழ்ப்பாணத்தில் கதிரமலை எனப்படும் கந்தரோடையைத் தலைநகராகக் கொண்ட தமிழ் அரசும் தோன்றிய வரலாற்றைப் பாளி, தமிழ் இலக்கியங்கள், தொல்பொருட்சின்னங்கள் என்பவற்றின் மூலம் காணமுடிகிறது. ஆயினும் வடஇலங்கையில் ஒரு மன்னன் ஆளுகைக்குட்பட்ட சுதந்திரத் தமிழரசு எப்போது

www.tamilarangam.net



தோன்றிய தென்பதில் இவ்வரலாற்று மூலங்களிடையே ஒரு தெளிவற்ற நிலையே இருந்து வருகின்றது.

வட இலங்கையில் இருந்த தமிழரசின் தலைநகரங்களை சிங்கை, சிங்கைநகர், நல்லூர் எனத் தமிழ் இலக்கியங்களும், (இரகுநாதையர் 1942:36, சபாநாதன் 1953: 27), யாபாபடுன எனச் சிங்கள இலக்கியங்களும், (Gunawardene 1924: 246.), யாழ்ப்பாணாயன் பட்டினம் எனத் தென்னிந்தியக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன. இவை வேறுபட்ட தலைநகரங்களின் கீழ் வட இலங்கை ஆளப்பட்ட தென்பதைத் தெரிவிக்கின்றன. முதலியார் இராசநாயகம் வரலாற்றிலக்கியங்கள் கூறும் புராதன தலைநகரான கதிரமலை யாழ்ப்பாணத்தில் உள்ள கந்தரோடை எனவும், இத்தலைநகர் பிற்காலத்தில் வல்லிபுரத்திலிருந்த சிங்கை நகருக்கு மாற்றப்பட்டதெனவும்கூறுகிறார் (1926:32). இவரின் கருத்தோடு பெருமளவு உடன்பாடுடைய சுவாமி ஞானபிரகாசர் இதற்குச் சார்பாக வல்லிபுரத்தில் கிடைத்த தொல்லியற் சின்னங்களைச் சுட்டிக்காட்டி இச்சிங்கைநகரின் தோற்ற காலம் கி.பி 8ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாக இருக்கலாம் என்றார் (1928:67-68).

ஆனால் கி.பி 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் முதலாவது சுதந்திர தமிழரசு தோன்றியதென்ற கருத்துடைய பிற்கால வரலாற்றறிஞர்கள் அதன் தலைநகர் நல்லூர் எனவும், வரலாற்றிலக்கியங்களில் சிங்கை, யாழ்ப்பாணம் போன்ற தலைநகரங்கள் கூறப்பட்டாலும் இவையிரண்டும் நல்லூரையே குறித்ததெனவும் கூறுகின்றனர் (இந்திரபாலா 1972. Pathmanathan 1978). நல்லூரும், யாழ்ப்பாணமும் அருகருகேயுள்ள இடங்களாகும். இவ்விடங்கள் தமிழ் மன்னர் ஆட்சியில் சிறப்புப் பெற்றிருந்ததற்குச் சான்றுகள் உண்டு. போத்துக்கேயர் இலங்கை வந்த போது இவையே யாழ்ப்பாண அரசின் தலைநகராக இருந்துள்ளன. இதனால் இவற்றை வேறுபட்ட தலைநகராகக் கொள்ளாது ஒரு தலைநகராகக் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது. ஆனால் சிங்கை என்ற பெயரில் ஓர் இடம் நல்லூரிலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ இருந்ததற்கு இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை. வல்லிபுரத்தில் காணப்பட்ட தொல்லியல் சான்றுகள் ஞானப்பிரகாசர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கிடைத்த முக்கிய சான்றுகள் என்பதில் கருத்து வேறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாட்டிற்கு இடமில்லை. ஆனால் இவை போன்ற சான்றுகள் பிற்காலத்தில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் கிடைத்துள்ளன (Ragupathy 1987). இவற்றை அவ்விடங்களில் வாழ்ந்த மக்களின் பண்டையகாலச் சின்னங்களாகக் கொள்ளலாமே தவிர ஒரு அரசின் தலைநகர் இருந்ததற்குரிய சான்றுகளாகக் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. அத்துடன் இவ்வரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் கூட சிங்கைநகர் சோழர் வருகையுடன் யாழ்ப்பாணத்திற்கு வெளியே ஏற்பட்டதையே மறைமுகமாகத் தெரிவிக்கின்றன. இதனால் தமிழ் அரசின் தலைநகராக முதலில் சிங்கையும், பின்னர் நல்லூரும் இருந்ததெனக் கூறலாம். இதில் சிங்கை அல்லது சிங்கை நகரைத் தலைநகராகக் கொண்ட அரசின் தோற்றத்தை அண்மைக்காலத்தில் கிடைத்த தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

யாழ்ப்பாண அரசுக்கு முன்னர் வட இலங்கை

யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசு ஒன்று தோன்று முன்னர் இலங்கையில் இரு அரசுகள் இருந்தது பற்றி பாளி இலக்கியமும், பாண்டியக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன. இதற்கு கலிங்கமாகனது ஆட்சி இலங்கையில் ஏற்பட்டமை காரணம் எனக் கூறப்படுகிறது. கலிங்கமாகன் 1215இல் 24000 தமிழ் சோழ, கேரளப்படை வீரர்களின் உதவியோடு படையெடுத்து வந்து ஏற்கனவே பலவீனப்பட்டிருந்த பொலநறுவை அரசைக் கைப்பற்றி துணையரசனாகிய ஜெயபாகுவுடன் சேர்ந்து நீண்ட காலம் இராசரட்டையில் ஆட்சிபுரிந்தான் என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இவன் தமிழர்களுக்குச் சார்பாகவும், சிங்கள மக்களுக்கு எதிராகவும் நடந்து கொண்டதால் இவன் ஆட்சியில் வெறுப்புற்ற சிங்கள மக்கள் தமது 250ஆண்டு காலத் தலைநகரான பொலநறுவையைக் கைவிட்டு தெற்கு நோக்கிப் புலம் பெயர்ந்தனர். இதன் விளைவாகப் புதிய சிங்கள இராசதானியாக தம்பதேனியாவும் பின்னர் யாப்பகூவ, குருநாகல், கம்பளை, கோட்டை என்னும் இராசதானிகளும் காலத்திற்கு காலம் தோன்றின.

பொலநறுவையின் வீழ்ச்சியைத் தொடர்ந்து வட இலங்கையிலும் வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளிலும் வன்னி என அழைக்கப்படும் பல

www.tamilarangam.net



சிற்றரசுகள் தோற்றம் பெற்றன. இவற்றையாட்சி புரிந்தவர்கள் வன்னியர் என அழைக்கப்பட்டனர். இவர்களுள் சோழர்காலத்திலிருந்த வேளைக்காரர் என்னும் படைப் பிரிவைச் சார்ந்தவர்கள் சிலரும் வன்னிச் சிற்றரசர்களாக இருந்ததால் இவ்வரசுகளின் தோற்றத்தைப் பொலநறுவையரசு காலத்துடன் தொடர்புபடுத்தலாம். கலிங்கமாகன் பொலநறுவையைக் கைப்பற்றி பறையாட்சியை வன்னியருக்கு கொடுத்தான் என மட்டக்களப்பு மானியம் கூறுகின்றது. குளக்கோட்ட மன்னன் திருகோணமலையில் உள்ள நிலாவெளி, கட்டுக்குளம் ஆகிய இடங்களுக்கு வன்னியர்களை நியமித்தான் எனக் கோணேஸ்வரர் கல்வெட்டுக் கூறுகின்றது. "குளக்கோட்டன் எனும் சோழகங்கனைச் சிந்தையில் வைப்போம்" என்று ஸ்ரீ தக்ஷிணைகைலாச புராணத் துப்பாயிரம் கூறுவதால் குளக்கோட்டனின் இயற்பெயர் சோழங்கன் என்பது தெளிவாகிறது (பத்மநாதன் 1992:28-9).

கலிங்கமாகன் ஆட்சி செய்த காலத்தில் சந்திரபானு என்னும் சாவக மன்னன் தம்பதேனிய அரசு மீது படையெடுத்து தோல்வியடைந்தான் எனச் சூளவம்சம் கூறுகிறது. மேலும் இவன் இரண்டாவது தடவையாகத் தென்னிந்தியாவிலிருந்து பாண்டிய சோழப்படைகளுடன் மாதோட்டத்தில் வந்திறங்கி குருந்தி, பதி மாவட்டங்களில் வாழ்ந்த மக்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு தம்பதேனிய அரசு மீது படையெடுத்தான் எனவும் இப்படையெடுப்பும் இவனுக்கு தோல்வியில் முடிந்ததாகவும் இந்நூல் கூறுகிறது. ஆனால் சூழவம்சத்தில் சாவகன் பற்றிக் கூறப்படாத செய்தியைச் சமகாலப் பாண்டியக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இரண்டாம் பாண்டியப் பேரரசு காலத்தில் முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக் காலம்(கி.பி1253-1268) பல வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதற்கு இவனின் துணையரசனாக இருந்த வீரபாண்டியனின் சாதனைகளும் முக்கிய காரணமாகும். இவர்கள் இருவரும் சேர்ந்து சோழமண்டலத்தில் போசாளர் வசமிருந்த நகரங்களைக் கைப்பற்றியதுடன் தொடர்ந்து மேற்கொண்ட படையெடுப்பால் மூன்றாம் இராசேந்திர சோழனின் ஆட்சியும் நிலைகுலைந்து சோழ மண்டலம் முழுவதும் பாண்டியர் வசமானது. நெல்லூர் பட்டினத்தில் தெலுங்குச் சோழரை வெற்றி கொண்டதன் மூலம்

www.tamilarangam.net



ஆந்திராவின் தென்பகுதியும் பாண்டியர் வசமானது. அத்துடன் சேரநாட்டிலும், இலங்கையிலும் பாண்டியரின் மேலதிக்கம் ஏற்படலாயிற்று.

கலிங்கமாகன் காலத்தில் பாண்டியமன்னர்கள் நான்கு தடவைகள் இலங்கைமீது படையெடுத்து சிங்கள மன்னர்களிடம் திறைபெற்றுள்ளனர். இவைபற்றி ஆறு பாண்டிய மன்னர்கள் தமது மெய்கீர்த்தி சாசனத்தில் குறிப்பிட்டுள்ளனர்(தங்கேஸ்வரி 1995:161). இவற்றுள் 1256ஆம் ஆண்டுக்குரிய இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியனது குளத்தூர் தாலுக்கா குடுமியாமலை மேலைக்கோயில் மலையாமங்கை அம்மன் கோயிலின் தென்புறச் சுவரிலுள்ள "திருமகள் வளர்முலை திருமார்பு தளைபட பொருமகள்" எனத் தொடங்கும் சாசனம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது(Puthukoddai Inscriptions:236, No366). அதில் இலங்கையில் இரு அரசுகள் இருந்தது பற்றிக் கூறப்பட்டுள்ளது. அச்செய்தியை மட்டும் இங்கு பார்க்கலாம்.

வரி7) "பல அரெசியல் வழக்கம் நெறிபட நாட்டு(ங்) குறிப்பினுர..ட்டிசைந் திருபாதஞ்செ...திரு..8)ந்த மந்திரி சரணமெதிகழந்திகழந்தினிதுநொக்கி முரண் மிகுசிறப்பில் இம்ழமன்னர் இலகுவரிலொருவனை விழ்மப்பொருது விண்மிசை யெற்றி உரிமெச்சுற்றமும் உயகுலம் பு(க்)குத்தருமையாண்டுமெ(மயு)ம் பல9)ப்பெ புரவியும் க(ண்)மணித்தெரும் சீனவடமரும்நாகத்தொ(டு)ம்நவ மணிக்குவெயும் ஆடகத்திரியும் அரி ஆசனுமும் முடியுங்கட்கமும் முழும ணியாரமும் கொடியுங்குடையும் குளிர் வெண்கவரியும் முரசுஞ்சங்10)கமும் தன(மு)ம் முதலி அரெசு கெழுகாயம்டெயவாரி காணு மன்னவர் கண்டு கண்டெங்க கொணுமலையனுந்திரிகூடகிரியினும் உருகெழு கொடிமிசை இருகயலெ ழுதி எனை வெந்தனை ஆனை திறைகொண்டு 11)ப(ண்)டெவல்செயயாதிகல் செய்திருந்த சாவன் மைந்தன் நலமிருகதி றெஞ்ச வீரக்கழல்லிரலரைச் (சூ)ட்டித்திருக்கொளம் அலைவாய்ப்படன் கழித்து வழங்கி அருளி முழுங்கு களிறெறிபார் முபதறிய ஊர்வ12) (ல)ஞ்(ய்)வித்து தந்தெ மரபென் நினை ப்பிட்டரெசிட மகிந்து ஆனுர் புரிச்சு விரெயச்செல்கென (வி) டெகுடுத்தரு ளியாகமடந்தை அன்புடன் சாந்தி வாகை சூடம..."க்

www.tamilarangam.net



இக்கல்வெட்டிலிருந்து இலங்கையில் இருமன்னர்கள் இருந்தமையும் அவர்களுள் ஒருவன் (சிங்கள மன்னன்) பாண்டிய மன்னனிடம் உதவி கேட்டதன் பேரில் வீரபாண்டியன் ஈழத்தின் மீது படையெடுத்து சாவகனைக் கொன்று அவனது முடிமுதலான அணிகலன்கள், சிங்காசனம், வெண்கொற்றக்குடை, சாமரம் முதலிய அரச சின்னங்களையும் கவர்ந்தான் என்பதும், பின்னர் முன்பு தனக்குப் பகைத் தொழில் புரிந்து பின்பு பணிந்து விட்ட சாவகனுடைய மைந்தனுக்கு ஆட்சியுரிமை வழங்கி வீரக்கழல் அணிவித்து அவனை ஆனைமேல் ஏற்றி அவனது நகரத்திற்கு செல்லவிட்டான் என்பதும். இலங்கையில் உள்ள இன்னொரு மன்னனிடம் (சிங்கள மன்னன்) இருந்து யானையைத் திறையாகப் பெற்றான் என்ற செய்தியும் தெரியவருகிறது. அத்துடன் வெற்றியின் நினைவாக பாண்டியர் தமது குலமரபுச் சின்னமான இரட்டைக் கயல் வடிவத்தைத் திரிகூடகிரி என்னும் கோணமலையில் பறக்கின்ற கொடிகளிலே பொறித்துவிட்டு தம் நாட்டுக்குத் திரும்பிச் சென்ற செய்தியும் தெரியவருகிறது.

இச்சாசனத்தில் பாண்டியரால் கொல்லப்பட்ட மன்னன் சாவன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சமகாலச் சிங்கள இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள சாவகன் என்னும் சந்திரபானு மன்னனாவான். இந்த வெற்றியின் பின்னர் பாண்டிய மன்னன் தமிழ் நாட்டில் பின்பற்றியது போல் சாவகனின் அரசைத் தமது நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வரவில்லை. மாறக சிங்கள மன்னர்களிடம் திறைபெற்று தமது மேலாண்மையை ஏற்கச் செய்தது போல் சாவக மன்னனின் மகனையும் ஏற்கச் செய்துள்ளனர். இதனால் சாவகனுக்குப் பின்னர் அவனது மைந்தனின் ஆட்சி இருந்துள்ளமை தெரிகிறது. இவற்றிலிருந்து யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசு ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்களால் தோற்றுவிக்கப்பட முன்னரே இலங்கையில் இரு அரசுகள் இருந்தமை தெரிகிறது.

சாவகனை வெற்றி கொண்டதைத் தொடர்ந்து 1284இல் மீண்டும் பாண்டியர் இலங்கை மீது படையெடுத்த செய்தி சூளவம்சத்திலும், பாண்டியக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. இப்படையெடுப்புப் பற்றி சூளவம்சம்(90:43-7) பின்வருமாறு வருணிக்கிறது.

www.tamilarangam.net



"முன்பு பஞ்சமொன்று நிலவிய காலத்திலே பாண்டிய இராச்சியத்தில் ஆட்சிபுரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட தமிழ்ச் சேனாதிபதியின் தலைமையில் படையொன்றை அனுப்பி வைத்தார்கள். அவன் ஆரியனல்லனாயினும் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கினான். இராச்சியத்தின் எல்லாப்பக்கங்களையும் அழித்துவிட்டு அரணகள் பொருந்திய சுபபட்டணத்தில் அவன் நுழைந்தான். அங்கிருந்த புனித தந்ததாதுவையும் விலைமதிக்க முடியாத செல்வங்களையும் கவர்ந்து கொண்டு திரும்பிச் சென்றான். அங்கு பாண்டிய குலமெனும் தாமரைச் செடியின் மொட்டினை மலர்விக்கின்ற உதயசூரியன் என விளங்கிய குலசேகர மன்னனிடம் சம்புத்தரின் தந்ததாதுவை ஒப்படைத்தான்."

இப்படையெடுப்பு சிங்கள இராசதா[illegible] மேலும் பலவீனமடையச் செய்ததுடன், யாழ்ப்பா[illegible]தல் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசு ஒன்றைத் தோற்றுவிககவும் காரணமாக அமைந்தது. சிங்கள இலக்கியங்கள் யாழ்ப்பாண அரசை ஆரியச்சக்கரவர்த்திகள் என்று வருணிப்பதிலிருந்து படையெடுத்து வந்த இவரில் ஒருவன் யாழ்ப்பாண அரசின் முதல் மன்னனாகப் பதவி ஏற்றுக் கொண்டான் என்பது தெரிகிறது. பதினான்காம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் சோமசர்மனால் எழுதப்பட்ட செகராசசேகர மாலை என்னும் சோதிட நூல் யாழ்ப்பாண அரசின் முன்னோர் பாண்டியர்களின் அமைச்சர்களாக, சேனாதிபதிகளாக விளங்கினார்கள் எனவும், அவர்கள் காத்தியான சூத்திரத்துக் காஸ்யபகோத்திரத்து அந்தணர் என்றும் இராமேஸ்வரத்திலுள்ள "பஞ்சகிராமவேதியர்" ஐநூற்றுப் பன்னிவரின் வழித்தோன்றல்கள் என்றும் வர்ணிக்கின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகள் தலைமையில் பாண்டியர் இலங்கை மீது படையெடுத்த காலத்தில் பாண்டிநாட்டில் ஆட்சி புரிந்த குலசேகரமன்னன் காலத்தில்(கி,பி 1268-1310) ஆரியச்சக்கரவர்த்திகள் சேனாதிபதிகளாகவும், அமைச்சர்களாகவும் சேவை புரிந்ததைச் சமகாலச் சாசனங்கள் கூறுகின்றன. ஆரியச்சக்கரவர்த்தி என்ற பெயருக்குரிய மதிதுங்கன் என்பவன் "தனித்து நின்று வென்ற பெருமான்" என்ற விருதைப் பெற்றுள்ளமை அவன் படைத்தளபதியாக இருந்ததை உறுதிப்படுத்துகிறது. அழகன் என்ற ஆரியச்சக்

www.tamilarangam.net



கரவர்த்தி தெய்வச்சிலையான் என்ற விருதைக் கொண்டிருந்ததால் அவனும் போராற்றல் மிக்க தலைவன் என்பதை வெளிப்படுத்துகிறது. தேவர்ஆரியச்சக்கரவர்த்தி எனும் இன்னொருவன் பாண்டியரின் அமைச்சனாக விளங்கினான். இவனது கட்டளையின் பேரால் எழுதப்பட்ட சாசனமொன்றில் "சேது திருமுகம்" என்ற மொழித்தொடர் காணப்படுகிறது. சேது என்னும் பெயர் பாண்டிநாட்டின் தலங்களையும் இடங்களையும் குறித்து நின்றமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்(பத்மநாதன் 1992:32-3).

இச்சான்றுகளிலிருந்து 1284இல் இலங்கை மீது படையெடுத்த ஆரியச்சக்கர வர்த்திகளே பின்னர் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசையும் தோற்றுவித்தவர்கள் என்பது புலனாகிறது. இம்மன்னர்கள் பற்றி இவ்வரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் பல செய்திகள் காணப்படுகின்றன. ஆயினும் மன்னர்களின் ஆட்சிக்காலமோ, வரலாற்றுச் சாதனைகளோ காலக்கிரம வரிசையில் கூறப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூல் 1450இல் செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் வரை இவ்வரசை ஆண்ட விசய கூழங்கைச் சக்கரவர்த்தி, குலசேகரசிங்கையாரியன், விக்கிரமசிங்கையாரியன், வரோதயசிங்கையாரியன், மார்த்தாண்டசிங்கையாரியன், குணபூஷண சிங்கையாரியன், செயவீரசிங்கையாரியன், குணவீரசிங்கை யாரியன், கனகசூரியசிங்கையாரியன் ஆகிய ஒன்பது மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது. இதில் கூழங்கைச்சக்கரவர்த்தி என்ற மன்னன் கைலாயமாலையில் வேறு சில இடங்களில் "கூழங்கை ஆரியன்" எனவும், மட்டக்களப்பு மான்மியத்தில் காலிங்கஆரியன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளான். இந்த வேறுபாட்டால் வரலாற்றாசிரியர்களில் ஒருசாரார் கூழங்கைச் சக்கரவர்த்தி ஆரியச் சக்கரவர்த்திகளைச் சாராத மன்னன் எனவும், இன்னொரு சாரார் இவனே யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்த முதல் ஆரியச்சக்கர வர்த்தி எனவும் கூறுகின்றனர். வரலாற்றறிஞர்கள் பலரும் பொலநறுவையில் நீண்டகாலம் ஆட்சி புரிந்த கலிங்கமாகன் வரலாற்றிலக்கியங்களில் "காலிங்க விஜயபாகு "விஜயகாலிங்க சக்கரவர்த்தி" "காலிங்க ஆரியன்" எனக் குறிப்பிடப்படுவதால் யாழ்ப்பாணத்தில் முதலில் அரசமைத்தவன் கலிங்கமாகன் எனக் கருதுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலிங்க ஆரியச்சக்கரவர்த்தி என்ற பெயரே காலப்போக்கில் "கூழங்கை ஆரியச்சக்க ரவர்த்தி" என மாறியிருக்கலாம் என்ற கருத்துடைய இந்திரபாலா கலிங்கமாகனால்தான் யாழ்ப்பாண அரசு தோற்றுவிக்கப்பட்டதென்பதற்கு கலிங்க நாட்டுக்கும் யாழ்ப்பாண அரசிற்கும் இடையே அரசதலை நகரின் பெயர், மற்றும் நாணயங்களிடையே காணப்படும் ஒற்றுமைகளை முக்கிய சான்றாதாரங்களில் ஒன்றாகச் சுட்டிக் காட்டியுள்ளார். ஆயினும் யாழ்ப்பாண அரசிற்கு முன்னோடியாக கலிங்கமாகன், சாவகன் என்போரால் ஆட்சி செய்யப்பட்ட அரசொன்று வட இலங்கையில் இருந்திருக்கலாம் என்பதை அவர் சூசகமாகத் தெரிவித்துள்ளார் (இந்திரபாலா *1972*).

வட இலங்கையில் குறிப்பாக வன்னிப்பிராந்தியத்தில் நாம் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வின் அடிப்படையில் கலிங்கமாகன் ஆட்சியோடு யாழ்ப்பாண அ, சின் தோற்றத்தை தொடர்பு படுத்துவதும், சிங்கநகரின் தோற்ற காலத்தை கலிங்கமாகன் ஆட்சியில் இருந்து தொடங்குவதும் மறுஆய்வு செய்யப்பட வேண்டும் என்பதற்கு சில சான்றாதாரங்களைக் சுட்டிக்காட்டியிருந்தோம்(1993:111-56). இக்கருத்தோடு உடன்படுவதாகவே பிற்காலத்தில் எழுந்த சில நூல்களும் அமைந்தன(சிற்றம்பலம் 1992. Vasantha Nadarajan:1998. குணராசா *1993*).

இலங்கையில் கலிங்கமாகன் ஆட்சி

அண்மையில் கிழக்கிலங்கை கலாசார உத்தியோகத்தர் தங்கேஸ்வரியால் மாகோன் வரலாறு என்ற விரிவான நூல் எழுதி வெளியிடப்பட்டுள்ளது(*1995*). இந்நூலாசிரியை கலிங்கமாகன் தொடர்பாக பல்வேறு வரலாற்று மூலங்களைத் தேடிக் கண்டுபிடித்து விரிவாக எழுதியுள்ளமை பலருக்கும் பயனுள்ள பங்களிப்பாகும். அதில் கலிங்கமாகன் காலத்தில் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே இருந்த உறவுகளுக்குரிய கல்வெட்டுச் சான்றுகளை காலநிரற்படுத்தி ஆராய்ந்து இருப்பதோடு கூறவந்த செய்தியை ஒப்புவிக்க கல்வெட்டு வாசகத்தை அப்படியே நூலிலும் பதிவு செய்துள்ளமை வரலாற்று வாசகர்களுக்குப் பயனுள்ளதாக அமைகிறது. ஆசிரியையின் குளக்கோட்டன் தரிசனம் என்ற நூலையடுத்து இந்நூல் வெளிவந்திருப்பது கிழக்கிலங்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யோடு தமிழ் மக்களுக்குள்ள பாரம்பரிய வரலாற்று உறவை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது.

இந்நூலின் பெரும்பகுதி கலிங்கமாகன் தொடர்பாக நாமும் பிற வரலாற்றாசிரியர்களும் கூறிய கருத்துக்களை மறுதலிப்பதாக அமைந்துள்ளது. இருப்பினும் கலிங்கமாகன் 1256இல் பொலநறுவையை விட்டு விலகி யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தான் எனவும், இவனுக்கு முன்னர் வடஇலங்கையில் கலிங்கமன்னன், அரசு இருக்கவில்லை எனவும், தமிழரசின் தோற்றம் கலிங்கவம்சத் தொடர்பால் ஏற்பட்டதெனவும் அவர் முன்வைத்துள்ள கருத்திற்கு காட்டப்படும் சான்றாதாரங்களும், அதை நிறுவுவதில் ஏற்பட்டுள்ள முரண்பட்ட தன்மைகளும் வலுவுள்ளதாக அமையவில்லை. மாறாக அதையிட்டு எழும் சந்தேகங்கள் எமது கருத்திற்கு மேலும் வலுவூட்டுவதாக உள்ளது.

இடைக்கால இலங்கை வரலாற்றில் பல பெயர் கொண்டு அழைக்கப்பட்ட கலிங்கமாகன் என்றொரு மன்னன் நீண்ட காலம் ஆட்சியில் இருந்தான் என்று வரலாற்றிலக்கியங்களில் அறியப்பட்ட செய்தியைத் தவிர அவனைப்பற்றி அறியப் படாத செய்திகளே அதிகம். அவன் யார்? அவனது பூர்வீகம் எங்கிருந்தது? அவனது பெற்றோர் யார்?. எந்த வம்சத்தைச் சேர்ந்தவன்? அவனுக்கும் இலங்கை அரசவம்சங்களுக்கும் இடையிலான தொடர்பு என்ன? என்பன முக்கிய கேள்வி களாக உள்ளன. ஆனால் இவற்றிற்கு விடை கூறுவதில் அனைத்து வரலாற்று இலக்கியங்களுமே ஒற்றுமையாக மௌனம் சாதிக்கின்றன. சமகாலத்தில் தென்னிந்தியாவில் ஆட்சியில் இருந்த குறுநிலமன்னர்கள், சிற்றரசர்கள், பேரரசர்கள் என்போரின் வரலாற்றையே முதன்மைப் படுத்தும் இலக்கியங்களிலும், பிற வரலாற்று மூலங்களிலும் கூட இம்மன்னன் பற்றி நேரடியாகவோ, மறைமுகமாகவோ எதுவித குறிப்பும் இதுவரை காணப்படவில்லை. இந் நிலையில் அயல் நாட்டு பேரரசன் போல் இற்றைக்கு 700 ஆண்டுகளுக்கு முன் தென்னிந்தியாவிலிருந்து 24000 தமிழ், கேரளப்படை வீரர்களின் உதவியுடன் படையெடுத்து வந்து பொலநறுவை அரசைக் கைப்பற்றி 21ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் எனச் சூளவம்சமும்(80:56-73), 44ஆண்டுகள் எனப் பூஜாவலிய(1956:105.116) என்ற சிங்கள நூலும் கூறுகின்றன.

www.tamilarangam.net



இவற்றை அடிப்படையாகக் கொண்டு கலிங்கமாகன் பொலநறுவையில் 44ஆண் டுகள் ஆட்சிபுரிந்தான் என லியனகமகேயும் (1960:146), 41ஆண்டுகள் எனத் தங்கேஸ் வரியும் கூறியுள்ளனர்(1995). இலங்கையின் பெரும் பகுதியை நீண்டகாலம் ஆட்சிபுரிந்த சக்கரவர்த்தி என வருணிக்கப்படும் கலிங்கமாகன் எத்தனையாண்டுகள் ஆட்சிபுரிந்தான் என்பதையே அறுதியிட்டுக் கூறச் சான் றாதாரங்கள் அற்ற நிலையில் அவனே யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த முதல் மன்னன் என்பதைமட்டும் எப்படி அறுதியாகக் கூறமுடிகிறது. 1256வரை சிங்கள மன்னர்களால் வெற்றி கொள்ளப்பட முடியாதிருந்த கலிங்க மாகன் இக்காலத்தில் பொலநறுவையை விட்டு விலக அவனது வயோதிபம், உடல்நிலையில் ஏற்பட்ட தளர்ச்சி, வடக்கில் கலிங்கமாகனுக்குச் சார்பாக இருந்த படை வீரர்களில் சிலர் சாவகனுடன் இணைந்து கொண்டமை என்பன காரணமாக இருக்கலாம் எனத் தங்கேஸவரி கூறுகிறார்(1995:126). கலிங்க மாகன் பொலநறுவையில் நீண்டகாலம் ஆட்சிபுரிந்திருந்த தால் அவனுக்கு மக்கள் ஆதரவு இருந்தமையும் முக்கிய காரணங்களில் ஒன்றாக இருந்திருக்கும். அப்படியிருந்தும் மேற்கூறப்பட்ட பாதகமான காரணங்களால் பொலநறு வையை விட்டு விலகினான் என்பதை ஏற்றுக் கொண்டால் எப்படி யாழ்ப்பாணத்தில் மட்டும் அரசமைக்க அவனுக்கு அவை சாதகமான காரணங்களாக மாறின என்பது புரிய வில்லை. 1256இல் கலிங்கமாகன் பொலநறுவையை விட்டு விலகிய போதும் 1262வரை தம்பதேனியாவை ஆண்டு வந்த பராக்கிரமபாகுவினால் பொலநறுவையைக் கைப்பற்ற முடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகிறது. அவற்றுள் மீண்டும் கலிங்கமாகன் பொலநறுவையைக் கைப்பற்றலாம் என்ற அச்சத்தையும் ஆசிரியர் ஒரு காரண மாகக் காட்டுகிறார்(1995:127). இது முன்னர் கலிங்கமாகன் பதவிவிலகியதற்கு அவர் காட்டிய காரணங்களுக்கு முரணாக உள்ளது.

இந்த இடத்தில் ஆசிரியர் பொலநறுவையை விட்டு விலகிய கலிங்கமாகன் யாழ்ப்பாணத்தில் அரசமைத்த காலமாக 1256ஐ அல்லது 1262ஐக் கருதுகிறாரா என்பதை அவரது நீண்ட நூலில் குறிப்பிடத் தவறியுள்ளார். ஆனால் 1256ன் பின்னரே அவன்பொலநறுவையில் இருந்து பதவி விலகினான் என்பதில் உறுதியாக உள்ளார். இதிலிருந்து 41

www.tamilarangam.net



ஆண்டுகள் பொலநறுவையில் ஆட்சி புரிந்ததன் பின்னரே யாழ்ப்பாணத்தில் ஆட்சியமைத்தான் என்பது புரிகிறது. அதுவும் பொலநறுவையை விட்டு விலகியதன் பின்னர் உடனடியாக நடந்திருக்கும் எனக் கூறமுடியாது. அதே வேளை 1284இல் பாண்டிய படைத்தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகள் இலங்கையை வெற்றி கொண்டதைத் தொடர்ந்தே யாழ்ப்பாணத்தில் அவர்களின் ஆட்சி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. அதுவும் உடனடியாக ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இவற்றை வைத்துப் பார்க்கும் போது கலிங்கமாகன் பொலநறுவையிலும், யாழ்ப்பாணத்திலும் 69ஆண்டுகளுக்கு மேல் மன்னனாக இருந்துள்ளான் என்பதை இவர்கள் கூறும் வரலாற்றுச் செய்திகளில் இருந்து கணிப்பிட முடிகிறது. இங்கே நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். கலிங்கமாகன் வாரிசுருமை அடிப்படையில் சிறுவயதிலேயே ஆட்சிக்கு வந்த பொம்மை அரசன்அல்ல. இவன் இன்னொரு நாட்டிலிருந்து படையெடுத்து வந்து இலங்கையில் இருந்த தமிழ், கேரளப் படைவீரர்களை தனக்குச் சாதகமாகத் திரட்டிய பின்னரே பொலநறுவை அரசைக் கைப்பற்றி ஆட்சிக்கு வந்தவன் எனக் கூறப்படுகிறது. இவற்றை அரசியல் அனுபவமற்ற சிறுவயதிலும் செய்திருக்க முடியாது என்பது சமகால தென்னாசிய வரலாற்றைக் கற்றவர்களுக்கு நன்கு புரியும். அப்படியிருக்கும் போது கலிங்கமாகன் 69ஆண்டுகளுக்கு மன்னனாக இருந்தான் எனக் கூறினால் அவனின் ஆயுள்காலம் ஏனைய மன்னர்களுக்கும், மக்களுக்கும் இல்லாத அளவுக்கு நீண்ட காலம் என்று கூறலாமா? இதை வரலாற்றறிஞர்கள் தான் யதார்த்த அடிப்படையில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

பொலநறுவையில் செறிவாகவும், ஏனைய இடங்களில் பரவலாகவும் வாழ்ந்த கலிங்க மக்களைச் சிங்கள, சோழத்தலைவர்கள் துன்புறுத்தியதற்குப் பழிவாங்கும் முகமாகவே கலிங்கமாகன் இலங்கை மீது படையெடுத்திருக்க வேண்டும் எனக் கூறும் தங்கேஸ்வரி (1995:3) அவன் 1256வரை பொலநறுவையையே தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான் எனக் கூறுவதன் மூலம் கலிங்கமாகன் அரசு யாழப்பாணத்திற்கு முன்னோடியாக வட இலங்கையில் இருக்கவில்லை என்பது இவரது வாதமாகும். சிங்கள மன்னர்களுக்கும் கலிங்க வம்சத்திற்கும் இடையிலான தொடர்பு மிகத் தொன்மையானது. சிங்கள மக்களின்

www.tamilarangam.net



மூதாதையினர் என நம்பப்படும் விஜயனும் அவனது 700 தோழர்களும் கலிங்கத்திலிருந்து வந்தவர்கள் என்ற கூற்றுப் பாளி இலக்கியங்களிடையே காணப்படுகிறது. பிற்காலத்தில் கலிங்க வம்சத்துடன் சிங்கள மன்னர்கள் ஏற்படுத்திக் கொண்ட திருமணத் தொடர்பால் கலிங்கமாகனுக்கு முன்னரே பொலநறுவையில் கலிங்க வம்சத்தவரின் ஆட்சி ஏற்பட்டது. இக்காலத்தில் ஆட்சி புரிந்த மன்னர்களுள் தலைசிறந்த ஒருவனாகக் கூறப்பட்ட நிசங்கமல்லன் தன்னை கலிங்க வம்சத்தவன் எனக் கூறுவதை விட விஜயன் வழிவந்த பௌத்த சிங்கள மன்னனாகவே கூறிக்கொள்வதில் பெருமையடைந்தான் என்பதை அவன் வெளியிட்ட கல் வெட்டுக்களில் தெளிவாகக் காணமுடிகிறது. இக்கல வெட்டுக்களில் பெரும்பாலானவை தமிழர்களிடம் இருந்தும். சோழர்களிடம் இருந்தும் நாட்டைக் காக்கவே ண்டும் என்ற அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளன. இக்காலத்தில் பழைய சிங்கள அரச வம்சங்களுக்கும். கலிங்கவம்சத்துடனான திருமணக் கலப்பால் தோன்றிய புதிய வம்சங்களுக்கும், தமிழர்களுக்கும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதில் போட்டியிருந்ததைப் பாளி இலக்கியங்களில் இருந்து அறிய முடிகிறது. இதில் சோழரெனக் குறிப்பிடப்படுவோர் சம காலத்தில் தமிழகத்திலிருந்து வந்தவர்களைக் குறிக்காது இங்கு வாழ்ந் தோரைக் குறிக்கின்றதென்பதை பொலநறுவையிலும். ஏனைய சில இடங்களிலும் கிடைதத கல்வெட்டுக்களில் இருந்து அறிய முடிகிறது. இத்தகைய அதிகாரப் போட்டியில் கலிங்கவம்சத்தவரும் பாதிக்கப்பட்டிருக்கலாம். அதற்காகக் கலிங்க வம்சத்தைப் பாதுகாக்க இன்னொரு நாட்டிலிருந்து படையெடுப்பு நிகழும் அளவிற்கு கலிங்க வம்சத்தவர் துன்புறு த்தப்பட்டதற்கு வரலாற்று மூலங்களில் சான்றுகள் காணப்படவில்லை.

அதையொரு காரணமாகக் கொண்டாலும் கலிங்கரைத் துன்பப்படுத்தக் காரணமாக இருந்த சோழர் உதவியோடு எப்படி கலிங்கமாகன் ஆட்சி நடத்தினான். இதுவரை பொல நறுவையை ஆண்ட கலிங்க மன்னர்கள் பௌத்த சிங்கள மக்களுக்கு சார்பாக இருந்த போது இவன் மட்டும் ஏன் தமிழர்களுக்குச் சார்பாக ஆட்சி நடத்தினான். கலிங்கரைக் காப்பதே படையெடுப்பின் முக்கிய நோக்கமெனில் அந்தக் கலிங்க மக்களுக்காக இவன் ஆற்றிய பணிகள் என்ன?.

www.tamilarangam.net



ஒன்பது ஆண்டுகள் மட்டும் பொலநறுவையில் ஆட்சி நடத்திய கலிங்கவம்சத்து நிசங்கமல்லன் தனது பெயர் பொறித்த பலவகை நாணயங்களை வெளியிட்டதோடு. இலங்கை மன்னர்களுள் எண்ணிக்கையில் அதிகமான கல்வெட்டுக்களை வெளியிட்டு அதில் தனது சாதனை களைக் குறிப்பிட்டுள்ளான். ஆனால் பொலநறுவையில் 41 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த கலிங்கமாகன் வெளியிட்ட கல் வெட்டுக்கள் எவை? நாணயங்கள் எவை?. யாழ்ப்பாணத் தில் கலிங்க மக்கள் வாழ்ந்ததற்கான எதுவித சான்றுகளும் இல்லை. ஆனால் அங்கு சிறிது காலம் ஆட்சி நடத்திய கலிங்கமாகன் தன்தாய்நாட்டை நினைவு படுத்த சிங்கபுர என்ற பெயரையிட்டான் எனவும், அதுவே காலப்போக்கில் சிங்கை, சிங்கைநகர் என்ற பெயர் பெறக் காரணம் என வரலாற்றறிஞர்கள் பலரும் கூறுகின்றனர். அப்படியானால் கலிங்க மக்கள் செறிந்து வாழ்ந்த பொலநறுவையில் 41ஆண்டுகள் ஆட்சி நடத்திய இவன் தன் தாய்நாட்டை நினைவுபடுத்த எந்தப் பெயரைப் பயன்படுத்தினான்.

பொலநறுவையைக் கைப்பற்றி நீண்டகாலம் ஆட்சி நடத்தியவன் என்ற வகையில் கலிங்கமாகன் சக்கரவர்த்தி யாக வருணிக்கப்பட்டுள்ளான். ஆனால் இவன் பொலநறு வையைக் கைப்பற்ற முன்னரே அரசவம்சங்களிடையே அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டிகளும், தமிழர்களின் அச்சுறுத்தல்களும் ஏற்பட்டிருந்ததைப் பாளி இலக்கியங்கள் மட்டுமன்றி சமகாலக் கலவெட்டுகளும் வெளிப்படுத்து கின்றன. இதனால் மிகக் குறுகிய காலத்தில் பல மன்னர்கள் மாறிமாறி ஆட்சி செய்யும் நிலைதோன்றிவிட்டது. இதற்கு காலநிலையின் பாதகமான தன்மை, நீர்ப்பாசனம் கவனிப் பாரற்று பொருளாதார உற்பத்தி வீழ்ச்சியடைந்தமை, கொடிய மலேரியா நோய் என்பனவும் காரணங்களாகக் கூறப்படு கின்றன (Liyanagamage 1967). இவற்றினால் படிப்படியாக வீழ்ச்சியடைந்து சென்ற பொலநறுவை அரசை முற்றாக வீழ்ச்சியடையச் செய்த சம்பவமாகவே கலிங்கமாகன் படை யெடுப்பு அமைந்தது. இந்நிலையில் சிங்கள மன்னர்களால் வெற்றி கொள்ளமுடியாத மன்னனாகக் கலிங்கமாகன் பொலநறுவையில் 41ஆண்டுகள் ஆட்சி செய்தான் எனக் கூறும் போது கலிங்கமாகன் ஆட்சிக்கு முந்திய பொல நறுவை அரசின் பலவீனத்தையும் சமகாலத்தில் நடந்த சம்பவங்களையும் ஆய்வில் கவனத்தில் கொள்வது அவசியமாகிறது.

www.tamilarangam.net



கலிங்கமாகன் ஆட்சிக்காலத்தில் பாண்டியர் நான்கு தடவை இலங்கை மீது படையெடுத்தது பற்றி ஆறு மன்னர்களின் மெய்க்கீர்த்திச் சாசனங்கள் கூறுகின்றன. இதில் நான்காவது படையெடுப்பு சிங்கள மன்னனுக்குச் சார்பாக சாவகமன்னனைக் கொன்று அவன் மைந்தனை ஆட்சியில் அமர்த்தியது பற்றிக் கூறுகிறது. ஆனால் இச்சாசனங்கள் அனைத்துமே சிங்கள மன்னர்களிடம் திறைபெற்றதாகக் கூறுவதிலிருந்து பாண்டியரின் மேலாண்மையை ஏற்ற நிலையில் இவர்கள் ஆட்சிபுரிந்தமை தெரிகிறது. இலங்கை வரலாற்றிலக்கியங்களில் சோழரைச் சிங்கள மன்னர்களின் எதிரிகளாகவும், பாண்டியர்கள் சிங்கள அரசுகளை வெற்றி கொண்ட போதும் அவர்களை நண்பர்களாகவும் கொள்ளும் மரபு 1500ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. இதற்கு சிங்கள மக்களின் மூதாதையினர் என நம்பப்படும் விஜயனுக்கும், அவனது 700தோழர்களுக்கும் உரிய மணப்பெண்கள் பாண்டிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்ற ஐதீகம் அடிப்படைக் காரணமாகும். சாவக மன்னன் தம்பதேனிய அரசு மீது இரு தடவைகள் படையெடுத்து சிங்கள மன்னர்களால் தோற்கடிக்கப்பட்ட நிலையிலும் அவன் அரசை வெற்றிகொள்ளப் பாண்டியரின் உதவியை நாடிய சிங்கள மன்னர்கள் ஏன் தம்மால் வெற்றி கொள்ளமுடியாத நிலையில் பொலநறுவையில் ஆட்சி செய்து கொண்டிருந்த கலிங்கமாகனை அகற்றப் பாண்டியரின் உதவியை நாடவில்லை? சிங்கள மன்னர்கள் பாண்டியரின் உதவியை நாடியதற்கு சாவகனால் பௌத்த மதத்தின் புனிதத் தன்மைக்கு பாதிப்பு எனக் கருதியதே காரணம் எனத் தங்கேஸ்வரி கூறுகிறார். இது கலிங்கமாகனால் பௌத்த மதத்திற்கு ஏற்பட்ட பாதிப்பை ஆசிரியர் கவனத்தில் கொள்ளாது கூறிய கருத்தாகத் தெரிகிறது. கலிங்கமாகன் மூன்றாண்டுகளாக பொலநறுவையில் இருந்து ஆட்சிசெய்த பாண்டிய வம்சத்தவனை வெற்றி கொண்டே ஆட்சிக்கு வந்தவன். அப்படிப்பட்ட மன்னனை சிங்கள மன்னனர்களிடம் திறைபெற்ற பாண்டியர் ஏன் வெற்றி கொள்ளவில்லை? அவன் பாண்டியராலும் வெற்றி கொள்ள முடியாத மன்னனாக இருந்தானா? அப்படியானால் இலங்கை மன்னர்களிடம் திறைபெற்றதாகக் கூறும் பாண்டியரின் மெய்க்கீர்த்திச் சாசனங்களில் ஏன் இப்பெரு மன்னன் பற்றிக் கூறவில்லை?

www.tamilarangam.net



கலிங்கமாகன் அரசு பொலநறுவையைத் தவிர வேறு எங்கிருந்தது என்பது பற்றிப் பாளி இலக்கியங்கள் கூறாவிட்டாலும் அவனது கோட்டைகள், அவன் சார்பான படைகள் நிலைகொண்டிருந்த இடங்கள் பற்றிய தகவல்களைப் பெரும்பாலும் ஒரே மாதிரியாகத் தருகின்றன. அவ்விடங்களில் பெரும்பாலானவை இன்றைய திருகோணமலை, வன்னி மாவட்டங்களுக்குள் உள்ளடங்கி இருந்ததை இலகுவாக அடையாளம் காணமுடிகிறது. கலிங்கமாகன் தமிழருக்குச் சார்பாகவும் சிங்களவர்க்கு எதிராகவும் ஆட்சி செய்தான் என்பதே வரலாற்று மூலங்கள் பலவற்றிலிருந்து அறியப்படும் பொதுவான செய்தியாகும். அவன் பொலநறுவையில் இருந்து இராஜரட்டை முழுவதையும், அதற்கப்பால் பரந்த நிலப்பரப்பையும் ஆட்சி செய்தான் எனத் தங்கேஸ்வரி கூறுவது உண்மையானால் பொலநறுவைக்கு வடக்கே தனக்குச் சார்பாக தமிழர்கள் செறிந்து வாழ்ந்த பிராந்தியத்தில் தன் கோட்டைகளையும், படைகளையும் நிறுத்தி வைத்திருந்த கலிங்கமாகன் தனக்கு எதிராகச் செயல்படும் தம்பதேனிய அரசின் படையெடுப்புக்களைத் தடுக்க ஏன் பொல நறுவைக்கு தெற்கே தன் கோட்டைகளையும், படைகளையும் நிறுத்தி வைக்கவில்லை.?.

கலிங்கமாகன் அரசைப்போல் சாவகன் அரசும் வடக்கில் இருக்கவில்லை எனக் கூறும் தங்கேஸ்வரி பாண்டிய சாசனத்தில் கூறப்படும் சாவகனை வெற்றி கொண்ட இடமாக தென்னிலங்கையில் உள்ள யப்பகூவா இருக்கலாம் என்கிறார். அப்படியானால் தமிழர்களின் ஆதரவோடு சாவகன் அரசு யாப்பகூவாவில் இருந்ததெனக் கூறலாமா?. அப்படிக் கொண்டால் ஏன் பாண்டியர் தமது வெற்றியின் நினைவாக தமது குலச்சின்னமான இரட்டை மீன் சின்னத்தை வட இலங்கையில் கோணாமலையில் பொறிப் பித்தார்கள். பாண்டியர் சாவகனுடன் போரிட்ட போதோ அல்லது அவன் பாண்டியரால் கொல்லப்பட்ட போதோ அவன் மைந்தன் பணியமறுத்ததாக குடுமியாமலைச் சாசனம் கூறுகிறது. பின்னர் பாண்டியரிடம் பணிந்ததன் பேரில் தந்தைக்குப்பின் மகன் ஆழ்வதே முறையென எண்ணி அவனை ஆட்சியில் அமர்த்தியதாக மேலும் கூறுகிறது. இதிலிருந்து இரண்டு உண்மைகள் புலனாகிறது. சாவகன் அன்னிய நாட்டிலிருந்து வந்து தனிமனிதனாக ஆட்சி புரியவில்லை மாறாக அவன்

www.tamilarangam.net



காலத்திலேயே அவன் வம்ச ஆட்சி தொடர்வதற்கான வாரிசு உருவாகிவிட்டது. மற்றையது பாண்டியரின் வெற்றியோடு சாவக அரசு உடனடியாக மறையவில்லை. மாறாக தொடர்ந்தும் ஆட்சிபுரிந்தது.

## வடஇலங்கையில் கலிங்கமாகன், சாவகன் அரசு

வரலாற்றிலக்கியங்கள் முரண்பட்ட வகையில் கூறும் கலிங்கமாகனின் நீண்டகால வரலாற்றை பொலநறுவை யோடு மட்டும் தொடர்புபடுத்தி அவன் 1256வரை அதைத் தலைகநராகக் கொண்டு ஆட்சி புரிந்தான் எனவும், அதன் பின்னர் யாழ்ப்பாணம் சென்று நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தான் எனக் கூறப்படுவதும் மறுஆய்வு செய்யப்படவேண்டும். மாறாக சிங்கள இராசதானிகள் தெற்கு நோக்கி நகர்ந்தது போலக் கலிங்கமாகனின் அரச தலைநகரும் காலப்போக்கில் வடக்கிற்கு மாற்றப்பட்டதாகக் கொள்வதே பொருத்தமாகத் தெரிகிறது. 1247 இல் சாவகன் ஒரு அரசின் மன்னனாக இருந்தே தம்பதேனிய அரசின் மீது படையெடுத்தான் என இந்திரபாலா கூறுகின்றார். அவன் ஆட்சி செய்த அரசையே பாண்டியர் வெற்றி கொண்டு அவன் மைந்தனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்த தாகப் பாண்டியரின் குடுமியாமலைச் சாசனம் கூறுகிறது. இவற்றின் அடிப்படையில் கலிங்கமாகன் 1215க்கும் 1247க்கும் இடைப்பட்ட காலத்தில் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்தான் எனக் கூறலாம். சூளவம்சம் கூறுவது போல் இவன் 21ஆண்டுகள் பொலநறுவயில் ஆட்சி செய்தான் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பின் இவன் வடஇலங்கையில் 1236லிருந்து 9ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான் எனக் கூறலாம். அக்காலத்தில் சிங்கள மன்னர்கள் வடஇலங்கை மீது படையெடுப்பதை தடுக்குமுகமாக பொலநறுவையில் இவன் படைககள் நிலைகொண்டிருக்கலாம். பதின்மூன்றுக்கு மேற்பட்ட இடங்களில் கலிங்கமாகன் படைகள் இருந்ததாகக் கூறும் பாளி நூல்கள் அவற்றுள் ஒரிரு இடங்களைத் தவிர மற்றையவை வடஇலங்கையில் இருந்ததாகக் கூறியிருப் பதைக் கவனத்தில் கொள்ளலாம். இதனால் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசு தோன்ற முன் யாழ்ப்பாணத்திற்கு வெளியே ஒரு தமிழரசு இருந்ததெனக் கூறமுடியும். அவ்வரசு எங்கே இருந்தது? எப்போது

www.tamilarangam.net



தோன்றியது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? என்பன உறுதியான தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் முடிவு காணப்பட வேண்டியவையாகும். ஆயினும் அவை தொடர்பாக இதுவரை எமக்குக் கிடைத்த சில சான்றுகளை இங்கே குறிப்பிடலாம்.

வட இலங்கையில் கலிங்கமாகன் அரசு எங்கிருந்த தென்பதற்கு கல்வெட்டு மற்றும் சான்றுகள் இதுவரை கிடைக்கவிட்டாலும் அவனது படைகள், கோட்டைகள் இருந்த இடங்களைப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. சூளவம்சத்தில் அவ்விடங்கள் புலத் திநகர (PulatthiNagara) (பொலநறுவை), கொட்டசார(Kotthasara) (திருகோண மலையில் உள்ள கொட்டியாரம்) ஹந்கதலக (Gangalaka) (கந்தளாய்), காகலய(kakalaya), பதிமாவட்டம்(padi Disrict) (பதவியா), குருந்தி (Kurundi), மானாமத்த(Manamattha), மகாதித்த (Mahatittha), மன்னார(Mannara) (மன்னார்), புலச்சேரி (Pulacceri), கோனாமாவட்டம்(Gona distric). மதுபதபதித்த (Madhupatittha) (இலுப்பைக்கடவை) சூறதித்த (Suratittha) (ஊர்காவற்துறை) வலிகாம (Valikama) (வலிகாமம்) வேறும் சில இடங்கள் எனக் கூறுகின்றது (C.V.83:15-9). பூஜவலிய என்ற நூலில் மேற்குறிப்பிட்ட சில இடங்களோடு தமிழ்ப்பட்டின (தமிழ்ப்பட்டினம்) என்ற இடமும் குறிப்பிடப்பட்டுள்ளது(1959:106).

மேற்கூறப்பட்டவற்றுள் முதலாவது இடத்தை தவிர ஏனையவை திருகோணமலை மாவட்டத்திலும், வட இலங்கையிலும் உள்ள இடங்கள் என்பது தெரிகிறது. இவற்றுள் பல இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. வேறு ஒருசில இடங்கள் அடையாளம் காணப்படவேண்டியுள்ளன. அடையாளம் காணப்படாதவற்றுள் காகலய என்ற இடமும் ஒன்றாகும். பாளி மொழியில் காகலா என்பது காகங்கள் தங்கும் இடம் என்ற கருத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்விடம் பூநகரியின் மேற்கெல்லையில் உள்ள காக்கை தீவாக அல்லது முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்காலத்தில் புழக்கத்தில் உள்ள காக்கையன் குளம் என்ற இடத்தைக் குறித்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இதேபோல கோனாமாவட்டம் (பாளியில்ரத்தஎன்பது தமிழில் மாவட்டத்தைக் குறிக்கிறது) என்ற இடமும் முல்லைத் தீவு மாவட்டத்தின் வடஎல்லையான பூநகரியில் உள்ள கோண

www.tamilarangam.net



வில் என்ற இடத்தைக் குறித்ததெனக் கருதலாம். அவ்வாறு கருதுவதற்கு பதவியாவில் (திருகோணமலை மாவட்டம்) உள்ள சிவதேவாலய அழிபாடுகளிடையே கிடைத்த இரண்டாம் இராசாதிசோழன் காலத்திற்குரிய(கி.பி.1163-78) கல்வெட்டு கோணவில் ஞானதேசிக் வணிககணத்தைச் சேர்ந்த வெண்காடான் என்பவன் இங்கிருந்த இரவிகுல மாணிக்க ஈஸ்வரத்திற்கு எறிமணி யொன்றைத் தானமாகக் கொடுத்தான் என்ற செய்தியைக் கூறுகின்றது(Epigraphy Tamillica. I:33). இது பூநகரியில் உள்ள கோணவில் என்ற இடத்தைக் குறித்ததென்பதற்கு இதற்குத் தெற்கே சோழிய குளம், அம்பலப்பெருமாள் என்ற இடங்கள் இருப்பது சான்றாக உள்ளன. சோழர் சோழியர் என அழைக்கப்பட்டதற்கு சோழர் காலக் கல்வெட்டுக்களில் சான்றுகள் உண்டு. அம்பலம் என்பது சோழர் காலத்தில் வணிகர்கள் தங்கும் இடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இவ்விடத்தில் ஆலயம் கட்டப்பட்டதால் அம்பலப் பெருமாள் என்ற பெயரைப்பெற்றிருக்கலாம். இதற்குச் சோழர்கால வணிககணங்கள் இலங்கையில் ஆலயங்கள் கட்டியதாக சாசனங்கள் கூறுவதை இங்கு நினைவுபடுத்தலாம். இதனால் பாளி இலக்கியத்தில் வரும் கோண மாவட்டம் பூநகரியில் உள்ள கோணாவில் என்ற இடத்தையே குறித்ததெனக் கூறுவதே பொருத்தமாகத் தெரிகிறது. புலச்சேரி என்ற இடம் எது என்பது நீண்ட காலமாக அடையாளம் காணப்படவில்லை. இவ்விடத்தைப் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இரண்டாம் இராதிராஜா சோழனின் படைத்தளபதி பல்லவராயன் வெற்றி கொண்டதாக பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டுக் கூறுகிறது. சூளவம்சம் இவ்விடத்தை இறங்கு துறை எனக் கூறுவதால் இது கடற்கரையை அண்டிய இடம் என்பது தெரிகிறது. இவ்விடத்தை பூநகரி வட்டாரத்தில் ஈழஊருக்கு மேற்கெல்லையின் கடற்கரைக் கிராமமான புலச்சேரி என்ற இடத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். இவ்விடத்திற்கு அண்மையில் காக்கைதீவு இருப்பது இங்கு குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

குருந்தி என்ற இடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கரைப் பக்கமாகவுள்ள குருந்தலூர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆனால் மாதோட்டத்திற்கு வடக்கே குருந்தன் குளம் என்ற இடம் உள்ளது. மாதோட்டத்தில்

www.tamilarangam.net



வந்திறங்கிய சாவகன் குருந்தியில் நிலைகொண்டிருந்த தமிழ்ப் படைவீரர்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டதாக சூள வம்சம் மேலும் ஒரு இடத்தில் கூறுகிறது (C.V.88:64). இதனால் சூளவம்சம் கூறும் குருந்தி என்ற இடத்தை குருந்தன்குளத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கலாம். வலிகம என்ற இடத்தை தற்போது யாழ்ப்பாணத் திலுள்ள வலிகாமம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆனால் மன்னாருக்கு தெற்கே ஐந்து மைல் தொலைவில் இதேபெயர் இன்றும் புழக்கத்தில் இருந்து வருகிறது. ஏனைய பெயர்களுக்குரிய இடங்களின் அமைவிடத்தை நோக்கும் போது மன்னாரில் உள்ள வலிகாமத்தையே சூளவம்சம் குறித்ததாகக் கருதலாம். அடையாளம்காணப் படாத இடங்களில் மானாமத்த ஒன்றாகும். வட இலங்கையில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மானாவத்தை, மானாவளை மானாங்கேணி போன்ற பெயர்களில் பல இடங்கள் உண்டு. இவற்றுள் எந்த இடத்தைச் சூளவம்சம் குறித்ததென்பதை அவற்றின் வரலாற்றுப் பழமையை வைத்து அடையாளம் காணப்பட வேண்டியுள்ளது.

மேற்கூறப்பட்டவற்றில் இருந்து கலிங்கமாகனுக்குச் சார்பான படைகள், கோட்டைகள் இருந்த இடங்களில் பெரும்பாலானவை இன்றைய முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பிராந்தியத்தினுள் இருந்தவையாக அடையாளம் காண முடிகிறது. இவ்விடங்கள் சிலவற்றிலிருந்த படைவீரர் களையும் தன்னுடன் இணைத்துக்கொண்டே சாவகன் என்னும் சந்திரபானு தம்பதேனிய அரசிற்கு எதிராகப் படையெடுப்பை மேற்கொண்டான் எனச் சூளவம்சம் கூறுகிறது. இதிலிருந்து கலிங்கமாகனுக்குப்பின் சாவகனதும் அவனது மைந்தனதும் அரசும் வட இலங்கையில் இருந்தமை தெரிகிறது.

கலிங்கமாகன் வரலாறு இலங்கையின் ஏனைய மன்னர்களின் வரலாற்றிலிருந்து பெருமளவு வேறுபட்ட நிலையில் பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் கூறப்பட் டிருப்பதைக் காணமுடிகிறது. அவனது ஆட்சிப்பீடமாகப் பொலநறுவை இருந்தகாலத்திலும் அவனது ஆதிக்கம் பெருமளவுக்கு வடஇலங்கையில் இருந்ததையே இவ் வரலாற்று மூலங்கள் எடுத்தியம்புகின்றன. கலிங்கமாகனுக்கு

www.tamilarangam.net



முன்னர் ஆட்சியில் இருந்த மன்னர்களின் வரலாறே வரலாற்றிலக்கியங்களில் முதன்மைப்படுத்தப்பட்டுக் கூறப் பட்டுள்ளன. ஆனால் கலிங்கமாகன் ஆட்சியில் அவனோடு அவனுக்குத் துணையாக இருந்தவர்களின் வரலாறு முதன்மைப்படுத்தப்பட்டுக் கூறப்பட்டிருப்பதோடு பல இடங்களில் அவர்கள் தமிழ் மன்னர்களாகக் குறிப்பிடப்பட்டு கலிங்கமாகனைவிட முன்னிலைப்படுத்தப் பட்டுள்ளனர். அவர்களுள் ஜெயபாகு என்பவன் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவன். இவன் சோடங்கன், சோடங்கதேவன் என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டுள்ளான். இந்த ஜெயபாகுவே திருகோணமலை கோட்டையில் உள்ள சமஸ்கிருதச் சாசனம் கூறும் சோழங்கதேவன் எனவும், அவனே கோணேஸ்வரர் கல்வெட்டில் குறிப்பிடப்படும் குளக்கோட்டமன்னனாக இருக்க வேண்டும் எனவும் அறிஞர்களில் ஒரு சாரார் கூறுகின்றனர். இவன் கொக்கிளாய் முதல் வெருகல் வரை மேற்கொண்ட ஆலயத் திருப்பணிகள், நீர்ப்பாசன முறைகள், வன்னிமைவகுத்தல் முதலிய பணிகள் பற்றி கோணேஸ்வரர் கல்வெட்டிலிருந்து தெரிய வரு கிறது. கலிங்கமாகன் பெயர் பாளி இலக்கியங்களில் விஜயபாகு எனக்கூறப்பட்டிருப்பது போல் சோழங்கதேவன் என்னும் பெயர் ஜெயபாகு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை சிங்கள மக்களைத் திருத்திப்படுத்துவதற்காக இருக்கலாம் எனப் பரணவிதானா கூறுகிறார் (1960:615).

இந்த ஜெயபாகு கலிங்கமாகனுடன் இணைந்து இராசரட்டையை ஆண்ட தமிழ் மன்னன் எனக் கூறும் சூளவம்சம், பூஜாவலி ஆகிய நூல்கள் இவன் கலிங்க மாகனுடன் இணைந்து பௌத்த விகாரைகளை அழித்தான் எனவும், பல இடங்களில் படைமுகாம்களை அமைத்தான் எனவும கூறுகின்றன (C.V.82:26-7,Pujavaliya113?4). இவர் களது படைப்பலம்பற்றி பூஜாவலி என்ற நூல் குறிப்பிடு கையில் கலிங்கமாகனிடம் 44000வீரர்களும், ஜெயபாகு விடம் 40000 வீரர்களும் இருந்ததாகக் கூறுகின்றது. கலிங்கமாகனுக்குத் துணையாக ஜெயபாகு இருந்தது போல் ஜெயபாகுவுக்குத் துணையாக மகிந்தா என்பவன் இருந்துள்ளான். இவனை ஒரு தமிழ் மன்னனாகக் கூறும் சூளவம்சம் இவன் ஜெயபாகுவுக்குத் துணையாகக் கோட்டைகளைப் பலப்படுத்தினான் எனவும், அவற்றில் 44000 கேரள, தமிழ்ப் படைவீரர்கள் இருந்ததாகவும்

www.tamilarangam.net



கூறுகின்றது(83:15-1). இதிலிருந்து ஜெயபாகு என்னும் சோழங்க தேவன் சில இடங்களில் கலிங்கமாகனுக்குச் சமனான நிலையில் மதிக்கப்பட்டமை தெரிகிறது. இத்தனைக்கும் இவன் கலிங்கமாகனுடன் இலங்கைக்குப் படையெடுத்து வந்தவனல்ல. லியனமமே இவன் ஏற்கனவே இலங்கையில் ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னனாக அல்லது கலிங்கமாகனுக்குப் பின் படையெதுத்து வந்தவனாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறார். மானாபரணன் கலிங்கமாகனுக்குத் துணையாக இருந்த இன்னொரு படைத்தளபதியாவான். தமிழப்படைவீரர்களின் தளபதியாக இருந்த இவனே பொலநறுவையைக் கைப்பற்றியதும் கலிங்கமாகனுக்கு முடிசூட்டு விழா நடத்தி வைத்தான் எனச் சூளவம்சம் கூறுகிறது(80:70-3).

கலிங்கவம்சத்திற்கும் சிங்கள அரச வம்சத்திற்கும் இடையிலான உறவு மிகத்தொன்மையமயானது. இதை ஏற்படுத்தி வைத்ததில் பௌத்த மதத்திற்கும் முக்கிய பங்குண்டு. இதன் காரணமாக கலிங்கவம்சக் கலப்புடைய சிங்கள வம்சம் ஒன்று இலங்கையில் பொலநறுவை அரசு காலத்தில் செல்வாக்குப் பெறலாயிற்று. அவர்களில் சிலர் சைவச மயப்பற்றுடையவர்களாக இருப்பினும் பலர் தீவிர பௌத்தர்களாக, பௌத்த மதத்தை வளர்ப்பவர்களாகவே இருந்துள்ளனர். இதற்குப் பாளி இலக்கியங்களில் மட்டு மன்றி கல்வெட்டுக்களிலும் பல சான்றுகள் உண்டு. இச்சான்றுகள் கலிங்கமாகன் கலிங்கநாட்டிலிருந்து அல்லது கலிங்க வம்சத்திலிருந்து வந்திருந்தால் இலங்கையில் பௌத்த சிங்கள மக்களுக்குச் சார்பாக இருந்திருக்க வேண்டும் என்பதையே கோடிட்டுக் காட்டுகின்றன. அவ் வாறான ஒரு கருத்து நிலை பரணவிதானாவிடம் இருந்தமை தான் கலிங்கமாகன் இந்தியாவில் உள்ள கலிங்கத்திலிருந்து வரவில்லை மாறாக மலேசியாவில் உள்ள கலிங்கத்திலிருந்து வந்தவன் என்ற ஆதாரமற்ற கருத்தை முன்வைக்கக் காரண மாக அமைந்ததோ தெரியாது.

கலிங்கமாகன் நீண்ட காலம் ஆட்சிபுரிந்த மன்னனாக வர லாற்றில் குறிப்பிடப்பட்டாலும் அக்காலத்தில் ஆற்றி யிருக்கக் கூடிய எந்தவொரு நல்ல பணிபற்றியும் பாளி நூல்கள் குறிப்பிடவில்லை. மாறாக அவனது கொடிய ஆட்சி பற்றியே கூறுகின்றன. இதுபற்றி சூளவம்சம் குறிப்பிடுகை

www.tamilarangam.net



யில் "இவன் பொய்யான மதநம்பிக்கையுடையவன் எனவும் (பொய்யான மதநம்பிக்கை என்பது இந்து மதத்தைக் குறிப்பாதாக இந்நூலினை மொழிபெயர்த்த கைகர் கூறுகிறார்), சிங்கள மக்களுக்குச் சொந்தமான கிராமங்கள், வயல்கள், தோட்டங்கள், வீடுகள், அடிமைகள், மாடுகள், எருமைகள் ஆகியவற்றைப் பறித்து தன் படைவீரர்களுக்கு கொடுத்தான் எனவும் விகாரைகள், வழிபாட்டிடங்கள் முதலியவற்றைத் தனது தமிழ், கேரளப் படைவீரர்களின் இருப்பிடங்களாக மாற்றினான் எனவும், அங்கிருந்த புத்த பிக்குகளை துரத்தி, மற்றும் கொடுந்தொழில் புரிந்து பழிபாவத்திற்கு அஞ்சாதவனாக ஆட்சி செய்தான் எனவும் குறிப்பிடுகிறது. இவை மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் என கைகர், பரணவிதானா, லியனகம, நிக்லஸ் போன்றோர் கூறினாலும் இவனது ஆட்சி கொடூரமானது என்பதை நிராகரிக்கவில்லை. இலங்கை வரலாற்றில் சோழ மன்னர் களுக்குப் பின்னர் இவ்வளவு கொடூர மன்னர்களாக கலிங்கமாகனையும், அவனது சாகாக்களையுமே பாளி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இத்தனைக்கும் இவர்களையும் தமிழ் மன்னர்களாக, தமிழருக்குச் சார்பான ஆட்சியாளர்களாக, பொய்யான மதநம்பிக்கையுடையவர் களாக இந்நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இவை கலிங்கமாகனின் உண்மை வரலாற்றைப் பாளி இலக்கியங்கள் மறைத்துவிட்ட தாகச் சந்தேகிக்க இடமளிக்கிறது. அவ்வாறு சந்தேகிக்க நியாய மான வரலாற்றுக்காரணங்களும் உண்டு.

இலங்கையின் முதல் வரலாற்று இலக்கியமான மகாவம் சத்திலும் சரி, அதையடுத்து தோன்றிய சூளவம்சத்திலும் சரி அவற்றை எழுதிய பௌத்தகுருமார்கள் தமிழ்மக்களையும், தமிழ் மன்னர்களையும் இலங்கைக்கு அன்னியர்களாகக் காட்டுவதற்கு அவர்களைச் சோழர், பாண்டியர், கேரளர், அன்னியர், கொடிய ஆட்சியாளர்கள் எனச் சித்தரிப்பதில் பெரும் பாலும் பொதுவான அணுகு முறையையே கடைப் பிடித்தனர். 44 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த சோழ உயர்குடியிற் பிறந்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனை துட்டகாமினி வெற்றி கொண்டதன் மூலம் அவன் மகாவம்சத்தில் சிங்கள இனத்தின் காவிய நாயகனாக சித்தரிக்கப்பட்டுள்ளான். அதேபோல் 77 ஆண்டுகள் பொலநறுவையில் ஆட்சி புரிந்த சோழரை முதலாம் விஜயபாகு வெற்றி கொண்டதன் மூலம்

www.tamilarangam.net



அவன் சூளவம்சத்தில் சிங்கள இனத்தின் விடுதலை வீரனாகச் சித்தரிக்கப்பட்டுள்ளான். இலங்கையை ஆண்ட மன்னர்களுள் முதலாம் விஜயபாகுவே தலைசிறந்தவன் எனக் கூறும் வரலாற்றறிஞர்கள் அவன் இல்லாவிட்டால் சிங்கள இனமே அழிந்திருக்கும் எனச் சோழர்கள் மீது ஆதங்கப்படுகின்றனர். இங்கே நூல்கள் எழுதப்பட்டதன் காலங்கள் வேறுபடுகின்றனவே தவிர அவற்றை எழுதியவர்களின் நோக்கங்கள் ஒன்றாக இருப்பதைக் காணமுடிகிறது. இந்நிலையில் கலிங்கமாகன் பற்றி பாளி இலக்கியங்கள் சொல்லியவற்றைவிட கைகர் கூறுவது போல் சொல்லப்பட வேண்டிய பல செய்திகளைச் சொல்லாமால் விட்டதே பல சந்தேகங்களுக்கு இடமளிக்கிறது. சோழரது 77 ஆண்டுகால ஆட்சியில் அரச நிர்வாகம், மொழி, மதம், தமிழ் சிங்களப் பண்பாட்டில் ஏற்படுத்திய நிரந்தர மாற்றங்கள் என்பன பற்றி இதுவரை கிடைத்த கல்வெட்டுக்களும், தொல்லியல் சின்னங்களும் கூறுகின்றன. இவைபற்றி இக்கால வரலாறு கூறும் பாளி இலக்கியங்களில் எதுவித குறிப்பும் காணப்படவில்லை. மாறாக சோழமன்னர் பலரின் படையெடுப்புக்களை மறைத்து ஒரு தடவை (இராஜேந்திர சோழன்) மட்டுமே படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றி மக்களுக்கும், பௌத்த மதத்திற்கும் பெரும் தீங்கிழைத்தனர் என்ற பொருளில் மட்டும் கூறிமுடிக்கின்றன. இதற்குச் சோழர் தமிழராக இருந்ததே காரணமாகும். இதுவே கலிங்கமாகன் வரலாறு திரிபுபடுத்தப்பட்டு தெளிவற்றிருப்பதற்கு காரணமா என்ற சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன. உறுதியான சான்றுகள் அற்ற நிலையில் இதைக் கூறமுடியாவிட்டாலும் ஊகங்களைப் புறக்கணிக்க முடியவில்லை. இதற்கு கலிங்கமாகன் ஆட்சிக்கும் சோழர் ஆட்சியின் வீழ்ச்சிக்கும் இடைப்பட்ட காலத்தில் வட இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களைப் பின்னோக்கிப் பார்ப்பது அவசிய மாகும்.

## சோழர் ஆட்சிக்குப் பின் வட இலங்கை

தென்னிந்தியாவில் சோழ அரசு எழுச்சியடைந்த போது அதன் செல்வாக்கு சமகாலத்தில் இலங்கையிலும் ஏற்பட்டது. ஆனால் சோழர் எழுச்சியை விரும்பாத சிங்கள மன்னர்கள் சோழருக்கு எதிராகப் போரிட்ட வம்சங்களுக்கு குறிப்பாகப் பாண்டிய மன்னருக்கு படையுதவி அளித்தனர். இதனால்

www.tamilarangam.net



பாண்டியரை வெற்றி கொண்ட சோழமன்னர் பலரும் பாண்டியரை வெற்றிகொண்டதன் பின்னர் இலங்கை மீது படையெடுத்தனர். அவ்வாறு படையெடுத்த ஆரம்ப கால மன்னருள் முதலாம் பராந்தகசோழன் (கி.பி.949), சுந்தர சோழன் (கி.பி957-73), முதலாம்இராசராசசோழன்(கி.பி993), முதலாம் இராசேந்திர சோழன் (கி.பி.1025) ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் முதலாம் இராசராச சோழன் வட இலங்கையையும்,முதலாம் இராசேந்திரசோழன் முழுஇலங்கையையும் கைப்பற்றி 77ஆண்டுகள் சோழ நிர்வாகத்தின்கீழ் ஆட்சி செய்தனர்.

இலங்கை வரலாற்றில் சோழர் ஆட்சியில்தான் முதன் முறையாக இலங்கை முழுவதும் ஒரு மன்னன் ஆளுகைக்குட் பட்டது. இக்காலத்தில் பண்டைய தலைநகரான அநுராதபுரம் கைவிடப்பட்டு ஜனநாதமங்கலம் என்ற பெயரில் புதிய தலைநகர் பொலநறுவைக்கு மாற்றப்பட்டது. நிர்வாக மொழியாக தமிழும், அரச மதமாக இந்துமதமும் முதன்மை பெற்றன. சோழ நிர்வாக முறை புகுத்தப்பட்டு இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரில் சோழ நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டது. சோழர் ஆட்சியால் இலங்கையில் குறிப்பாக இலங்கைத் தமிழர் வரலாற்றில் ஏற்படுத்தியமாறுதல்கள் அவர்களது தனித்துவத்தைத் தொடர்ந்தும்பாதுகாப்பதற்கு உந்து சக்தியாக அமைந்தது.

1070இல் முதலாம் விஜயபாகு சோழரை வெற்றி கொண்டதன்மூலம் பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்படலாயிற்று. இதனால் சோழப்படைவீரர்கள் அழிக்கப்பட்டனர் என்றோ அல்லது அவர்கள் ஆட்சியில் படைவீரர்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள் பிராமணர்கள் எனத் தமிழ் நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள் மீண்டும் தமிழ்நாட்டிற்கு திரும்பிச் சென்றனர் என்றோ கூறுவதற்கு ஆதாரங்கள் இல்லை. மாறாக அவர்களில் ஒரு பிரிவினர் சிங்கள மன்னர் ஆட்சியில் படைவீரர்களாக, நிர்வாகிகளாகக் கடமையாற்றினர். இன்னொரு பிரிவினர் வடஇலங்கையில் நிரந்தரமாகக் குடியேறினர்.இது பற்றி பேராசிரியர் அரசரட்ணம் (1964:103) கூறும்போது

"சோழர்கள் தோற்கடிக்கப்பட்டு சிங்கள அரசர்களின் அதிகாரம் மீண்டும் நிலைநாட்டப்பட்ட போதிலும் தமிழர்

www.tamilarangam.net



களின் சனத்தொகைப் பெருக்கமும், அவர்களது செல்வந்த நிலையும் படைத்துறையிலும், நிர்வாகத்துறையிலும் அவர்கள் வகித்த செல்வாக்கான பதவிகளும் இதனைச் சாத்தியமற்றதாக்கிவிட்டது".என்றார்.

முதலாம் விஜயபாகு பொலநறுவையிலிருந்து சோழ ஆட்சியாளரை அகற்றிய போதும் தன் அரசையும், பௌத்த மதத்தையும் பாதுகாக்க சோழப்படை வீரர்களி லேயே பெரிதும் தங்கியிருந்தான். அதில் வேளைக்காரப் படைப்பிரிவினர் முக்கிய பங்கு வகித்தனர். இப்படைப் பிரிவில் இடங்கை, வலங்கை சிறுதனம், பிள்ளனத்தனம், வடுகர், மலையாளர் முதலான பல சிறுபடைப்பிரிவுகளும் அடங்கியிருந்தன (பத்மநாதன் 1960:37). இவ்வேளைக்காரப் படை வலிமைமிக்க சமூகத்தினர் என்றும், தனிப்பட்ட படைப்பிரிவு என்றும், வல்லமைமிக்க சமூகத்தில் உயர் நிலையில் வைக்கப்பட்ட கட்சியினர் என்றும் பலவாறு வரலாற்றாசிரியர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளன (Nilakanta Sastri1955-56:60). இப்படப்பிவினரே விஜயபாகு வின் பின் ஆட்சிக்கு வந்த ஜெயபாகு, இரண்டாம் கஜபாகு, முதலாம்பராக்கிரமபாகு போன்றோர் ஆட்சியிலும் உள்நாட்டு வெளிநாட்டுப் படையெடுப்புக்களில் முக்கிய பங்கு வகித்தனர். அத்துடன் இப்படைப்பிரிவினர் தமிழ் வணிககணங்களிலும் கடைமையாற்றியதாகத் தெரிகிறது (NilakantaSastri1955-56:58).

தமிழர்களின் ஆதரவோடு சிங்கள மன்னர்கள் ஆட்சி செய்ய நேரிட்டதால் அவர்கள் மதப்பொறையைக் கடைப் பிடிக்க நேரிட்டது. இலங்கை வரலாற்றில் மன்னன் எந்த இனத்தவனாக இருந்தாலும் பௌத்தனாக இருக்கவேண்டும் என்ற நிலை காணப்பட்டது. சோழர் ஆட்சியைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த சிங்கள மன்னர்கள் பலரும் பௌத்தராக இருந்தும் தமிழர்களைத் திருப்திப்படுத்த இந்துமதத்திற்கும் ஆதரவு கொடுக்க நேரிட்டது. இதுபற்றிப் பரண விதானா (1960:563) குறிப்பிடுகையில்

"விஜயபாகு அரசு கட்டிலேறியபின்னர் இந்து வழிபாட்டு முறைகளைப் புறக்கணிக்க முடியவில்லை. இவன் சோழர்காலச் சமயஸ்தாபனங்களை தொடர்ந்து இயக்க அனுமதித்ததோடு தனது காலத்தில் அமைக்கப்பட்ட சைவக் கோயில்களுக்கும் தனது ஆதரவை வழங்கினான்"என்றார்.

www.tamilarangam.net



இவன் தனது ஆட்சியில் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் என்ற இடத்திலுள்ள "ரர்ஜராஜேஸ்வரம்" ஆலயத்தையும், பிராமணர் குடியிருப்பான "ராஜராஜசதுர்வேதி மங்கலத்தையும்" "விஜயராஜராஜேஸ்வரம்" "விஜயராஜ ராஜசதுர்வேதி மங்கலம் எனப் பெயரிட்டு தனது ஆதரவைக் கொடுத்தான். பாலமோட்டையில் கிடைத்த இவன் காலக்கல் வெட்டொன்றும் இங்குள்ள ஆலயம் ஒன்றுக்கு இவன் அளித்த தானம் பற்றிக் கூறுகின்றது (E.Z.IV:192-5). இவ்வாறான பணிகளை இவனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த விக்கிரமபாகு (கி,பி.1111-32), கஜயபாகு (கி.பி.1132-93) நிஸங்கமல்லன் (கி.பி.1187-6) போன்ற மன்னர்களும் செய் ததைப் பாளிநூல்களும், கல்வெட்டுக்களும் கூறுகின்றன (பத்மநாதன் 1998:37). இங்கிருந்த ஆலயங்களுக்கே கலிங்க மாகன் காலத்தில் திருகோணமலையில் இருந்து ஆட்சிபுரிந்த குளக்கோட்ட மன்னனும் திருப்பணி செய்தான் எனக் கூறலாம்.

சிங்கள மன்னர் ஆட்சியில் காணக்கூடிய இன்னொரு மாற்றம் கல்வெட்டுக்களை சிங்களத்திலும், தமிழிலும் வெளியிட்டதாகும். இதன் மூலம் சிங்கள நிர்வாகத்தில் முதன் முறையாக தமிழும் ஆட்சி மொழியாக மாறியதாகும். இக்கால அரச அதிகாரிகள் தமிழ் மக்களோடு கொண்ட தொடர்பு களை தமிழிலேயே பதிவு செய்தனர். விஜயபாகு காலப் பனாகடுவ செப்பேட்டில் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன (Ray 1960:543). ஸ்ரீசங்கபோதி விஜயபாகு என்ற மன்னனைக் குறிக்கும் நான்கு கல்வெட்டுக் கள் கிடைத்துள்ளன. இவற்றுள் பொலநறுவை, பால மோட்டை ஆகிய இடங்களில் கிடைத்த இரு கல்வெட்டுக் கள் முதலாம் விஜயபாகு காலத்தைச் சேர்ந்தவையாகும் (பத்மநாதன் 1971-72:13-36). இவனுக்குப் பின்னர் ஆட்சி செய்த மன்னர்களும் தமிழில் கல்வெட்டுக்களை வெளியிட் டுள்ளனர். இதற்கு நயினாதீவில் கிடைத்த முதலாம் பராக்கிரம பாகு காலக் கல்வெட்டைக் குறிப்பிடலாம்.

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து சோழரின் வீழ்ச்சிக்கும், கலிங்கமாகன் படையெடுப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் பொலநறுவை அரசில் தமிழர்கள் கணிசமான செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பது தெரியவருகிறது. தமிழ் மக்களுட னான நிர்வாகத்தொடர்புகள் தமிழில் பதியப்பட்டதாகத்

www.tamilarangam.net



தெரிகிறது. இது பொலநறுவையில் வாழ்ந்த தமிழர் களுடனா அல்லது பொலநறுவைக்கு வெளியே வாழ்ந்த தமிழர் களுடனா என்பது தெளிவாகவில்லை. ஆனால் பொல நறுவைக்கு வடமேற்கே உள்ள கந்தளாய் போன்ற இடங் களில் உள்ள சைவஆலயங்களுடன் முதலாம் விஜய பாகு தொடர்புபடுத்திக் கூறப்படுவதால் இவ்விடங்களில்வாழ்ந்த தமிழர்களையும் குறித்திருக்கலாம்.ஆனால் இக்காலத்தில் பொலநறுவை அரசிற்கும் பாளி இலக்கியங்களில் உத்தர தேசம், நாகதீபம் என அழைக்கப்படும் வடஇலங்கைக்கும் இடையிலான அரசியல் உறவு எப்படியிருந்தது என்பதில் ஒரு தெளிவற்ற நிலை காணப்படுகிறது.

முழுஇலங்கையையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தவன் என பனாகடுவ சாசனத்தில் குறிப்பிடப்படும் முதலாம் விஜயபாகு தென்னிலங்கையைத் தனது கட்டுப்பா ட்டின் கீழ் வைத்திருக்கத் தன் இளைய சகோதரர்களான வீரபாகுவை தக்கண தேசத்திற்கும், கயபாகுவை உரு குணைப்பிரதேசத்திற்கும் பொறுப்பாக நியமித்தான் (C.V.60:56-3). ஆனால் நீண்டகாலமாக சிங்கள அரசிற்கு எதிராகப் படையெடுத்த உத்திரதேசத்தை நிர்வகிக்க அவன் ஒரு அதிகாரியை நியமித்ததற்கோ அல்லது அவனின் நேரடி நிர்வாகத்தில் இருந்ததற்கோ எதுவித சான்றுகளும் கிடைக்க வில்லை. சூளவம்சம் நாகதீபத்தில் இருந்த பௌத்த விகாரை யைப் புதுப்பித்ததாகக் கூறுகின்றது. அதையாதாரமாகக் கொண்டு உத்திரதேசம் பொலநறுவையரசின் மேலாதிக்கத் திற்கு உட்பட்டிருந்ததாக சிலர் வாதிடுகின்றனர். ஆனால் இச்சான்றை இரு பிராந்தியங்களுக்கும் இடைப்பட்ட பண்பாட்டுத் தொடர்புக்குரிய சான்றாகக் கொள்ளலாமே தவிர அரசியல் மேலாதிக்கத்திற் குரிய சான்றாகக் கொள்வது பொருத்தமாக இல்லை. அப்படிக் கொள்வதானால் இக்கா லத்திற்கு முன்பாக கி.பி8ஆம், 9ஆம் நூற்றாண்டில் தென்னிலங்கையில் கட்டப்பட்ட சைவ ஆலயங்களை தமிழ மன்னர் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த இடங்களாகக் கூற முடியுமா? இவற்றை இந்து, பௌத்த மதம் பொறுத்து இக்காலத்தில் அவன் கடைப்பிடித்த கொள்கையின் அடிப்படையில் நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால் விஜயபாகு ஆட்சியில் நடந்த படையெடுப் பெடுப்புபற்றிச் சூளவம்சம் கூறும் செய்தி பொலநறுவை யரசின் ஆதிக்கத்திற்குள் வடஇலங்கை உட்பட்டிருக்க

www.tamilarangam.net



வில்லை என்பதை மறைமுகமாக உணர்த்துவதாக உள்ளது. விஜயபாகு தனது சிங்களத் தூதுவர்கள் சோழரால் அவமதிக்கப்பட்டபோது அதற்குப் பழிவாங்க தமிழ் நாட்டின் மீது படையெடுக்குமாறு தன் தூதுவர் மூலம் மகாதீர்த்த. மட்டிகாவட்டதீர்த்த ஆகிய இடங்களில் தங்கி யிருந்த வேளைக்காரப்படையினரை வேண்டினான். அதை யேற்கமறுத்த அவர்கள் அத்தூதுவர்களைக் கொன்று விஜயபாகுவுக்கு எதிராகப்படையெடுத்து தலைநகரைக் கைப்பற்றி, அதைத் தீக்கிரையாக்கியதோடு மன்னனின் சகோதரியையும், புதல்வர்களையும் சிறைப்பிடித்தனர். இதனால் விஜயபாகு பொலநறுவையிலிருந்து உருக ணைக்குத் தப்பியோடி இவர்களுக்கு எதிராக படையைத் திரட்டினான் (C.V.60:34-36). நீலகண்டசாஸ்திரி வேளைக் காரப் படையென்பது உயிரைவிடுகின்ற சமயத்திலும் அரசனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக சபதம் எடுத்துக் கொண்ட ஒருவகைப் படையெனக் கூறுகின்றார். ஆனால் இங்கே அப்படைப்பிரிவினரே அரசைக் கைப்பற்றியிருப் பதால் சூள வம்சம் கூறும் படைப்பிரிவினர் எவ்வகையைச் சார்ந்ததென்பது தெரியவில்லை. ஆனால் இவர்கள் சிங்கள மன்னர்களுக்குத் துணையாக இருந்த போதிலும் சிங்கள மன்னர்களால் தமிழர்கள் வெற்றிகொள்ளப்படுவதை விரும்பவில்லை என்பதை இச்சம்பவம் எடுத்துக் காட்டு கிறது எனலாம்.

சூளவம்சம் படைவீரர்கள் தங்கியிருந்த இடங்களில் ஒன்றாக மகாதீர்த்த என்ற இடத்தைக் கூறுகின்றது. இது மாதோட்டத்தைக் குறிக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மட்டிகாவட்டதீர்த்த என்ற இடம் இப்பொதுதான் முதற்தடவையாச் சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெயரின் பின்னொட்டுச் சொல் தீர்த்த என முடிவ தால் பாளி மொழியில் கடற்கரை சார்ந்த துறைமுகப்பகுதி என்பது தெரிகிறது. இவ்விடம் மாதோட்டத்திற்கு வடக்கே பூநகரி வட்டாரத்தில் புலச்சேரி என்ற இடத்திற்கு அண்மையில் கடற்கரைப் பக்கமாகவுள்ள மட்டிவில் நாடு என்ற இடத்தைக் குறிப்பதாக கருத இடமுண்டு. இரண்டாம் இராசாதிராசசோழன் காலக் கல்வெட்டில் அவன் படைகள் வெற்றி கொண்ட இடங்களாக மாதோட்டம், புலச்சேரி என்பவற்றுடன் மட்டிவாழ் என்ற இடமும் குறிப்பிடப் பட்டுள்ளது. இது மட்டுவில் நாட்டையே குறித்ததென்பதை

www.tamilarangam.net



பெயரடிப்படையில் மட்டுமன்றி அங்கு கிடைத்த தொல்லியல் சான்றுகள் மூலமும் உறுதியாகிறது. இதனால் சூளவம்சம் கூறும் மட்டிகாவட்டதீர்த்த, சோழக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மட்டிவாழ் என்பன தற்போது புழக்கத்தில் உள்ள மட்டுவில் நாடு என்ற இடத்தையே குறித்ததெனக் கூறலாம். இலங்கையில் போத்துக்கேயர் காலக் கோட்டைகள் பெரும்பாலும் பண்டையகாலத் துறைமுகங்களுக்கு அண்மையில் அமைக்கப்பட்டதைக் காணமுடிகிறது. இங்கே பூநகரியில் இருந்த கோட்டை மட்டுவில் நாட்டில் அமைக்கப்பட்டிருந்தமை கவனத்தில் கொள்ளத்தக்கது. இச்சம்பவத்திலிருந்து இரு இரண்டு அம்சங்கள் தெளிவாகின்றன .1) பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சியிருந்தபோதும் அவ்வரசை வெற்றி கொள்ளும் நிலையில் தமிழர் படையமைப்புக்கள் பலமாக இருந் துள்ளன. 2) அப்படையமைப்புக்கள் பொலநறுவையில் மட்டுமின்றி வட இலங்கையிலும் நிலைகொண்டிருந்தன.

விஜயபாகுவுக்குப்பின் கலிங்கமாகன் படையெடுப்புக்கு முன் வட இலங்கையுடன் பொலநறுவை அரசிற்கிருந்த அரசியல் உறவுகள் பற்றிய சான்றுகள் எவையும் பாளி இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் முதலாம் பராக்கிரமபாகு காலத் தமிழ் கல்வெட்டொன்று நயினாதீவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு அயல்நாட்டு வர்த்தகர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சிலவசதிகள், சுங்க வரிகள் பற்றியும் கூறுகின்றது (இந்திரபாலா 1964:41). இதேகாலப்பகுதியில் சோழ நாட்டின் மீது படையெடுக்க இவனது படைகள் வட இலங்கையில் நிலைகொண்டிருந்ததாகவும், அப்படைகளை சோழப்படைகள் வெற்றி கொண்டு அவ்விடங்களைக் கைப்பற்றியதாகவும் இரண்டாம் இராசாதிராசசோழன் காலப் பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டுக் கூறுகிறது (E.I.XXLL:86-2). இவற்றை ஆதாரமாகக் கொண்டு வட இலங்கை பொலநறுவை அரசின் நிர்வாகக் கட்டுக் கோப்புக்குள் அடங்கியிருந்ததெனக் கூறப்படுகிறது. இவை நீண்டகால வரலாற்றில் தற்காலிகமாக நிழ்ந்திருக்கக் கூடிய சம்பவங்கள். அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு அரசின் ஆதிக்கத்திற்குள் இன்னொரு அரசின் பிராந்தியம் நிரந்தரமாகக் கட்டுண்டிருந்ததென்ற முடிவுக்கு வரமுடியாது. 14ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண மன்னர்கள் கம்பளை அரசை வெற்றி கொண்டதாகக் கொட்டகம என்ற இடத்தில்

www.tamilarangam.net



கிடைத்த தமிழ் கல்வெட்டுக் கூறுகின்றது. இதேகாலப் பகுதியில் யாழ்ப்பாண மன்னர்கள் தென்னிலங்கையில் உள்ள ஒன்பது துறைமுகங்களில் திறை பெற்றதாக நிகாண சங்கிரக என்ற சிங்கள நூல் கூறுகிறது (பத்மநாதன் 1992:51). இவற்றை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண அரசின் ஆதிக்கத்திற்குள் தென்னிலங்கை இருந்ததெனக் கூற முடியாது. அப்படிக் கொண்டாலும் வட இலங்கையில் பராக்கிரமபாகு படைகள் தங்கியிருந்ததன் நோக்கம் சோழநாட்டின் மீது படையெடுப்பதாகும். ஆனால் நோக்கம் நிறைவேற முன்னரே இப்படை வீரர்கள் தோற்கடிக்கப் பட்டனர். தோற்கடிக்கப்பட்ட படைவீரர்கள் வட இலங்கை யில் தங்கினார்களா அல்லது பொலநறுவைக்குத் திரும்பிச் சென்றார்களா என்பது பற்றி இலங்கை வரலாற்றிலக்கி யங்களில் எதுவித செய்திகளும் காணப்படவில்லை. ஒட்டுமொத்தமாக நோக்கும் போது சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பொலநறுவை அரசிற்கும் வட இலங்கைக்கும் இடையிலான அரசியல் உறவு தொடர்பற்றதாகவே இருந்தது எனக் கூறலாம். அதேவேளை வர்த்தக உறவு மிக நெருக்கமடைந்து காணப்பட்டது. இதைப் பாளி இலக் கியங்கள், கல்வெட்டுக்கள் மட்டுமன்றி வட இலங்கையில் பரவலாகக் கிடைத்த பல்வேறு மன்னர்களுக்குரிய நாணயங் களும் உறுதிப்படுத்துகின்றன. இவை வட இலங்கைக்கு அப்பால் தமிழகத்திலும், தென்கிழக்காசி யாவிலும் கிடைத் துள்ளன. இதற்கு வட இலங்கை தமிழகத்தின் தொடக்க வாயிலாக இருந்ததுடன் முக்கிய துறைமுகங்களைக் கொண்டிருந்தமையும் பிரதான காரணமாகும். இப்பின்னணி யில் நயினாதீவில் கிடைத்த பராக்கிரமபாகுவின் தமிழ்க் கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தையும், வர்த்தக நடவடிக்கையில் வட இலங்கைக்கும் ஏனைய பிராந்தியங் களுக்கும் இடையே நீண்டகாலமாக இருந்து வந்த உறவின் வரலாற்றுப் பின்னணியையும் நோக்கவேண்டும்.

எனவே கலிங்கமாகன் ஆட்சிக்கு முற்பட்ட காலப்பகுதியில் பொலநறுவைக்கும் வட இலங்கைக்கும் இடையிலான அரசில் உறவு பற்றி வரலாற்று மூலங்களிடையே காணப்படும் மௌனம் பொல நறுவையின் நாகரீக வட்டத்திற்குள் வட இலங்கை உட் பட்டிருக்கவில்லை என்பதையே காட்டுவதாக எடுத்துக் கொள்ளலாம். மாறாக இக்கால வரலாற்று மூலங்களில்

www.tamilarangam.net



காணப்படும் சான்றுகள் வட இலங்கையில் அரசு ஒன்று இருந்திருக்கலாம் என்பதை மறைமுகமாகச் சுட்டுவதாக உள்ளன. சோழரின் வீழ்ச்சிக்கும்(1070) கலிங்கமாகன் படையெடுப்புக்கும் (1215) இடைப்பட்ட காலத்தில் இலங்கை மீது படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றுவதற் குரிய சாதகமான சூழ்நிலை தமிழ் நாட்டில் காணப்பட வில்லை. மாறாக மறுமலர்ச்சியடைந்த பாண்டிய வம்சத்தில் ஏற்பட்ட வாரிசுரி மைப்போராட்டத்தில் சோழரும், பொல நறுவையில் ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்களும் தலையிடு கின்ற சூழ்நிலையே ஏற்பட்டது. முதலாம் பராக்கிரம பாகுவுக்குப் பின் (கி.பி.1153- 1186) ஆட்சிக்கு வந்த நிசங்கமல்லன் குறுகிய காலம் (கி.பி.1187-1196) ஆட்சியில் இருந்தாலும் பொலநறுவை அரசு கால மன்னர்களில் அதிக கல்வெட்டுக்களை வெளியிட்டவன் என்ற பெருமைக்குரி யவன். இவனது கல்வெட்டுக்கள் தமிழராலும், தமிழ் நாட்டு வம்சங்களாலும் பௌத்த மதத்திற்கும், சிங்கள மக்களுக்கும் ஏற்படப் போகும் ஆபத்தை எச்சரிக்கையுடன் கூறுபவை யாக உள்ளன. உதாரணமாக வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அவனது கல்பொத்தேக் கல்வெட்டு பௌத்த மதத்திற்கே சொந்தமான இந்நாட்டினைப் பரிபாலிக்க சோழ, கேரள மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள பௌத்தர்கள் அல்லா தோரைத் தெரியக்கூடாதெனவும், இவர்களோடு சேர்ந்து அழிவினை ஏற்படுத்துவோர் துரோகிகள் எனவும் கூறுகின்றது (E.Z . II:157-4). இதேபோல் கி.பி 1211க்குரிய மினிப்பே கல்வெட்டு தமிழர் படையெடுப்பால் பௌத்த, சிங்கள மக்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்துப் பற்றிக் கூறுகிறது (E.Z . I:146-161). லியனகமே பூஜவலிய என்ற சிங்கள நூலில் "தமிழர்களும் சிங்கள மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் எனவும், தமிழர்கள் மிகவும் பலம் பொருந்தியவர்கள் ஆகையால் அவர்களுடன் யுத்தத்தில் இறங்கக் கூடாது எனவும், எக்காரணம் கொண்டும் கலிங்க மாகன் ஆட்சியின் எல்லையில் உள்ள நல்கல்கந்தை மலையைத் தாண்டக் கூடாது எனவும்" கூறியுள்ளதாகத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார் (1969:104) இதில் கூறப்பட்டுள்ள சம்பவம் கலிங்கமாகன் காலத்தோடு தொடர்பு டையதாக இருப்பினும் தமிழ் சிங்கள மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தியிருப்பதும், தமிழர்கள் பலமான நிலையில் இருப்பதாகக் கூறியிருப்பதும் இங்கிருந்த தமிழர் களால் எதிர்காலத்தில் சிங்கள அரசுக்கு ஏற்படப் போகும்

www.tamilarangam.net



ஆபத்தைச் சுட்டி நிற்பதாகக் கொள்ளலாம். இது தமிழர்கள் இலங்கையில் செறிந்து வாழ்ந்ததாலோ அல்லது அவர்களுக்கு சோழ, பாண்டிய ஆதரவு இருப்பதனாலோ ஏற்படக்கூடிய ஒன்றல்ல. மாறாக தமிழரிடையே அரச ஒன்று இருப்பதன் மூலமே சாத்தியமாகும். அப்படியானால் வட இலங்கையில் அரசு ஒன்று இருந்ததா? அப்படியிருந்தால் எங்கே தோன்றியது? எப்போது? தோன்றியது என்பன முக்கிய கேள்விகளாக எழுகின்றன. இதுவரை கிடைத்த சான்றாதாரங் களின் அடிப்படையில் இறுதியான முடிவுக்கு வருவதில் சில இடர்ப்பாடுகள் உண்டு. ஆயினும் இவற்றை ஒட்டிய வகையில் சில சான்றாதாரங்களை முன்வைக்க முடியும். அவற்றுள் கட்டிட அழிபாடுகள், இடப்பெயர்கள், நாணயங்கள் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

### வன்னியில் தமிழ் இராசதானி

பாளி இலக்கியங்கள் கலிங்கமாகனுடைய படைகள், கோட்டைகள் இருந்த இடங்களாகக் கூறுவனவற்றுள் பெரும்பாலானவை வன்னிப்பிராந்தியத்துள் உள்ளடங்கு கின்றன. இவ்விடங்களையே பின்னர் சாவகனும் தனது பாது காப்பான இடங்களாகப் பயன்படுத்தியுள்ளான். இலங்கை வரலாற்றாய்வில் அதிகம் கவனத்தில் கொள்ளப்படாத பிராந்தியங்களில் இதுவும் ஒன்றாகும். இதற்கு இவற்றின் பெரும் பகுதி காடுகளாகவும், மக்கள் நடமாற்ற மற்றபகுதி யாகவும் இருந்து வந்தமை ஒரு காரணமாகும். 19ஆம் நூற்றா ண்டில் வாழந்த ஆங்கில நாட்டவரான பாக்கர் இங்கு கிடைத்த கல்வெட்டுக்களையும் பிற தொல்லியல் சின்னங் களையும் குறிப்பிட்டு ஆதியில் இங்கு தமிழ் (திராவிட) மக்கள் வாழ்ந்துள்ளார்கள் எனக் குறிப்பிட்டார்(1981). இவரின் சமகாலத்தவரான லூயிஸ் இலங்கையில் தூய தமிழ் இடப்பெயர்கள் வன்னிப்பிராந்தியத்தில் இருப்பதாகக் குறிப் பிட்டு இங்கு கிடைத்த பௌத்த, இந்து விக்கிரகங்களையும், பிற சான்றுகளையும் கொண்டு இவை புராதன அரசின் சிதைவுகளாக இருக்கலாம் என அபிப்பிராயம் தெரிவித்தார்(1895). 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் வட இலங்கையில் தமிழரசு ஒன்று தோன்றியதெனக் கூறிய பேராசிரியர் இந்திரபாலா பிற்காலத்தில் வன்னிப்பிராந் தியத்தில் உள்ள முத்தையன்கட்டு, மல்லாவி போன்ற இடங்களில் காணப்பட்ட கட்டிட அழிபாடுகளைப் பார்த்து அவை பழைய இராசதானியின் சிதைவுகளா அல்லது சோழ

www.tamilarangam.net



ர்காலத் தலைநகரங்களில் ஒன்றா என்ற கேள்வியை எழுப்பினார் (28.5.1972). இக்கூற்றுக்கள் இலங்கைத் தமிழரின் வரலாற்றுப் பழமையை யாழ்ப்பாணத்திற்கு வெளியேயும் ஆராயப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது.

இந்நிலையில் 1989-94 காலப்பகுதியில் இங்கு நாம் மேற்கொண்ட கள ஆய்வின் போது பெறப்பட்ட சில சான்றுகள் தமிழரசின் தலைநகர் பற்றிய ஆய்வில் ஓரளவு முக்கியத்துவமுடையதாக உள்ளது. தென்னியங்குள வட்டாரத்தின் (முன்பு பூநகரி வட்டாரத்திற்கு உட்பட்ட இவ்விடங்களில் பல தற்போது முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகப் பிரிவுக்குள் உட்படுத்தப்பட்டுள்ளது) மாவட்ட சுற்று வட்டாரத்தில் உள்ள நீராவி, செழியாவில், மூங்குவில் போன்ற இடங்களில் பண்டைய இராசதானியின் அழிபாடுகள் என்று சொல்லக் கூடிய பத்திற்கு மேற்பட்ட கட்டிடத்தின் சிதைவுகள் காணப்படுகின்றன. இம் மூன்று இடங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக மிகச் சிறிய சுற்றுவட்டத்திற்குள் அமைந்துள்ளன. கட்டிடத்தின் பெரும்பகுதி மண்ணுள் புதையுண்டு மண்மேடுகளாகக் காட்சியளிக்கின்றன. ஆனால் பெரும்பாலான தூண்கள் 9, 6, 3 அடி என்ற உயரத்தில் நாட்டப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன. சில தூண்கள் மண்ணில் புதையுண்டு காணப்படுகின்றன. இத்தூண்களுடன் இக்கட்டிடங் களுக்குப் பயன் படுத்தப்பட்ட செங்கற்கள், ஓடுகள் என்பனவும் புதையுண்டு காணப்படுகின்றன(படம்-1.இல. 1). சில கட்டிடப்பகுதியில் உள்ள தூண்களின் அடிப்பாகம் சதுரவடிவிலும், மேற்பாகம் வட்ட வடிவிலும் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன (புஷ்பரட்ணம் 1993:114,இல76). மற்றையவை எந்தவித அலங்காரமுமின்றி கற்கள் சதுரமாக வெட்டியெடுக்கப்பட்ட நிலையில் நாட்டப்பட்டுள்ளன. தூண்கள் நாட்டப்பட்டவற்றைஅடிப்படையாகக்கொண்டு சில கட்டிடங்கள் 30அடி நீளமும் 18அடி அகலமும் கொண்டவை எனக் கணிப்பிடமுடிகிறது (படம்-2. இல- 2). இக்கட்டிடத்தொகுதிகளில் பெரும்பாலானவை சிறுசிறு குளங்களையண்டிக் காணப்படுகின்றன. இவ்விடங் களுக்குத்

www.tamilarangam.net



தெற்கே அரசபுரத்தில் குளத்துடன் நீர்பாச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சுடுமண் குழாய்களும் காணப் படுகின்றன.

நீராவியில் உள்ள கட்டிடத் தொகுதியில் இருந்து செங்கல்லில் வடிவமைக்கப்பட்ட விநாயகர் சிற்பமும், விமானம்தாங்கிப் பொம்மையொன்றும் கிடைத்துள்ளன (படம்-1-இல 3) (தற்பேது விமானம்தாங்கிப் பொம்மை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ளது). இங்கு விநாயகர் உட்பட பல்வேறு தெய்வங்களுக்குரிய வெண் கலத்தாலான விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டு துணுக்காய் வினாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் கர்ப்பக்கிரகத்தில் வைக்கப்பட்டுள்ள அவ்விக்கிரக ங்களை பார்க்க அனுமதி கிடைக்கவில்லை. செழியாவில் உள்ள கட்டிடப்பகுதியில் தெய்வச்சிலைகள் வைப்பதற்குரிய கருங்கற் பீடமொன்று காணப்படுகிறது (படம்-1.இல.4). வட்டமான இப்பீடத்தின் நடுவில் தெய்வச்சிலைகள் வைப் பதற்குரிய சதுரமான பள்ளமொன்று காணப்படுகிறது. பீடத் தின் வெளிப்பக்கத்தில் நான்கு புறத்திலும் (வட்டமாக) குந்தியிருக்கும் நிலையில் புலியும், பாயும் நிலையில் சிங்கம் போன்ற உருவங்களும் புடைப்புச்சிற்பங்களாக அடுத்தடுத் துச் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்களுக்கு இடையில் திராவிடக் கலைமரபுக்குரிய சதுரமான தூா ண்கள் காணப் படுகின்றன. இவ்வாறான பீடங்கள் பல்லவர் காலம் தொட்டு விஜயநகரப் பேரரசு காலம் வரையுள்ள ஆலயங்களில் காணப்படுகின்றன. இவ்வாறான பீடத்துடன் கூடிய கட்டிடத்தொகுதிகள் செழியாவிலுக்கு வடக்கே மிக அண்மையிலுள்ள கோணா மலையிலும், தெற்கே சோழ மண் டலத்திலும் காணப்படுகின்றன. செழியாவிலுக்கும் அரசபுரத் திற்கும் இடைப்பட்ட பகுதியில் வாயிற் கோபுரத்திற்குரிய க்ருங்கல்லாலான வளைவு ஒன்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இவற்றை பார்ப்பதற்குப் பல தடவை எடுத்த முயற்சி அடைந்த காட்டுப்பகுதியில் பயனற்றுப் போய்விட்டது. இது போன்ற கட்டிட அழிபாடுகள் இவ்வட்டாரத்திற்கு வெளியே பனங்காமம், பாண்டியன் குளம், முள்ளிய வளை, ஈழஊர், புலச்சேரி, நாகபடுவான், கோணாவில், அம்பலப் பெருமாள், சோழிய குளம் மற்றும் சில இடங்களில் காணப்படுகின்றன.

www.tamilarangam.net



## தென்னியங்குளத்தில் உள்ள புராதன கட்டிட அழிபாடுகள்

புராதன ஓடுகள் (படம் 1)



விமானம் தாங்கிப் பொம்மை படம் 3




கட்டிட அழிபாட்டின் ஒரு பகுதி (படம்.2)



www.tamilarangam.net




சிற்பங்களுடன் கூடிய பீடம் (படம் 4)



இக்கட்டிய அழிபாடுகள் இங்கு ஒரு அரச மரபு இருந்ததைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. யாழ்ப்பாண அரசு காலத்தில் இங்கிருந்த வன்னிச்சிற்றரசுகள் சில யாழ்ப்பாண மன்னர்களுக்கு கட்டுப்பட்டுத் திறை செலுத்தியதின. ஆனால் யாழ்ப்பாண அரசு ஐரோப்பியரிடம் வீழ்ச்சியடைந்த காலகட்டத்திலும் இச்சிற்றரசுகள் இறுதி வரை அவர்களுக்கு எதிராக போராடியதாக ஒல்லாந்த, ஆங்கிலேயர் கால வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன.

www.tamilarangam.net






தமிழ் அரசு கால முக்கிய இடங்கள்

1. ஊகாவற்துறை, 2. யாழ்ப்பாணம், 3. கல்முனை, 4. மண்ணித்தலை, 5. பூநகரி, 6. மட்டுவில்நாடு, 7. கோணாவில், 8. நாகமுனை, 9. புலச்சேரி, 10. ஈழஊர், 11. வீரபாண்டியன் முனை, 12. காக்கை தீவு, 13. மன்ஊணியாறு, 14. தென்னியங்குளம், 15. இலப்பைக்கடவை, 16. சோழமண்டலம், 17. குருந்தன்குளம், 18. பனங்காமம், 19. மன்னார், 20. மாதோட்டம், 21. வலிகாமம், 22. பொம்பரிப்பு, 23. நல்லூர், 24. குடமுருட்டியாறு, 25. தியாகம், 26. பல்லவராயன், 27. கோணாவில், 28. செழியாவில், 29. சோழியகுளம், 30. அம்பலப்பெருள், 31. முல்லைத் தீவு, 32. எருப்பொத் தானை, 33. வவுனியா, 34. பதவியா, 35. அநுராதபுரம், 36. நிலாவெளி, 37. கந்தளாய்.

www.tamilarangam.net



இவ்வாறு வன்னிச்சிற்றரசுகளின் தோற்றத்தோடு வரலாற்று வெளிச்சத்திற்கு வரும் இப்பிராந்தியத்தின் வரலாற்றுப்பழமை நீண்டகாலமாக அறியப்படாத ஒன்றாகவே இருந்து வருகிறது. ஆயினும் அண்மைக்கால ஆய்வுகள் மூலம் இதன் பழமை ஓரளவுக்குத் தெரிய வந்துள்ளது (புஷ்பரட்ணம் 1993). இதை இங்குள்ள கட்டிட அழிபாடுகள் மேலும் உறுதிப்படுத்துகின்றன. இவற்றின் காலத்தை உறுதிப்படுத்தக் கூடிய கல்வெட்டு ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் இக்கட்டடிடங்கள் சிலவற்றின் தோற் றத்திற்கும் இங்கிருந்த வன்னிச் சிற்றரசர் களுக்கும் தொடர்பிருந்திருக்கலாம். இதனால் இவையனைத்தும் இவர்கள் ஆட்சியோடு தான் ஏற்பட்டவையெனக் கூறமுடியாது.

மூங்குவில், செழியாவில் கட்டிடப் பகுதியிலிருந்து கைவிரல் அடையாளம் பதிக்கப் பெற்றது போன்ற வடிவிலுள்ள இரு வகையான கூரையோடுகள் கிடைத்துள்ளன. முதலாவது வகை ஒட்டின் நுனியில் சிறிய துவாரம் போடப் பட்டுள்ளது. இது ஓடுகள் ஒன்றொடு ஒன்று தொடர்பு படுத்திக் கயிற்றினால் கட்டுவதற்காக இடப்பட்டிருக்க வேண்டும். இவைபோன்ற ஒடுகள் அநுராதபுரம், கந்தரோடை, மண்ணித்தலை போன்ற இடங்களிலும், தமிழ் நாட்டில் வல்லம், அழகன்குளம், மாளிகைத்திடல் (விழுப் புரம்). கொடுமணல், காவிரிப்பூம்பட்டினம் போன்ற இடங் களில் மேற்கொண்ட அகழ்வாய்வின் போதும் கிடைத் துள்ளன. தமிழ் நாட்டில் இதன் பயன்பாடு சங்ககாலத்திற்கு முன்பிருந்து கி,பி 8ஆம் நூற்றாண்டு வரை இருந்திருக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இதன் பயன்பாடு சற்றுக் காலம்தாழ்த்தி ஏற்பட்டதெனக் கொண்டாலும் கி.பி.10ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் பயன்படுத்தப்பட்ட தெனக் கூறமுடியாது[(1)]. இரண்டாவது வகை ஓடுகள் சற்று அகலம் கூடியவை. அத்துடன் கடும் சிவப்பு நிறமுடையவை. இதன் நுனிப்பாகம் துவாரத்திற்குப் பதிலாகக் கீழ் நோக்கி நேராக மடிக்கப்பட்டுள்ளது. இது மரத்துடன் ஒடுகள் தாங்கி நிற்பதற்காக செய்யப்பட் டுள்ளன. இலங்கையிலும் தமிழகத்திலும் துவாரமிடப்பட்ட ஓடுகளைத் தொடர்ந்து இவை புழக்கத்திற்கு வந்துள் ளன. செழியாவில் கட்டிடப்பகுதியிலுள்ள தெய்வச்சிலைகள் வைப்பதற்குரிய பீடத்தில் சில புடைப்புச் சிற்பங்கள்

www.tamilarangam.net



உள்ளன. இவற்றின் காலம் கி.பி.12 ஆம் 13ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்டதெனக் கணிப்பிடப்பட்டுள்ளது[2]. நீராவியில் கிடைத்தது போன்ற செங்கற்களில் வடிவமைக்கப்பட்ட பொம்மையுருவங்கள் சோழர்கால ஆலயங்களில் விமானங்களிலும், தூண்களிலும் காணப்படுகின்றன. இதற்கு மன்னார் குடியில் உள்ள இராசேந்திரசோழன் கால ராஜகவிண்ணகர ஆலயம் சிறந்த சான்றாகும்[3]. இவற்றின் அடிப்படையில் வன்னியில் உள்ள கட்டிடங்கள் கி.பி.9ஆம் 10ஆம் நூற்றாண்டிலிருந்து பயன்பாட்டிலிருந்திருக்கும் எனக் கருத இடமுண்டு.இவ்விடத்தில் இக்கட்டிடங்களுக்கும் அதன் சுற்றாடலில் தற்காலத்தில் புழக்கத்திலுள்ள இடப்பெயர்களுக்கும் இடையே இருந்திருக்கக் கூடிய தொடர்பையும், உறவையும் கூறுவது இக்கட்டிடங்களின் பழமை யை கண்டுகொள்ள மேலும் உதவலாம்.

இன்று வரலாற்றாராய்ச்சியில் இடப்பெயர் பற்றிய ஆய்வும் முக்கிய மூலாதாரங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. இடப்பெயர்கள் ஒரு பிரதேசத்தின் வரலாற்றையும், அதன் தனித்துவத்தையும் அடையாளம் காண்பதற்கு சில சந்தர்ப்பங்களில் முக்கிய சான்றாதாரங்களாகப் பயன்படுத்தப்படுவதுண்டு. ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தில் உள்ள முக்கிய இடப்பெயர்கள் இன்னோரு நாட்டிலும் அல்லது பிரதேசத்திலும் பெயர்களாக இருப்பதற்குப் பெரும்பாலும் வர்த்தகம், குடியேற்றம் கலாசாரம் என்பவற்றால் ஏற்படும் தொடர்புகள் காரணமாய் விளங்குகின்றன. சிலவேளைகளில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடப்பெயர்கள் பிற்காலத்தில் நினைவுபடுத்தப்படுவதற்காகப் புதிய இடங்களுக்குப் பெயரிடப்படுவதுண்டு. மறுபுறம் குறிப்பிட்ட காலப்பகுதியில் புழக்கத்திலிருந்த இடப்பெயர்கள் காலவோட்டத்தில் ஏற்படும் அரசியல், பண்பாட்டு மாறுதலாலும், மொழிவழக்காலும் தம் தனித்துவத்தை இழந்து போவதுமுண்டு. இதனால் இடப்பெயர்களை வரலாற்றுச் சான்றா தாரமாகப் பயன்படுத்தும்போது அவ்விடங்கள் தொடர்பான வரலாறு, தொல்பொருட் சான்றுகள் என்பவற்றையும் இணைத்துப் பார்ப்பது அவசியமாகிறது.

வன்னிப்பிராந்திய இடப்பெயர் பற்றி ஆராய்ந்த லூயிஸ் யாழ்ப்பாணத்தைக் காட்டிலும் தூய தமிழிலுள்ள இடப்

www.tamilarangam.net



பெயர்கள் பல இங்கிருப்பதாகக் குறிப்பிட்டார். அவ்வாறு கூறுவதற்கு இங்குள்ள பல இடப்பெயர்கள் தமிழ் நாட்டின் வரலாற்றுப் பழமை வாய்ந்த இடப்பெயர்களை ஒத்திருப் பதே காரணமாகும். ஆனால் அவ்விடப்பெயர்கள் அனைத்தையும் இங்கு குறிப்பிடாது இதுவரை நாம் அறிந்த இக்கட்டிடங்கள் அமைந்துள்ள இடங்களின் பெயர் களையும், அதன் சுற்றாடலில் உள்ள இடப்பெயர்களையும் நோக்கலாம்

மேலே கூறப்பட்ட மூன்று முக்கிய கட்டிட அழிபாடுகள் உள்ள தென்னியன்குளம் என்ற இடப்பெயர் முன்பு தென்னவன்குளம் என்று அழைக்கப்பட்ட பெயரில் இருந்து மருவியதாக இங்கு வாழும் மக்களால் கூறப்படுகிறது. தென்னவன் என்பது பாண்டியரைக் குறிப்பதாகும். தமிழ் நாட்டில் பாண்டியர் ஆட்சிக்குட்பட்ட இடங்கள் தென்னவன் குடி, தென்னவன்பட்டி, தென்னவன் நல்லூர், தென்னவன் நாடு என அழைக்கப்பட்டதற்குச் சான்றுகள் உண்டு (சேதுப்பிள்ளை1956:93). இங்கே தென்னியன் குளத்தின் தொடர்ச்சியாகக் கிழக்கே பாண்டியன் குளம், பாண்டியன் கல்லு, பாண்டிக்கமம் போன்ற இடங்கள் இருப்பதனால் தென்னியன் குளத்தைப் பாண்டியருடன் தொடர்புபடுத்த இடமுண்டு. தென்னியங்குளத்திற்கு வடமேற்கே பூநகரியில் உள்ள ஒரு இடம் வீரபாண்டியன் முனை என அழைக்கப்படுகிறது. இது சாவகமன்னனை வெற்றி கொண்ட வீரபாண்டியன் பெயரை நினைவுபடுத்து வதாக உள்ளது. கைலாயமாலை என்ற நூல் சிங்கை யாரியனுக்கு முன் யாழ்ப்பாணத்தை ஆளவந்த பாண்டிய மளவன் பொன்பற்றியூரைச் சேர்ந்தவன் எனக் கூறு கிறது. தென்னியன்குளத்திற்குத் தெற்கே மாதோட்டத்திற்கு தெற்காகப் பொன்பரப்பி, பொம்பரிப்பு என அழைக்கப்படும் இடம் உள்ளது. இது தென்பாண்டி நாட்டிலுள்ள பொன்ப ற்றியூருடன் கொண்ட தொடர்பால் இங்கு ஏற்பட்டு பிற் காலத்தில் பொன்பரப்பி, பொம்பரிப்பு எனத் திரிபடைந் திருக்கலாம்.

இங்கு பாண்டிய வம்சத்தோடு தொடர்புடைய இடப் பெயர்களை விடச் சோழருடன் தொடர்புபடுத்தக்கக் கூடிய பெயர்களே அதிகமாக உள்ளன. அவற்றுள் முதலாம் பராந் தகன் காலம் தொட்டு இரண்டாம் இராசாதிராஜசோழன்

www.tamilarangam.net



காலம் வரை தமிழகத்தில் பெரிதும் பயன்பாட்டிலிருந்த பெயர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. சோழரின் தலைநகரான தஞ்சாவூரில் உள்ள மணியாறும், குடமுறுட்டியாறும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஆறுகளாகக் கல்வெட்டுக் களிலும், இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன (சதாசிவப ண்டாரத்தார் 1974:56). சோழர்கால ஆலயங்கள், தலைநகரங் கள் அவ்வாறுகளை அண்டியே பெரும்பாலும் அமைக்கப் பட்டதைப் பெரியபுராணத்தில் வரும் சம்பவங்கள் உறுதிப் படுத்துகின்றன.(புலவர் அரசு 1949:கஎகூ).சோழமன்னருள் முதலில் வட இலங்கையை வெற்றி கொண்ட முதலாம் பராந்தகனின் இன்னொரு பெயரான குஞ்சரமல்லன் என்பது மண்ணியாற்றின் மறுபெயராகும் (சதாசிவபண்டாரத்தார் 1974:56). இவன்கால ஆலயங்கள் சிலவும் இவ்வாற்றை யடுத்தே அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாற்றின் தென னெல்லையில்தான் இவன்காலத்து முக்கிய தலைநகரங்களில் ஒன்றான நல்லூர் அமைந்துள்ளது. இங்கே பூநகரி மண்ணித் தலைச் சிவாலயத்திற்கு கிழக்கே குடமுறுட்டியாறும், தென்கிழக்கே மண்ணியாறும் இவற்றிற்கு மத்தியில் நல்லூர் என்ற இடமும் அமைந்திருப்பது நோக்கத்தக்கன. நல்லூர் என்ற இடப்பெயர் பூநகரியில் மட்டுமன்றி திருகோணமலை, களுத்துறை, குருநாகல் போன்ற இடங்களிலும் உள்ளன. இப்பெயர் இலங்கையில் பழமையானது என்பதற்கு யாழ்ப்பாணக் கோட்டையில் கிடைத்த முதலாம் இராசேந்திர சோழன் காலக்கல்வெட்டு சிறந்த சான்றாகும்(Indrapala 1971:52-6). பூநகரி நல்லூருக்கு தெற்கே தியாகம், தியாககுளம் போன்ற இடங்கள் உள்ளன- நெல் உற்பத்திக்குப் பெயர்போன இவ்விடங்களின் உரிமைப் பிரச்சனை பற்றி ஒல்லாந்தர் (பச்சுக்காரர்) கால ஆவணங்களில் சில குறிப்புக்கள் உள்ளன(3). சோழ மன்னர்களில் ஒருவனான விக்கிரமசோழனின் மறுபெயர்களில் ஒன்று தியாகசமுத்திரம் என்பதாகும். இவன் தனது ஆட்சிக்குட்பட்ட இடங்களில் ஒன்றுக்குத் "தியாக சமுத்திர சதுர்வேதி மங்கலம்" எனப்பெயரிட்டு அவ்விடத்தை திருவிடைமருதூர் கோயிலுக்கு நிவேதனமாகக் கொடுத்தான் என அவன் காலக் கல்வெட்டுக் கூறுகிறது (E.I. VI: 273). இவ்விடப்பெயர் சில இடங்களில் தியாக ஏரி எனவும் அழைக்கப்பட்டுள்ளது.

பூநகரி தியாககுளத்திற்கு அருகே பல்லவராயன் என்ற இடமும், தென்கிழக்கே தென்னியங்குளத்திற்கு அருகில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல்லவராயன் கட்டு, பல்லவராயன் கட்டு ஆறு என்ற பெயரும் புழக்கத்தில் உள்ளன. தமிழ் நாட்டில் பல்லவராயர், பல்லவராயன் பேட்டை, பல்லவராயன் சாலை, பல்லவராயன் நெந்தில், பல்லவராயஎந்தம் போன்ற இடங்கள் உள்ளன (சேதுப் பிள்ளை 1972:123). இவற்றுள் பெரும்பாலான இடங்கள் சோழர் ஆட்சியில் பல்லவராயன் என்ற பெயரில் படைத்தளபதிகளாக, அரச அதிகாரிகளாகக் கடமையாற்றியவர்களுக்கு சோழமன்னர்கள் வழங்கிய ஊர்கள், கிரமங்களாகும். இப்பெயருக்குரியவர்கள் சமகாலத்தில் இலங்கையிலும் கடமையாற்றியதைப் பொலநறுவையில் கிடைத்த கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது (S.I.I. IV: 1404). இரண்டாம் இராசாதி ராஜசோழன் காலத்தில் வட இலங்கையை வெற்றி கொண்டவன் அண்ணன் பல்லவராயன் எனப் பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டுக் கூறுகிறது. இவன் வெற்றி கொண்டதாகக் கருதப்படும் புலச்சேரி, மட்டிவால்(மட்டுவில் நாடு) ஆகிய இடங்களுக்கு தென்கிழக்கு எல்லையில் தான் பல்லவராயன் ஆறு, பல்லவராயன்கட்டு ஆகிய இடங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கன. மண்ணியாற்றையடுத்து தென்னியங்குளத்திற்கு அண்மையில் சோழியகுளம் என்ற இடமுள்ளது. இது சோழர் குளத்தைக் குறிக்கிறது. இதற்கு தமிழ் நாட்டிலுள்ள சோழியகுளம், சோழியமாளிகை போன்ற இடங்களைக் குறிப்பிடலாம்(சேதுப்பிள்ளை 1972 :23). சோழியகுளத்திற்கு அண்மையில் அம்பலப்பெருமாள் என்ற இடமுள்ளது. அம்பலம் என்பது சோழர் காலத்தில் வணிகர்கள் தங்கும் இடத்தைக் குறிக்கிறது. காலப்போக்கில் இப்பெயர் அம்பலவெளி, அம்பலப்பெருமாள் என மாறியதை தமிழ் நாட்டில் காணமுடிகிறது(Nilakanta Sastri 1984: 513-76). நீராவி என்பது வட இலங்கையில் பல இடங்களுக்குரிய பெயர்களாக உள்ளன. ஆனால் வன்னியில் பண்டைய காலக் கட்டிடங்கள் உள்ள இடத்தின் பெயராக இருப்பதனால் இதையொரு பழைய இடப்பெயராகக் கருத இடமுண்டு. இப்பெயர் சோழர் காலத்திலும் தமிழ் நாட்டில் சில இடங்களில் குறிப்பாக இராமநாதபுர மாவட்டத்தில் புழக்கத்திலிருந்துள்ளமை கல்வெட்டுக்களாலும், இலக்கியங்களாலும் அறியப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் இப்பெயரைச் சோழர் காலத்துடன் தொடர்புபடுத்தலாம்.

இங்குள்ள இடப்பெயர்களில் தென்னியங்குளத்திற்குத் தென்னெல்லையை அண்டி வெள்ளாங்குக்கு அண்மையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காணப்படுகின்ற சோழமண்டலம், சோழமண்டலக்குளம் என்பவை சிறப்பாகக் குறிப்பிடத்தன. இதன் அருகிலுள்ள சாமத்தியமேடு, கோயிற்காடு போன்ற இடங்களில் புராதன கட்டிட அழிபாடுகளுடன் இலிங்கத்துடன் கூடிய சதுரவடிவிலான ஆவுடையார் ஒன்றும் கிடைத்துள்ளது (புஷ்பரட்ணம் 1993:97,இல61). இது சதுர வடிவில் இருப்பதைக் கொண்டு இவற்றைச் சோழர் காலத்துடன் தொடர்பு படுத்தலாம். மாதோட்டத்தில் கிடைத்த இரு கல்வெட்டுக் கள் இவ்வட்டாரத்தில் கட்டப்பட்ட இரு ஈஸ்வரஆலயங்கள் பற்றிக் கூறுவது இங்கு நோக்கத்தக்கன. இச்சோழமண்டலத் தோடு தொடர்ந்து வருகின்ற மாதோட்டம் அருண்மொழித் தேவ வளநாடு என்ற பெயரால் அழைக்கப்பட்டதை அங்கு கிடைத்த சோழக்கல்வெட்டுக் கூறுகிறது (Pathmanathad 1980:22). சோழமண்டலத்திற்கு தெற்கேயுள்ள மட்டுவில் என்ற குறுச்சிப் பெயர் மட்டுவில் நாடு என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது. 12ஆம் நூற்றாண்டுக் குரிய சோழக் கல்வெட்டில் வரும் மட்டிவால் என்ற இடமும், 13ஆம் நூற்றாண்டில் பாளி இலக்கியங்கள் கூறும் மட்டிகாவட்டதீர்த்த என்ற இடமும் இம்மட்டுவில் நாட்டையே குறிப்பதாகும் (புஷ்பரட்ணம் 1993:72).இவற்றை நோக்கும் போது இவ்விடப்பெயர்கள் சோழர்கால நிர்வாகத் துடன் தொடர்புடையவை எனக் கருதலாம். சோழர் ஆட்சியில் இலங்கை முழுவ தும்மும் முடிச் சோழமண்டலம் என்ற பெயரில் சோழநிர்வாகத்துடன் இணைக்கப்பட்டு அவை வளநாடுகள், நாடுகள் எனப்பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டதைக் கல்வெட்டுக்களை அடிப்படையாக வைத்து பேராசிரியர் பத்மநாதன் விரிவாக ஆராய்ந்துள்ளார் (Pathmanathan 198019-36). இன்நிலையில் முழுநாட்டையே குறிக்கும் சோழமண்டலம் என்ற பெயர் ஏன் வன்னியின் ஒரு இடத்தின் பெயராக இருந்தது என்பதன் வரலாற்று முக்கியத்துவத்தை அறிஞர்கள் ஆராய வேண்டியுள்ளது.

மேற்கூறப்பட்ட பாண்டியர், சோழர் காலத்துடன் தொடர்புடைய இடப்பெயர்களை இங்குள்ள சுதேச இடப் பெயர்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது தமிழ் நாட்டையொத்த இடப்பெயர்கள் இங்கு தற்றெயலாகவோ, பிற்காலத்திலோ ஏற்பட்ட நிகழச்சியகக் கொள்ளமுடியா திருக்கிறது. மாறகச் சமகாலத்திலும், முற்பட்ட காலங்களிலும் தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையிலான

www.tamilarangam.net



அரசியல், வர்த்தகம், பண்பாடு, குடியேற்றம் போன்ற காரணங்களால் ஏற்பட்ட இடப்பெயர்களாகக் கொள்வதே பொருத் தமாகத் தெரிகிறது. இத்தொடர்பு இங்கு ஒரு அரசு ஏற்பட்டதன் மூலம் மேலும் நெருக்கமடைந்திருக்கலாம். இச்சான்றுகளின் பின்னணியில் இங்கு கிடைத்த நாணயங் களின் முக்கியத்துவத்தை நோக்கலாம்.

நம்பகரமான வரலாற்று மூலாதாரம் என்ற வகையில் நாணயங்களுக்கு தனிச் சிறப்புண்டு. இவை இலக்கியம், கல் வெட்டுக்களைப்போல் நீண்டகால வரலாற்றைக் கூறாவிட் டாலும் சமகால வரலாற்றைப் பெருமளவுக்குப் பிரதிபலிக் கின்ற முக்கிய சான்றுகளில் ஒன்றாகும். இவற்றிலிருந்து நாணயங்களை வெளியிட்ட மன்னன் பெயர், வம்சம், காலம், மதம், மொழி, எழுத்து, பொருளாதாரம் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகள் என்பவற்றைப் பெரு மளவுக்கு அறியமுடிகிறது.

வட இலங்கையில் தென்னாசியாவில் பயன்படுத்தப் பட்ட காலத்தால் முந்திய நாணயங்கள் தொட்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரை பயன்பாட்டிலிருந்த பல வகை நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (சிவசாமி 1974). ஆயினும் இவை பெருமளவுக்கு ஒன்றுதிரட்டப்பட்ட நிலையில் கால அடிப்படையில் இதுவரை அட்டவணைப் படுத்தப்படவில்லை. 1924இல் கொட்றிங்ரனால் வெளியிடப் பட்ட இலங்கை நாணயங்கள் என்ற நூலுக்குப் பின்னர் வெளிவந்த பெரும்பாலான நூல்களில் வட இலங்கையில் கிடைத்த நாணயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. ஆர்வமிகுதியால் திருவாளர் கலைஞானி, திருவள்ளுவர், சேயோன், பொன்னம்பலம் போன்ற பெரியவர்கள் பெருமளவு நாணயங்களை வட இலங்கையிலிருந்து சேகரித்து வைத்துள்ளனர். இவர்களுள் இலங்கை நாணவியல் சங்கத்தின் தலைவராக இருந்த சேயோன் வட இலங்கை நாணயங்கள் தொடர்பாகப் பல கட்டுரைகளையும். நூலையும் எழுதியுள்ளார். இவை சரிவர இந்திய நாணயங் களோடு ஒப்பிட்டு ஆராயப்படுமானால் இங்கு கிடைத்த நாணயங்களுக்கும் வட இலங்கைக்கும் இடையேயுள்ள உறவும், தொடர்பும் துலக்கம் பெறும். (புஷ்பரட்ணம்1998, 1999அ, ஆ, இ2000).

www.tamilarangam.net



தென்னிந்தியா குறிப்பாகத் தமிழக நாணயங்களை ஆராய்ந்து வரும் அறிஞர்கள் பலரும் அவற்றோடு இலங்கையில் கிடைத்து நாணயங்களையும் சேர்த்து ஆராயும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகிறது. இதற்கு தமிழ் நாட்டு வம்சங்களால் வெளியிடப்பட்ட பலவகை நாணயங்கள் சமகாலத்தில் இலங்கையிலும் புழக்கத்திலிருந் ததே காரணமாகும். இதற்கு வாட்டர்எலியட் *(1886)*, தேசிகாச் சாரி *(1933)*, பிடூல்ப்*(1966)*, சட்டோபாத்தியா *(1977)*, ஆறுமுக சீதாராமன்*(1985, 1986)*, நாகசாமி *(1981)*, நடன காசிநாதன் *(1995)*, கிருஷ்ணமூர்த்தி *(1997)*, அண்மையில் மைக்கல்மிச்சினர்*(1999)* போன்றோரது நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவர்கள் இலங்கை யில் கிடைத்த நாணயங்களில் உள்ள குலக் குறியீடுகள், சின்னங்கள், சிலவகை நாணயங்களில் பொறிக் கப்பட்ட பெயர்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கால அடிப்படையில் தமிழ் நாட்டு வம்சங்களுடன் தொடர்பு படுத்தியுள்ளனர். பிடூல்ப் தனது ஆய்வில் வட இலங்கையில் கிடைத்த பாண்டிய நாணயங்களை மட்டும் தனியாக வகைப்படுத்தி அவற்றின் வடிவமைப்பு, சின்னங்கள் என்பவற்றிற்கு இடையிலான வேறுபாட்டைக் கொண்டு தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களுடன் தொடர்புபடுத்திக் கூறியுள்ளார்(1966:32-5, 54-5, Plate.III, Nos 51-65). இவ்வாறான ஆய்வையே அண்மையில் மைக்கல் மிச்சினரும் மேற்கொண்டுள்ளார்(1999:134-7).இவர்கள் இரு வரும் வடஇலங்கையில் கிடைத்த நாணயங்களில் காணப்படும் சில தனித்துவமான அம்சங்களைக் குறிப்பிட டுள்ள போதிலும் இவற்றில் மீன் சின்னம் இடம்பெற்றிருப்ப தால் இவற்றைத் தமிழகத்தில் ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னர்களே வெளியிட்டனர் என்ற கருத்தை முன்வைத்துள் ளனர்.

பிடூல்ப் இங்கு கிடைத்த நாணயங்களை மூன்று பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளார். முதலாவது பிரிவில் நாணயத்தின் முன்புறத்தில் இடம் அல்லது வலப்புறம் பார்த்த நிலையில் பீடத்தின் மேல் அமர்ந்திருக்கும் காளை. இதற்கு இருபுறமும் குத்துவிளக்கு. இவற்றிற்கு மேலே விளிம்பை ஒட்டிப் பிறைச்சந்திரன். பின்புறத்தில் பீடத்தின் மேல் கிடையாக அல்லது பக்கவாட்டில் இரு மீன் சின்னங்கள்(1966:32). இவ்வகையைச் சேர்ந்த சில நாணயங்

www.tamilarangam.net



களின் முன்புறத்தில் காளை அல்லது தனியொரு மீன் சின்னம் காணப்படுகின்றது. இவை பெரிதாகவும், மிக அழகாகவும் உள்ளன. பின்புறத்தில் ஒன்று அல்லது இரண்டு மீன் சின்னத்துடன் சங்கு, பூரணகும்பம், செண்டு, தாமரைக் கொடி போன்ற பிற சின்னங்களும் இடம்பெற்றுள்ளன. இவை காலவேறுபாட்டை அல்லது நாண யங்களை வெளியிட்ட மன்னர்களுக்கிடையிலான வேறு பாட்டைக் காட்டுவதாக எடுத்துக் கொள்ளலாம். இவ்வகை நாணயங்கள் தமிழகத்தில் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. பெரும்பாலும் வட இலங்கைக்குள் கிடைத்திருப்பதால் குறிப்பிட்ட காலப்பகுதி யில் இவை புழக்கத்தில் இருந்ததெனக் கூறலாம்.

இரண்டாவது பிரிவில் இடப்புறம் பார்த்த நிலையில் நிற்கும் குதிரை. இதன் முகத்திற்கு கீழே பலிபீடம் காணப்படு கிறது. விளிம்மையொட்டி மேல்புறமாக இடப்புறத்தில் சந்திரனும், மத்தியில் சங்கும் காணப்படுகின்றன. பின்புறத் தில் பீடத்தின் மேல் கிடையாகவுள்ள மூன்று மீன் சின்னங் கள் இதன் இருபுறமும் குத்துவிளக்குகள் உள்ளன. இவ்வகை நாணயங்கள் சிவற்றின் பின்புறத்தில் வரும் பீடத்துடன் காணப்படும் மீன் சின்னங்கள் சில நாணயங்களில் கடலினுள் இருக்கும் தாவரபட்சியை உண்பது போல வடி வமைக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது பிரிவில் உள்ளவை சதுரவடிவிலும், வட்டவடிவிலும் உள்ளன. முன்புறத்தில் தனியொரு மீன் சின்னமும் இருபுறமும் குத்துவிளக்கும் காணப்படுகின்றன. இந்த அம்சமே பின்புறத்திலும் காணப்படுகின்றன.

இந்நாணயங்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் இவற்றைப் பாண்டிய மன்னர்கள் வெளியிட்டதாகக் கூறுகின்ற போதிலும் பெரும்பாலும் அவை வடஇலங்கை யில் கிடைத்ததாகவே கூறுகின்றனர். ஆயினும் வட இலங்கையில் எந்த இடத்தில் கிடைத்ததாகக் குறிப்பிட வில்லை. சேயோன் என்ற நாணயவியலாளர் தனக்கு கிடைத்த இவ்வகை நாணயங்கள் மன்னார், மாதோட்டம், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் கிடைத்ததாகத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்(1998:54-7). எமக்குக் கிடைத்தவற றில் 600 நாணயங்கள் ஈழஊரைச் சேர்ந்த குமாரசாமி உடையார் என்பவரால் மாதோட்டத்தில் இருந்து சேகரிக்கப்பட்டவை. மேலும் பல நாணயங்கள் அவருடம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உண்டு. 302 நாணயங் கள் பூநகரி வட்டாரத்தில் வசிக்கும் வடிவேலு என்பவரால் சேகரிக்கப்பட்டவை. ஏனையவை களஆய்வின் போது இங்குள்ள தென்னியங்குளம், புலச்சேரி, மட்டுவில் நாடு, பள்ளிக்குடா, மண்ணித்தலை, கல்முனை, நல்லூர் ஆகிய இடங்களிலும், யாழ்ப்பாணத்தில் கந்தரோடை, உடுத்துறை போன்ற இடங்களிலும் கிடைத் தவையாகும். அண்மைக் காலங்களில் மேற்கூறப்பட்ட வற்றுள் முதலாவது வகை நாணயங்கள் தமிழ்நாட்டில் தஞ்சாவூர், வேதாரணியம், இராமேஸ்வரம் போன்ற இடங்களிலும்(4), இலங்கையில் அநுராதபுரத்தில் மேற் கொண்ட அகழ்வாய்வின் போதும் அரிதாகக் கிடைத் துள்ளன (Bopearacgchi 1998:157). ஆனால் எண்ணிக்கையில் இவை வட இலங்கையிலேயே கூடதலாகக் கிடைத்துள்ளன.

பிடுல்ப்பே முதலிருவகை நாணயங்களையும் பாண்டிய மன்னர்கள் முதலாம் பராக்கிரமபாகுவின் பாண்டி நாட்டின் மீதான படையெடுப்புக்கு முன்னர்(கி.பி.1153-86) அதாவது பதினொராம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வெளியிட்டிருக் கலாம் என்ற காலக் கணிப்பை மேலோட்டமாகக் கொடுத் துள்ளார் (1966:32-3). ஏறத்தாழ இதையொட்டிய கருத்தையே மிற்சினரும் கொடுத்துள்ளார். ஆனால் இவற்றின் காலத்தை ஓரளவுக்கு வரையறை செய்யக்கூடிய வகையில் அண்மைக் காலத்தில் எழுத்துப் பொறிப்புக்களுடன் இவ்வகையை சார்ந்த நாணயங்கள் பல கிடைத்துள்ளன. இவற்றுள் எண் ணிக்கையில் கூடுதலான நாணயங்கள் மாதோட்டத்தில் கிடைத்துள்ளன (1998:62,Plate.J.Nos.26-9). அண்மையில் கந்தரோடையிலும் இவ்வகை நாணயம் ஒன்று கிடைத் துள்ளது (கிருஷ்ணராஜா1998). 1970இல் மாதோட்டத்தில் கிடைத்த இரு நாணயங்களை ஆய்வு செய்த மகாதேவன் அவற்றை அரிய நாணயங்கள் எனக் குறிப்பிட்டு அதில் உள்ள எழுத்துக்களை "ஸ்ரீராஜசேகர" என வாசித்தார் (Mahadevan 1970:111-20). அதே வகை நாணயத்தை 1858இல் பிறின்செப் தனது இலங்கை நாணயங்கள் என்ற கட்டுரையில் குறிப்பிட்டு அதனை "ஸ்ரீவி..கச" எனவாசித்தார் (1858:424). மிக்சினர் இந்நாணயங்களைச் சேரமன்னர் வெளியிட்டதாகக் கூறி இதில் "ஸ்ரீசேரபராக்ரம" என்ற பெயர் இருப்பதாகக் கூறுகிறார் (1998:136).

1999இல் பாண்டிச்சேரியில் நடந்த தமிழகத் தொல்லியல் கழகக் கருந்தரங்கில் மேற்குறிப்பிட்ட எழுத்துக்களுடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூடிய நாணயங்களுக்குரிய புகைப்படங்களைச் சமர்ப்பித்திருந்தோம். அதில் வேறுபட்ட மன்னர்களுக்குரிய பெயர்கள் நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளதையும், எழுத்தமைதி கொண்டு இவை கி.பி12ஆம்13ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டதென்பதையும் அறிஞர்கள் பலரும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் அவற்றில் உள்ள பெயர்களைச் ஒரே கருத்துப்பட பலரும் வாசிக்கவில்லை. இதற்கு நாணயங்களில் உள்ள எழுத்துக்கள் தெளிவற்றதாக இருப்பது ஒரு காரணமாக இருப்பினும் அதில் இடம்பெற்றிருக்கக் கூடிய பெயர் தமிழ் நாட்டு வரலாற்றில் அறியப்படாத ஒன்றாக இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு மேலே குறிப்பிட்ட முதலிரு வகை நாணயங்களும் கி.பி.11 ஆம், 12ஆம் நூற்றாண்டிற்கு உரியவை எனக் கூறலாம்.

இந்நாணயங்கள் பொறுத்து எழுப்பப்படும் முக்கிய கேள்வி இந்நாணயங்கள் யாரால் வெளியிடப்பட்ட என்பதாகும். இந்நாணயங்களை ஆராய்ந்த அறிஞர்கள் பாண்டியரின் குலமரபுச்சின்னமான மீன் நாணயங்களின் பின்புறத்தில் முக்கிய சின்னமாக இடம்பெற் றிருப்பதால் பாண்டியரே வெளியிட்டனர் என்பதாகும். மேற்சுட்டிக் காட்டப்பட்ட நாணயங்களில் முன்புறம் காளையும் பின்புறம் இரு மீன் சின்னங்களையும் கொண்ட நாணையங்களைத் தவிர பிற நாணயங்ள் எவையும் இது வரை தமிழகத்தில் கிடைத்ததற்குச் சான்றிருப்பதாகத் தெரியவில்லை. இந்நாணயங்கள் கூட தமிழகத்தில் கிடைத்ததாக இதுவரை வெளிவந்த நாணயங்கள் பற்றிய நூல்களில் குறிப்பிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் தனிப்பட்ட சிலர் வேதாரணியம், இராமநாதபுரம் போன்ற இடங்களில் கண்டுபிடித்ததை எம்மால் உறுதி செய்யமுடிகிறது[(4)]. ஆனால் இந்நாணயங்கள் இலங்கையில் குறிப்பாக வட இலங்கையில் பரவலாகக் கிடைத்துள்ளன. இதுவரை வட இலங்கையில் கிடைத்த நாணயங்களில் குறிப்பாக யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட சேது நாணயங்களை விட எண்ணிக்கையில் இவை அதிகமாகும். எமக்கு கிடைத்த 1200 நாணயங்கள் எடை, அளவு, அமைப்பு, சின்னங்கள் என்பவற்றின் அடிப்படையில் 30 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது(புஷ்பரட்ணம் 1999இ:6-9). இவை தமிழகத்தில் பாண்டிய மன்னரால் வெளியிடப்பட்டிருந்தால் இலங்கையைக் கா டிலும் அங்குதான் கூடுதலாகக் கிடைத்திருக்க வேண்டும்.

www.tamilarangam.net



இவற்றைப் பாண்டியர் தமது வெற்றியின் நினைவாக இலங்கையில் வெளியிட்டிருக்கலாம் என்ற ஒரு கருத்து முன்வைக்கப்படுகிறது. பிடுல்ப்பே இக்கருத்தை மேலும் வலுவுள்ளதாக்க பாண்டியரும் இலங்கை மன்னர்களும் காளையை சின்னமாகப் பயன்படுத்தி கலிங்க வம்சத்துடன் கொண்டிருந்த அரசியல் உறவைக் காட்டி அதன் விளைவால் இருவம்சக் கலப்புள்ள வகையில் பாண்டியர் இவற்றை வெளியிடக் காரணம் என்ற பெருளில் கூறுகிறார். ஆனால் இக்கருத்தும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. முதலாம் இராசராசசோழன் இலங்கையில் அடைந்த வெற்றியின் நினைவாக வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் "உரக ஸ்ரீலங்கவீர" என்ற பெயர் பொறித்த நாணயங்கள் இலங்கை யில் கிடைப்பது போல் தமிழ் நாட்டிலும் கிடைத்து வருகின்றன. மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழரை வெற்றி கொண்டதன் நினைவாக் வெளியிட்ட "சோணாடு கொண்டான்" என்ற பெயர் பொறித்த நாணயமும், பிற நாணயங்களும் தமிழ்நாட்டின் பல இடங்களில் கிடைப்பது போல் வடஇலங்கையிலும் ஓரளவு கிடைத்துள்ளன (புஷ்பரட்ணம் 1993:122-24). ஆனால் பாண்டியரின் இலங்கைமீதான வெற்றியின் நினைவாக இவை வெளியிடப் பட்டதாயின் வடஇலங்கையில் பரவலாகக் கிடைக்கும் போது ஏன் தமிழகத்தில் கிடைக்கவில்லை என்பது புரியவில்லை. பாண்டியர் மீன் சின்னத்துடன் காளை உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட்டுள்ளமையும் ஒரு சான்றாகக் காட்டப்படுகிறது. ஆனால் பாண்டிய நாணயங்களில் பெரும்பாலும் மன்னன் உருவத்துடன் தமிழில் மன்னன் பெயரும் பொறிக்கும் மரபு காணப்பட்டது. இந்த அம்சம் வடஇலங்கையில் கிடைத்த நாணயங்களின் மரபில் இருந்து முற்றாக வேறுபடுகிறது.

பாண்டியரின் ஆட்சி இலங்கையில் இருந்ததன் காரண மாக இந்நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கலாம் என்ற இன்னொரு கருத்துமுன்வைக்கப்படுகிறது. இலங்கையின் நீண்ட வரலாற்றில் பாண்டியர் இலங்கைமீது படையெடுத் ததற்கும், பல வெற்றிகளைப் பெற்று தமது மேலாண்மையை ஏற்கச் செய்ததற்கும், இலங்கை மன்னர்களிடம் திறைபெற் றதற்கும் பல சான்றுகள் உண்டு. ஆனால் சோழரைப் போல் இலங்கையின் ஒரு பகுதியையோ அல்லது முழு இலங்கை யையோ கைப்பற்றி தமது நேரடி நிர்வாகத்தின் கீழ் வைத்திருந்ததற்குச் சான்றுகள் இல்லை. இந்நாணயங்களில்

www.tamilarangam.net



பெரும்பாலானவை கி.பி1070 க்கும் 1215க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவை. இக்காலகட்டத்தில் சோழருக்கு அடிபணிந்த நிலையில் இருந்த பாண்டியரும், ஏனைய வம்சங்களும் இவற்றை வெளியிட்டிருப்பினர் எனவும் கூறமுடியாது. இரண்டாம்பாண்டியப் பேரரசு காலத்தில் (கி. பி.1215க்கும் 1256க்கு இடைப்பட்ட காலத்தில்) பாண்டிய மன்னர்கள் நான்கு தடவை இலங்கை மீது படையெடுத்ததாக ஆறு மன்னர்களின் மெய்க்கீர்த்திச் சாசனங்கள் கூறுகின்றன. இதன் மூலம் பாண்டியமன்னர்கள் இங்கு ஆட்சியில் இருந்த மன்னர்களிடம் திறை பெற்று தமது மேலாண்மையையும் ஏற்கச் செய்தனரே தவிர தாமோ தமது பிரதிநிதிகளையோ ஆட்சியில் அமர்த்தவில்லை. ஆகவே பாண்டியர் இலங்கை மன்னர்களாக இருந்து இந்நாணயங்களை வெளியிட்டனர் எனக் கூறுவது பாண்டியர் வரலாற்றைத் தெரிந்த நிலையில்கூறப்பட்ட கருத்தாகத் தெரியவில்லை.

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து இந்நாணயங்கள் அனைத்தும் இலங்கை நாட்டவரால் வெளியிடப்பட்டவை என்பது தெரியவருகிறது. இவற்றைத் தனிப்பட்டவர்களோ வணிகக் குழுக்களோ வெளியிட்டிருக்க முடியாது. ஆகவே இலங்கையில் இருந்த அரசு ஒன்றினால் இவை வெளியிடப்பட்டவை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய உண்மையாகும். நாணயங்களிடையே காணப்படுகின்ற வேறுபாடுகள் கால அடிப்படையில் பல மன்னர்களால் வெளியிடப்பட்டவை என்பதை உறுதிப்படுத்துகின்றன. நாணயங்களில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான சின்னங்கள் சைவசமயத்துடன் இந்நாணயங்களை வெளியிட்ட மன்னர்களுக்குரிய தொடர்பைக் காட்டுகின்றன. ஆகவே இவற்றைச் சிங்கள மன்னர்கள் வெளியிட்டிருக்க முடியாது. கிடைக்கின்ற நாணயங்கள் பெரும்பாலும் வட இலங்கையாக இருப்பதால் இவற்றை வட இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களே வெளியிட்டனர் எனக் கூறமுடியும். அப்படியாயின் இந்த அரசு எங்கே இருந்தது?. இதை வெளியிட்ட மன்னர்கள் யார் என்பது முக்கிய கேள்வியாக எழுகின்றன.

•

www.tamilarangam.net



கலிங்கமாகனுக்கு முன் தமிழ் மன்னர்கள்

வெளியிட்ட நாணயங்கள்

நாணயங்களை அடிப்படையாக வைத்து ஒரு அரசு இருந்த இடத்தை அடையாளம் காண்பது பொருத்தமான ஆய்வாக இருக்காது. ஆனால் இதுவரை கிடைத்த மேற்குறிப்பிட்ட நாணயங்களில் பெரும்பாலானவை வட இலங்கையில் தெற்கே மன்னார் தொட்டு வடக்கே கல்முனை வரை பெருமளவுக்கு வன்னிப்பிராந்தியத்தை உள்ளடக்கிய பகுதியாகும். இப்பிராந்தியத்திலேயே கலிங்கமாகனுக்குச் சார்பான பெரும்பாலான படைகள், கோட்டைகள் இருந்ததாகப் பாளிஇலக்கியங்கள் கூறுகின்றன. இக்காலத்தில் ஒரு அரசு இருந்ததற்கான கட்டிட அழிபாடுகளும் இப்பிராந்தியத்திலேயே காணப்படுகின்றன. இதனால் இந்நாணயங்களை வெளியிட்ட அரசு இப்பிராந்தியத்தில் இருந்ததெனக் கூறமுடியும்.

மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் கலிங்கமாகன் பொலநறுவையைக் கைப்பற்ற முன்னரே வட இலங்கையில் ஒரு தமிழரசு இருந்ததென்பதைத் தெரிவிக்கின்றன. அக்காலத்தில் முன்புறம் அமர்ந்த நிலையில் காளை உருவத்தையும், பின்புறம் இரு மீன் சின்னங்களையும் கொண்ட நாணயங்கள் வெளியிடப்பட்டன எனக் கூறலாம். இவை பல வடிவங் களில் வேறுபட்ட சின்னங்களைக் கொண்டிருப்பதால் இக்காலத்தில் ஆட்சியில் இருந்த பல மன்னர்கள் இவற்றை வெளியிட்டதாகக் கூறலாம் (படம்-2.வகை.1,2,3). இவை வெளியிடப்பட்ட காலம் பதினோராம் நூற்றாண்டின் நடுப் பகுதி எனப் பிடுல்பேயும்(1966:32), பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியென மிற்சினரும் (1998:135) கருதுகின்றனர். ஆனால் இக்கால இலங்கை வரலாற்றையும், எழுத்துப் பொறிப்புள்ள நாணயங்களுடன் இவற்றிருக்கு இருக்கக் கூடிய தொடர்பையும் ஒற்றுமையையும் நோக்கும் போது இவற்றின் காலம்கி.பி.1070க்கும் 1215க்கும் இடைப்பட்ட காலமாகக் குறிப்பாக கலிங்கமாகன் ஆட்சி ஏற்பட முன் வெளியிடப்பட்டவை எனஎடுத்துக்கொள்ளலாம்.

www.tamilarangam.net



| கலிங்க மாகனுக்கு முன் வெளியிடப்பட்ட நாணயங்கள்(படம்-2) |
| --- |
|  இல-1 |
|  இல-2 |
|  இல-3 |

கலிங்கமாகன் ஆட்சி தொடர்பாகப் பாளி இலக்கியங்கள் கூறும் சம்பவங்களை நோக்கும் போது அவன் படையெடுப்புக்கும் இங்கிருந்த அரசுக்கும் இடையே ஏதோ ஒரு வகையான தொடர்பு இருந்திருக்கலாம் போல் தெரிகிறது. கலிங்கமாகன் *1215*இல் பொலநறுவையைக் கைப்பற்றிய போது பண்டு வம்சத்து பராக்கிரமபாண்டியன் பொலநறுவையில் *(1212-1212)* ஆட்சி புரிந்ததாகச் சூளவம்சம் கூறுகிறது (80:51-4). ஆனால் சமகாலத்தில் பாண்டி நாட்டில் ஆட்சிபுரிந்த முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் காலக் *(1190-1218)* கல்வெட்டுக்களோ அல்லது பிற வரலாற்று மூலங்களோ இலங்கைப்படையெடுப்புப் பற்றி ஏதுவுமே கூறவில்லை. இவன் தனிப்பட்ட முறையில்-படையெடுத்தவன் எனக் காரணம் காட்டலாம். ஆனால் இன்

www.tamilarangam.net



னொரு நாட்டின் மீது படையெடுத்து வெற்றி கொள்ளும் அளவுக்குத் தனிப்பட்ட படைப்பலம் இருந்திருக்கும் எனக் கூற முடியாது. ஆகவே இவனை பாண்டியவம்சத்து வழி வந்து வடஇலங்கை அரசில் வாழ்ந்தவனாக அல்லது இவ்வரசின் சார்பாகப் படையெடுத்து பொலநறுவை அரசைக் கைப்பற்றிய மன்னனாகக் கூறுவதே பொருத்த மாகத் தெரிகிறது. இப்பின்னணியில் திகோணமலை சமஸ்கிருதக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள "சோடங்க தேவ" என்பவனையும் தொடர்பு படுத்திப்பார்க்கலாம். இது கலிங்கமாகனுக்கும் பொருந்தும். 24000 படைவீரர்களுடன் பொலநறுவையைக் கைப்பற்றி இவன் படையில் கலிங்கப் படை வீரருக் குப்பதிலாக தமிழ், கேரள, சோழ, பாண்டியப் படைவீரர்கள் இருந்ததாகப் பாளி நூல்கள் கூறுவது இங்கு நோக்கத்தக்கது. இதன் காரணமாகத்தான் இவன் சார்பான படைகள், கோட்டைகள் வட இலங்கையில் இருந்தமைக்கும், பொலநறுவையை விட்டு விலகியதும் அவன் வடஇலங்கை யில் அரச தலைநகரை மாற்றியதற்கும் காரணமாகும். இம் மன்னன் பற்றி இலக்கிய ஆதாரங்களைவிட சமகால ஆதாரங் கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் வன்னி யிலும், கிழக்கிலங்கையிலும் எதிர்காலத்தில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமானால் அவை கிடைப்ப தற்கு வாய்ப்புண்டு. வடஇலங்கையில் மன்னன் பெயர் பொறித்த பல நாணயங்கள் கிடைத்துள்ளன. அவை சரிவர வாசிக் கப்படுமானால் அவற்றிற்கும் கலிங்கமாகனுக்கும் உள்ள தொடர்பு துலக்கம் பெறலாம்.

## சாவக மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள்

கலிங்கமாகனுக்குப் பின்னர் சாவகன் வன்னியில் இருந்தே ஆட்சி செய்துள்ளான். இதற்குச் சார்பாக இவன் ஆட்சி பற்றி குடுமியாமலைக்கல்வெட்டில் இதுவரை ஆராயப்படாதிருக்கும் சில செய்திகளைச் சுட்டிக்காட்ட லாம். இக்கல்வெட்டின் ஒன்பதாவது வரியில் பாண்டிய மன்னர் வடக்கே சீனாவையும், தெற்கே நாகநாட்டையும் வெற்றி கொண்டதாகக் கூறுகிறது (சீனவடமரும் நாகத்தொ(டு)ம்). இதில் பாண்டி நாட்டிற்குத் தெற்கேயுள்ள "நாகநாடு" சாவகன் ஆண்ட நாடு என்பது தெளிவாகத் தெரிகிறது[5]. பண்டுதொட்டு அநுராதபுர அரசிற்கு வடக்கில் உள்ள பிராந்தியம் நாகதீபம், உத்திரதேசம் எனப் பாளி இலக்கியங்களில் அழைக்கப்பட்டு வருகிறது. இதை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வல்லிபுரத்தில் கிடைத்த கி.பி.3ஆம் நூற்றாண்டுக்குரிய பொற்சாசனமும் உறுதிப்படுத்துகிறது. இடைக்காலத்தில் தென்னிந்திய வம்சம் ஒன்று நாகதீபத்தின் மீது படையெடுத்ததாகச் சூளவம்சம் கூறுகிறது. இவற்றிலிருந்து சாவகன் அரசு நாகநாடு எனப்படும் வட இலங்கை என்பது தெரிகிறது. இக்கல்வெட்டு சாவகன் அரசை வெற்றி கொண்ட பாண்டியர் தமது இரு மீன்சின்னம் பொறித்த கொடியைத் திரிகூடகிரியெனும் கோணாமலையில் பறக்கவிட்டதாகக் கூறுகிறது. அறிஞர்கள் கொடிபறக்கவிட்ட கோணாமலையையும், திரிகூடகிரியையும் இரு வேறு இடங்களாகக் கூறுகின்றனர். அவற்றை ஒரு இடமாகக் கொள்ளவும் இடமுண்டு (கொஞு மலையனுந் திரிகூடகிரியினும் உருகெழு கொடிமிசை இருகயலெழுதி). இதில் கோணாமலை என்னும் இடத்தை திருகோணமலை எனக் கூறப்படுகிறது. சோழர் ஆட்சியில் பொலநறுவையைக் காட்டிலும் திருகோணமலையே முக்கிய இராணுவ, நிர்வாக மையமாகத் திகழ்ந்ததை அங்கு கிடைத்த சோழக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன (Pathmanathan 1980:19-36). இதனால் கலிங்கமாகன், சாவகன் ஆட்சியிலும் இவ்விடங்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வன்னியில் கோணாமலை எனும் இடம் காணப்படுவதுடன் அங்கு புராதன அரசுக்குரியதெனக் கருதக்கூடிய கட்டிட அழிபாடுகளும் காணப்படுகின்றன. இதனால் கல்வெட்டில் வரும் கோணாமலையை வன்னியில் உள்ள கோணாமலையுடனும் தொடர்பு படுத்திப்பார்க்க இடமுண்டு.

சரணடைந்த சாவகனின் மைந்தனை தந்தையாண்ட அரசை ஆள்வதே மரபென எண்ணி ஆனுருக்கு விரைந்து செல்ல விட்டதாகக் கல்வெட்டுக் கூறுகிறது (தந்தெதெ மரபென் நினைப் பிட்டரெசிட மகிந்து ஆனுர் புரிச்சு விரெயச்செல்கென(வி)). இதில் வரும் ஆனுர் என்பதை அநுராதபுரம் என அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் 15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குரிய அரசகேசரி பராக்கிரம பாண்டியன் காலக்கல்வெட்டிலும் *(1449-1454)*, அதேகால கட்டத்தைச் சேர்ந்த கொட்டகமச் சாசனத்திலும் அநுராத புரம் அனுரை என அழைக்கப்பட்டிருக்கும் போது 1256க்குரிய பாண்டியக்கல்வெட்டில் ஆனுர் எனக் கூறப்பட்டிருப்பது வேறுபாடாக உள்ளது. ஆனுர் நாகநாட்டில் உள்ள இடமாக கல்வெட்டிலிருந்து தெரிகிறது. அப்படியானால் இக்காலத்தில் நாகநாட்டுக்குள் அநுராதபுரமும் உள்ளடங்கி

www.tamilarangam.net



இருந்ததா அல்லது ஆனூர் என்பது நாகநாட்டில் இருந்த இன்னொரு இடமா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

மேற்கூறப்பட்ட சான்றுகள் அனைத்துக்கும் மேலாக எம்மிடம் உள்ள நாணயங்கள் சிலவற்றில் "ஸ்ரீசாகவ" என்ற பெயர் இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது(6). இதே பெயருள்ள நாணயத்தையே பிரின்செப் "ஸ்ரீவி--கச" என வாசித்துள்ளார்(1958:424). இக்காலகட்ட நாணயங்களில் வரும் வ, ச போன்ற எழுத்துக்கள் ஒரேமாதிரியான அமைப்புடையதாக இருப்பதைத் தமிழக நாணயங்களை ஆராய்வதன் மூலம் காண முடிகிறது. இதில் "ச" வாசிக்கப்பட வேண்டிய முதல் எழுத்தை "வி" எனவும் "வ" என வாசிக்கப்பட வேண்டிய கடைசி எழுத்தை "ச" எனவும் வாசித்துள்ளார். இதற்கு சாவகன் என்ற மன்னன் பற்றி அறிந்ததை விட இவர் விஜயபாகு, வீரபாகு, விக்கிர மபாகு போன்ற மன்னர்களின் வரலாற்றையும், நாணயங்ளையும் நன்கு அறிந்திருந்தமை காரணமாக இருக்கலாம். எனவே இதைச் "ஸ்ரீசாகவ" என வாசிப்பதே பொருத்தமாகும். இந்நாணயங்களுக்கும் மேலே கூறப்பட்ட வடஇலங்கை நாணயங்களுக்கும் அடிப்படையில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. மற்றைய நாணயங்களில் பாண்டிய வம்சத்துடனான உறவை அல்லது மேலாண்மை யைக் காட்டும் மீன் முக்கிய சின்னமாக இடம் பெற்றுள்ளது. ஆனால் ஸ்ரீசாகவ பெயர் பொறித்த நாணயங்களில் மீனிற்குப் பதிலாக காளை உருவமும், தேவநாகரி எழுத்தில் மன்னன் பெயரும் இடம்பெற்றுள்ளது (பம்.3 .இல1). சாவகமன்னன் பாண்டியருக்குப் பணிந்து திறைகொடுக்க மறுத்ததன் காரண மாகவே அவனைக் கொன்று அவன் மைந்தனை ஆட்சியில் அமர்த்தியதாகக் குடுமியாமலைக் கல்வெட்டுக் கூறுவதை நாணயங்களில் இடம்பெறாத மீன் சின்னமும் உறுதிப்படுத்து வதாக எடுத்துக் கொள்ள இடமுண்டு.

சாவகனைத் தொடர்ந்து அவன் மைந்தன் நாகநாட்டில் ஆட்சி செய்ததை குடுமியாமலைக் கல்வெட்டுக் கூறுகிறது. இவன் அரசும் வன்னியில் இருந்ததை அவ்வட்டாரத்தில் கிடைத்த நாணயங்கள் தெளிவுபடுத்துகின்றன. பூநகரி வட்டாரத்திலிருந்து எமக்கு கிடைத்த இருவகை நாணயங் களின் பின்புறத்தில் மூன்று மீன் சின்னம் காணப்படு கின்றன. ஆனால் .பாண்டிய மன்னர்கள் மூன்று மீன் சின்னம்

www.tamilarangam.net



பொறித்த நாணயங்களை வெளியிட்டதற்கு இதுவரை சான்றுகள் இல்லை. மதுரையைக் கைப்பற்றி ஆட்சி செய்த பொது ஒரு மீன் சின்னம் பொறித்த நாணயத்தையும், திருநெல்வேலியை கைப்பற்றி ஆட்சி செய்த போது இரு மீன் சின்னம் பொறித்த நாணயத்தையும் வெளியிட்டுள்ளனர். வட இலங்கையை வெற்றி கொண்ட போதும் தமது கொடியில் இரு மீன் சின்னங்களையே பொறித்ததாகக் குடுமியாமலைக் கல் வெட்டுக் கூறுகிறது. இதனால் பாண்டியர் இலங் கையிலும் மூன்று மீன் சின்னம் பொறித்த நாணயங்களை வெளியிட வில்லை என்பது தெளிவாகிறது. அதேவேளை மூன்று மீன் சின்னம் பொறித்த நாணயங்கள் வட இலங்கையைத்தவிர தமிழ் நாட்டிலோ பிற இடங்களிலோ இதுவரை கிடைத்த தாகத் தெரியவில்லை. 1284இன் பின்னர் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் அரசமைத்து ஆட்சி புரிந்த ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் தமது நாணயங்களில் சேது என்ற மொழியோடு காளையைத் தமது அரச இலட்சனையாகப் பயன்படுத்தியுள்ளனர். அத்தோடு அவ்வரசு தொடர்பான இலக்கியங்களில் இம்மன்னர்களின் அரச சின்னமாகக் காளையையும், சேது மொழியையும் மட்டுமே கூறுகின்றன. எந்த இடத்திலும் மீன் அரச சின்னமாகப் பயன்படுத்தியது பற்றிக் கூறவில்லை. இதனால் மூன்று மீன் சின்னம் பொறித்த நாணயங்கள் 1256இல் பாண்டியரால் சாவகன் வெற்றி கொள்ளப்பட்டதற்குப் பின் 1284இல் யாழ்ப்பாண அரசு தோன்ற முன் வெளியிடப்பட்டவை என்பது உறுதியாகிறது. இக்காலத்தில் சாவகன் மைந்தன் ஆட்சியிலிருந்தான் என்பது பாண்டியக் கல்வெட்டால் தெரியவருகிறது. இதனால் இவன் காலத்திலேயே இந்நாணயங்கள் வெளியிடப்பட்டதெனக் கூறமுடியும். பாண்டியரின் குலச் சின்னமான மீனைப் பிற வம்சத்தினர் பல்வேறு காரணங்களுக்காகப் பயன்படு த்தியுள்ளனர். சோழர் பாண்டி நாட்டை வெற்றி கொண்டதன் நினைவாக அவர்களின் மீனைத் தமது நாணயங்களில் பயன்படுத்தியுள்ளனர். இங்கே சாவகன்மைந்தன் பாண் டியரிடம் அடிபணிந்து திறை கொடுக்கச் சம்மதித்ததன் பேரில் அவனை ஆட்சி செய்ய அனுமதித்ததாகக் கல்வெட்டுக் கூறுகிறது. இதன் மூலம் பாண்டியரின் மேலாண்மையை ஏற்றதன் நினைவாக மூன்று மீன் சின்னம் பொறித்த நாணயங்களை வெளியிட்டான் எனக் கூறலாம். சில நாணயங்களின் முன்புறத்தில் இரு மீன் சின்னமும்,

www.tamilarangam.net



பின்புறத்தில் மூன்று மீன் சின்னமும் காணப்படுகின்றன (படம்.3. இல2). இதில் மூன்று மீன் சின்னம் பாண்டியரின் மேலாண்மையையும், இரு மீன் சின்னம் ஏற்கனவே இங்கு ஆட்சியிலிருந்த மன்னர்கள் வெளியிட்ட நாணய மரபையும் நினைவுபடுத்துவதாக இருக்கலாம். இவன் கால நாணயங்களில் காணக்கூடிய இன்னொரு சிறப்பு மூன்று மீன் சின்னத்துடன் நாணயத்தின் முன்புறத்தில் கம்பீரமான தோற்றத்தில் குதிரை, வேள்வி குண்டம், குத்துவிளக்கு போன்ற சின்னங்கள் இடம் பெற்றிருப்பதாகும் (படம்-3. இல.3) இவை இந்நாணயங்களை வெளியிட்ட மன்னன் ஒப்பற்ற பெருமன்னன் என்ற புகழையும், பெயரையும் பெறுவதற்காகச் செய்யப்பட்ட அசுவமேதயாகத்தைக் காட்டுகிறது எனலாம்.

பூநகரியில் கிடைத்த சாவகர் கால நாணயங்கள்(படம்-3)



இல.1



இல.2



இல.3

www.tamilarangam.net



1282இல் ஆரியச்சக்கரவர்த்திகளது அரசு தோன்ற முன் சாவகமைந்தனின் ஆட்சியே வடஇலங்கையில் இருந்த தெனக் கருத இடமுண்டு. இவன் 27ஆண்டுகள் (கி. பி1256-1282) ஆட்சி புரிந்ததால் அக்காலம் வடஇலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்கும். இவனால் வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் மூன்று மீன் சின்னம் பொறித்த பல நாணயங்கள் சாகவன் பெயர் பொறித்த நாணயங்களைப் போல் வரலாற்றுப் பழமை வாய்ந்த மாதோட்டதுறைமுகப் பகுதியிலிருந்து கிடைத் துள்ளமை இவ்வரசு ஏனைய இடங்களுடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பைக் காட்டுகிறது. சாவகனின் அரசு யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும், திருகோணமலையிலும் ஏற்பட்டிருந்ததை 14ஆம் நூற்றாண்டிற்குரிய "திரிசிங்கள கடயம்பொத்" என்ற நூல் மூலமாக அறிய முடிகிறது. இந்த இராச்சியத்தின் எல்லையிலே தமிழ்ச் சாசனங்கள் நாட்டப் பட்டிருந்ததாகவும் இந்நூல் மேலும் கூறுகிறது. இதற்குச் சார்பாகப் பத்மநாதன் யாழ்ப்பாணத்தில் புழக்கத்திலிருக்கும் சாவன்கோட்டை, சாவாங்கோட்டை, சாவகச்சேரி முதலான இடப்பெயர்களைச் சுட்டிக் காட்டுகிறார்(1992:32). சாவக பட்டினமே யாவகபட்டினமாகத் திரிபடைந்ததெனக் கூறும் பரணவிதானா இது சிங்களத்தில் யாபாபடுன எனமாறி அதிலிருந்து தமிழ் வடிவமான யாழ்ப்பாணம் தோன்றிய தென்றார் (1961:202). ஆனால் சிங்கள நூலில் 15ஆம் நூற்றா ண்டில் யாபாபடுன என்ற பெயர் பயன்படுத்திய அதேகால கட்டத்தில் திருமாணிக்குழிக் கல்லெட்டிலும், திருப்புகழிலும் யாழ்ப்பாணாயன்பட்டினம் என அழைக்கப்பட்டுள்ளது (இந்திரபாலா1972). தமிழில் பட்டினம் என்பது பாளியில் பட்டுன எனப் பண்டு தொட்டு அழைக்கப்பட்ட தற்குப் போதிய சான்றுகள் உண்டு. இதனால் சாவகன் ஆட்சியில் சாவகன்பட்டினம் அல்லது யாவகன் பட்டினம் என அழைக்கப்பட்ட இடமே பின்னர் சிங்களத்தில் யாப் பாபட்டுன எனவும், தமிழில் யாழ்ப்பாணாயன் பட்டினம், யாழ்ப்பாணப்பட்டினம் எனவும் மாறியதெனக் கொள்ள லாம். அப்படிக் கொண்டால் சாவகன் ஆட்சியிலேயே யாழ்ப்பாணம் ஒரு முக்கிய நகராக வளர்ந்திருந்ததெனக் கூறலாம்.

வரலாற்றிலக்கியங்கள் சிங்கை அல்லது சிங்கை நகரின் பின் வடஇலங்கையில் தோன்றிய அரசின் தலைநகரை யாழ்ப்பாணம் எனக் கூறுகின்றன. அப்படியானால் வன்னி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யில் இருந்த அரசின் தலைநகரைச் சிங்கை எனக் கூற இடமுண்டு.

வடஇலங்கை அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் ஒன்றான யாழ்ப்பாணவைப்வமாலை கி.பி8ஆம் நூற்றாண்டில் கதிரமலையிலிருந்து அரசாண்ட உக்கிர சிங்கன் சோழ இளவரசியான மாருதப்புரவல்லியைத் திருமணம் செய்து சில ஆண்டுகள் இங்கு ஆட்சிபுரிந்ததன் பின்னர் தலைநகரைச் சிங்கைநகருக்கு(செங்கட நகரிக்கு) மாற்றிய தாகக் கூறுகின்றது. இத்தலைநகர் மாற்றம் வன்னியில் ஏற்பட்டிருக்கலாம் என்பதை வையாபாடலில் வரும் பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது (நடராசா 1980:56-7).

"பொன்னகர் நிகருங் கதிரையம் பதிற்
போயரன் மகவினை வணங்கிப்
பின்னருகங் கிரம சிங்கசே னன்றன்
பெண்ணென விருந்ன தைற்பின்
மன்னவ னடங்காப்றினிலேகி
மாநகர் வாவெட்டி மலையிற்
றன்னிய ரற்ற மண்ட பமியற்றித்
தன்னர சியற்றின னிருந்தான்"

இதில் கூறப்பட்டுள்ள வாவெட்டி பற்றிய செய்தி பிற்கால வரலாற்றுடன் தொடர்புடையதாக இருப்பினும் அதில் தலைநகர் சிங்கை வன்னியில் ஏற்பட்ட சம்பவமும் இணைத்துக் கூறப்பட்டிருப்பதை காணலாம். இதற்குச் சார்பாக யாழ்ப்பாணவைபவமாலையில் கூறப்பட்டுள்ள ஒரு செய்தியையும் குறிப்பிடலாம் (சபாநாதன் 1953:22).

"அக்காலத்தில் சோழ நாட்டிலிருந்து இரண்டு கண்களும் குருடனாகிய கவிவீரராகவன் என்னும் யாழ்பாணனன் செங்கடநகரியிலிருந்து (சிங்கை நகர்) அரசாட்சி செலுத்தும் வாலாசிங்க மகாராஜன் பேரில் பிரபந்தம் பாடிக்கொண்டு போய் யாழ்வாசித்துப் பாடினான். அரசன் அதைக் கேட்டு மிகுந்த சந்தோசம் கொண்டு அவனுக்குப் பரிசிலாக இலங்கையின் வட திசையி லுள்ள மணற்றிடர் என்னும் நாட்டைக் கொடுத்தான்."

www.tamilarangam.net



இச்சம்பவம் 16ஆம்17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவி வீரராகவனை மையமாக வைத்துப் பாடப்பட்டதென அறிஞர்கள் கூறுகின்றனர். ஆயினும் இதில் பழைய வரலாற்றுச் சம்பவங்களும் இணைந்துள்ளன என்பதை அவர்கள் மறுக்கவில்லை. இதில் சிங்கை நகருக்கு வடக்கிலுள்ள நாடு மணற்றிடர் எனக்கூறப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் என்னும் பெயர் 15ஆம் நூற்றாண்டில் ஏற்படும் வரை இது மணற்றி. மணவை, மணற்றிடர் என அழைக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு (இந்திரபாலா 1972:63). இதில் வடக்காக வுள்ள இப்பிராந்தியத்தை சிங்கையில் இருந்து ஆட்சி புரிந்த மன்னன் யாழ்பாணனுக்கு வழங்கினான் எனக் கூறுவதிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தெற்காக சிங்கையிருந்தது தெரிகிறது. இங்கே யாழ்ப்பாணத்திற்குத் தெற்காக வன்னிப் பிராந்தியமே இருப்பது கவனத் தில் எடுத்துக் கொள்ளத்தக்கது.

வரலாற்றறிஞர்கள் மேற்கூறப்பட்ட சம்பவங்களின் உண்மைத்தன்மையையும், அதன் காலத்தையிட்டும் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர். ஆயினும் வட இலங்கை அரசு தொடர்பான தமிழ் இலக்கியங்கள் பலவும் ஏகோபித்த நிலையில் சோழர் வருகையுடன் யாழ்ப்பாணத்திலிருந்த கதிரமலை என்னும் தலைநகர் சிங்கை நகருக்கு இடம்மாறியதைச் சூசகமாகத் தெரிவிக்கத்தவறவில்லை. இந்நூல்கள் எழுந்த 17ஆம், 18ஆம் நூற்றாண்டில் இலங்கையிலோ அல்லது தமிழ் நாட்டிலோ சோழ வம்சம் ஆட்சியில் இருக்கவில்லை. இவ்வம்சத்தின் முன்னைய காலச் சாதனைகளை அறிந்துகொள்ளும் அளவிற்கு வரலாற்று ஆய்வுகளும் இக்காலத்தில் நடைபெற்றிருக்கவும் இல்லை. அப்படியிருந்து 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரசின் தலைநகர் சிங்கையை சோழரின் யாழ்ப்பாண வருகை யோடு கூறியிருப்பதை வெறும் கட்டுக்கதையெனவும் எடுத்துக் கொள்ள முடியாது இருக்கிறது.

இத்தலைநகர் மாற்றத்திற்கும் முதலாம், இரண்டாம் பராந்தக சோழ மன்னர்களது இலங்கை மீதான படையெடுப்புகளுக்கும் இடையில் ஒருவித தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. முதலாம் பராந்தக சோழன் மதுரையைக் கைப்பற்றிய போது தோல்வியடைந்த பாண்டிய மன்னன் இராசசிம்மன் தன் முடியையும், செல்வத்தையும் இலங்கை மன்னனிடம் அடைக்கலமாக வைத்து விட்டுத் தன் தாய்

www.tamilarangam.net



நாடான கேரளத்திற்குச் சென்றான் (C.V. 50:40-5). இதைப் பெறுவதற்காக பராந்தகன் இலங்கை மன்னனிடம் தூதனுப்பிய போது அதை ஆட்சியிலிருந்த நான்காம் மகிந்தன் கொடுக்க மறுத்ததும் பராந்தகன் இலங்கை மீது படையெடுத்து அநுராதபுர அரசை வெற்றிகொண்டான் (S.I.I.II:35). இவனைத் தொடர்ந்து இரண்டாம் பராந்தக சோழன் காலத்தில் (கி.பி.957-73) அவன் சார்பாக கொங்கு நாட்டுப் பராந்தக சிறிவேளாளன் இலங்கைமீது படையெடுத்து உயிர் துறந்தான் எனச் சோழக் கல்வெட்டுக் கூறுகிறது (S.I.I.V:980). சூளவம்சம் நான்காம் மகிந்தன் ஆட்சி செய்த காலத்தில்(கி.பி. 956-72) தென்னிந்திய மன்னன் வல்லபன் நாகதிபத்தின் மீது படையெடுத்து தோல்வியடைந்தான் எனக் கூறுகிறது (53:12-6). இச்சம்பவத்தை வெசகிரியில் கிடைத்த கல்வெட்டும் உறுதிப்படுத்துகிறது (E.Z.I:35-51). இப்படையெடுப்பை மேற்கொண்ட மன்னனைச் சிலர் ராஸ்ரகூடர் எனவும், வேறு சிலர் இரண்டாம் பராந்தகன் எனவும் கூறுவர். இவன் யாராக இருப்பினும் போர் நடந்த இடம் நாகதீபம். இப்போர் நாகதீபத்தைக் கைப்பற்ற நடந்ததா அல்லது நாகதீபத்திலிருந்து அநுராதபுர அரசைக் கைப்பற்ற நடந்ததா என்பது தெரியவில்லை. ஆனால் பாளி இலக்கியத்தில் வழக்கத்திற்கு மாறாக தென்னிந்தியப்படையெடுப்போடு நாகதீபம் தொடர்பு படுத்தப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத் தக்கது.

### பராந்தகனின் ஈழ வெற்றியும் உரக நாணயமும்

முதலாம் பராந்தக சோழனின் இலங்கை மீதான வெற்றியைப் பற்றிச் சூளவம்சம் எதுவுமே கூறாத நிலையில் அவனது 38வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு "மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்" எனச் சிறப்பித்துக் கூறுகிறது(S.I.I.II:35). இவ்வெற்றியை கலிங்கத்துப்பரணியும் (பாட்டு 200), இராஜராஜன்உலாவும்(வரி39-40) கூறுகின்றன. இவற்றில் மிகைப்படுத்தப்பட்ட செய்திகளும் இருக்கலாம். ஆனால் யாழ்ப்பாணத்திற்கு வெளியே பூநகரி மண்ணித்தலை என்ற இடத்தில் பெருமளவு மண்ணில் புதையுண்ட நிலையில் சோழர் கால ஆலயமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கல்வெட்டுக்கள் இதுவரை கிடைக்காவிட்டாலும் ஆலயத்தின் அமைப்பு, பாணி, கலைவேலைப்பாடுகள், பயன்படுத்தப்பட்ட ஒடுகள்(7) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இது

www.tamilarangam.net



முற்காலச் சோழக் கலைமரபுக்குரியதெனக் கூறமுடிகிறது (புஷ்பரட்ணம் 1993:83-95) (படம்-4.இல.1)). அதே போல் பல்லவராயன் கட்டுப்பகுதியில் கிடைத்த சூரிய சிற்பமும் பிற்பட்ட பல்லவ அல்லது முற்பட்ட சோழக்கலைமரபுக் குரியதாக அடையாளம் காணப்பட்டுள்ளது (படம்-4. இல2)[8]. பூநகரியில் புழக்கத்தில் இருந்து வரும் குடமுருட்டியாறு, மண்ணியாறு, நல்லூர், சோழியகுளம் போன்ற இடப்பெயர்கள் பெரிதும் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் சோழமண்டலத்தில் புழக்கத்திலிருந்த இடப் பெயர்களாகும். பாண்டியர், சோழர் அநுராதபுர அரசை வெற்றி கொள்ள முன்னர் வட இலங்கையில் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டியிருக்கலாம். அவ்வாறு கருதுவற்குப் பாளி இலக்கியங்களிலும் சில சான்றுகள் உண்டு. பேராசிரியர் கே. எம்.டி. சில்வா இக்காலத்தில் தமிழகப் படையெடுப்பாளர் களுக்கு வட இலங்கையே தளமாக இருந்ததென்பதை சான்றாதாரங்களுடன் குறிப்பிட்டுள்ளார் (1980). இவற்றின் பின்னணியில் வைத்து நோக்கும் போது முதலாம் பராந்தகன் காலத்தில் அநு ராதபுரத்தின் மீது படையெடுக்க முன்னர் அல்லது படை யெடுத்ததன் பின்னர் கதிரமலையில் இருந்த அரசு வன்னிக்கு மாற்றப்பட்டு சோழர் ஆதரவுடனான அரசு ஒன்று ஏற்பட்டிருக்கலாம். அவ்வரசு பின்னர் முதலாம் இராஜராஜ சோழனின் இலங்கை வெற்றியோடு சோழ நிர்வாகத்திற்குள் உட்பட்டிருக்கலாம். அவ்வாறு கருதுவதற்கு சில காரணங்களும் உண்டு.

| பூநகரியில் உள்ள முற்காலச் சோழரின் ஆலயம், சிற்பம்(படம்-4) | |
|---|---|
| மண்ணித்தலைச் சிவாலயம்(இல 1) | சூரிய சிற்பம் (இல 2) |
|  |  |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பராந்தக சோழனின் உரக நாணயம்

முதலாம் இராஜராஜா சோழன் இலங்கையில் அடைந்த வெற்றிக்காக "ஸ்ரீலங்கவீர" "உரக" என்ற பெயர் பொறித்த பொன், செப்பு நாணயங்களையும் இலங்கையில் வெளியிட்டான் எனக் கூறப்படுகிறது. அவ்வாறு கூறுவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. இவை பெரும்பாலும் இலங்கையில் குறிப்பாக வட இலங்கையிலும் தமிழ்நாட்டில் சோழமண்டலத்திலும் கிடைத்துள்ளன. பாண்டிய நாட்டையும், சேரநாட்டையும் வெற்றி கொண்டதற்காக செப்பு நாணயங்களை வெளியிட்ட இராஜராஜசோழன் இலங்கை வெற்றிக்காக பொன் மற்றும் பொன்முலாம் பூசப்பட்ட நாணயங்களை வெளியிட்டுள்ளான். வடிவமைப்பிலும் இலங்கையில் வெளியிடப்பட்ட இந்நாணயங்களுக்கும் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்ட இவன் கால நாணயங்களுக்கும் அடிப்படையில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டு நாணயங்களில் சிறிய கோடாகக் காட்டப் பட்டுள்ள மன்னன் அல்லது மனித உருவம் இலங்கை நாணயங்களில் தடித்த கோட்டில் காட்டப் பட்டுள்ளது., இந்த வேறுபாடு "ராஜராஜ" "உரக" "ஸ்ரீலங்கவீர" என்ற பெயர்களுக்கிடையிலான எழுத்தமைதியிலும் காணப்படுகிறது (படம்.5.இல.1,2). தமிழ் நாட்டு நாணயங்களில் சிறிதாக உள்ள குத்துவிளக்கு இலங்கை நாணயங்களில் பெரிதாகக் காட்டப்பட்டுள்ளது. இவற்றில் காணக்கூடிய சிறப்பம்சம் இலங்கை நாணயங்களில் சங்கு ஒரு முக்கிய சின்னமாக இடம்பெற்றிருப்பதாகும் (ஆறுமுக சீதாராமன் 1989: 1-6). இவற்றின் அடிப்படையில் "உரக" "ஸ்ரீலங்கவீர" என்ற பெயர் பொறித்த நாணயங்கள் இராஜராஜ சோழனால் இலங்கையில் உள்ள அக்கசாலையில் வெளியிடப்பட்டதென்பதை அறிஞர்கள் பலரும் ஏற்றுள்ளனர்.

இவற்றுள் உரக என்ற பெயர் பொறித்த நாணயம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதன் முன்புறத்தில் நிற்கும் மனித உருவமும் மேலே உயர்த்தப்பட்ட இடக்கையில் பூரணகும்பமும், கீழ்நோக்கிய வலக்கையில் வச்சிராயுதம் போன்ற பொருளும், பின்புறத்தில் விளிம்பைச் சுற்றி வட்டமான சிறு புள்ளிகளும், அதன் உட்புறமாக விளிம்புடன் சங்கும் மத்தியில் தேவநாகிரி எழுத்தில் "உரக" என்ற பெயரும் இடம்பெற்றுள்ளன. ஆயினும் இப் பெயரின்

www.tamilarangam.net



வாசிப்பையிட்டு அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் உண்டு. பிறின் செப்(1885), எலியட் (1970133) முதல் அண்மையில் மிற்சினர்(1998138) வரை பலரும் இப்பெயரை "உரக", "தரக", "இரக", "அக" எனப் பலவாறு வாசித்துள்ளனர். சிலர் இதன் முன்னெழுத்தை தமிழாகவும், வேறுசிலர் கிரந்தமாகவும் கருதுகின்றனர். அண்மையில் ஈழத்து வெற்றியும் ராஜராஜன் காசும் என்ற தலைப்பில் தஞ்சாவூரில் கிடைத்த உரக நாணயம் பற்றி ஆராய்ந்த குடவாயில் பாலசுப்பிரமணியம் நாணயத்தில் வரும் பெயருக்குரிய எழுத்துக்கள் 11ஆம் நூற்றாண்டிற்குரிய தமிழ் மற்றும் தேவநாகரி எனக் குறிப்பிட்டு இவ்வகை நாணயம் ராஜராஜனால் வெளியிடப்பட்டதென்பதற்குப் பல சான்றாதாரங்களைக் கொடுத்துள்ளார்(1988). ஆனால் கொட்றிங்ரன் உரக என்ற பெயருடன் தரக, அக என்ற பெயரிலுள்ள நாணயங்களை தனது நூலில் புகைப்படத்துடன் பிரசுரித் துள்ளார் (1924:60-2, Plate.III, Nos.59-60). நாணயங்களில் பொறிக்கப பட்ட எழுத்துக்களுக்கிடையிலான வேறு பாட்டை நோக்கும் போது உரக என்ற பெயருடன் தரக, அக போன்ற பெயரிலும் நாணயங்கள் வெளியிடப்பட்டது எனக் கருத இடமளிக்கிறது. இருப்பினும் இங்கு உரக என்ற பெயரிலுள்ள நாணயங்கள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் முதலாம் இராஜராஜ சோழன் காலத்திலிருந்தே நிற்கும் அல்லது இருக்கும் மனித உருவத்துடன் தேவநாகரி எழுத்தில் மன்னன் பெயர் பொறித்த நாணயங்கள் கிடைத்து வருகின்றன. இம்மரபைச் சோழ மன்னர்கள் இலங்கையில் இருந்து பெற்றதால் காலப்போக்கில் தமிழ் நாட்டு வம்சங்கள் வெளியிட்ட நாணயங்களில் வரும் மனித உருவம் பொறித்த நாணயங்களை இலங்கை மனிதன் நாணயம்(Ceylon Man type Coin) என நாணயவியலாளரால் அழைக்கப்பட்டுவருகிறது. இலங்கையில் பண்டு தொட்டு மனித உருவம் பொறித்த நாணயங்களை வெளியிடும் மரபு இருந்துள்ளது(Bopearachchi 1999:104). இதில் மனித உருவத்தைக் கோட்டுருவில் வார்க்கும் மரபு சோழர் வெற்றிக்கு முன்னரே ஏற்பட்டு விட்டது(Michiner1998:137, Codrington 1924:58-60). இக்காலத்தில் இலங்கை சோழரால் வெற்றி கொள்ளப்பட்டதால் அதன் நினைவாக இலங்கை நாணய மரபைப் பின்பற்றி சோழா மன்னன் இலங்கையிலேயே உரக என்ற பெயர் பொறித்த நாணயங்களையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளியிட்டான் எனக் கூறுவது பொருத்தமாகும். ஆனால் தமிழ் நாட்டில் மனித உருவத்துடன் மன்னன் பெயர் பொறித்த நாணயங்கள் இராஜராஜசோழன் காலத்திலிருந்து கிடைப்பதால் அவனே உரக என்ற பெயர் பொறித்த நாணயத்தையும் வெளியிட்டான் எனக் கூறப்பட்டு வருகின்ற கருத்து பல நிலைகளில் ஆராயப்பட வேண்டியுள்ளது.

முதலாம் இராஜராஜ சோழனுக்கு முன்னரே வட இலங்கை முதலாம் பராந்தகனால் வெற்றி கொள்ளப்பட்டதை அவனது 38வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு மதுரை வெற்றியோடு கூறப்பட்டுள்ளது. இவன்காலத்தில் இருந்துதான் இலங்கையோடு தொடர்புடைய ஈழக்காசு, ஈழக்கருங்காசு என்ற செய்தி கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இதுவரை தமிழகத்தில் கிடைத்த கல்வெட்டுக்களில் 19 கல்வெட்டுக்கள் ஈழக்காசு, ஈழப்பொற்காசு, ஈழக்கருங்காசு பற்றிக் கூறுகின்றன. இதில் 17 கல்வெட்டுக்கள் முதலாம் பராந்தக சோழன் காலத்திற்குரியவை. இவற்றுள் 14 கல்வெட்டுக்கள் தஞ்சாவூரில் கிடைத்தவை(9). இப்புள்ளி விபரம் பராந்தகனுக்குப் பின்னர் ஈழக் காசுபற்றிய செய்தி தமிழ் நாட்டில் படிப் படியாக மறைந்து போவதைக் காட்டுகின்றன. இத்தனைக்கும் பரந்தகனால் வெளியிடப்பட்டவை எனக் கூறக்கூடிய எந்தவொரு நாணயமும் தமிழ் நாட்டில் இது வரை அடையாளம் காணப்படவில்லை. சிலர் "மதிராந்தன்" என்ற பெயர்பொறித்த நாணயத்தை மதுரை வெற்றிக்காக பராந்தகன் வெளியிட்டிருக்கலாம் என்பதற்கு மதுரை வெற்றிபற்றிய கல்வெட்டை ஆதாரமாகக் காட்டுகின்றனர் (நடன காசிநாதன் 1995:59-60). ஆனால் முன்னாள் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குனர் நாகசுவாமி அதை உத்தம சோழன் வெளியிட்ட நாணயமாகக் கூறுகின்றார் (198136). "மதிராந்தன்" என்ற பெயர் பொறித்த நாணயத்தை மதுரை வெற்றிக்காக பராந்தகன் வெளியிட்டான் எனக் கொண்டால் சமகாலத்தில் வடஇலங்கையில் அடைந்த வெற்றிக்காகவும் நாணயம் வெளியிட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இல்லை அதை உத்தமசோழனே வெளியிட்டான் எனஎடுத்துக் கொண்டால் பராந்தகன் காலக் கல்வெட்டுக்களில் வரும் ஈழக்காசு எது என்ற கேள்வி எழுகின்றது.

www.tamilarangam.net



தமிழ் நாட்டு மன்னர்கள் இன்னொரு நாட்டை வெற்றி கொண்டதன் நினைவாக அந் நாட்டுப் பெயரில் நாணயங்கள் வெளியிட்டதற்குப் போதிய சான்றுகள் உண்டு. மாறவர் மன் சுந்தரபாண்டியன் சோழநாட்டை வென்றதற்காக "சோள நாடு கொண்டான்" என்ற பெயரிலும், முதலாம் இராஜ ராஜ சோழன் சேரநாட்டை வெற்றி கொண்டதன் நிவைாக "மலைநாடு கொண்ட சோளந்" என்ற பெயரிலும், இராஜேந்திர சோழன் கங்கை வெற்றிக்காக "கங்கை கொண்ட சோழன்" என்ற பெயரிலும் நாணயங்களை வெளியிட்டுள்ளனர் (Naga swamy1981). ஆனால் ஒரு நாட்டு வெற்றிக்காக இரு பெயரில் தமிழ்நாட்டு மன்னர்கள் நாணயங்கள் வெளியிட்டதற்கு இது வரை சான்றுகள் கிடைக்கவில்லை. இராஜராஜசோழனின் இலங்கை வெற்றிக்காக "ஸ்ரீலங்கவீர" என்ற பெயரில் நாணயம் வெளியிட்டான் என்பதைப் பல்வேறு சான்றாதாரங்களில் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. அப்படியிருக்கும் போது இந்நாணயத்துடன் ஏன் "உரக" என்ற பெயரில் இன்னொரு நாணயத்தை வெளியிட்டான் என்பது புரியவில்லை. மேலும் இவன்கால நாணயங்கள் இவனது பட்டம் அல்லது விருதுப்பெயர்களை அடிப்படையாகக் கொணடே வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் உரக என்பது அவனது பட்டமோ விருதுபேரோ அல்ல. அப்படியானால் இந்நாணயத்தை வட இலங்கையை வெற்றி கொண்ட முதலாம் பராந்தகனுடன் தொடர்பு படுத்திப் பார்க்கலாம்.

வடமொழியில் உரக என்பதற்கு பாம்பு, நாகம், நாகர் (உரகர்) எனப் பல கருத்துண்டு. யாழ்ப்பாணப் பேரகராதியில் இதற்கு நாகவல்லி, மலை போன்ற கருத்துக்கள் உண்டு (T.L:438). ஏறத்தாழ இதேகருத்தையே "அக" என்ற சொல்லும் குறித்து நிற்கின்றன. சிலப்பதிகாரத்திலும், மணிமேகலை யிலும் நாகம் என்பதைக் குறிக்க உரக என்றும், நாகரைக் குறிக்க உரகர் என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பின் மூவர் தேவாரத்தில் நாகம் என்பதைக் குறிக்க உரகம் என்னும் சொல்லும் பின்னர் ஜெயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியில் நாகர் என்பதைக் குறிக்க உரகர் என்ற சொல்லாட்சியும் கையாளப்பட்டுள்ளது (பாலசுப்பிர மணியம் 1988). கி.பி.8ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டின் காவிரியின் தென்கரையில் உள்ள பாம்பூர் உரகபுரம் என அழைக்கப்பட்டதை பல்லவர் கால கூரம் செப்பேடுகள் கூறுகின்றன (பல்லவ செப்பேடுகள் முப்பது :44,65).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வுரகபுரத்தை அறிஞர்கள் சிலர் உறையூர் எனவும் கருதுகின்றனர். (வேங்கடசாமி19 83:251). பிற்காலத்தில் இலங்கையில் பௌத்த மதத்தைப்பரப்பிய புத்ததத்ததேரோ இவ்வுரகபுரத்திலிருந்தே பாளிமொழியில் பல நூல்களை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதியில் இலங்கையில் வாழ்ந்த மக்களில் ஒரு பிரிவினரை நாகர் எனப் பாளி நூல்கள் கூறுகின்றன. கி.பி1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 80கல்வெட்டுக்கள் நாக மக்கள் பற்றியும், நாக என்ற பெயரிலுள்ள சிற்றரசர்கள் பற்றியும் கூறுகின்றன. பாளி நூல்கள் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த நாக என்ற பெயரிலுள்ள பல மன்னர் களைப்பற்றிக் கூறுகின்றன. வடஇலங்கையில் கிடைத்த நான்கு பிராமிக் கல்வெட்டுக்கள் நாகச் சிற்றரசர்கள் பற்றிக் கூறுகின்றன. கி.பி.7ஆம் நூற்றாண்டில் தமிழர் படையுடன் வந்து ஸ்ரீநாக என்பவன் வடஇலங்கையை(உத்தரதேசம்) கைப்பற்றமுற்பட்டான் எனச் சூளவம்சம் கூறுகிறது(44:703). ஆதியில் நாக என்ற பெயர் இலங்கையில் பரந்துபட்ட மக்களோடு தொடர்புடைதாக இருந்தாலும் காலப்போக்கில் அப்பெயர் பெரும்பாலும் தமிழ் மக்களுடன் தொடர்புடைய தாக இருந்து வருவதை இன்றும் வழக்கிலுள்ள நாகன், நாகி, நாகம்மாள், நாகமுத்து, நாகநாதன், நாக ராசா, நாகவண்ணன் போன்ற ஆட்பெயர்களும், நாகபடுவான், நாகமுனை, நாகர்கோயில், நாகதேவன்துறை, நாகதாழ்வு போன்ற இடப்பெயர்களும் உறுதிப்படுத்துகின்றன. பண்டைய கல்வெட்டுக்களிலும், மட்பாண்டங்களிலும் வரும் "ம" என்ற ஒலிப்பெறுமானத்தைக் கொடுக்கும் பிராமி எழுத்தையொத்த குறியீட்டை நாகர்களின் குலச்சின்னமாகக் கூறும் பேராசிரி யர் வேலுப்பிள்ளை அக்குறி யீடு இலங்கையின் ஏனைய வட்டாரங்களை விட வடஇலங்கையில் கூடுதலாகக் காணப் படுவதற்கு இங்கு நாக இன மக்கள் வாழ்ந்ததே காரணம் என்றார் (1980A:54).

நாக இனமக்கள் பற்றிக் கூறும் பாளி நூல்கள் அநுராதபுரத்திற்கு வடக்கிலுள்ள பிராந்தியத்தை நாகதீப(ம்) எனவும், இங்கு இரு நாக மன்னர்களிடையே நடந்த சிம்மாசனப் போட்டியை புத்தர் தீர்த்து வைத்ததாகவும் கூறுகின்றன(M.V. VIII:54-3). இந்நிகழ்ச்சியை மணிமேகலை, சிலப்பதிகாரத்தில் வரும் சம்பவங்களுடன் தொடர்புபடுத்தி அவற்றில் வரும் நாகநாடு இலங்கையில் உள்ள

www.tamilarangam.net



நாகதீபத்தைக் குறிப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது (சிற்றம்பலம; 1993:67-80). கலிங்கத்துப்பரணியில் ஜெயங்கொண்டார் இராஜபாரம்பரியம் பற்றிக் கூறும் போது சோழ வம்சத்து கிள்ளிவளவன் நாகநாட்டு இளவரசியை மணந்த கதையைக் கூறுகிறார். இதேபோல் பல்லவர்கால வேலூர்ப் பாளையச் செப்பேடு பல்லவமன்னன் ஒருவன் நாகர் குலமகளை மணந்த செய்தியைக் கூறுகிறது (பாலசுப்பிரமணியம்1988). ஆயினும் இந்நாகதீபம் எவ்விடத்தைக் குறித்ததென்பதையிட்டு அறிஞர்களிடையே பொதுவான கருத்தொற்றுமை காணப்படவில்லை. சிலர் இவ்விடம் மகாவலி கங்கைக்கு வடக்கிலுள்ள பிராந்தியம் எனவும், வேறு சிலர் யாழ்ப்பாணம் எனவும், இன்னும் சிலர் நயினாதீவு எனவும் கருத்து தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் வல்லிபுரம் என்ற இடத்தில் கிடைத்த கி.பி 3ஆம் நூற்றாண்டிற்குரிய பொற்சாசனத்தில் நாகதீவ(ப) என்ற பெயர் வருவதைக் கொண்டு இப்பெயர் யாழ்ப்பாணத்தையே குறித்ததாக அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர். சிலர் இதன் தலைநகர் மணிமேகலையில் வரும் மணிபல்லவம் எனவும், அது தற்போது வல்லிபுரத்தில் உள்ள பல்லப்பை என்ற இடமெனவும் கூறுகின்றனர் (கிருஷ்ணராஜா 1998:25). அநுராதபுரத்தில் 300ற்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டும் அக்கல்வெட்டுக்கள் எதிலும் குறிப்பிடப்படாத அநுராதபுரம் என்ற பெயர் தென்மேற்கே அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (Paranavithana 1970,CVII, NO706). வடமத்திய மாகாணத்தில் கிடைத்த இன்னொரு பிராமிக் கல்வெட்டு தமிழில் நாகநகர் பற்றிக் கூறுகிறது. கலாநிதி இரகுபதி இவ்விடம் கந்தரோடையைக் குறித்திருக்கலாம் எனக் கருதுகிறார் (பிரசுரிக்கப் படாதது). நிக்லஸ் என்ற அறிஞர் இந்நாகநகரை கி.பி9ஆம் நூற்றாண்டிற்குரிய கல்வெட்டில் வரும்பெயருடன் தொடர்புபடுத்தி இது வவுனியாவின் வட எல்லையில் இருந்த இடமாகக் கூறுகிறார் (1962:81). இதிலிருந்து கல்வெட்டில் வரும் பெயர்கள் அவை காணப்படும் இடங்களை மட்டும் குறித்ததாகக் கொள்வது பிற மூலதாரங்களின் அடிப்படையில் உறுதிப்படுத்த வேண்டும் என்பதைக் காட்டுகிறது. அதிலும் ஆரம்பகாலக் கல்வெட்டுக்கள் பௌத்த சங்கத்திற்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றிக் கூறுவதால் பிற இடங்களுக்குச் சென்று தானம் அளித்தோர் தமது தானத்துடன் தனது சொந்த இடத்தையும் கல்வெட்டில் பொறிப்பது ஒரு வழக்கமாகும்.

www.tamilarangam.net



ஆரம்பத்தில் ஒரு இடத்தைக் குறித்த பெயர் காலப் போக்கில் பரந்த பிரதேசத்தை சில வேளைகளில் நாட்டின் பெயராகப் பயன்படுத்தப்பட்டதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உண்டு. கி.மு. 5ஆம் நூற்றாண்டில் வடமேற் கிலங்கையில் உள்ள ஒரு இடத்தின் பெயராக இருந்த தம்பபண்ணி நீண்டகாலம் இலங்கையின் பெயராக அழைக்கப்பட்டதற்குப் பல சான்றுகள் உண்டு. அது போல் வட இலங்கையின் குறிப்பிட்ட இடத்தின் பெயராக இருந்த நாகதீபம் படிப்படியாக பரந்த பிரதேசத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தொடக்க காலப் பாளி நூல்களில் நாகதீபம் என்ற பெயர். பிற்காலப் பாளி நூல் களில் நாகதீபம், உத்தர தேசம் என மாறிமாறி அழைக்கப் பட்டதை இக்கூற்றிற்குச் சார்பாகக் கொள்ளலாம். 13ஆம் நூற்றாண்டுக்குரிய குடுமியாமலைக் கல்வெட்டில் வரும் நாக நாடு யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடஇலங்கையின் பரந்த பிரதேசத்தைக் குறிக்கிறது.

முதலாம் பராந்தக சோழன் காலத்தில் வடஇலங்கை "உரக" என்ற வடமொழிச் சொல்லால் அழைக்கப்பட்டிருக் கலாம் என்பதற்கு நிலாவெளியில் கிடைத்த முற்காலச் சோழருக்குரிய கல்வெட்டைக் குறிப்பிடலாம். அண்மையில் இக்கல்வெட்டை விரிவாக ஆராய்ந்த பத்மநாதன் பத்தாம் நூற்றாண்டில் தமிழும் கிரந்த எழுத்தும் கலந்து பொறிக்கப் பட்ட இக்கல்வெட்டு இங்குள்ள மச்சகேஸ்வர ஆலயத்திற்கு "உராகிரிகாம" "கிரிகண்ட கிரிகாம" என்னும் இடங்களில் இருந்து வழங்கப்பெற்ற தேவதானம் பற்றி கூறுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் "கிரிகண்ட கிரிகாம" என்ற இடம் பண்டு தொட்டு திருகோணமலை மாவட்டத்தில் இருந்து வருவதற்குப் பாளி இலக்கியங்களையும், கல்வெட் டுக்களையும் சான்றாதாரமாகக் காட்டி இது திரியாயிலுள்ள கந்தசாமி மலையினை உள்ளடக்கிய நிலப்பரப்பாக இருக்கலாம் என்கிறார் (1998:17-8). இதில் "உராகிரிகாம" என்ற இடம் எங்கேயிருந்தது எனத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். "உராகிரிகாம" என்ற இடப்பெயரில் வரும் உரா என்பது நாக என்ற முன்னொட்டுச்சொல்லைக் கொண்டு தொடங்கும் ஒரு இடத்தைக் குறிப்பதாகக் கருதலாம். கிரி என்பதற்கு மலை, முனை, பன்றி, குன்று, பிணையாளி என்ற பல கருத்துண்டு. மலைகள் அற்ற வடஇலங்கையில் அதன் அமைவிடத்தின் தன்மை மற்றும் பிற காரணங்களால் பல இடங்கள் கிரி என்ற பின்னொட்டுச் சொல்லுடன் முடிவதைக்

www.tamilarangam.net



காணலாம். இதற்கு நவக்கிரி, குலதிகிரி, இலபின்கிரி, குப்பங்கிரி முதலான இடப்பெயர்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். கம, காம என்ற பின்னொட்டுச் சொல்லுடன் முடியும் பல இடப்பெயர்கள் இலங்கையிலும் ஆந்திராவிலும் கி.மு.2ஆம் நூற்றாண்டிலிருந்து வழக்கிலுள்ளன. இது தமிழில் கிராமம் என்ற கருத்தைக் கொண்டுள்ளது.ஆந்திராவில் கி.பி 9ஆம் நூற்றாண்டிற்குரிய கல்வெட்டுக்கள் கம, காம என்பவற்றைப் பின்னொட்டுச் சொல்லாகக் கொண்ட இடங்கள் பற்றிக் கூறுகின்றன (Ramachandramurthy 1985:244-5). வட இலங்கை யிலும் இதையொத்த பெயர்கள் பண்டு தொட்டுப் புழக்கத திலிருந்து வருவதற்கு சோழக் கல்வெட்டில் வரும் வலிகாமம், போத்துக்கேய ஆவணங்களில் வரும் பனங்காமம் போன்ற இடங்களை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவற்றின் அடிப்படையில் நிலாவெளிக் கல்வெட்டில் வரும் "உராகிரி காம" என்ற வடமொழிப் பெயருக்கு நாகமலையில் உள்ள கிராமம்(நாகமலை) அல்லது நாகமுனையில் (நாக முனை) உள்ள கிராமம் என எடுத்துக் கொள்ளலாம். யாழ்ப்பாண அரசு கால இலக்கியங்களில் வெளிநாடு எனக் குறிப்பிடப் படும் பூநகரி போத்துக்கேய ஆவணங்களில் "உரயில் பூநரிம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குள்ள ஈழஊருக்கு பக்கத்தேயுள்ள கடற்கரைக் கிராமம் ஒன்று நாகமுனை என அழைக்கப்படுகிறது[(10)]. இவற்றிலிருந்து நிலாவெளிக் கல் வெட்டில் வரும் உராகிரிகாம என்ற இடத்தை பூநகரியுடன் தொடர்பு படுத்தலாம் போல் தெரிகிறது. அவ்வாறு கருது வதற்கு இன்னொரு காரணம் 12ஆம் நுற்றாண்டுக்குரிய சோழக் கல்வெட்டு இப்பிராந்தியத்திற்கு அண்மையிலுள்ள பதவியாவில் இருந்த சிவன் கோயிலுக்கு கோணாவிலைச் சேர்ந்த வெண்காடான் எறிமணியொன்றைக் கொடுத்ததாகக் கூறுகிறது. இவ்விடம் பூகரியில் உள்ள கோணவில் என்ப தற்கு சில ஆதாரங்கள் முன்னரே காட்டப்பட்டுள்ளது.

இராஜராஜசோழனது வட இலங்கை வெற்றி சிங்கள இராசதானியுட்பட இராஜரட்டைப்பிரதேசம் அனைத் தையும் உள்ளடக்கியிருந்தது. அநுராதபுரத்திற்கு வடக் கிலுள்ள பிராந்தியத்தை நாகதீபம் என அழைத்த பாளி நூல் கள் அதனுடன் இராஜரட்டையையும் உள்ளடக்கிக் கூறியதற்குச் சான்றுகள் இல்லை. அநுராதபுரத்தின் பின்னர் பொலநறுவையைத் தனது தலைநகராகத் தெரிவு செய்த இராஜராஜசோழன் அதற்கு தனது ஜனநாதமங்கலம் என்ற விருதுப்பெயரையே வைத்தான். அதேபோல் மும்முடிச்

www.tamilarangam.net



சோழன் என்ற தனது விருதுப்பெயரின் அடிப்படையிலேயே இலங்கைக்கு மும்முடிச்சோழ மண்டலம் எனப் பெயரிட்டு அதை சோழ நிர்வாகத்துடன் ஒன்பதாவது மண்டலமாக இணைத்துக் கொண்டான். இவ்வாறான நிலையில் இராஜராஜன் நாக நாட்டையோ, நாகர்களையோ தனித்து இனம் காட்டி அதன் வெற்றிக்காக நாணயம் வெளியிட்டிருப் பான் எனக் கூறுவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்றே கூறலாம். இந்த இடத்தில் நாணயத்தில் வரும் உரக என்ற சொல் நாகஇன மக்களை அல்லது நாக நாட்டைக் குறித்ததெனக் கொண்டால் இந்நாணயத்தை முதலாம் இராஜராஜ சோழனோடு தொடர்புபடுத்துவதை விட பராந்தக சோழனுடன் தொடர்பு படுத்துவதே பொருத்தமாக உள்ளது.

பராந்தக சோழன் இலங்கையை வெற்றி கொண்டதை அவன் கல்வெட்டுக்கள் கூறுவதைப் பாளி இலக்கியங்கள் மறைப்பதாகக் கொண்டாலும் அநுராதபுரத்தில் அவன் ஆதிக்கம் ஏற்பட்டதற்கு எந்தவித ஆதாரமும் இதுவரை காணப்படவில்லை. ஆனால் பராந்தகன் படையெடுத்த காலத்தில் நாகநாட்டில் அரசு ஒன்று இருந்ததற்கும், அவ்வர சால் நாணங்கள் வெளியிடப்பட்டதற்கும் எமக்குச் சில சான்று கள் கிடைத்துள்ளன. பராந்தகன் படையெடுப்பைத் தொடர்ந்து அநுராதபுரத்தில் ஏற்படாத சோழர்காலப் பண்பாட்டுச் செல்வாக்கு நாகநாட்டில் ஏற்பட்டிருந்தமை ஏற்கனவே இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவன் படையெடுத்த காலத்துடன் தொடர்புடையதாக சூளவம்சம் கூறும் நாகதீபத்தின் மீதான தென்னிந்தியப் படையெடுப்பு நாகநாட்டை ஒரு அரசுக்குட்பட்ட நாட்டைச் சுட்டுவதாக எடுத்துக் கொள்ள இடமுண்டு. ஏனெனில் ஏறத்தாழ இதே காலத்தைச் சேர்ந்த(கி.பி9ஆம் நூற்றாண்டு) உதயணன் பெருங்காதையும், பிற்பட்ட மயிலை நாதர் உரையும் இலங்கையைச் சிங்களம், ஈழம் எனத் தனித்தனியாகக் கூறுகின்றன (வேலுப்பிள்ளை1986:10). இச் சான்றுகள் இலங்கையில் இருவேறு அரசுகள் இருந்ததெனக் கருத இடமளிக்கிறது. ஈழம் என்ற சொல் வரலாற்று மூலங்களில் சில சந்தர்ப்பங்களில் முழு இலங்கையைச் சுட்டி நின்றாலும் பல சந்தர்ப்பங்களில் நாகநாடான வட இலங்கையைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். பாண்டியர்காலக் கல்வெட்டில் நாகநாட்டைக் குறித்த ஈழம் (A.R.E1917:No588of 1916). விஜய நகரக்கல்வெட்

www.tamilarangam.net



டில் யாழ்ப்பாணத்தைக் குறிக்கிறது (S.I.I.:No778). இந்த வேறுபாடு ஆள்புலத்தைக் குறிக்காது அரச தலைநகரத்தைக் குறிக்கின்றது. ஏனனில் விஜயநகர காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த தலைநகர் பாண்டியர் காலத்திற்கு முன் நாகநாட்டில் (வன்னியில்) இருந்துள்ளது. இங்கே போத்துக்கேய ஆவணங்களில் வரும் உரயில், நிலாவெளிக் கல்வெட்டில் வரும் உராகிரி காம, சோழ நாணயத்தில் வரும் உரக என் பவற்றிக்கிடையே பெயரடிப்படையில் ஒருவித ஒற்றுமை காணப்படுகிறது[11]. இதனடிப்படையில் நாக நாட்டை வெற்றி கொண்டதற்காகவே "உரக" என்ற பெயர் பொறித்த நாணயம் பராந்தக சோழனால் வெளியிடப்பட்டதெனக் கூறலாம். இக்காலத்தில் ஈழம் என்ற சொல் வட இலங்கையின் அதாவது நாக நாட்டின் இன்னொரு பெயராக இருந்துள்ளதைக் காணமுடிகிறது. கல்வெட்டுக் களைப் பெரும்பாலும் தமிழில் வெளியிட்ட சோழ மன்னர்கள் ச்ர்வதேச வர்த்தக நோக்கத்திற்காக நாணயங்களை வடமொழியில் வெளியிட்டுள்ளனர். இந்த வேறுபாட்டையே பராந்தகன் காலக் கல்வெட்டுக்களில் வரும் ஈழம் என்ற நாட்டுப் பெயரும், நாணயங்களில் வரும் உரக என்ற நாட்டுப் பெயரும் எடுத்துக்காட்டுவதாகக் கொள்ளலாம். இந்த நாகநாட்டு அல்லது ஈழ வெற்றியைத் தொடர்ந்து ஆட்சியில் இருந்த மன்னர்கள் பராந்தகன் மேலாண்மையை ஏற்று அல்லது அவன் ஆதரவுடன் தலைநகரை சிங்கை அல்லது சிங்கை நகர் என்ற பெயரில் வன்னிக்கு மாற்றி கி.பி.993இல் இராஜ ராஜசோழன் சிங்கள அரசை வெற்றிகொள்ளும் வரை சுதந்திரமாக ஆட்சி புரிந்து இருக்கலாம்.

கொட்றிங்ரன்(1924:60-2), மிற்சினர்(1998:137) போன்ற நாணயவியலாளர் வட இலங்கையில் கிடைத்த உரக நாணயங்களுடன் ஏறத்தாழ அதே காலத்திற்குரிய அடையாளம் காணாத நிலையிலுள்ள "லஷ்மி" என்ற பெயர் பொறித்த பொன், செப்பு நாணயங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். (Mitchiner1998:137). இந்நாணயத்தின் முன்புறத்தில் தலையை இடப்புறம் திருப்பிய நிலையில் ஒரு மனித உருவம் காணப்படுகிறது. இதன் வலது கை மேலே உயர்த்தியவாறு பூரணகும்பம் போன்ற ஒரு பொருளைத் தாங்கியுள்ளது. இதற்கு கீழே குத்துவிளக்கும், சூலமும் காணப்படுகிறது. தலைக்கு வலப்புறமாக சங்கு போன்ற உருவம் உள்ளது. இதன் வலது கை கீழ்நோக்கியவாறு

www.tamilarangam.net



வச்சிராயுதம் போன்ற பொருளைப்பிடித்துள்ளது. இதன் பின்புறத்தில் லஷ்மி என்ற பெயரும், மேற்புற விளிம்பையொட்டி சூரியனும் காணப்படுகின்றன. நாணயத்தின் முன்புறத்தில் உள்ள உருவம் நிற்கும் நிலையில் உள்ள மன்னன் எனக் கூறப்பட்டுள்ளது (Mitchiner1998:137). ஆனால் இடது கால் மடிக்கப்பட்டு வலது காலைத் தொடுவதுடன் அமர்ந்த நிலையில் இருப்பது போன்ற தோற்றத்தில் உள்ளது. இதனால் இவ்வுருவத்தை அமர்ந்த நிலையில் உள்ள லஷ்மியாகக் கூறலாம். இதை நாணயத்தில் வரும் லஷ்மி என்ற பெயரும் உறுதிப்படுத்துகிறது. இத்தெய்வத்தை நாணயத்தில் பொறித்தமை இவ்வரசு காலச் செல்வச் செழிப்பைக் காட்டுவதாக எடுத்துக்கொள்ளலாம் (படம்-5.இல3)[12].

இவ்வகை நாணயங்கள் பெருமளவுக்கு வட இலங்கையில் மாதோட்டம், அச்சுவேலி (Syyone 1998:32-4). பூநகரி, கந்தரோடை போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. இவற்றைத்தவிர கொழும்பு, சென்னை அருங்காட்சியகங்களிலும் வைக்கப்பட்டுள்ளன (Codrington 1924:59-60). இவை எங்கிருந்து பெறப்பட்டவை என்பது தெரியவில்லை. ஆனால் இவ்வகையான நாணயங்கள் தமிழ் நாட்டில் வெளியிடப் பட்டதற்குச் சான்றுகள் இல்லை. மேலும் வட இலங்கையில் பரவலாகக் கிடைத்துவரும் இந்நாணயங்கள் தமிழகத்தில் இதுவரை கிடைத்ததாகவும் தெரியவில்லை. இதனால் இந்நாணயங்கள் இலங்கையில் வெளியிடப்பட்ட தென்பதில் சந்தேகமில்லை. இலங்கையில் இவை கிடைத்து வருவதால் இவற்றைச் சிங்கள மன்னர்கள் கி.பி 7ஆம், 8ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது (Seyone 1998:14-1). ஆனால் நாணயத்தில் வரும் எழுத்தமைதியை அடிப்படையாகக் கொண்டு இவை10ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியெனக் கணிப்பிடமுடிகிறது (Mitchiner1998:137). நாணயத்தில் இடம்பெற்றுள்ள சின்னங்கள் இந்து மதத்தோடு இந்நாணயங்களை வெளியிட்ட மன்னர்களுக்குள்ள தொடர்பைக்காட்டுகிறது[11]. இவற்றின் வடிவமைப்பு சின்னங்கள் என்பன ஏற்கனவே வட இலங்கை அரசால் வெளியிடப்பட்ட நாணயங்களுடன் ஒற்றுமை கொண்டு காணப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் இந்நாணயங்களை இராஜராஜ சோழன் ஆட்சிக்கு முன் வடஇலங்கையில் ஆட்சிபுரிந்த மன்னர்களால் வெளியிடப்பட்டவை எனக் கருத இடமுண்டு.

www.tamilarangam.net



சோழர் கால நாணயங்கள் (படம்-5)




ஸ்ரீ ராஜராஜ (தமிழ் நாடு)




உரக (இலங்கை)




லஷ்மி (இலங்கை)

இது வரை கூறப்பட்ட சான்றாதாரங்களின் பின்னணியில் பராந்தகன் காலப் படையெடுப்புடன் நாகநாட்டில் இருந்த அரசின் தலைநகரான கதிரமலை வெற்றி கொள்ளப்பட்டு புதிய அரசு வன்னியில் தோன்றியதெனக் கூறமுடிகிறது. அங்கு ஒரு அரசு இருந்ததெனக் கொண்டால் அதற்கென்று ஒரு தலைநகர் இருந்திருக்கும். அப்படியானால் சோழர் (உக்கிரசிங்கன் சோழ இளவரசி மாருதப்புரவல்லி திருமணம்) வருகையுடன் கதிரமலை என்னும் தலைநகர் சிங்கை நகருக்கு இடம்மாறியதாகத் தமிழ் இலக்கியங்கள கூறும் நிகழ்ச்சி முதலாம் பராந்தகசோழன் காலத்தில் ஏற்பட்டதென எடுத்துக் கொள்ள இடமுண்டு.

முதலாவது தமிழரசு 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் தோன்றியதென்ற கருத்துடைய அறிஞர்கள் அதன் ஆரம்ப தலைநகர் சிங்கை என்ற பெயரைப் பெற அவ்வரசைத் தோற்றுவித்த கலிங்கமாகனது தாய்நாட்டுச் சிங்கபுரத் தொடர்பே காரணம் எனக் கூறுகின்றனர். ஆனால் இப்பெயர் ஒற்றுமையைத் தவிர கலிங்க நாட்டுடன் வட இலங்கையைத்

www.tamilarangam.net



தொடர்புபடுத்த வேறு எந்தவொரு உறுதியான சான்றுகளும் இருப்பதாகத் தெரியவில்லை. இப்பெயர் ஒற்றுமை கூட கலிங்கநாட்டுச் சிங்கபுரத்தொடர்பால் நேரடியாக வட இலங்கைக்கு வந்ததெனக் கூறுவதைவிடத் தமிழகத்துட னான தொடர்பால் வந்ததெனக் கூறுவதே பொருத்தமாகத் தோன்றுகிறது. ஏனெனில் தமிழகத்திலும் இப்பெயர் நீண்ட காலமாகப் புழக்கத்திலிருந்துள்ளது. கி.பி 7ஆம் நூற் றாண்டில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் சந்திராதித்ய காலச் செப்பேடு சிங்கபுர என்ற இடத்தில் இவன் அமைத்த ஆல யம் பற்றிக் கூறுகிறது (Mahalingam 1988 623.:746.No29). அதே போல வட இலங்கையை வெற்றி கொண்ட முதலாம் பராந்தக சோழன் கால இருநகரங்கள் சிங்கபுரம், சிங்கபுரநாடு என்ற பெயரைப் பெற்றிருந்தன (சதாசிவபண்டாரத்தார் 1950:56). அத்துடன் கொங்குமண்டலத்திலுள்ள காங்கேயநாடு சோழர் ஆட்சியின் போது சிங்கை என்ற இன்னொரு பெயரையும் பெற்றிருந்தது (குழந்தை 1953:39). இச்சிங்கை நாட்டு வேளாளத் தலைவர்களுக்கு சோழர் இட்ட மறுபெயர் சிங்கைப்பல்லவராயர் என்பதாகும். இவர்கள் சோழர்களுடன் இணைந்து இலங்கை நாட்டுடனான அரசியலிலும், படை யெடுப்புக்களிலும், வர்த்தகத்திலும் ஈடுபட்டதற்குப் பல சான்றுகள் உண்டு (பத்மநாதன் 1984:45-78). முதலாம் பராந் தகன் ஆட்சியில் நடைபெற்ற சிங்கள சோழப் போராட்டத் தில் கொங்கு நாட்டு குறுநில மன்னனும் கீழைப்பழுவூரில் இருந்த சிற்றரசனாகிய பழுவேட்டரையன் கண்டன் அமுதன் வெள்ளூரில் சிங்களப் படைவீரர்களைத் தோற்கடித்தான் (SII.III:No99). இரண்டாம் பராந்தகன் ஆட்சியில் அவன் சார்பாக கொங்கு நாட்டைச் சேர்ந்த பராந்தகன் சிறிய வேளாளன் இலங்கைமீது படையெடுத்தான். இவன் இலங்கையில் நடந்த போராட்டத்தில் இறந்தான் என்ற செய்தி ஈழத்துப்பட்ட கொடும்பாளூர்வேளான் என கல் வெட்டு மூலம் அறிய முடிகிறது (SII.III:No980).

இலங்கையில் சோழர் தம் ஆதிகத்திற்குட்பட்ட இடங் களுக்குப் புதிதாக தம் தாய் நாட்டுப் பெயர் கொண்டு அழைத்ததைப் பதவியா, வாகல்கட, மாதோட்டம் ஆகிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன (பத்மநாதன் 1984:45-78). இவற்றை நோக்கும் போது வட இலங்கையில் இருந்த அரசின் தலைநகர் சிங்கை அல்லது சிங்கைநகர் என்பது சோழர் காலத்தில் ஏற்பட்ட பெயர் எனக் கூறலாம். இதில் பராந்தக சோழன் காலப்படையெடுப்பு

www.tamilarangam.net



வட இலங்கை அரசுடன் தொடர்புடையதாக இருப்பதால் இவன் காலத்திலேயே இப்பெயர் இங்கிருந்த அரச தலை நகருக்கு ஏற்பட்டதெனக் கூறலாம். இன்று வன்னிப்பிராந் தியத்தில் அறியப்பட்ட இடப்பெயர்களை விட அறியப் படாத இடப்பெயர்களே அதிகம் உள்ளன. இதற்கு நீண்ட காலம் இப்பிராந்தியத்தின் பெரும் பகுதி மக்கள் குடியிருப் புக்கள் அற்ற காடுகளாக இருந்து வந்தமை முக்கிய காரண மாகும். அதிலும் சில கட்டிட அழிபாடுகள் உள்ள இடங்கள் தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் பலரால் அறியப்படாத ஒன்றாக உள்ளன. இவ்விடங்களுக்குரிய இடப்பெயர்கள் முழுமையாக ஆராயப்படுமானால் சிங்கை அல்லது சிங்கை நகர் என்ற பெயரும் வெளிச்சத்திற்கு வர வாய்புண்டு. வரலாற்றறிஞர்கள் பலரும் சிங்கை வே றெங்கும் இருக்கவில்லை அதுவும் யாழ்ப்பாணத்திற்குள் தான் இருந்ததெனக் கூறுகின்றனர். ஆனால் ஏனைய இரு தலைநகரங்களான யாழ்ப்பாணமும், நல்லூரும் தற்போதும் புழக்கத்திலிருக்கும் போது சிங்கையை மட்டும் யாழ்ப்பாண மக்கள் மறந்து போனதற்கு காரணம் என்ன?. வேறு ஒன்றும் இல்லை. அது யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருந்தது தான் என உறுதிபடக் கூறலாம்.

## 7ஆம் நூற்றாண்டில் கதிரமலையும் யாழ்ப்பாணமும்

சிங்கை நகருக்கு முன்னோடியாக கதிரைமலையைத் தலைநகராகக் கொண்ட அரசு ஒன்று கி.பி. 8ஆம் நூற்றாண் டில் யாழ்ப்பாணத்தில் இருந்ததை தமிழ் இலக்கியங்கள் கூறு கின்றன. இவ்வரசை ஆண்டதாகக் கூறப்படும் உக்கிரசிங்கன் சோழ இளவரசியான மாருதப்புரவல்லி தொடர்பான கதை பாளி இலக்கியங்கள் கூறும் விஜயன் குவேனி கதையின் மாற்று வடிவம் எனக் கூறி இக்காலத்தில் அரசு ஒன்று இருந்ததென்ற கருத்தை நிராகரித்துள்ளனர் (இந்திரபாலா 1972). கதையில் கூறப்பட்ட சம்பவங்கள் பெருமளவுக்குப் பாளி இலக்கியங்களில் வரும் கதையின் மாற்று வடிவம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதன் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் அரசு இருந்திருக்கவில்லை என்ற முடிவுக்கு வருவது தற்போது கிடைத்துவரும் சான்றுகளின் அடிப்படையில் மறு ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். கி.பி 7ஆம் நூற்றாண்டு வரை நாகதீபத்துடன் அநுராதபுர அரசிற்கிருந்த அரசியல் உறவு வரலாற்றிலக்கியங் களில் மறைக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன. அநுராத

www.tamilarangam.net



புரத்திற்கு தெற்கே மிகத் தொலைவிலுள்ள மகாகமை அரசுடன் இருந்த அரசியல் உறவு பற்றி விரிவாகக் கூறும் பாளி நூல்கள் அநுராதபுரத்திற்கு வடக்கே மிகக் கிட்டிய தொலைவிலுள்ள நாகதீபத்துடன் அநுராதபுர அரசிற்கு இருந்த அரசியல் உறவு பற்றி எதுவுமே கூறவில்லை. இதனால் இங்கு ஒரு மன்னன் ஆளுகைக்குட்பட்ட அரசு இருந்ததென்ற முடிவுக்கும் வரமுடியாது. இதுவரை கிடைத்த தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் இவ் வட்டாரத்தில் இனக்குழுத்தலைவர்கள், குறுநில மன்னர்கள், சிற்றரசர்கள் என்போரின் ஆட்சியிருந்தது எனக் கூறலாம். இதைக் கந்தரோடையிலும் தென்னிலங்கையிலும் அண்மையில் கிடைத்த தமிழ்ப் பெயர் பொறித்த நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன(புஷ்பரட்ணம்1999:55-70).

கி.பி.7ஆம் நூற்றாண்டிலிருந்து நாகதீபத்துடனான அரசியல் உறவு பற்றிப் பாளி இலக்கியங்களில் சில செய்திகள் காணப்படுகின்றன. அவை நாகதீபத்திலிருந்து அநுராதபுர அரசிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள், கிளர்ச்சிகள் பற்றியதாக உள்ளன. இவை அநுராதபுர மன்னர்களால் அடக்கப்பட்டாலும் அவை தொடர்ந்து நடைபெற்றதையே பாளி இலக்கியங்கள் ஊடாக அறியமுடிகிறது. கந்தரோடையிலும், மாதோட்டத்திலும் மூன்று சிங்களக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவை நாகதீபத்தில் சிங்கள மன்னர்கள் அடைந்த வெற்றிக்குரிய சான்றாகக் கூறப்படுகிறது. இதன் மூலம் நாகதீபம் அநுராதபுர நாகரீக வட்டத்திற்குள் இருந்ததென்ற முடிவுக்கு வரமுடியாது. இவற்றை இலங்கையின் நீண்ட கால அரசியல் வரலாற்றில் தற்காலிகமாக அடையப்பெற்ற வெற்றிகளாகவே கருத வேண்டியுள்ளது.

கி.பி.7ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.10ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட கால இலங்கை வரலாற்றை ஆராய்ந்தால் இக்காலப்பகுதியில் ஒரு மன்னன் ஆளுகைக்குட்பட்ட அரசு ஒன்று நாகதீபத்தில் தோன்றியது எனக் கூறலாம். அநுராதபுரத்தில் ஏற்பட்ட குழப்பங்கள், வாரிசுரிமைப் போட்டி, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக நடந்த போர் என்பன சிங்கள மன்னர்கள் தமது ஆட்சியை பலப்படுத்த தமிழ் மக்களையும், தமிழ் நாட்டவரையும் நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியது. இக்காலப்பகுதியில்

www.tamilarangam.net



ஆட்சியைப்பலப்படுத்தவும், ஆட்சியுரிமையைப்பெறவும் சிங்கள அரசவம்சத்தினர் பல தடவை தமிழ் நாடு சென்று படையுதவி கோரியுள்ளனர். அதில் எட்டுத்தடவை கி.பி. 7ஆம் நூற்றாண்டில் நடந்துள்ளது (சிற்றம்பலம்1993:170). இக்காலத்தில் அநுராதபுரத்தில் தமிழர்களின் செல்வாக்கு அதிகரித்து அவர்களே யார் மன்னனாக வரவேண்டும் எனத் தீர்மானித் ததாகச் சூளவம்சம் ஓர் இடத்தில் குறிப்பிடுகிறது. இதையுறுதிப்படுத்தும் வகையில் இக்காலச்சிங்களக் கல்வெட்டுக்களில் தமிழர் குடியிருப்புக்கள், நிலங்கள், காணிகள், ஊர்கள் பற்றிய செய்திகளும், தமிழர் செலுத்தவேண்டிய வரிபற்றிய செய்திகளும் காணப்படுகின்றன (Indrapala 1969:42-63). ஒன்பதாம் நூற்றாண்டில் இரண்டாம் சேன மன்னன் காலத்தில் (853-887) அநுராதபுரத்தில் வாழ்ந்த தமிழர்களின் நலனைக் கவனிக்க தமிழ் அதிகாரி ஒருவன் (தெமிலஅதிகாரி) நியமிக்கப் பட்டான் (சிற்றம்பலம்1993:236). இச்சான்றுகள் அநுராத புரத்தில் தமிழரின் செல்வாக்கு இக்காலத்தில் அதிகரித் திருந்ததைக் காட்டுகின்றன.

இதேகாலப்பகுதிக்குரிய நாகதீபத்தின் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்க்கும் போது அங்கு ஒரு அரசு தோன்றியதற்கான சூழ்நிலையே காணப்படுகின்றது. இங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக அநுராதபுர மன்னர்களுக்கு எதிராகக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டதுடன் தமிழகத்தில் இருந்து ஏற்பட்ட படையெடுப்புக்களுக்கு ஆதரவு கொடுத்து அப்படையெடுப்பாளருடன் தாமும் இணைந்து கொண்டனர். அநுராதபுரத்தில் வாழ்ந்த தமிழர்கள் தமிழ் நாட்டில் தங்கியிருந்த சிங்கள அரச வம்சத்தைச் சார்ந்த ஹட்ட தத்தன் அரசனாக வரவேண்டும் என விரும்பிய போது தமிழ் நாட்டிலிருந்து வந்த படைவீரர்களுடன் இங்கு வாழ்ந்த தமிழர்களும் இணைந்து அவனை கி.பி. 661இல் மன்னனாக்கியதாகச் சூளவம்சம் கூறுகிறது (45:17-20). இவன் மன்னனாக இருந்த காலத்தில் அவனுக்குப் பயந்து "மானா" என்னும் சிங்கள இளவரசன் நாகதீபத்தில் (உத்தர தேச) பாது காப்பாகத் தங்கிப் பின்னர் தமிழ் நாடு சென்றதாகச் சூளவம்சம் கூறுகிறது (47:2-7). ஒன்பதாம் நூற்றாண்டில் முதலாம் சேன மன்னன் ஆட்சியில் இருந்த காலத்தில் (கி.பி8 33-853) பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீபல்லவன் இலங்கை மீது படையெடுத்த போது மாதோட்டத்தில் வாழ்ந்த

www.tamilarangam.net



தமிழர்களும் அவர்களுடன் இணைந்து சிங்கள அரசை வெற்றி கொண்டு பாண்டியரின் மேலாண்மையை ஏற்கச் செய்தனர் (C.V. 49:84-5). இச்சம்பவங்களுடன் "மானா" என்னும் சிங்கள இளவரசன் உத்தரதேசத்தில் தங்கியிருந்த நிகழ்ச்சி இங்கு ஒரு அரசு தோன்றியிருந்ததைக் காட்டுவதாக உள்ளது. இலங்கையின் நீண்ட கால வரலாற்றில் அநுராதபுர மன்னர்கள் தெற்கே மகாகமை அரசில் இருந்து வருவதையும், பதவியிழந்தவர்கள் பாதுகாப்புக் கருதி அவ்வரசில் அடைக் கலம் புகுந்ததையும் காணமுடிகிறது. ஆனால் 7ஆம் நூற்றாண்டில் மானா என்பவன் உத்தரதேசம் பாதுகாப் பெனக் கருதி இங்கு தங்கியிருந்து தமிழ் நாடு சென்றமை இங்கு ஒரு அரசு இருந்ததையே காட்டுகிறது. இக்கருத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஒரேயொரு உறுதியான சான்று எமக்குக் கிடைத்துள்ள நாணயங்களாகும்.

இந்நாணயங்கள் பூநகரி வட்டாரத்திலுள்ள கல்முனை, மட்டுவில் நாடு, பாலாவி போன்ற இடங்களில் கிடைத துள்ளன. இவையனைத்தும் சதுரவடிவில் அமைந்த செப்பு நாணயங்களாகும். இவற்றின் நீள அகலம் எடை என்பவற்றில் பல வேறுபாடுகள் காணப்பட்டாலும் இவை சராசரி *1.8× 1.6* செ.மீ நீள அகலமும். 2. 8கிராம் எடையும் உடையன. இவற்றின் முன்புறத்தில் விளிம்பைச் சுற்றி சிறு புள்ளிகளாலான வட்டமும் வட்டத்திற்குள் இரு குத்து விளக்கும். அதன் நடுவில் கிடையான அமைப்பில் மீன் சின்னமும் காணப்படுகிறது. இந்த அம்சமே நாணயத்தின் பின்புறத்திலும் காணப்படுகிறது. இதே சின்னங்களுடன் கூடிய வட்டவடிவில் அமைந்த நாணயங்களும் வடஇலங்கையில் கிடைத்ததாகப் பிடுப்பேயும் (1966:32. Plate.III, Nos51-3), மிற்சினரும் (1998:135) தமது நூல் களில் விளக்கப்படங்களுடன் குறிப்பிட்டுள்ளனர்(படம்-6).

இவ்வகை நாணயங்கள் வடஇலங்கைக்கு வெளியே குறிப்பாகத் தமிழகத்தில் இதுவரை கிடைத்ததாகத் தெரிய வில்லை. அத்துடன் இதில் காணப்படும் மீன் சின்ன அமைப்பு பாண்டியர் வெளியிட்ட நாணயங்களில் வரும் மீன் சின்ன அமைப்புக்கு அன்னியமானதாகத் தெரிகிறது. இதனால் இவை இலங்கையில் வெளியிடப்பட்டதென்பது தெளிவாகிறது. சிங்கள மன்னர்கள் மீன் சின்னத்துடன் குத்து விளக்கையும் கொண்ட நாணயங்ஙள் வெளியிட்டதற்குச் சான்றுகள் இல்லை. இதனால் இவை வடஇலங்கையில்

www.tamilarangam.net



இருந்த தமிழ் அரசால் வெளியிடப்பட்டதெனக் கூறலாம். இப்பிராந்தியத்திலிருந்தே இந்நாணயங்கள் பெரும்பாலும் கிடைத்திருப்பதும் இக்கருத்தை மேலும் வலுவூட்டுவ தாக உள்ளது.

வட இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங்கள் (படம்6)



பிடுப்பே இந்நாணயங்களை இலங்கையை வெற்றி கொண்ட ஸ்ரீமாறஸ்ரீபல்லவன் ஒன்பதாம் நூற்றாண்டில் வெளியிட்டிருக்கலாம் எனக் கூறுகிறார் (1966:32). ஆனால் தமிழகத்தில் இவன் வெளியிட்ட நாணயங்கள் வட்டவடிவில் இருப்பதுடன் முன்புறத்தில் இரு மீன் சின்னங்களுடன் பின்புறத்தில் தமிழில் "ஸ்ரீஅபனிபசேகர கோளக" என்ற பெயரும் காணப்படுகிறது (Nagaswamy 1981:83). இந்த அம்சம் வட இலங்கையில் கிடைத்த நாணயங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. வட இலங்கையில் கிடைத்த நாணயங்களில் பெரும்பாலானவை சதுரவடிவில் உள்ளன. இவ்வடிவ நாணயங்கள் தமிழ் நாட்டில் பெரும்பாலும் சங்க காலத்திலேயே வெளியிடப் பட்டன. ஆனால் இந்நாணயங்களுக்கும் வட இலங்கையில் கிடைத்த நாணயங்களுக்கும் அடிப்படையில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. சங்ககால நாணயங்களில் கோட்டுருவில் காட்டப்பட்டுள்ள மீன் சின்னம் இங்கே மீன் உருவமாக வார்க்கப்பட்டுள்ளது. சங்ககால நாணயங்களின் பின்புறத்தில் தனியொரு சின்னமாக இடம்பெற்றுள்ள மீன் சின்னம் இங்கே குத்து விளக்குகளுடன் நாணயத்தின் இருபுறமும் இடம்

www.tamilarangam.net



பெற்றுள்ளது. இந்தவேறுபாடுகளின் அடிப்படையில் வட இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங்கள் கி.பி 7ஆம் நூற்றாண்டிலிருந்து வெளியிடப்பட்டவை எனக் கூறலாம். இக்காலக் கணிப்பையே மிற்சினரும் கொடுத்துள்ளார் (1998:137). இதையொத்த சின்னங்களுடன் கூடிய வட்ட நாணயங்கள் சதுரவடிவிலிருந்து வட்ட நாணயங்களை வெளியிடும் நிலைமாறும் காலத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. இவை காலத்தால் சற்றுப்பிற்பட்டதுடன் அதை வெளியிட்ட மன்னர்களும் வேறாக இருக்கலாம் என்பதைச் சுட்டிக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட நாணயங்களில் இருந்து கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட தமிழரசு ஒன்று வட இலங்கையில் இருந்ததெனக் கூறமுடிகிறது. இந்நூற்றாண்டில் இலங்கைவந்த கொஸ்மஸ் இன்டிகோபிளியஸிஸ (Cosmas Indicopleustes) இலங்கையில் இரு அரசுகள் இருந்ததாகக் கூறுகின்றார். இவ்வரசுகள் அநுராதபுரத்திலும், மகாகமையிலும் இருந்ததாகப் பலரும் கூறியபோது முதலியார் இராசநாயகம் கொஸ்மஸ் குறிப்பிட்ட பெரிய துறைமுகத்தைக் கொண்டிருந்த அரசு யாழ்ப்பாணத்தில் இருந்ததெனவும், அதன் பெரிய துறைமுகம் மாதோட்டம் எனவும் குறிப்பிட்டார். அவர் கூறிய கருத்து பொருத்தமாகவே தெரிகிறது. கி.பி 7ஆம், 8ஆம் நூற்றாண்டில் பக்தியியக்கத்தை தலைமையேற்று நடத்திய அப்பரும், சுந்தரரும் தமிழ் நாட்டிற்கு வெளியே கர்நாடகத்திலும், சேரநாட்டிலும் உள்ள ஆலயங்கள் ஒவ்வொன்றின் சிறப்பை மட்டுமே பாடும் பொழுது வடஇலங்கையில் இருந்த திருக்கேதீஸ்வரத்தையும், கிழக் கிலங்கையிலிருந்த திருக்கோணேஸ்வரத்தையும் போற்றிப் பாடியுள்ளனர். இப்பாடல்கள் ஆலயங்களின் சிறப்பை மட்டுமன்றி இப்பிராந்தியங்களின் வரலாற்றின் பல பரிணா மங்களையும் பாடுவதாக உள்ளன. இப்பாடல்கள் வட இலங்கையின் அரச தோற்றத்துடன் தொடர்புபடுத்தி ஆராயப்பட வேண்டிய முக்கிய சான்றுகளில் ஒன்றாகும்.

முடிவுரை

இதுவரை எடுத்துக் காட்டப்பட்ட சான்றாதாரங்களின் அடிப்படையில் ஒரு மன்னன் ஆளுகைக்குட்பட்ட தமிழரசொன்று கி.பி ஏழாம் நூற்றாண்டில வடஇலங்கையில்

www.tamilarangam.net



இருந்ததெனக் கூறலாம். இந்த அரச தலைநகர் சோழர் வருகையுடன் சிங்கை அல்லது சிங்கை நகர் என்ற பெயரைப் பெற்று வன்னிப் பிராந்தியத்திற்கு இடம்மாறியது. அவ்வர சின் வாணிப, பொருளாதார, இராணுவ, நிர்வாக மையங்களில் ஒன்றாக மாதோட்டம் விளங்கியது. இச்சிங்கை நகரே யாழ்ப் பாணத்திலுள்ள நல்லூர் ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்களின் தலைநகராக மாறும் வரை வடஇலங்கையரசின் தலை நகராகப் பெரும்பாலும் இருந்துள்ளது. இந்த அரசிலிருந்து ஆட்சிசெய்த மன்னர்கள், அவர்களது காலம், ஆட்சிப்பரப்பு என்பன சரிவரத் தெரியவில்லை. ஆனால் இங்கு ஒரு அரசு நீண்டகாலம் இருந்ததென்பதை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகளாக கட்டிட அழிபாடுகள், இடப்பெயர்கள், நாணயங்கள் காணப்படுகின்றன. பதின்மூன்றாம் நூற்றான் டின் பிற்பகுதியிலிருந்து பதினேழாம்நூற்றாண்டின் முற்பகுதி வரை ஏறத்தாழ 350 ஆண்டுகள் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசு யாழ்ப்பாணத்தில் இருந்ததென்பதை உறுதிப்படுத்தக்கூடியதாக இருந்தும் அவ்வரசு காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள், அரசு கால இடப்பெயர்கள் என்பவற்றைத் தவிர அவ்வரசு கால வரலாற்றை முழுமையாக அறியக் கல்வெட்டுக்களோ பிற ஆதாரங்களோ இதுவரை கிடைக்கவில்லை. இந்நிலையில் இதுவரை கவனத்தில் கொள்ளப்படாத வன்னிப்பிராந்தியம் முழுமையான ஆய் வுக்கு உட்படுத்தப்படுமானால் நம்பகரமான கல்வெட்டு ஆதாரங்கள் தொட்டுப் பிற சான்றாதாரங்களும் கிடைக்கும் என நம்பலாம். இதில் வன்னிப்பிராந்தியத்திற்கே தனித்துவ மான நாட்டார் பாடல்களும் முக்கிய இடம்பெறலாம். யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங் களில் வரும் வன்னிபற்றிய செய்திகளை முற்றிலுமாக பிற்காலத்திற்குரியவையாகக் கொள்ளாது இங்கு கிடைக்கும் தொல்லியல் சின்னங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு.

வடஇலங்கை அரசால்வெளியிடப்பட்ட நாணயங்கள் சமகாலத்தில் இலங்கை தென்னிந்திய அரச வம்சங்களால் வெளியிடப்பட்ட நாணயங்களில் இருந்து சில அம்சங்களில் வேறுபடுகின்றன. இந்த வேறுபாடுகள் இலங்கைத் தமிழரின் தனித்துவத் தையும் அக்கால வட இலங்கையின் வரலாற்றுப் போக்கையும் அடையாளம் காண முக்கிய சான்றாதாரங் களில் ஒன்றாக விளங்குகின்றன.

www.tamilarangam.net



பெரும்பாலான நாணயங்களில் மீன் முக்கிய சின்னமாக இடம்பெற்றுள்ளது. பாண்டியரின் குலமரபுச் சின்னமான இம் மீனைப் பிற வம்சங்கள் பாண்டியரை வெற்றி கொண்டதன் நினைவாக அல்லது பாண்டியரின் மேலாண்மையை ஏற்றதன் நினைவாக தாம் வெளியிட்ட நாணயங்களில் பயன்படுத்திய தற்கு வரலாற்றில் பல சான்றுகள் உண்டு. ஆனால் இந்த இருகாரணங்களும் வட இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங்களுக்குப் பொருத்தமாக இல்லை. கி.பி.3ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.9ஆம் நூற்றாண்டிற்கும் இடைப் பட்ட காலத்தில் பாண்டிய மன்னர்கள் நாணயங்கள் வெளியிட்டதற்கு தமிழ் நாட்டில் இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் இக்காலத்தில் வட இலங்கையில் இருந்த அரசு நாணயங்களின் இரு புறத்திலும் மீன் சின்னத்தைப் பொறித்துள்ளனர். கி.பி.11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை பாண்டியரின் மேலாதிக்கமோ அல்லது தொடர்போ இலங்கையில் ஏற்பட்டதற்கு சான்றுகள் இல்லை. இக்காலத் தில் சோழருக்கு அடிபணிந்திருந்த பாண்டியர் தமிழ் நாட்டில் நாணயங்கள் வெளியிட்டதாகவும் தெரியவில்லை. ஆனால் சமகாலத்தில் வட இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங் களின் பின்புறத்தில் இரு மீன்கள் முக்கிய சின்னமாக இடம்பெற்றுள்ளன. தென்னிலங்கையில் கிடைத்த கி.மு1ஆம் ,2ஆம் நுற்றாண்டுக்குரிய 16 பிராமிக் கல்வெட்டுக்கள் மீன் அரசன் பற்றிக் கூறுகின்றன. இதை உறுதிப்படுத்தும் வகையில் அக்கல்வெட்டுக்கள் அனைத்திலும் மீன் சின்னம் இடம்பெற்றுள்ளன. இக்கல்வெட்டுக்கள் இந்தியாவிலிருந்து குடியேறிய தமிழர்களின் வழித்தோன்றல்களைக் குறிப்பதாக மென்டிஸ் போன்ற அறிஞர்கள் குறிப்பிட்டனர். இத்தனைக்கும் தமிழ் நாட்டின் பெரும்பாலான கல்வெட்டுக் கள் பாண்டி நாட்டில் கிடைத்தும் அவர்கள் தமது குலமரபுச் சின்னமான மீனைக் கல்வெட்டுக்களில் பொறிக்கவில்லை. சங்க காலத்தில் பாண்டியர் தமது நாணயங்களில் மீனை ஒரு சின்னமாகப் பயன்படுத்தியபோது சமகாலத்தில் இலங்கை யில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்கள் தமது நாணயங்களில் மீன் சின்னத்துடன் சிங்கள மன்னர்களுக்குள்ள நாணய மரபையும் சேர்த்து புதிய நாணயங்களை வெளியிட் டுள்ளனர். இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது வட இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங்களில் மீன் சின்னம் இடம்பெற்றமைக்கு இங்கு வாழ்ந்த மக்கள்

www.tamilarangam.net



பாண்டிநாட்டுடன் தமக்குள்ள பூர்வீகத் தொடர்பைக் காட்ட மீனைப் பயன்படுத்திய அதேவேளை அதில் தமக்குரிய தனித்துவத்தையும் பதிவு செய்து கொண்டனர் எனக் கூறலாம். அதே வேளை முதலாம் இராஜராஜசோழன் காலத்திற்கு முன் வெளியிடப்பட்ட நாணயங்களில் மீனுக்குப் பதிலாக லக்ஷ்மி அல்லது மனித உருவமும், பாண்டியரின் மேலாண்மையை ஏற்காத சாகவபெயர் பொறித்த நாணயங்களில் மீனுக்குப் பதிலாக காளையுருவத்தையும் பயன்படுத்தியமை அக்கால அரசியல் சூழ்நிலையை அப்படியே பிரதிபலிப்பதாக உள்ளது.

வடஇலங்கை நாணயங்களில் காணக்கூடிய இன்னொரு சிறப்பம்சம் அமர்ந்த நிலையிலுள்ள காளையுருவமாகும். யாழ்ப்பாண மன்னர்கள் நாணயங்களில் காளை உருவத்தைப் பொறிக்கும் மரபை கலிங்க மன்னர்களிடம் இருந்து பெற்றதாகப் பலரும் கூறி வந்துள்ளனர். ஆனால் தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையிலான பாரம்பரியத் தொடர்பைச் சுட்டிக்காட்டி பாண்டிய, சோழ தொடர்பால் வந்திருக்கலாம் எனவும் கூறப்பட்டது. சங்ககாலத்தில வெளியிடப்பட்ட நாணயங்களில் குறிப்பாக பாண்டிய நாணயங்களில் காளை ஒரு முக்கிய சின்னமாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இவை நிற்கும் நிலையிலேயே உள்ளன (Krishnamurthy 1997:Plte.1-19. Nos.1-253). ஆனால் சமகாலத்தில் இலங்கையில் நிற்கும் காளையுருவத்ததுடன் அமர்ந்த காளையுருவம் நாணயங்களிலும், முத்திரைகளிலும் பயன் படுத்தும் மரபு இருந்ததை அண்மையில் தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் கிடைத்த சுடுமண் அச்சுக்கள் உறுதிப்படுத்துகின்றன (Bopearachchi 1999:106-8, Plate. 23-4, Nos.K14-K31). இவற்றை நோக்கும் போது அமர்ந்த வடிவில் காளையைப் பயன்படுத்தும் மரபு இலங்கையில் நீண்ட காலமாக இருந்து வருகின்றதெனக் கூறலாம். அதன் தொடர்ச்சியே மேற்கூறப்பட்ட நாணயங்களில் வரும் காளையுருவம் என எடுத்துக் கொள்ளலாம். மேலும் வட இலங்கை நாணயங்களில் இக்காளையுருவம் பெரும்பாலான நாணயங்களில் கிடையாக உள்ள மூன்று கோடுகளை யுடைய பீடத்தின் மேல் அமர்ந்திருக்கிறது. இவ்வாறான பீடங்கள் இந்திய நாணயங்களில் இருப்தாகத் தெரிய வில்லை. இதேபோல் காளையின் கழுத்தும், ஏரியும் மிக நீண்டும். உயர்ந்தும் காணப்படுவதும் இந்நாணயத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காணக்கூடிய மற்றைய சிறப்பம்சங்களாகும். காளையை நாணயங்களில் பயன்படுத்தியதன் மூலம் இவற்றை வெளியிட்ட மன்னர்களுக்கு சைவசமயத்தின் மீதுள்ள ஈடுபாடு நன்கு புலனாகிறது.

சில நாணயங்களில் முன்புறத்தில் இருவிளக்கிற்கு இடையில் தனியொரு மீன் சின்னமும், பின்புறத்தில் பீடத்துடன் கூடிய செண்டும் அதன் இருபக்கத்தில் மீன் சின்னமும் காணப்படுகின்றன. இவை மிகத் தத்ரூபமாகப் பொறிக்கப் பட்டுள்ளன. இவ்வாறான மீன்சின்னம் பாண்டிய நாணயங்களில் மட்டுமன்றி இந்திய நாணயங்கள் எதிலும் காணப்படவில்லை.

பெரும்பான்மையான நாணயங்களில் வட்டமான சிறு புள்ளிகள் காணப்படுகின்றன. இது முத்தைக் குறிப்பதாக பிடுப்பே கூறுகிறார்(1966 53/4). இது வட இலங்கை நாணயங்களில் காணக்கூடிய சிறப்பம்சமாகும். வட மேற்கிலங்கைக்கும் பாண்டி நாட்டுக்கும் இடைப்பட்ட கடற்பிராந்தியம் பண்டு தொட்டு முத்துக் குளித்தலுக்குப் பெயர்போன இடமாக வரலாற்றிலக்கியங்கள் கூறுகின்றன. வட இலங்கைக்கு மணிபல்லவம் என்ற பெயர் ஏற்பட இங்கு இயற்கையாகக் கிடைத்த முத்தே காரணம் எனச் சொல்லப் படுகிறது. நாயன்மார் பாடல்களில் மாதோட்டநகர், துறைமுகச் சிறப்போடு முத்தின் சிறப்பும் கூறப்பட்டுள்ளது. யாழ்ப்பாண அரசு கால வெளிநாட்டு வர்த்தகத்தில் முத்து முக்கிய வர்த்தகப் பொருளாகத் திகழ்ந்தது. மாதோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது இரத்தினக்கல், யானைத்தந்தத்துடன் முத்து வர்த்தகம் நடந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. இவ்வாறு வட இலங்கையின் நீண்டகால வரலாற்றில் சிறப்புப் பெற்ற முத்தை நாணயங்களில் ஒரு சின்னமாகப் பயன்படுத்தியமை வட இலங்கை மன்னர்களின் அரச பொருளாதாரத்தில் முத்துக்குளித்தல் முக்கிய வெளிநாட்டு வர்த்தகப் பொருளாக இருந்ததே காரணம் எனலாம்.

முத்தைக் குறிக்கும் சின்னத்துடன் பல நாணயங்களில் சங்கும் காணப்படுகின்றன. இந்த இரு சின்னங்களும் ஒரே நாணயத்தில் வருவதை தமிழ் நாட்டு நாணயங்கள் எதிலும் காணமுடியவில்லை. நாணயங்களில் பயன்படுத்தப்

www.tamilarangam.net



பட்டுள்ள சங்கு வெற்றி, தூய்மை, தியாகம், தெய்வீகம், நீரின் தனித்தன்மை என்பவற்றைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது. வட இலங்கையை வெற்றி கொண்டதன் நினைவாக முதலாம் இராஜராஜசோழன் வெளியிட்ட நாணயங்களில் சங்கு இடம் பெற்றிருப்பதைக் கொண்டு அவன் வெற்றி கொண்ட நாட்டின் அரச சின்னம் சங்காக இருக்கலாம் என்ற கருத்துண்டு (*ஆறுமுக சீதாராமன் 1986:4*). ஆனால் வட இலங்கையில் முத்துக்குளித்தலுடன் சங்கு குளித்தலும் முக்கிய தொழிலாக இருந்ததால் அதைக் குறிக்கவே அச் சின்னத்தை நாணயங்களில் பயன்படுத்தினர் எனக் கூறலாம்.

வட இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங்களில் முன்புறம் காளையும் பின்புறம் இரு மீன் சின்னமும் பொறித்த நாணயங்களே அரிதாகத் தமிழ் நாட்டிலும் தென்னிலங்கையிலும் கிடைத்துள்ளன. இதன் மூலம் 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்டகாலத்தில் வடஇலங்கை அரசு அயல் அரசுகளுடனும், அயல் நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்ததெனக் கூறலாம். ஏனைய நாணயங்களைப் பொறுத்தவரை வட இலங்கைக்கு வெளியே கண்டு பிடிக்கப் பட்டதாகத் தெரியாவிட்டாலும் இது வரை கிடைத்த பெரும் பாலான நாணயங்கள் வரலாற்றுப் பழமை வாய்ந்த மாதோட்டத்துறைமுகப்பகுதிகளில் இருந்து கிடைத்திருப் பது அதன் வெளிநாட்டு வர்த்தக நோக்கத்தைக் காட்டு வதாக எடுத்துக் கொள்ளலாம். இலங்கையின் நீண்டகால வரலாற்றில் மாதோட்டத்திற்கெனத் தனித்துவமான வரலாறு உண்டு. இந்துச முத்திரத்தின் மத்தியில் அதன் அமைவிடம், கடல்சார் வர்த்தகத்துடன் தொடர்புடைய இயற்கையான துறைமுகம் பாண்டிநாட்டுடன் இணைந்த முத்துக்குளித்தல் என்பன இலங்கையின் நாகரிக வரலாறு இங்கிருந்தும் தொடங்கக் காரணமாயின. அதில் தமிழரசின் தோற்றத்துடன் தொடர்புடைய சான்றுகள் எமக்குக் கிடைத்திருப்பது தமிழ் நாட்டு நாகரிகம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நகர்ந்த போது இலங்கை நாகரிகம் வடக்கிலிருந்து தெற்காக நகர்ந்ததென பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் வகுப்பறையில் எனக்குச் சொல்லிக் கொடுத்த பாடம் தான் நினைவுக்கு வருகிறது.

—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடிக்குறிப்பு

1) தமிழ் நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை முதுநிலை கல் வெட்டாய்வாளர் கலாநிதி சு.இராசகோபால் அவர்கள் தமிழகத்தில் கிடைத்த இவ்வகை ஓடுகளை அடிப்படையாகக் கொண்டு இக்கருத்தை தெரிவித்தார்.

2)தமிழ்ப் பல்கலைக்கழக சிற்பத்துறைப் பேராசிரியர் இராசு காளிதாஸ் அவர்கள் இச்சிற்பத்திற்குரிய புகைப்படத்தைப் பார்த்துக் கூறிய கருத்து.

3) இக்கிராமத்தின் வரலாற்று முக்கியத்துவம்பற்றி பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் உரையாடலின் போது கூறிய தகவல்.

4) நாணயவியலாளர்களான தஞ்சாவூரைச் சேர்ந்த திரு. அளக்குடி ஆறுமுக சீதாராமன், சென்னைச் சேர்ந்த திரு . சங்கரன் இராமன் ஆகியோர் சேகரிப்பில் இவ்வகை நாணயங்கள் சிலவற்றைப் பார்த்தேன்.

5) இக்கல்வெட்டுத் தொடர்பாக தமிழ்ப் பல்கலைக்கழக தொல்லியல் பேராசிரியர் எ. சுப்பராயலு அவர்களுடன் உரையாடிய போது இவ்வாறான கருத்தையே அவரும் தெரிவித்தார்.

6) திரு.அளக்குடி ஆறுமுக சீதாராமன் அவர்களால் இவ்வாசகம் உறுதி செய்யப் பட்டது.

7) இச்சிவாலய அழிபாடுகளிடையே கிடைத்த அனைத்து ஓடுகளும் கைவிரல் அடையாளம் கொண்ட அமைப்பில் அதன்நுனிப்பாகம் துவாரமிடப்பட்டுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயம் பத்தாம் நூற்றாண்டுக்கு முன் கட்டப்பட்ட தெனக் கூறமுடிகிறது. மேலும் இவ்வாலயத்தின் அமைப்பு, கலைப்பாணி, நீள அகலம் என்பன சமகால முதலாம் பராந்தகன் கால ஆலயங்களை ஒத்திருப்பதைக் கொண்டு இது அவன் காலத்திலேயே வட இலங்கையில் கட்டப்பட்டது என்ற முடிவுக்கு வந்துள்ளேன்.

www.tamilarangam.net



*8) 1989*இல் இச்சிற்பத்திற்குரிய புகைப்படத்தை என் ஆசிரியர்களில் ஒருவரான திரு.செ. கிருஸ்ணராஜாவிடம் காட்டிய போது அதைச் சூரிய சிற்பமாகவே கூறியிருந்தார். ஆனால் கையிலுள்ள தாமரை மலர் தெளிவற்றதாக இருந்ததால் இரு கரங்களில் இருந்த தாமரை மலர்கள் சங்கு சக்கரமாக இருக்கும் எனக் கூறி இச்சிற்பத்தை முற்காலச் சோழக் கலைமரபுக்குரிய விஸ்ணு சிற்பமாகக் கூறியிருந்தேன். ஆனால் *1994* அச்சிற்பத்தை தூய்மைப்படுத்திய போது கையிலுள்ள தாமரை மலர்கள் ஓரளவு தெளிவாகத் தெரிந்தது. அதன் அடிப்படையில் இதைச் சூரிய சிற்பமாக எடுத்துக்கொண்டுள்ளேன். இக்கருத்தையும், காலத்தையும் பேராசிரியர் இராசுகாளிதாசு அவர்களும் உறுதி செய்துள்ளார்..

*9)* தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறையில் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு தமிழக நாணயங்கள் பற்றி கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்டு வரும் செல்வி மா. பாவானி அவர்கள் கொடுத்த புள்ளி விபரங்கள்.

*10)* இன்றைய இலங்கை வரைபடங்களில் பேய் முனை எனக் குறிப்பிடப்படும் இடம் பண்டு தொட்டு நாக முனை என அழைக்கப்படுகிறது. இவ்விடத்திற்கு அருகில் தான் புலச்சேரி, காக்கைதீவு போன்ற இடங்கள் உள்ளன.

*11)* இது பற்றி பேராசிரியர் எ. சுப்பராயலு அவர்களுடன் உரையாடிய போது இக்கருத்தையே தெரிவித்தார்.

*12)* தாய்த்தெய்வ வழிபாடு இலங்கையில் மிகத் தொன்மையானது. இதன் தொடக்கத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டில் கிடைத்த சுடுமண் உருவங்கள் உறுதிப்படுத்துகின்றன. பிராமிக் கல்வெட்டுக்களில் இவை குறியீடாக இடம்பெற்றுள்ளன. கந்தரோடையில் கிடைத்த கி.மு. 2ஆம்.1ஆம் நுற்றாண்டுக்குரிய தமிழ் நாணயத்தின் முன்புறத்தில் தாய்த்தெய்வ வழிபாட்டின் ஆரம்ப தோற்றமான ஸ்ரீவத்ஸ இடம்பெற்றுள்ளது. ஏறத்தாழ இதே காலகட்டத்திலிருந்து வெளியிடப்பட்டு கி.பி5ஆம் நூற்றாண்டுவரை புழக்கத்திலிருந்த நீள்சதுர நாணயங்களில் லஷ்மி உருவம் பலவடிவங்களில் இடம்பெற்றுள்ளன. இதன் தொடர்ச்சி நிலையையே மேற்குறிப்பிட்ட நாணயத்தில் வரும் லஷ்மி உருவம் எடுத்துக் காட்டுவதாகக் கூறலாம்.

www.tamilarangam.net

# கந்(தன்) ஆ(ரியச்சக்கரவர்த்தி) பெயர்களில் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள்- புதிய சான்றுகள்

யாழ்ப்பாண மன்னர்கள் சேது என்ற மொழி பொறித்த நாணயங்களை மட்டுமே வெளியிட்டதாக அறிஞர்கள் பலரும் நீண்ட காலமாகக் கூறிவருகின்றனர். 1970இல் மாதோட்டத்தில் கிடைத்த ஸ்ரீராஜசேகர, செகரசெகர என்ற பெயர் பொறித்த மூன்று நாணயங்களை அரிய நாணயங்கள் எனக் குறிப்பிட்ட மகாதேவன் அவற்றை யாழ்ப்பாண மன்னர் வெளியிட்டதாகக் கூறுகிறார் (Mahadevan 1970:111-20). இதில் ஸ்ரீராஜசேகர என்ற பெயர் பொறித்த முதலிரு நாணயங்களும் கால அடிப்படையில் யாழ்ப்பாண அரசுக்கு முற்பட்டதாக இருப்பதால் இவற்றை யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்டதாகக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. மூன்றாவது நாணயம் கால அடிப்படையில் யாழ்ப்பாண அரசு கால நாணயங்களுடன் தொடர்பு படுத்தி ஆராயக்கூடியது. ஆயினும் யாழ்ப்பாண மன்னர்கள் பயன்படுத்திய நந்தியோ, சேது மொழியோ அல்லது பிற சின்னங்களோ காணப்படவில்லை. அத்துடன் மாதோட்டத்தில் மட்டும் கிடைத்த அவ்வகை நாணயம் பிற இடங்களில் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை.

அண்மையில் எமது கள ஆய்வின் போது பூநகரி வட்டாரத்தில் மயில் உருவம் பொறித்த இரு வகையான நாணயங்கள் கிடைத்துள்ளன. அவ்வகை நாணயங்கள் இலங்கையில் மேலும் சில இடங்களில் கிடைத்துள்ளன. ஆயினும் இந்நாணயங்கள் எந்த மன்னர்கள் அல்லது எந்த

www.tamilarangam.net



வம்சத்தினர் வெளியிட்டனர் என்பது பற்றி யாரும் சரிவர ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. பூநகரியில் கிடைத்த ஒரு வகை நாணயங்களில் மயில் சின்னத்துடன் "கந்" என்ற பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது. இப்பெயருக்கும் சுந்தர பாண்டியன் வெளியிட்ட "சுந்தர" என்ற பெயருக்கும் இடையே ஒருவித ஒற்றுமை காணப்பட்டதால் மயில் உருவம் பொறித்த நாணயங்களைப் பாண்டிய வம்சத்தவர் வெளியிட்டிருக்கலாம் எனக் கூறியிருந்தேன் (1993:122-3). ஆனால் தமிழகத்தில் கிடைத்த பாண்டிய நாணயங்களுக் குரிய வகைப்பாட்டை நோக்கும் போது எமது முன்னைய கருத்தை மீளாய்வு செய்ய வேண்டிய அதேவேளை அவற்றை யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணய ங்களுடன் தொடர்பு படுத்தி ஆராயச் சில சான்றாதாரங்கள் உள்ளன.

பூநகரியில் கிடைத்த இவ்வகை நாணயங்கள் யாழ்ப் பாணம், கந்தரோடை போன்ற இடங்களிலும் கிடைத் துள்ளன. இவற்றைப் பல்லவர் வெளிட்டதாகச் சேயோன் என்ற நாணயவியலாளர் குறிப்பிட்டுள்ளார் (1998:17-32). 1983இல் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்தில் எனது ஆசிரியர் இந்திரபாலாவின் சேகரிப்பில் இவ்வகை நாணயங்கள் சிலவற்றைப் பார்த்துள்ளேன். அவை யாழ் பாணத்தில் உள்ள ஜேம்ஸ்இரத்தினம் ஈவிலின் பண்பாட்டு நிறுவனத்தில் இருப்பதாக அறிகிறேன். இலங்கையில் தனிப்பட்ட முறையில் நாணயங்களைச் சேகரித்து வரும் கலைஞானி, பொன்னம்பலம், ஆசிரியர் திருவள்ளுவர் போன்ற நாணயவியலாளரிடம் இவ்வகை நாணயங்கள் உண்டு எனத் தெரிகிறது. தறபோது சென்னை அருங்காட்சி யகத்தில் நான்கு நாணயங்கள் உள்ளன. இவை யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த ஒருவர் தமிழ் நாட்டிலுள்ள செட்டிப் பாளைய அன்பர் ஒருவருக்கு விற்றுப் பின்னர் அவை சென்னை அருங்காட்சியகத்திற்கு வந்ததாக அறிந்தேன். இவ்வகை நாணயங்கள் தமிழகத்தின் சில இடங்களில் கிடைத்துள்ளன. அவ்வாறு கிடைத்தவற்றுள் சில ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்திலும், அவ் வட்டாரத்தைச் சேர்ந்த நாணயவியலாளர் திருஞானசம்பந்த னிடமும் இருப்பதைப் பார்த்துள்ளேன். இவற்றிலிருந்து இந்நாணயங்கள் சேது நாணயங்களைப் போல குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கையிலும், தமிழகத்திலும் புழக்கத் திலிருந்தன எனக் கூறலாம்.

www.tamilarangam.net



பூநகரியிலும், சென்னை அருங்காட்சியகத்திலும் உள்ள நாணயங்களில் மயில் சின்னத்தோடு "கந்" என்ற பெயரும் காணப்படுகின்றது. ஆனால் சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள நாணயங்களை வெளியே எடுத்து ஆய்வுசெய்வதற்கு எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போய்விட்டன. கலைமகள் கல்வி நிலைய நூதனசாலையிலும், திருஞானசம்பந்தனிடமும் உள்ள நாணயங்கள் பூநகரியில் கிடைத்த நாணய வகையைச் சார்ந்தவை. யாழ்ப்பாணத்தில் தனிப்பட்ட சிலரிடம் இவ்வகை நாணயங்கள் இருப்பினும் அவற்றைத் தற்போதைய நிலையில் ஆய்வுக்குப் பயன்படுத்த முடியாதிருக்கிறது. இதனால் எமது சேகரிப்பிலுள்ள நாணயங்களே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு.

1) இடம்: மண்ணித்தலை
உலோகம்: செப்பு
அளவு: 1.5செ.மீ
எடை: 2.0 கிராம்(படம்-1இல1)

முன்புறம்: விளிம்பைச்சுற்றி இருவட்டங்கள். இருவட்ட திற்குள்ளும் தடித்த புள்ளிகள். இரண்டாவது வட்டத்திற்குள் இடப்புறம் பார்த்த நிலையில் மயில் சின்னம். இதன் தோகைகள் சுருங்கிய நிலையில் அதன் கொண்டை மிக உயரமாக உள்ளது. ஏனைய நாணயங்களில் மயிலின் வாயில் பாம்புச் சின்னம் காணப்படுகிறது. ஆனால் இந்நாணயத்தில் உள்ள சின்னம் பாம்பு உருவத்திலிருந்து சற்று வேறுபட்ட உருவமாக உள்ளது. மயிலுக்கு மேலே விளிப்பை ஒட்டியவாறு பிறைச்சந்திரன், சூரியன் காணப்படுகின்றன.

பின்புறம்: முன்புறம் போல் விளிம்பைச் சுற்றி இரு வட்டங்கள், வட்டத்திற்குள் தடித்த புள்ளிகள். ஆனால் இவை விளிம்பிலிருந்து சற்று விலகி முடிவுறாத நிலையில் உள்ளன. இடப்புறமாக வேல். அதன் கீழ் பெட்டி வடிவில் சதுரக் கோடு. அதற்குள் சக அடையாளம். மையத்தில் மேற்புறமாக தமிழில் "கந்" என்ற பெயர் காணப்படுகிறது. இதன் கீழ் இரு கால்களைக் குறிக்கும் உருவங்கள். இடப் புறமாக முக்கோண வடிவில் முடிவுறாத நிலையில் உள்ள வடிவம். இது குறியீடாக இருக்கலாம். இச்சின்னங்களைச் சுற்றி வட்டமான சிறு புள்ளிகள் உள்ளன.

www.tamilarangam.net



2) இடம்: வீரபாண்டியன்முனை.
உலோகம்: செப்பு
அளவு: 1.3 செ.மீ
எடை: 1.9 கிராம்(படம்-1.இல2)

முன்புறம்: முதலாவது நாணயத்தைப் போல் விளிம்பைச் சுற்றி இருவட்டங்கள். இருவட்டதிற்குள்ளும் தடித்த புள்ளிகள். இதில் காணப்படும் மயில் உருவம் முதலாவது நாணயத்தில் காணப்படும் மயில் உருவத்தைப் பெருமளவு ஒத்திருந்தாலும் சில அம்சங்களில் வேறுபடுகின்றன. முதலாவது நாணயத்தில் இடப்புறம் பார்த்த நிலையில் உள்ள மயில் இந்நாணயத்தில் வலப்புறம் பார்த்த நிலையில் காணப்படுகிறது. அத்துடன் இதன் வாயில் காணப்படும் சின்னம் பாம்பு எனத் தெளிவாகத் தெரிகிறது. இந்நாணயத்தில் உள்ள பிறைச்சந்திரனும், சூரியனும் பெருமளவு தேய்வடைந்த நிலையில் உள்ளன.

பின்புறம். முதலாவது நாணயத்தில் வருவது போன்ற வட்டம். இதில் வேல் சின்னம் காணப்படவில்லை. முதலாவது நாணயத்தில் "கந்" என எழுதப்பட்ட இடத்தில் இங்கு "ஆ" என்ற எழுத்துக் காணப்படுகிறது. இதனுடன் இணைந்த நிலையில் முதலாவது நாணயத்தில் வருவது போல் மனித வடிவில் அமைந்த கால் உருவங்கள் காணப்படுகின்றன. இதற்கு இடது, வலது புறமாக முதலாவது நாணயத்தில் வரும் சின்னங்கள் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட இரு நாணயங்களில் ஒன்றில் மயில் சின்னத்தோடு "கந்" என்ற பெயரும், மற்றையவற்றில் மயில் சின்னத்தோடு "ஆ" என்ற எழுத்தும் முக்கிய சின்னங்களாக இடம்பெற்றிருப்பதைக் கொண்டு இவற்றை இருவகை நாணயங்களாகப் பிரிக்க முடிகிறது. ஆனால் இரு நாணயங்களில் உள்ள மயிலின் தோற்ற அமைப்பு, சின்னங்களிடையேயும் காணப்படும் ஒற்றுமைகள், நாணயங்களின் வடிவமைப்பு, அவற்றிலுள்ள எழுத்துக்களின் காலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இவை குறிப்பிட்ட காலப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு வம்சத்தால் அல்லது மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் என்பது தெரிகிறது. இருவகை நாணயங்

www.tamilarangam.net



களிலும் காணப்படும் சின்னங்களில் சிறுசிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகள் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் வெளியிடப்பட்ட இலங்கை, இந்திய நாணயங் களில் காணக் கூடிய பொதுவான அம்சமாகும். இரு நாணயங்களிலும் மயில் முக்கிய சின்னமாக இடம் பெற்றுள்ளது. இதிலிருந்து இந்நாணயங்களை வெளியிட்ட மன்னன் அல்லது வம்சம் மயிலை அரசசின்னமாக அல்லது குலச்சின்னமாக, அல்லது சமயச் சின்னமாகப் பயன்படுத் தியுள்ளனர் என்ற அடிப்படையில் இவற்றை நோக்கலாம்.

யாழ்ப்பாண அரசு கால நாணயங்கள் படம்-1



இல.1



இல.2



இல.3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய நாணயங்களில் மயிலை ஒரு சின்னமாகப் பயன்படுத்தும் மரபு மிகத் தொன்மையானது. கி.மு.4ஆம், 3ஆம், நூற்றாண்டில் வட இந்தியாவில் மௌரிய மன்னர் வெளியிட்ட முத்திரை நாணயங்களில் மயிலும் ஒரு சின்னமாக இடம்பெற்றுள்ளது (Gupta 1969: 187). பிற்காலங்களில் குசாணரும், கி.பி4ஆம்,5ஆம் நூற்றாண்டில் குப்தரும் தாம் வெளியிட்ட நாணயங்களில் மயிலை ஒரு சின்னமாகப் பயன்படுத்தியுள்ளனர் (Gupta 1969:201). குப்தவம்சத்தவர் மயிலோடு முருகனைக் குறிக்கும் வேலையும், முருகனைக் குறிக்கும் கார்த்திகேய, குமார போன்ற பெயர்களையும் பொறித்துள்ளனர். ஆயினும் வட இந்தியாவின் பண்டைய நாணயங்களில் மயிற்சின்னம் அரசன், காளை, லஷ்மி போன்ற பிற சின்னங்களுடன் சேர்ந்து வருகின்றதே தவிர தனியொரு சின்னமாக இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரை அதன் தொடக்ககால நாணயங்களில் பிற சின்னங்களுடன் மயில் சின்னமும் இடம்பெற்றுள்ளன. 1098இல் கல்யாணிச்சாளுக்கிய மன்னன் விக்கிமாதித்தியன் (திருபுவனமல்ல) வெளியிட்ட செப்பு நாணயங்களில் மயில் முக்கிய சின்னமாக இடம் பெற்றுள்ளது. இதில் இடப்புறம் நோக்கி நிற்கும் மயில் தோகையை விரித்தாடும் நிலையிற்காணப்படுகிறது. பின் புறத்தில் தாமரைப்பூ வடிவிலான அலங்காரங்கள் காணப் படுகின்றன (Girijapathy 1999:82-3). 1646இல் நரசாராஜா உடையார் வெளியிட்ட செப்பு நாணயங்களின் முன் புறத்தில் விளிம்பைச் சுற்றி வட்டமும், வட்டத்திற்குள் இடப்புறம் நோக்கிய நிலையில் மயில் சின்னமும், பின் புறத்தில் வட்டத்திற்குள் கன்னட, தெலுங்கு எழுத்தில் "ஸ்ரீபட்ண" என்ற பெயரும் இடம்பெற்றுள்ளது (ஆறுமுக சீதா ராமன்1997:33). 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மைசூர் மன்னர்கள் பலர் மயில் உருவம் பொறித்த செப்பு நாணயங்களை வெளியிட்டனர். இதற்கு கிருஷ்ணராஜ உடையார், நரசராஜஉடையார் பெயர் பொறித்த நாணயங்களைக் குறிப்பிடலாம் (Vasudeva Rao 1998:114-6, Narsimha Murthy 1975:235-46). இந்நாணயங்களில் உள்ள சின்னங்கள் பெருமளவுக்கு மத்திய காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் உள்ளதைப் போல் மயில் ஆடும் நிலையில் தோகையை விரித்து இடப்புறம் நோக்கி உள்ளன. அதேபோல் பின்புறத்தில் உள்ள தாமரைப்பூ அலங்காரமும் காணப் படுகின்றது.

www.tamilarangam.net



தமிழ் நாட்டில் சங்ககால மலையமான் மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களில் வேல் சின்னம் காணப் படுகின்றது. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பல்லவர் வெளியிட்ட நாணயங்களில் முன்புறம் காளையுருவமும் அதன் மேற்புறத்தில் பல்லவர் கால எழுத்தில் "தம்" என்ற சொல்லும், பின்புறத்தில் இடப்புறம் நோக்கி நிற்கும் மயில் சின்னமும் இடம் பெற்றுள்ளன. 17ஆம் நூற்றாண்டில் இருந்து தமிழகத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள் பலரும் மயில் சின்னம் பொறித்த நாணயங்களை வெளியிட்டதாகத் தெரிகிறது. அவர்களுள் இராமநாதபுரச் சேதுபதிகள், மதுரைநாயக்கர், ஆர்க்காடு நவாப்பு என்போரால் வெளியிடப்பட்ட நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. மதுரையில் கிடைத்த நாணயம் ஒன்றின் முன்புறத் தில் இடப்புறம் நோக்கிய மயிலும், அதற்கு மேலே வேல் சின்னமொன்றும் இடம் பெற்றுள்ளன. பின்புறத்தில் இருவரிகளில் தமிழில் குமரன்து(ணை) என்று எழுதப் பட்டுள்ளது. இது 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயம் எனக் கூறப்படுகிறது (ஆறுமுக சீதாராமன் 1998:39). அண்மையில் மயில் மீது ஆறு தலைகளுடன் இருக்கும் முருகன் உருவம் பொறித்த நாணயம் ஒன்று ஆறுமுக சீதாராமனால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாணயத்தில் தமிழில் சேதுபதி என்ற பெயர் காணப்படுகிறது(1997).

இலங்கையில் மயில் சின்னம் பொறித்த முத்திரை நாணயங்கள் சில கிடைத்துள்ளன(Seyone 1998:46). இவை சுதேச நாணயங்களா அல்லது இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட நாணயங்களா என்பதை உறுதிப்படுத்த முடிய வில்லை. ஆனால் கி.மு.2 ஆம் நூற்றாண்டிலிருந்து வெளி யிடப்பட்ட லஷ்மி நாணயங்களில் பிற சின்னங்களுடன் மயில், வேல், சேவல் போன்ற சின்னங்கள் இடம் பெற்றுள்ளன. இதன் பின்னர் யாழ்ப்பாணமன்னர் வெளி யிட்ட சேதுமொழி பொறித்த நாணயங்களில் பிற சின்னங் களுடன் மயில் சின்னமும் காணப்படுகின்றது. மேற்கூறப் பட்ட நாணயத்திலிருந்து பண்டு தொட்டு இந்தியாவிலும், இலங்கையிலும் முருகனின் உருவத்தோடு அவனின் வாகனமாகிய மயில், ஆயுதமாகிய வேல் என்பவற்றோடு அவன் பெயர்களையும் நாணயங்களில் பொறிக்கும் மரபு இருந்ததெனக் கூறமுடிகிறது.

www.tamilarangam.net



இப்பின்னணியில் வைத்து நாம் ஆய்வுக்கு உட்படுத்திய நாணயங்களை நோக்கும் போது அவற்றில் இடம் பெற்றுள்ள மயில் சின்னம் நாணயங்களை வெளியிட்ட மன்னன் கந்தன்(முருகன்) வழிபாட்டுடன் தனக்குள்ள நெருக்கமான ஈடுபாட்டை வெளிப்படுத்தத் தான் வெளியிட்ட நாணயங்களில் முருகனின் வாகனமாகிய மயிலைப் பொறித்தான் எனக் கூறலாம். இதை நாணயத்தில் உள்ள வேல் சின்னத்துடன் "கந்" என்ற பெயரும் உறுதிப் படுத்துகிறது. இந்நாணயங்களுக்கும் இந்தியாவில் இதுவரை கிடைத்த மயில் சின்னம் பொறித்த நாணயங்களுக்கு மிடையே சில வேறுபாடுகள் உள்ளன. அதேவேளை யாழ்ப்பாண அரசு காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங் களுடன் சில அம்சங்களில் ஒற்றுமை கொண்டுள்ளன. அதன் அடிப்படையில் இவற்றை யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் வெளியிட்டார்கள் எனக் கூறமுடிகிறது. அதற்குப் பின்வரும் காரணங்களைக் காட்டலாம்.

*1)*. நாணயங்களில் வரும் "கந்" என்ற பெயரும், "ஆ" என்ற எழுத்தும் இந்நாணயங்களை தமிழ் மன்னர்கள் அல்லது தமிழ் மக்களை ஆட்சி புரிந்த மன்னர்கள் வெளியிட்டுள்ளார்கள் என்பதைக் காட்டுகின்றன. நாணயங் களில் உள்ள எழுத்துக்கள் கி.பி14ஆம் நூற்றாண்டிற்கும், கி. பி16 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவை என்பதை அவற்றின் எழுத்தமைதி கொண்டு கணிப்பிடமுடிகிறது. இக்காலப் பகுதியில் தமிழ் நாட்டு மன்னர்கள் இவ்வகை நாணயங்களை வெளியிட்டதற்கோ, அல்லது வேறு வடிவங் களில் மயில் சின்னத்துடன் தமிழில் பெயர் பொறித்த நாணயங்களை வெளியிட்டதற்கோ இதுவரை சான்றுகள் கிடைத்ததாகத் தெரியவில்லை. மாறாக யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் இம்மரபு காணப் படுகிறது. மேலும் மேற்குறிப்பிட்ட நாணயங்கள் வட இலங்கையில் கிடைத்த அளவிற்கு தமிழகத்தில் கிடைத்த தாகவும் தெரியவில்லை. இவை தமிழ் நாட்டு வம்சங்களால் வெளியிடப்பட்டிருக்குமாயின் இலங்கையை விட தமிழகத்தில் கூடுதலாகக் கிடைத்திருக்க வாய்ப்புண்டு. அத் துடன் தென்னிந்திய மற்றும் தமிழக நாணயங்கள் தொடர் பாக வெளிவந்த எந்த நூலிலும் இவ்வகை நாணயம் பற்றிக் குறிப்பிடப்பட்டதாகவும் தெரியவில்லை.

www.tamilarangam.net



யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட சேது மொழி பொறித்த சில நாணயங்களில் பிற சமயச் சின்னங்களுடன் வேல், மயில் ஆகிய சின்னங்களும் இடம்பெற்றுள்ளன. இவற்றில் இடப்புறம் நோக்கி அமர்ந்திருக்கும் நந்தியின் முகத்திற்கு நேரெதிரே வலப்புறம் பார்த்த நிலையில் மயில் காணப்படுகிறது. இம்மயில் சின்னத்திற்கும் இங்கே ஆய்வுக்கு உட்படுத்திய நாணயங்களில் வரும் மயில் சின்னத்திற்கும் இடையே தோற்ற அமைப்பில் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. இரண்டிலும் மயிலின் தோகை சுருங்கிய நிலையிற் காணப்படுகிறது(படம்-1இல.3). ஆனால் இந்திய நாணயங்களில் இடம்பெற்றுள்ள மயில்கள் பெரும்பாலும் தோகையை விரித்து ஆடும் நிலையில் காணப் படுகின்றன. அத்துடன் அவை நாணயங்களில் பெரும் பாலும் இடப்புறம் பார்த்த நிலையில் காணப்படுகின்றன. ஆனால் இங்கு வலப்புறம் பார்த்த நிலையில் உள்ளன.

யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் வரும் "சேது" என்ற சொல்லின் விரிந்த வடிவமே அம் மன்னர்கள் பயன்படுத்திய *சேதுகாவலன்* என்ற விருதுப் பெயராகும் என்பது பேராசிரியர் பத்மநாதனின் கருத்தாகும் (1980). செகராசசேகரமாலை எனும் நூல் யாழ்ப்பாண மன்னர்களில் ஒருவனான செகராசசேகரனை *கந்தமலை யாரியர்கோன்* என வருணிக்கிறது (பத்மநாதன் 1992:317). கந்தமலை எனப்படுவது தென்னிந்தியாவின் தென்முலையி லுள்ள கந்தமாதனம் என்பதாகும். சேது எனும் தலம் கந்தமாதனத்தில் உள்ளதாகச் சேதுபுராணம் கூறுகிறது. இது ஆரியச்சக்கரவர்த்திகளது பூர்விக இடங்களில் ஒன்று. எனவே *சேதுகாவலன்* என்ற விருதுப் பெயரின் சுருக்கமே நாணயங்களில் வரும் "சேது" எனக் கொண்டால், செகராச சேகரமாலையில் வரும் *கந்தமலையாரியர்கோன்* என்ற விருதுப்பெயரின் சுருக்கமாக நாணயங்களில் வரும் "கந்" என்ற பெயரைக் கொள்வது முற்றிலும் பொருத்தமாகும். ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் சேது எனும் சொல்லைக் குலச்சின்னமாக, அரசசின்னமாகப் பயன்படுத்திய அதே வேளை அச்சொல்லை மங்கல மொழியாகவும், தெய்வீக மொழியாகவும் நாணயங்களில் பயன்படுத்தியுள்ளனர். இதற்கு ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் சைவசமத்தின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாகும். அதேபோல் நாணயங் களில்வரும் "கந்", என்ற பெயரும் "கந்தமலையாரியர்கோன்"

www.tamilarangam.net



என்ற விருதுப் பெயரும் ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் முருகவழிபாட்டுடன் கொண்ட ஈடுபாட்டைக் காட்டுகிறது எனக் கூறலாம்.

இரண்டாவது வகை நாணயங்களில் வரும்"ஆ" என்ற எழுத்து இந்நாணயங்களை ஆரியச்சக்கரவர்த்தி மன்னர் களே வெளியிட்டார்கள் என்பதற்கு மேலும் ஒரு சான்றாகும். இடைக்காலத் தென்னிந்திய நாணயங்களை ஆராய்ந்தால் அவற்றுள் சில நாணயங்களில் இரு சிறப்பம்சங்களைக் காணலாம். ஒன்று மன்னன் பெயருக்குப் பதிலாக அவனது அல்லது அவன் வம்சத்தின் முதலெழுத்தை நாணயங்களில் பயன்படுத்தும் முறை காணப்பட்டது. இதற்கு சேரமன்னர் நாணயங்களில் பயன்படுத்தி "ச" என்ற எழுத்தையும் (Mitchiner1998:160-1).மூன்றாம் பல்லளாமன்னன் தமிழகத்தில் கொங்கு நாட்டை ஆட்சி செய்த போது(கி.பி.1292-1345) வெளியிட்ட நாணயங்களில் வரும் "ப" என்ற எழுத்தையும் குறிப்பிடலாம். இதேபோல் இக்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் மன்னனின் அல்லது வம்சத்தின் பெயருக் குரிய முதலெழுத்தை மன்னனின் தலையாகக் கொண்டு உடலின் கீழ்ப் பாகங்களை நாணயங்களில் பொறிக்கும் மரபு காணப்பட்டது. இதற்கு மூன்றாம் வல்லாளன் வெளியிட்ட நாணயங்களே சிறந்த சான்றாகும்(ஆறுமுக சீதாராமன் 1996: 89-7). இங்கே "ஆ" என்ற எழுத்திற்கும், "கந்" என்ற எழுத்திற்கும் கீழே நடுவில் உள்ள பகுதி மனிதனின் இடுப்புடன் இணைந்த கால்ப்பகுதியாகத் தோன்றுகிறது. இதை "ஆ" எழுத்துப் பொறித்த நாணயங்களில் தெளிவாகக் காணமுடிகிறது. இங்கே "கந்" என்ற பெயரின் விரிந்த வடிவமாக "கந்தமலையாரியர்கோன்" கொள்ளப்படும் போது "கந்" என்ற எழுத்திற்கு கீழேயுள்ள மனித உருவம் அப்பெயருக்குரிய மன்னனைக் குறித்ததெனக் கூறுவது மிகையல்ல. அப்படியானால் "ஆ" என்ற எழுத்திற்கு கீழேயுள்ள மன்னன் யார் என்ற கேள்வி எழுகின்றது. தமிழ்ப்பேரகராதியில்"ஆ"என்பதற்கு இடபம் என்ற பொருள் உண்டு (T.L.V:201). யாழ்ப்பாண மன்னர்கள் நந்தியை நாணயங்களில் பயன் படுத்தியதால் அவ்வாறு கொள்ளவும் இடமுண்டு. ஆனால் "ஆ" என்ற எழுத்திற்கு கீழே இருகால்களேயுள்ளதால் இதை ஒரு மன்னன் உருவமாகவே கொள்ளலாம். இதனால் ".ஆ" என்ற எழு த்தை ஒரு மன்னனுக்குரிய பெயராகக் கொள்வதே பொருத்தமாகும். யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த ஆரியச்சக்கரவர்த்தி

www.tamilarangam.net



மன்னர்கள் தம் பெயருக்குப் பதிலாக தமது குலத்தை, பூர்வீகத்தைக் குறிக்கும் "சேது" என்ற பெயரையே நாணயங்களில் பயன்படுத்தியுள்ளனர். இதனால் நாணயங்களில் வரும் "ஆ" என்ற எழுத்து ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற வம்சப்பெயரைக் குறிக்கும் "ஆ" என்ற முதலெழுத்து எனக் கூறுவது முற்றிலும் பொருத்தமாகும்.

மேற்கூறப்பட்ட சான்றாதாரங்களிலிருந்து ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மயில் சின்னம் பொறித்த நாணயங்களை யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் வெளியிட்டார்கள் என்பது தெளிவாகிறது. அப்படியானால் இந்நாணயங்கள் எந்த மன்னன் ஆட்சியில் வெளியிடப்பட்டிருக்கலாம் என்பது ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டிய விடயங்களில் ஒன்றாகும். யாழ்ப்பாண அரசு பற்றி பல்வேறு காலகட்டங்களில் பலதரப்பட்ட அறிஞர்கள் இதுவரை ஆராய்ந்துள்ளனர். ஆயினும் எந்தெந்த காலப் பகுதியில் எந்த மன்னன் ஆட்சிபுரிந்தான் என அறுதியிட்டுக் கூறுவதற்கு இதுவரை தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. முறைப்படி ஆராயப்பட்டதென்ற வகையில் பத்மநாதனின் யாழ்ப்பாண இராச்சியம் என்ற நூலைச் சிறப்பாகக் குறிப்பிடலாம் (1972). அதில் கூட சான்றுகள் அற்ற நிலையில் சில மன்னர்கள் பற்றியும், அவர்களின் ஆட்சிக் காலம் பற்றியும் ஐயங்கள் எழுப்பப்பட்டுள்ளதைக் காணலாம். இந்நிலையில் ஆய்வுக்கு உட்படுத்திய நாணயங்களை எந்த மன்னர்கள் வெளியிட்டார்கள் என அறுதியிட்டுக் கூறுவது கடினமாகும். ஆனால் நாணயங்களில் இடம்பெற்றுள்ள "கந்" என்ற பெயருக்கும், இராசதானியின் தலைநகர் நல்லூரில் கந்தன் ஆலயத்தைக் கட்டிய மன்னனுக்கும் மற்றும் "கந்தமலையாரியர்கோன்" என்ற விருதுப்பெயரைத் தாங்கிய மன்னனுக்குமிடையே ஒருவித தொடர்பு இருப்பது போலக் காணப்படுகிறது. இவற்றின் அடிப்படையில் இந்நாணயங்களை எந்த மன்னன் வெளியிட்டிருக்கலாம் என்பதை ஆராய்ந்து பார்க்கலாம்.

கைலாயமாலையில் வரும் தனிச் செய்யுள் நல்லூரில் கந்தன் ஆலயத்தையும், யாழப்பாண நகரத்தையும் அமைத்தவன் புவனேகபாகு எனக் கூறுகிறது.

www.tamilarangam.net



"இலக்கிய சகாப்த மெண்ணூற்
றெழுபதா மாண்ட தெல்லை
அலர்பொலி மாலை மார்ப
னாம்புவ னேகவாகு
நலம்மிகும் யாழ்ப்பாணத்து
நகரிகட் டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக்
கோயிலும் கட்டுவித் தானே"

இச்செய்யுள் குறிக்கும் காலத்தை சகவருடம் எண்ணூற்றெழுபதாக எடுத்துக் கொண்டு பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் மந்திரி புவனேகபாகு காலத்தில் அரசும், கந்தன் ஆலயமும் தோன்றியதாகக் கூறுகின்றனர். ஆனால் இக்கூற்றை ஏற்கக் கூடிய அளவுக்குச் சான்றுகள் இல்லை. இலங்கையில் புவனேகபாகு என்ற பெயரில் 7மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுள் 6ஆம் பராக்கிரமபாகு தென்னிலங்கையில் ஆட்சி செய்த காலத்தில் அவன் வளர்ப்பு மகனாகிய சபுமால்குமர என்ற செண்பகப் பெருமாள் 1540இல் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி 18 ஆண்டுகள் புனேகபாகு என்ற பெயருடன் ஆட்சிபுரிந்துள்ளான். இதை யாழ்ப்பாணத்தில் கிடைத்த இவன்காலக் கல்வெட்டே உறுதிப்படுத்துகிறது (Indrapala 1971:29-31). இவனே மேற்படி செய்யுளில் வரும் புவனேகபாகு என்பதையும், அவனே ஏற்கனவே இருந்த கந்தன் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினான் என்பதையும் இந்திரபாலா, பத்மநாதன் போன்ற வரலாற்றறிஞர்கள் தக்கசான்றுகளுடன் நிறுவியுள்ளனர். இன்றும் நல்லூர் கட்டியத்தில் ஓதப்படும் சபுமால், ஸ்ரீசங்கபோதி, புவனேகபாகு போன்ற பெயர்கள் இவனையே குறிக்கிறது. இவன் கஜவல்லி, மகாவல்லி, சுப்பிரமணியர் (கந்தன்) போன்ற கடவுளரிடம் மிகுந்த பக்தியுடையவன் என்று அக்கட்டியம் மேலும் கூறுகிறது (பத்மநாதன் 1972:57).

யாழ்ப்பாண அரசுகாலக் கந்தன் ஆலயத்தோடு புவனேகபாகுவுக்குள்ள தொடர்பை நோக்கும் பொது மயில் மற்றும் "கந்" என்ற பெயர் பொறித்த நாணயங்களை இம்மன்னன் வெளியிட்டானா என்ற கேள்வி எழுகின்றது. நந்தி உருவம் பொறித்த யாழ்ப்பாண மன்னர்கால அனைத்து நாணயங்களிலும் சேது மொழி இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. இதற்கு ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்களின்

www.tamilarangam.net



குலமரபுச் சின்னமாக சேது இருந்ததே காரணமாகும். புவனேகபாகு ஆரியச்சக்கரவர்த்தி குலமரபைச் சாராத மன்னன். இதனால் இம்ம ன்னன் சேதுவுக்குப் பதிலாக "கந்" என்ற பெயரையும், நந்திக்குப் பதிலாக சேது நாணயங்களில் பயன்படுத்தப்பட்ட மயில் சின்னத்தையும் தான் வெளியிட்ட நாணயங்களில் முக்கிய சின்னமாகப் பொறிப்பித்தானா எனத் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு. ஆனால் ஆரியச்சக்கரவர்த்திவம்சத்தைக் குறிக்கும் "ஆ" என்ற முதலெழுத்தும், இம்மன்னர்கள் பயன்படுத்திய " கந்தமலையாரியர்கோண்" என்ற விருதுப்பெயரின் சுருக்கத்தைக் குறிக்கும் "கந்" என்ற பெயரும் மயில் உருவம் பொறித்த நாணயங்களில் வருவதால் இந்நாணயங்களைப் புவனேக பாகு மன்னனுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பது முரண்பாடாகத் தோன்றுகிறது.

இதுவரை வரலாற்றறிஞர்கள் ஆய்வுக்கு உட்படுத்திய ஆரியச்சக்கரவர்த்திகள் கால நாணயங்கள் அனைத்திலும் நந்தியும், சேது என்ற மொழியும் முக்கிய சின்னங்களாகக் காணப்பட்டுள்ளன. ஆனால் எல்லா நாணயங்களிலும் இவை ஒரே முக்கியத்துவத்தைப் பெற்றதாகக் கூறமுடியாது. சில நாணயங்களில் வழக்கமாக நந்தி பொறிக்கப்பட்ட இடத்தில் அமர்ந்த அல்லது நிற்கும் நிலையில் மன்னன் உருவமும், இதற்கு இடப்புறமாக பக்கவாட்டில் சிறிய நந்தி உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. வேறு சில நாணயங்களில் சேது மொழி பொறிக்கப்பட்ட இடத்தில் அமர்ந்த அல்லது நிற்கும் நிலையில் மன்னன் உருவமும், இதற்கு இடப்புறமாக பக்கவாட்டில் சேது மொழியும் பொறிக்கப்பட்டுள்ளன (இதற்கு சேது நாணயங்கள் பற்றிய எமது கட்டுரையில் உள்ள புகைப்படங்களைப் பார்க்கவும்). இதற்கு நாணயங்கள் வெளியிடப்பட்ட காலம் அல்லது அவற்றை வெளியிட்ட மன்னர்களுக்கிடையிலான வேறுபாடு காரணமாக இருக்கலாம். இந்த வேறுபாடுகளின் இன்னொரு கட்டத்தைத்தான் கந்தன் வழிபாட்டுடன் தொடர்புடைய வேல், மயில் சின்னங்களுடன் "கந்" பெயர் பொறித்த நாணயங்கள் குறித்து நிற்கின்றன எனக் கூறலாம். இது ஒருவகையில் இந்நாணயங்களை வெளியிட்ட மன்னன் கந்தன் வழிபாட்டோடு தனக்குள்ள ஈடுபாட்டைக் காட்ட தான் வெளியிட்ட நாணயங்களிலும் அவற்றை வெளிப்படுத்தினான் எனக் கூறலாம். இதன் விளைவே ஆரியச்சக்கர

www.tamilarangam.net



வர்த்தி மன்னர்களுள் ஒருவன் *கந்தமலையாரியர்கோன்* என்ற விருதுப் பெயரைப்பெறக் காரணம் எனக் கருதலாம்.

செகராசசேகரமாலை என்ற நூல் "கந்தமலையாரியர் கோன்" *என்ற* விருதுப் பெயரைத்தாங்கியவன் செகராசசேகர மன்னனன் எனக் கூறுகிறது. செகராசசேகரம், பரராசசேகரம் என்பது யாழ்ப்பாண மன்னர்கள் மாறிமாறிச் சூடிக் கொண்ட சிம்மாசனப் பெயர்களாகும். இதில் *கந்தமலையாரியர்கோன்* என்ற விருதுப் பெயரைத் தாங்கிய செகராசசேகர மன்னன் யார் என்பது தெரியவில்லை. ஆனால் *கந்தமலையாரியர் கோன்* என்ற விருதுப்பெயர்பற்றிக் கூறும் செகராச சேகரமாலை என்ற நூல் 14ஆம் நூற்றாண்டில் வரோதய சிங்கையாரியன் காலத்தில் எழுதப்பட்டதாகும். இவன் செகராசசேகரன் என்ற சிம்மாசனப் பெயரைப் பெற்றிருந் தான். இதனால் இவனும் "கந்தமலையாரியர்கோன்" என்ற விருதுப்பெயரையும் பெற்றிருக்கலாம் எனக் கருத இட முண்டு. இவன் ஆட்சியில்தான் யாழ்ப்பாண இராச்சியம் உன்னதநிலையில் இருந்ததை பல்வேறு வரலாற்று மூலங் களில் இருந்து அறியமுடிகிறது. இவன் கச்சாயில் வடக்கரை வெற்றி கொண்டமையும் (இந்தியப் படையெடுப்பாளர் களை வடக்கர் எனக்கூறுவது மரபு), தென்னிலங்கை மன்னர்களிடம் திறைபெற்றமையும், முஸ்லிம் படையெடுப் பால் பலவீனமுற்ற பாண்டியப் பேரரசுக்கு ஆதரவாக பொன்னையும், யானைகளையும் கொடுத்தான் எனவும் வரலாற்றிலக்கியங்கள் கூறுவது இம்மன்னனின் ஆட்சிக் காலச் சிறப்பைக் காட்டுகிறது. இவன் தமிழையும் வடமொழி யையும் வளர்க்க உள்ளூர் மற்றும் தமிழகத்திலிருந்து வந்த புலவர்களுக்கு பொன்னாலான பல பொருட்களைப் பரிசாகக் கொடுத்தது பற்றி செகராசசேகரமாலை(1942:10) பின்வருமாறு கூறுகிறது.

"மன்னர் மன்று செகராசசேகரன்
மணவை யாரய வரோதயன்
பன்னு செந்தமிழ் வளம் பெறற்குதவு
பரிசிலங்கவர் சித்தியாம்
பொன்னின் மிஞ்சிய கெண்டிகை
பொலங் கலன் பிறவு மாம்பரிச்
சின்னமுள்ள தொகை யாவுமிவ்
விதிசிறந்த றிந்துரை சேயிழாய"

www.tamilarangam.net



இக்கூற்றிலிருந்து இவன் ஆட்சிக்கால செல்வநிலையை உணரமுடிகிறது. இதற்கு முத்துக்குளித்தல் சர்வதேச வர்த்தகத்துடன் இணைந்து வளர்ச்சியடைந்தமையும் ஒரு காரணமாக இருக்கலாம். இம்மன்னன் முத்துக்குளிப்புக்குப் பெயர்போன முத்துச்சிலாபத்தை தன்கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக தென்னிலங்கை மன்னர்களுடன் பகைத்துக் கொண்டதாகவும் தெரிகிறது. இங்கே "கந்" என்ற பெயரைச்சுற்றி நாணயங்களில் காணப்படும் சிறு புள்ளிகள் முத்தைக் குறிக்கிறது. இதிலிருந்து இக்காலச் சர்வதேச வர்த்தகத்தில் முத்துப் பெற்ற முக்கியத்துவத்தை உணரமுடிகிறது. இம் மன்னன் பற்றி யாழ்ப்பாண அரசு கால இலக்கியங்கள் கூறுகின்றவற்றைச் சிங்கள இலக்கியங் களுடனும், சமகால பாண்டிய, சிங்களக் கல்வெட்டுக் களுடனும் ஒப்பிட்டு இவனின் ஆட்சிக்காலம் 14ஆம் நூற்றாண்டெனப் பத்மநாதன் கணித்துள்ளார்( 197244-7). ஏறத்தாழ இதே காலத் தோடு "கந்" என்ற பெயர் பொறித்த நாணயங்களையும் தொடர்புபடுத்தக் கூடியதாக இருக்கு மாயின் இவனே இந்நாணயங்களை வெளியிட்டான் எனக் கூறுவது பெருமளவு பொருத்தமாகத் தோன்றுகிறது. ஆனால் இவ்வகை நாணயங்கள் இவன் ஆட்சிக்காலத்தில் மட்டும் தான் வெளியிடப்பட்டதா என்பதை அறிஞர்கள் மேலும் ஆராய இடமுண்டு.

இந்நாணயங்களில் வரும் முருகவழிபாட்டுடன் தொடர் புடைய சான்றுகள் இக்காலத்தில் முருகவழிபாடு சிறப் புற்றிருந்தமைக்குச் சிறந்த சான்றாகும். இலங்கையில் பண்டு தொட்டு முருகவழிபாடு இருந்து வருகிறது. இதன் தொடக்ககாலச் சின்னங்களைப் பெருங்கற்காலப்பண் பாட்டிலிருந்து காணமுடிகிறது (சிற்றம்பலம்1996:181-206). பிற்காலத்தில் இப்பெயருடன் கந்தன், சுப்பிரமணியர், வேலாயுதர், முருகமூர்த்தி, முத்துக்குமாரசுவாமி, குமரன், தண்டாயுதபாணி, சண்முகசாமி, ஆறுமுகசாமி, சிவகுருநாத சுவாமி முதலான பெயர்களில் ஆலயங்கள் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றன. இவற்றுள் கந்தன் வழிபாடே செல்வாக்குப் பெற்றுள்ளன. இன்று இலங்கையிலுள்ள முருக ஆலயங்களில் முன்றில் ஒரு பங்கு கந்தன் ஆலயங்கள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் வரலாற்றுப் பழமைவாய்ந்த முருகன் ஆலயங்கள் உள்ள பழனி, திருச்செந்துார் போன்ற இடங்கள் கந்தமலை என இலக்கியங்களில் அழைக்கப்பட்டாலும் நடைமுறையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முருகன் ஆலயங்கள் என அழைக்கப்படும் மரபே பெரும் பாலும் காணப்படுகிறது. இலங்கையில் சிறப்பாக யாழ்ப் பாணத்தில் கந்தன் வழிபாடு சிறப்புப் பெற்றதற்கு கந்த புராணமே உதவியிருக்கவேண்டும் எனக் கூறும் பேராசிரியர் வேலுப்பிள்ளை இது அருணகிரிநாதர் காலத்திற்கு முன்பாக கி.பி14ஆம் நூற்றாண்டளவில் காஞ்சியில் கச்சியப்ப சிவாச்சாரியரால் பாடப்பட்டது என்கிறார்(1985:231). கி.பி15ஆம் நூற்றாண்டில் ஈழத்து முருக தலங்கள் பற்றிக் கூறும் அருணகிரிநாதரின் திருப்புகளில் கதிர்காமத்துடன் யாழ்ப்பாணமும் குறிப்பிடப்பட்டுள்ளமை அக்காலத்தி லேயே கந்தன் ஆலயங்கள் சிறப்புற்றிருந்ததைக் காட்டு கிறது. இதற்கு மேற்குறிப்பிட்ட நாணயங்கள் மேலும் சான்றாக அமைகின்றன.

www.tamilarangam.net

# யாழ்ப்பாண அரசு கால சேது நாணய வகைகள்

வட இலங்கையில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு ஒன்று பதின் மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஆரியச்சக்கரவர்த்திகள் என்னும் தமிழ் மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டதைத் தமிழ், சிங்கள இலக்கியங்கள், இலங்கை, தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் போத்துக்கேய ஆவணங்கள் என்பன கூறுகின்றன. இதே காலமளவில் தென்னிலங்கையில் கண்டி, கோட்டை அரசுகளும் திருகோணமலை, பழுகாமம், பானமை முதலான சிற்றரசுகளும் இருந்தன. யாழ்ப்பாண அரசின் கீழ் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், பச்சிலைப்பள்ளி ஆகிய மாட்டங்களும், மன்னார் மற்றும் பதின்மூன்று தீவுகளும், வன்னிமைகளான பனங்காமம், முள்ளியவளை. தென்னமரடி என்பனவும் உள்ளடங்கியிருந்தன. சில காலங்களில் இதன் ஆதிக்கம் கிழக்கிலங்கையிலும், தென்னிலங்கையிலும் பரவியிருந்ததாகத் தெரிகிறது. சிங்கள இலக்கியங்கள் இவ்வரசை யாப்பாபட்டுன எனவும், விஜயநகர தஞ்சைநாயக்கர் காலக் கல்வெட்டுக்களும், பிற ஆவணங்களும் இவ்வரசை யாழ்ப்பாண தேசம், யாழ்ப்பாணாயன் பட்டினம் எனவும் வர்ணிக்கின்றன. இவ்வரசு காலத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் வட இலங்கையில் வாழும் தமிழர் சமுதாயத்தின் சமூக வழமையினதும், பண்பாட்டு அம்சங்களினதும் தனித்தன்மை ஏற்படுவதற்கு ஊன்றுகோலாக இருந்தன (பத்மநாதன் 1992).

இவ்வரசு காலத்தில் வெளிநாட்டு வர்த்தகம் செழிப்புற்றுக் காணப்பட்டன. பாண்டிநாட்டிற்கும் வட

www.tamilarangam.net



மேற்கு இலங்கைக்கும் இடைப்பட்ட கடல்பரப்பில் மேற் கொள்ளப்பட்ட முத்து, சங்கு குளித்தலின் பயனாக யாழ்ப் பாண மன்னர்கள் பெருமளவு வருவாயைப் பெற்றனர். இவ் வருவாய் பலம்வாய்ந்த சேனைகளை வைத்திருக்கக் காரண மாக அமைந்தது. இவர்கள் தென்னிலங்கை, தென்னிந்திய அரசுகளுடன் மட்டுமன்றி தூரதேச நாடுகளுடனும் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். இதைத் தில்லிசுல்தானியத்தில் சில காலம் உயர்அதிகாரியாக இருந்து பின்னர் இலங்கை வந்த இவுன் பற்றுற்றா கூறிய ஆரியச்சக்கரவர்த்தி மன்ன னது வர்த்தகக் கப்பல்கள்பற்றியும், விலையுயர்ந்த முத்து, மற்றும் கறுவா பற்றியும் முத்துச்சிலாபத்திற்கு அண்மையில் பட்டாள என்ற நகரில் (புத்தளம்?) அமைந்த மாளிகை பற்றியும் கூறும் செய்திகளில் இருந்து அறியமுடிகிறது. பதின்னான்காம் நூற்றாண்டிலே பாக்குநீரிணைக் கடல் வழியான வர்த்தகம் இவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இலக்கியம், சமயம், சோதிடம், மருத்துவம் முதலான துறைகள் சார்ந்தனவும் சமஸ்கிருதத்திலும் தமிழிலுமுள்ளன வுமான ஏட்டுச் சுவடிகள் பலவற்றைத் தேடிப்பெற்று இவற்றை ஆராய்ந்த விற்பன்னர்களுக்கு இம்மன்னர்கள் ஆதரவளித்து வித்தியாவிருத்தியை ஊக்குவித்தனர். மருத் துவம், சோதிடம் ஆகிய துறைகளிலே தமிழிலே எழுதப் பெற்ற காலத்தால் முற்பட்ட சில நூல்கள் யாழப்பாண மன்னர்களின் ஆதரவுடன் எழுதப்பெற்றவை. வட இலங்கைத் தமிழரின் தனித்துவத்தைப் பிரதிபலிப்பதான தேசவழமைக்கு அடிப்படையான கோட்பாடுகள் இவ்வரசு காலத்தில் உருப்பெற்றன(பத்மநாதன்1992:25-65).

இவ்வரசு காலத்தில் இலங்கையில் வேறு சில அரசுகள் இருந்தும் பதின்னான்காம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசு படைபலத்திலும், பொருளாதார பலத்திலும் மேம்பட்ட நிலையில் இருந்ததை நிகாய சங்கிரகய, இராசவலிய ஆகிய சிங்கள நூல்கள் கூறுகின்றன. இது பற்றி இராசவலிய என்ற சிங்கள நூல் பின்வருமாறு கூறுகிறது (பத்மநாதன் 1992:50).

"பராக்கிரமபாகுவின் மகன் கம்பளையில் இருந்தான், ஆளககோனார் என்னும் மந்திரி றயிகமத்திலிருந்தான். யாழ்ப்பாணப்பட்டினத்தில் ஆரியச்சக்கரவர்த்தி இருந்தான். இம்மூவருள் சேனாபலத்திலும், பொருள்பலத்திலும் ஆரியச்சக்கரவர்த்தி மேலோங்கியிருந்தான். அதனால்

www.tamilarangam.net



அவன் மலைநாட்டிலிருந்தும், கீழ்நாட்டிலிருந்தும் ஒன்பது துறைமுகங்களிலிருந்தும் திறைபெற்றான்".

இவற்றிலிருந்து யாழ்ப்பாண மன்னர்கள் சில சந்தர்ப்பங்களில் தென்னிலங்கையிலுள்ள சில வர்த்தகத் துறைமுகங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தமை தெரிகிறது. இபின்பற்றுற்றா ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்களது பட்டளநகர் பற்றிக் குறிப்பிடும் பொழுது அந்நகரைச் சுற்றி கரையோரமெங்கும் கறுவாமரத்தின் துண்டங்கள் கட்டுக்கட்டாகக் குவிக்கப்பெற்று மலைபோல் காட்சியளித்ததாக வர்ணிக்கிறார். கறுவா யாழ்ப்பாண இராச்சியத்திற்கு அன்னியமான ஒரு வர்த்தகப் பொருள். இது தென்னிலங்கையில் மலைநாட்டிலும், ஈரலிப்புப் பிரதேசத்திலும் இயற்கையாகக் காடுகளில் வளரும் பயிர். சிங்கள இராசதானியில் விளைந்த இப்பொருள் யாழ்ப்பாண மன்னர்களது வர்த்தகத்தில் சர்வதேசவர்த்தகப் பொருளாக மாறியதற்கு அவர்களது ஆதிக்கம் அங்கும் ஏற்பட்டிருந்ததே காரணமாகும். இதைக் கம்பளை அரசுக்கு அண்மையில் கோட்டகம என்ற இடத்தில் கிடைத்த தமிழ்ச் சாசனமொன்று உறுதிப்படுத்துகிறது. அச்சாசனத்தின் வாசகம் பின்வருமாறு

"சேது.

கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர் வளைப் பங்கயக் கையினாற் திலோதம் பொங்கொலி நீர்ச் சிங்கை நமராரியனைச் செரா வனுரேசர் தங்கள் மடமாதர் தாம்"

இச்சாசனத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்தி மன்னர் படை கம்பளை வரை முன்னேறிச் சென்று கம்பளை மன்னனை வெற்றி கொண்டனர் என்பதை உறுதிப்படுத்துகிறது. இச்செய்தியைத் தென்னிலங்கையில் உள்ள மடவலச சிங்களச் சாசனத்தில் உள்ள குறிப்பும் தெளிவுபடுத்துகிறது (பத்மநாதன் 1992:52).

இத்தகைய சில சிறப்புக்களோடு முன்னூற்றி ஐம்பது ஆண்டுகள் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழரசு யாழ்ப்பாணத்தில் இருந்தும் இவ்வரசின் வரலாற்றை முழுமையாக அறியக் கூடிய சான்றுகள் இதுவரை

www.tamilarangam.net



கிடைக்கவில்லை. இவ்வரசு தொடர்பாக சிங்கள, தமிழ் வரலாற்று இலக்கியங்களில் சில செய்திகள் காணப் பட்டாலும் அவை யாழ்ப்பாண மன்னர்களின் வரலாற்றைக் காலநிரைப்படுத்திக் கூற உதவவில்லை. ஓரிரு கல்வெட்டுக் கள் கிடைத்துள்ள போதிலும் அவை விரிவான தகவல் களைத் தரவில்லை. இவர்கள் வெளியிட்ட சேது பெயர் பொறித்த நாணயங்கள் இலங்கையிலும், தென்னிந்தியா விலும் கிடைத்துவருகின்றன. இவை யாழ்ப்பாண அரசு கால அரசியல், பொருளாதாரம், பண்பாடு, உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்புகள் என்பவற்றை அறியப் பெரிதும் உதவுகின்றன. ஆயினும் 1980 இல். இந்நாணயங்கள் தொடர் பாகப் பேராசிரியர் பத்மநாதன் மேற்கொண்ட விரிவான ஆய்வுக்குப் பின்னர் பிற்காலத்தில் கிடைத்த நாணயங்களை யாரும் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. இந்நிலையில் இக்கட்டுரை ஆசிரியரால் அண்மையில் நூற்றுக்கு மேற்பட்ட நாணயங்களை வட இலங்கையிலிருந்து சேகரிக்க முடிந்தது. அவற்றுள் சில முன்னர் கிடைத்த நாணயங்களில் இருந்து வேறுபடுகின்றன. அவற்றை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

யாழ்ப்பாண மன்னர்கள் தமது ஆட்சியின் போது பல அளவுகளில் பல வடிவங்களில் நாணயங்களை வெளியிட் டுள்ளனர். இவை தோற்ற அமைப்பில் சோழர்கால, பொல நறுவை அரசு கால நாணயங்களைப் பெரிதும் ஒத்துள்ளன. இந்நாணயங்களில் "சேது" எனும் மொழியும், நந்தியும் முக்கிய அம்சங்களாகத் திகழ்ந்தன. சேது என்பதற்கு அணை, அவை, எல்லை, ஏரி, கரை, கடல்வழிப்பாதை, பாலம், இராமேஸ்வரம், சிவப்பு போன்ற பல கருத்துக்கள் உள்ளன (T.L.II:715, Pathmanathan 1980:411). தமிழகத்திற்கும் ஈழத் திற்கும் இடையேயுள்ள பாக்குநீரிணையில் காணப்படும் இராமர்கல்லணையும் சேது எனக் குறிப்படுவது வழக்கம். பாண்டி நாட்டிலுள்ள தலங்கள், இடங்கள் சேது என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டதற்கு இலக்கியங்களில் கல் வெட்டுக்களில் சான்றுகள் உள்ளன (S.I.I.8:No402). நாணயங் களில் வரும் சேது என்னும் மொழி இவற்றை வெளியிட்ட ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் இராமேஸ்வரத்திலிருந்து வந்தமையினையும், அத்தலத்துடன் தாங்கள் கொண்டிருந்த தொடர்பினையும் நினைவு/கூரும் வண்ணம் இச்சொல்லை மங்கல மொழியாகக், குலச்சின்னமாகப் பயன்படுத்தினர் எனக்கூறலாம். இச்சொல்லை நாணயங்களில் மட்டுமன்றி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாம் வெளியிட்ட அரச ஆவணங்களிலும், கொடிகளிலும், கல்வெட்டுக்களிலும் பயன்படுத்தியுள்ளனர் (Pathmanathan 1980:411-413).

கல்வெட்டுக்கள் ஸ்வஸி ஸ்ரீ அல்லது ஸித்தம் என்ற மங்கல மொழியுடன் தொடங்குவது வழக்கம். ஆனால் யாழப்பாண மன்னர்களுடைய கல்வெட்டுக்கள் சேது என்ற மொழியுடன் தொடங்குகிறது. இவற்றிலிருந்து யாழ்ப்பாண மன்னர்கள் சேதுவை ஒரு மங்கல மொழியாக, தெய்வீக ஆற்றல் பொருந்திய மொழியாகப் பயன்படுத்தினர் என் பது தெரிகிறது. யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னன் சங்கிலியனுக்கும் போத்துக்கேயருக்குமிடையிலே போர் நடை பெற்ற பொழுது சங்கிலியன் படை சேது என்ற மொழி வரையப் பெற்ற ஒரு பட்டயத்தை எடுத்துச் சென்றதாகக் குவேறோஸ் சுவாமி யார் கூறியுள்ளார். இம்மன்னர்கள் "சேது காவலன்" என்ற விருதினைக் கொண்டிருந்தனர் என்பதைச் செகராசசேகரமாலை, தக்ஷிண கைலாயபுராணம் முதலான நூல்கள் கூறுகின்றன. செகராசசேகரமாலை ஆரியச்சக்கரவர்த்தி மன்னருள் ஒருவனை" விடைக் கொடியுஞ் சேதுவும் நீள்கண்டிகள் ஒன்பதும் பொறித்தது மிகைத்த கோவும்" எனக் கூறுகிறது (செகராசசேகரமாலை செய்யுள்.7, கயிலாயமாலை:5). இவ்வாதாரங்களை அடிப் படையாகக் கொண்டு நாணயங்களில் வரும் சேது என்ற மொழியைச் சேதுகாவலன் என்ற விருதின் சுருக்கமாக இருக்கலாம் எனப் பத்மநாதன் கருதுகிறார். நாணயங்களில் சேது என்ற மொழியோடு நந்தியையும் முக்கிய இலட்சனை யாகப் பயன்படுத்தியுள்ளனர். தக்ஷிண கைலாயபுராணம் செகராசசேகரன் என்ற மன்னனை "இடபவான் கொடி எழுதிய பெருமான்" எனவருணிக்கிறது. சோதிட நூலும் சிங்கை யாரியனுடைய விடைக்கொடிபற்றிக் கூறுகிறது (Pathmanathan 1980 :412-413). இவற்றிலிருந்து சேது மொழி யையும், நந்தியையும் இலட்சனையாகப் பொறித்த நாணயங் களை யாழ்ப்பாண மன்னர்களே வெளியிட்டனர் என உறுதிபடக் கூறலாம்.

இந்நாணயங்கள் இலங்கையிலும், தமிழகத்திலும் கிடைத்து வருகின்ற போதிலும் எண்ணிக்கையில் அதிக மானவை வட இலங்கையில் திருநெல்வேலி, நல்லூர், கோப் பாய், அச்சுவேலி, புத்தூர், சண்டிலிப்பாய், மாதோட்டம், மாங்குளம், பூநகரி, வேலணை, கந்தரோடை, வல்லிபுரம்

www.tamilarangam.net



போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. இவையனைத்தும் செப்பு நாணயங்களாகும் (Pathmanathan 1980:410, சிவசாமி 1974:1-12, கிருஷ்ணராஜா 1983:71-84). இதனால் செப்பு நாணயங்களை மட்டுமே யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்டார்கள் எனக் கூறப்பட்டு வந்தது. ஆனால் பத்மநாதன் பொஸ்ரன் நூதனசாலையில் இம்மன்னர் வெளியிட்ட பொன் நாணயம் ஒன்றிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் இக்கட்டுரை ஆசிரியரால் இம்மன்னர் வெளியிட்ட வெள்ளி நாணயங்களைக் கண்டு பிடிக்க முடிந்தது (1999:69). ஆனால் வகையிலும், தொகையிலும் செப்பு நாணயங்களே அதிகமாக கிடைத்திருப்பதனால் இந்நாணயங்களையே அதிகமாக வெளியிட்டனர் எனக் கூறலாம்.

இந்நாணயத்தை யார் வெளியிட்டார்கள் என்பது நீண்ட காலமாக அறியப்படாத ஒன்றாகவே இருந்துவந்தது. பிறின்செப் என்ற அறிஞர் தனது இலங்கை நாணயங்கள் என்ற கட்டுரையில் இரு சேது நாணயங்களுக்குரிய படங்களைப் பிரசுரித்துள்ளார். இருப்பினும் தமிழ் மொழியில் பயிற்சியில்லாத காரணத்தால் அவர் இவற்றை ஆராய முற்படவில்லை (Prense's 1858 :419- 424). றைஸ் டேவிட்ஸ் (Rhys Davids) என்ற அறிஞர் சேது நாணயங்களின் எடை, அளவு, தோற்றம் என்பன சிங்களமன்னன் பராக்கிரமபாகுவின் நாணயங்களை ஒத்திருப்பதால் இம் மன்னனே பாண்டிநாட்டில் புழக்கத்திற்காக இந்நாணயங்களை வெளியிட்டான் எனக் கூறினார். இதற்கு பராக்கிரம பாகுவின் படைத்தளபதி பாண்டிநாட்டிற்குப் படையெடுத்துச் சென்ற போது அங்கு பராக்கிரமபாகுவின் பெயரில் நாணயங்களை வெளியிட்டான் எனச் சூளவம்சம் கூறுவதைச் சான்றாகக்காட்டினார் (47 : 101). திரேசு சுவாமியார் (Rev.Tracey) இராமநாதபுரத்துச் சேதுபதிகள் வெளியிட்ட சேதுபதி என்ற மொழி பொறித்த நாணயங்களுக்கும், சேது என்ற மொழி பொறித்த நாணயங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி சேது மொழி பொறித்த நாணயங்கள் இலங்கையில் சிறப்பாக வட இலங்கையில் கிடைப்பதைக் கொண்டு இவை இலங்கையிலேயே வெளியிடப்பட்டதாகக் கூறினார் (Tracey 1889-94:1-12). சுவாமி ஞானப்பிரகாசர் தமக்கு கிடைத்த 70 சேது நாணயங்களை ஆய்வுக்கு அடிப்படையாகக் கொண்டு இவற்றை நல்லூரைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்த யாழ்ப்பாண மன்னர்களே வெளியிட்டனர் என்ற கருத்தைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தக்க சான்றுகளுடன் வெளியிட்டார் (Gnana prakasar 1920: 172-179).

பிற்காலத்தில் நாணயவியலாளர் கொட்றிங்ரன் (Codrington 1920), முதலியார் இராசநாயகம் (1926), பேராசிரியர் சிவசாமி (1974), வரலாற்று விரிவுரையாளர் திரு. கிருஷ்ணராசா (1983) போன்றோர் இலங்கை நாணயங்கள் தொடர்பாக ஆய்வு செய்த போது, தமக்குக் கிடைத்த சேது நாணயங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் 1978, 1980 காலப்பகுதியில் பத்மநாதன் மேற்கொண்ட ஆய்வு முன்னைய ஆய்வுகளை விடப்பலவகையிலும் முக்கியத் துவம் பெறுகிறது (1978,1980). இவர் தமக்குக் கிடைத்த 80க்கு மேற்பட்ட சேதுநாணயங்களை கால அடிப்படையில் முதன் முறையாக அட்வ ணைப்படுத்தியதோடு, நாணயங் களின் எடை, அளவு, குறியீடுகள், சின்னங்கள், கலை நயம் என்பவற்றின் பின்னணியில் அவற்றை ஆறு வகையாகப் பிரித்தார். அவற்றுள் சில நாணயங்களின் வடிவமைப்பு, அளவு, நிறை என்பனவற்றில் உள்ள வேறுபாட் டைக் கருதி உபபிரிவுகளாகக் கணித்துள்ளார் (1980 :414-417).

அண்மையில் இக்கட்டுரை ஆசிரியர் வட இலங்கையில் சிறப்பாக பூநகரி, தென்மராட்சி, கந்தரோடை, புத்தூர், உடுத்துறை, வரணி, கச்சாய் ஆகிய இடங்களில் கள ஆய்விலும், மக்களிடமிருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட சேது நாணயங்களைச் சேகரிக்க முடிந்தது. அவற்றுள் பத்மநாதன் அவர்கள் ஆய்வுக்கு உட்படுத்திய நாணயங்களும், உட் படுத்தாத சிலவகை நாணயங்களும் உள்ளன. இவை நாணயங்களில் இடம்பெற்றுள்ள பிரதான சின்னங்களுக் கிடையிலான வேறுபாட்டை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பத்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

வகை.1

இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் அதிகமாகக் கிடைத்த நாணயங்கள் இவ்வகையைச் சார்ந்தது. தமிழ்நாட்டு நாணயவியலாளர் பலரும் இவற்றைச் சோழ நாணய மாகவே எடுத்துக்கொண்டனர். இதற்கு இந்நாணயங்களின் தோற்ற அமைப்பு சோழநாணயங்களை ஒத்திருப்பதே காரண மாகும்.

www.tamilarangam.net



## சேது நாணய வகைகள் (படம்.1)

இல்.1



இல.2



இல.3



இல.4



இல.5



www.tamilarangam.net



இல.6




இல.7



இல.8



இல.9



இல.10



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடம்: கல்முனை(பூநகரி)
விட்டம்: 1.8 செ.மீ
நிறை : 2.3 கிராம்

முன்புறம் :வலது புறம் பார்த்த நிலையில் நிற்கும் மனித உருவம். வலது கை உயர்த்தப்பட்ட நிலையில் நிறைகுடம் போன்ற ஏதோ ஒரு பொருளைத் தாங்கி நிற்கிறது. கீழே சந்திரன். இடப்புறம் குத்துவிளக்கு. வழக்கமாக சேது நாணயங்களில் வரும் களையுருவம் இதில் காணப்பட வில்லை.

பின்புறம் : வலது புறம் பார்த்த நிலையில் அமர்ந் திருக்கும் மனிதவுருவம். அதனருகில் தமிழ் எழுத்துக்களில் சேது என்ற பெயர் காணப்படுகிறது (படம்-1,இல1).

வகை-2

முதலாவது நாணயத்தைப் போல், ஆனால் கூடிய அழகும், கலை வேலைப் பாடும் கொண்டது. அத்து ன் மனித உருவத்துடன் அமர்ந்த காளையுருவம் முக்கிய சின்னமாக இடம்பெற்றுள்ளது.

இடம்: கல்முனை(பூநகரி)
விட்டம்: 1.9 செ.மீ
நிறை : 3.8 கிராம்

முன்புறம் : இடப்புறம் நிற்கும் மனித உருவம். இரு புறமும் குத்து விளக்கு.

பின்புறம்: இடப்புறமாக அமர்ந்த காளையுருவம். மேல் பகுதியில் பிறைச்சந்திரன். காளையின் கீழ் தமிழில் சேது என்ற பெயர் காணப்படுகிறது (படம்-1,இல2).

வகை-3

இரண்டாவது வகையைப் பெரிதும் ஒத்தது. ஆனால் இடதுபுறத்தில் குத்து விளக்கிற்குப் பதிலாக பூரணகும்பம் போன்ற உருவம் காணப்படுகிறது. காளையின் கழுத்தில் அலங்கரிக்கப்பட்ட மாலை காணப்படுவதுடன் சூரியன் முக்கிய சின்னங் களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.

www.tamilarangam.net



இடம்: நல்லூர் (பூநகரி)
விட்டம்: 4.0 செ.மீ
நிறை: 4.0 கிராம்

முன்புறம்: வலப்புறம் நிற்கும் மனித உருவம். இரு கைகளும் உயர்த்தப்பட்ட நிலையில் வலது கை ஏதோ ஒரு பொருளைத் தாங்கியவாறு நிற்கிறது. இடப் புறத்தில் பூரணகும்பம் போன்ற பொருள். வலப்புறத்தில் குத்து விளக்கு.

பின்புறம்: இடப்புறமாக அமர்ந்திருக்கும் காளை யுருவம். மேலே பிறைச்சந்திரனும், சூரியனும். காளையின் கீழ் தமிழில் சேது என்ற பெயர் (படம்-3,இல.3).

வகை-4

முதல் மூன்று வகை நாணயங்களை விடச் சற்றுப் பெரியவை. அத்துடன் எண்ணிக்கையில் இவை கூடுதலாகக் கிடைத்துள்ளன. இதில் இடம்பெற்றுள்ள குத்து விளக்கு சோழ நாணயங்களில் வரும் குத்துவிளக்கைப் பெரிதும் ஒத்தவை. இவை இரண்டாவது காலகட்ட நாணயங்கள் எனக் கூறலாம்.

இடம்: கச்சாய் (தென்மராட்சி)
விட்டம்: 1.8 செ.மீ
நிறை: 3.0 கிராம்

முன்புறம்: இடப்புறம் குத்துவிளக்கு. வலப்புறம் காளை. நடுவில் வலப்புறம் பார்த்த நிலையில் நிற்கும் மனித உருவம்.

பின்புறம்: வலப்புறம் பார்த்த நிலையில் அமர்ந்திருக்கும் மனித உருவம். வலப்புறம் தமிழில் சேது என்ற பெயர் உள்ளது(படம்-4,இல.4).

வகை-5

இவை மூன்றாவது காலகட்டத்தைச் சேர்ந்த நாணயங்கள் எனக் கூறலாம். இதற்கு இந்நாணயத்தில் இடம் பெற்றுள்ள சின்னங்களிடையே காணப்படும் முக்கிய வேறுபாடுகள் சான்றாக அமைகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடம்: இயற்றாலை (தென்மராட்சி)
விட்டம்: 1.9 செ.மீ
நிறை: 3.0 கிராம்

முன்புறம் : வலப்புறம் நிற்கும் மனிதஉருவம். இடப்புறமாக அமர்ந்த காளையுருவம். அதன் மேற்பகுதியில் பிறைச்சந்திரன். இந்த அம்சத்தை நான்காவது வகை நாணயங்களில் காணமுடியவில்லை. காளையின் வாற்பகுதியுடன் திரிசூலம் காணப்படுகிறது. இடப்புறத்தில் பீடத்துடன் கூடிய குத்துவிளக்கு உள்ளது.

பின்புறம் : இடப்புறம் அமர்ந்திருக்கும் மனித உருவம். வலப்புறம் தமிழில் சேது என்ற பெயர் காணப்படுகிறது (படம்-5,இல.5).

வகை-6

இந்நாணயங்கள் கலைநயமும், அழகும் மிக்கவை. இவை பல அளவுகளிலும், வடிவங்களிலும் ஆக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் வெள்ளி நாணயங்களும் இவ்வகையைச் சேர்ந்தவை. இதற்குப் புத்தூரில் கிடைத்த வெள்ளி, செப்பு நாணயங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

6அ) இடம்: புத்தூர்(வலிகாமம்)
உலோகம்: செப்பு
விட்டம்: 1.7 செ.மீ
நிறை: 2.8 கிராம்.

6ஆ) இடம்: புத்தூர்(வலிகாமம்)
உலோகம்: வெள்ளி
விட்டம்: 2.4. செ.மீ
நிறை: 11.6 கிராம்(படம்-6,ல.6)

முன்புறம்:வலப்புறம் நிற்கும் மனித உருவம். வலக்கைத் தோளுக்கு மேலே ஏதோ ஒரு பொருளை ஏந்தியவாறு உள்ளது. வலப்புறமாக குத்துவிளக்கு. இதற்குப் பக்கத்தில் வேல் காணப்படுகிறது. இடது கை கீழ்நோக்கி ஏதோ ஒரு பொருளைத் தொட்டவாறு உள்ளது. அது கிளைகளுடன் கூடிய மரமாக அல்லது வச்சிராயுதமாக இருக்கலாம்.

www.tamilarangam.net



பின்புறம் : மனித உருவத்திற்குப் பதிலாக இடப்புறமாக அமர்ந்திருக்கும் காளை யுருவம். அதன் மேற்பக்கமாகப் பிறைச்சந்திரனும், சூரியனும் உள்ளன. காளையின் கீழ் தமிழில் சேது என்ற பெயர் காணப்படுகிறது (படம்-6அ,ஆ).

வகை-7

இவை மிகச் சிறியவை. மற்றைய நாணயங்களில் இடம் பெற்ற மனித உருவத் திற்குப் பதிலாக எட்டு இதழ் கொண்ட தாமரை மலரின் இதழ்கள் இடம் பெற்றுள்ளன. காளை யுருவம் பீடத்தில் அமர்ந்திருப்பது இன்னொரு சிறப்பாகும்.

இடம்: சிறுப்பிட்டி(வலிகாமம்)
விட்டம்: 1.8 செ.மீ
நிறை : 3.4 கிராம்(படம்-7,இல.7)

முன்புறம் : வட்டம். வட்டத்திற்கு வெளியே விளிம்பை ஒட்டிப் புள்ளிகள். வட்டத்திற்குள் எட்டு இதழ் கொண்ட தாமரை மலரின் இதழ்கள். அதன் மத்தியில் தமிழில் சேது என்ற மங்கல மொழி உள்ளது.

பின்புறம் : பீடத்தில் இடப்புறம் பார்த்த நிலையில் அமர்ந்த காளையுருவம். இதன் மேல்பகுதியில் பிறைச் சந்திரனும், சூரியனும் உள்ளன.

வகை- 8

இவற்றில் உள்ள சின்னங்கள் தெளிவாகவும், அழகாக வும் வார்க்கப்பட்டுள்ளன. இதில் இடம்பெற்றுள்ள மயில், மலர் என்பன ஏனைய நாணயங்களிலிருந்து இவற்றை வேறு படுத்துகின்றன.

இடம்: கந்தரோடை(வலிகாமம்)
விட்டம்: 2.0 செ.மீ
நிறை : 3.7 கிராம்

முன்புறம் : இடப்புறம் பார்த்து நிற்கும் மனிதவுருவம். இரு கைகளும் மேலே உயர்த்திய நிலையில் மலர் போன்ற பொருளை ஏந்தியவாறு உள்ளன. இருபுறமும் பீடத்துடன் கூடிய குத்துவிளக்கு காணப்படுகின்றன.

www.tamilarangam.net



பின்புறம் : இடது புறமாக காளை அமர்ந்துள்ளது. இதற்கு முன்னால் வலப்புறமாக மயில் ஒன்று காணப் படுகிறது. காளைக்கு மேல் பிறைச்சந்திரனும், சூரியனும் உள்ளன. காளைக்கு கீழே தமிழில் சேது என்ற மொழி உள்ளது. விளிம்பைச் சுற்றி வட்டமாக மலர் மொட்டுப் போன்ற உருவங்கள் காணப்படுகின்றன.

வகை-9

இவை எட்டாவது வகையைச் சார்ந்தவை. ஆனால் பின்புறத்தில் மயிலுக்குப் பதிலாக மலர் இடம்பெற்றுள்ளது.

இடம்: வீரபாண்டியன்முனை(பூநகரி)
விட்டம்: 2.1 செ.மீ
நிறை : 3.0 கிராம்

முன்புறம் : இடப்புறமாக நிற்கும் மனித உருவம். இருபுறமும் குத்துவிளக்கு.

பின்புறம் : இடப்புறம் அமர்ந்திருக்கும் காளையுருவம். அதன் மேல் பிறைச்சந்திரன், சூரியன். காளைக்கு முன் ஆறிதழ் கொண்ட தாமரை. காளைக்கு கீழே தமிழில் சேது என்ற மொழி காணப்படுகின்றது.

வகை-10

முன்னைய இரு நாணய வகையைச் சேர்ந்தவை. ஆனால் இதில் காளைக்கு முன்னால் மனித உருவம் காணப்படுகிறது.

இடம்: ஈழஊர்(பூநகரி)
விட்டம்: 2.0. செ.மீ
நிறை : 2.6 கிராம்

முன்புறம் : இடப்புறமாக நிற்கும் மனித உருவம். இருபுறமும் குத்துவிளக்கு.

பின்புறம் : இடப்புறம் அமர்ந்திருக்கும் காளையுருவம். அதன் மேல் பிறைச் சந்திரன், சூரியன். காளைக்கு முன்னால் நிற்கும் மனித உருவமும்,காளைக்கு கீழே தமிழில் சேது என்ற மொழியும் காணப்படுகின்றன.

www.tamilarangam.net



மேற்கூறப்பட்ட நாணய வகைப்பாடுகளில் இருந்து இந்நாணயங்கள் குறிப்பிட்டகாலப்பகுதியில் வெளியிடப் படாது பல்வேறு காலகட்டங்களில் வெளியிடப்பட்டவை என்பது தெரிகிறது. யாழ்ப்பாண அரசு தொடர்பான தமிழ் இலக்கியங்களில் இருந்து பதினெட்டுக்கு மேற்பட்ட மன்னர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்டதாகக் கணிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் நாணயங்களில் சேது என்ற மொழி மட்டும் இடம்பெற்றிருப்பதால் எந்த மன்னர்கள் எந்த நாணயங்களை வெளியிட்டனர் எனக் கூறமுடியாதிருக் கிறது. ஆனால் நாணயங்களிடையே அளவு, எடை, தடிப்பு, உலோகம், சின்னங்கள், வடிவமைப்பு, அழகு, கலை வேலைப்பாடு என்பவற்றில் காணப்படும் வேறுபாடுகள் ஒருவகையில் யாழ்ப்பாண அரசுகாலப் பொருளாதார ஏற்ற இறக்கத்தைக் காட்டி நிற்கும் அதேவேளை இவ்வரசை யாண்ட மன்னர்கள் பலரும் நாணயங்களை வெளியிட் டிருக்கலாம் என்பதையும் சுட்டிநிற்கின்றன எனலாம். இந்நாணயங்கள் இலங்கைக்கு வெளியே தமிழகத்தில் தஞ்சாவூர், கருவூர், திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. இவை சென்னை அருங்காட்சி யகத்திலும் ஆறுமுகசீதாராமன், சங்கர்இராமன் போன்ற இளம் நாணயவியல் ஆய்வாளர்களிடையேயும் காணப் படுகின்றன. இவைபற்றி ஆறுமுகசீதாராமன் மாறவர்மன் நாணயங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்(1987). இந் நாணயங்கள் தமிழகத்தில் கிடைத்து வருவது யாழ்ப்பாண அரசு காலத்தில் தமிழகத்துடன் ஏற்பட்ட வர்த்தக, கலாசாரத் தொடர்புகளைக் காட்டுகின்றன. யாழப்பாண அரசு தொடர்பான தமிழ் இலக்கியங்கள் இம்மன்னர்கள் சைவ சமயத்தின் மீது கொண்ட ஈடுபாட்டையும், அம்மதத்திற்கு ஆற்றிய பணிகள் பற்றியும் கூறுகின்றன. இதையுறுதிப் படுத்துவதாக நாணயங்களில் இடம்பெற்றுள்ள காளை, சூலம், வேல், மயில், தாமரை, குத்துவிளக்கு போன்ற மங்கலச் சின்னங்கள் அமைந்துள்ளன. இதுவரை ஆய்வுக்கு உட்படுத்திய நாணயங்களை விட உட்படுத்தாத நாணயங் களே அதிகம் எனக் கூறலாம். இவை இலங்கையிலும், தமிழகத்திலும் தனிப்பட்ட பலரிடம் இருப்பதாக அறி கிறோம். இவை முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்தப்படு மானால் யாழ்ப்பாண அரசுகால நாணய வரலாறு மேலும் தெளிவுபெறும்.

www.tamilarangam.net



சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம் | – | அகநானூறு |
| சிலப் | – | சிலப்பதிகாரம் |
| தொல் | – | தொல்காப்பியம் |
| நற் | – | நற்றிணை |
| பட்டினப் | – | பட்டினப்பாலை |
| பதிற் | – | பதிற்றுப்பத்து |
| புறம் | – | புறநானூறு |
| பெரும்பாண் | – | பெரும்பாணாற்றுப்படை |
| மணிமே | – | மணிமேகலை |
| மதுரை | – | மதுரைக்காஞ்சி |
| மலைபடு | – | மலைபடுகடாம் |
| ப.ஆ | – | பதிப்பாசிரியர் |
| நற் | – | நற்றிணை |
| பட்டினப் | – | பட்டினப்பாலை |
| பதிற் | – | பதிற்றுப்பத்து |
| புறம் | – | புறநானூறு |
| பெரும்பாண் | – | பெரும்பாணாற்றுப்படை |
| மணிமே | – | மணிமேகலை |
| மதுரை | – | மதுரைக்காஞ்சி |
| மலைபடு | – | மலைபடுகடாம் |
| C.V. | – | Culavamsa |
| D.E.D. | – | Dravidian Etymological Dictonary |
| D.V. | – | Dipavamsa |
| E.I. | – | Epigraphia Indica |
| E.Z. | – | Epigraphia Zeylanica |
| I.C. | – | Inscriptions of Ceylon |
| M.V. | – | Mahavamsa |
| S.S.I. | – | South Indians Inscriptions |
| S.S.I.C. | – | Studies in South Indian Coins |
| T.B.I. | – | Tamil Brahmi Inscriptions |
| T.L | – | Tamil Lexicon |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உசாத்துணை நூல்கள்

Ariyasinghe, A., 1965, Sinhalese Paleography in Unpublished Ph.D Thesis, University of London, London.

Begley, Vimala., 1973, Protohistoric Material from Sri Lanka [Ceylon] and Indian Contacts in Ecological Background of South Asian Prehistory, [E.d], Kennedy, A.R. and Possehl, L., Southasian Occasional Papers and Thesis, Southasian Program, Cornell University: 190-196.

Begley, Vimala., 1996, The Ancient Port of Arikamedu,[New Excavation and Researches 1989-1992], De Ecole Francaise D'extreme -Orient, Pondicherry, 1. Co-Cooperation in Sri Lanka

Biddulph, C.H. 1966, Coins of Pandyas, NNMno11 of the Numismatic Society of India.

Bopearachchi, O., 1998, Archaeological Evidence on Changing Patterns of International Trade Relation of Ancient Sri Lanka in Origin and Circulation of Foreign Coins in the Indian Ocean, [E.d], Bopearachchi, O. and Weerakkody, D.P.M, Sri Lanka Society for Numismatic Studies and French Mission of Archaeological Cooperation in Sri Lanka, New Delhi.

Bopearachchi, O. and Wickramesinhe, W., 1999, Ruhuna an Ancient Civilization Revisited, with the collaboration of the Archaeological

Burrow, T. and Emeneau, M.B., 1961, Dravidian Etymological Dictionary, Oxford.

Caldwell.R., 1961, A Comparative Grammar of the Dravidian or South Indian Family Languages, University of Madras.

Carswell, John. and Martha, Prickett., 1984, Mantai 1980: A Preliminary Investigation in Ancient Ceylon, Journal of the Archaeological Survey Department of Sri Lanka, 5:3-68.

Champakalakshmi, R., 1975, Archaeology and Tamil Literary Tradition in Puratattva, 8:110-122.

Champakalakshmi, R., 1996, Trade, Ideology and Urbanization South India 300 B.C to A.D1300, Oxford University Press, Delhi.

Codrington, H.W. 1924, Coins and Currency, Colombo.

Conningham, R.A.E., 1999, Passage to India? Anuradhapura and the Early Use of the Brahmi Script in Cambridge Archaeological journal, 6[1]:73-97.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Culavamsa, 1953, Geiger. W. [E.d], Ceylon Government Information Department, Colombo.

Deraniyagala, P.E.P., 1953, Ferro-Lithic an Early Historic Terracotta and a Cist from Ceylon in Spolia Zeylanica, Colombo, 27[1]:133-138.

Dipavamsa, 1959, Bimala Churn Law .,[E.d], The Ceylon Historical Journal Vol. III No. 1-4.

Desikachari, T. 1933, South Indian Coins.

Elliot, W. 1970, Coins of South India, Prithivi Prakasan, Varanasi.

Fernando, P.E.E., 1949, Paleographical Development of the Brahmi Script in Ceylon from 3rd Century B.C. to 7th Century A.D. in University of Ceylon Review, Colombo, III:282-301.

Girijapthy, M. and Ganesh, K. 1999, Peacock Motif Coins of Kalyani Chalukyas in S.S.I.I, IX:82-3

Gnanapragasar, S. The forgotten Coinage of the Kings of Jaffna, Ceylon Antiquary, 5.

Gunawardana, R.A.L.H., 1977, Prelude to the State an Early Phase in the Evolution of Political Institution in Ancient Sri Lanka in The Sri Lanka Journal of the Humanities, University of Peredeniya, VIII[1&2]:1-39.

Gupta, P.L., 1965, The Early Coins from Kerala, Department of Archaeology Government of Kerala, Trivandrum.

Gupta, P.L., 1969, Coins, National Book Trust, India, New Delhi.

Havalaiah, N. 1999, Two Unpublished Copper Coins of Mysore Wadeyars in S.S.I.I, IX: 130-2.

Hettiaratchi, D.P.E., 1950, Numista Zeylanica on a Newly Discovered Type of Lakshmi Plagues in Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, Colombo, 1:04-22.

Hettiaratchi, D.P.E., 1955, A Note on an Unpublished Pallva Coin in Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, Colombo, IV[1]:72-76.

Hultzsch, F., 1969, Inscriptions of Asoka in Corpus Inscriptionum Indicarum, Delhi, 1.

Indrapala, K., 1969, Early Tamil Settlements in Ceylon in Journal of Royal Asiatic Society of Ceylon Branch, XIII:43-61.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Indrapala, K., 1971, A Cola Inscription from the Jaffna Fort in Epigraphia Tamilica, Jaffna Archaeological Society, Jaffna, 1[1]:52-56.

Indrapala, K., 1973, A Brahmi Potshed Inscription from Kantarodai in Purvakala, Bulletin of the Archaeological Society, 1:18-9.

Kasinathan, Natana., 1996, Archaic Tamil Inscription from Excavation in Kalvettu, Tamil Nadu Archaeological Department, 48:27-35.

Karunaratne, S.M., 1960, Brahmi Inscriptions of Ceylon in Unpublished Ph.D Thesis, University of Cambridge, Cambridge.

Krishnamurthy, R., 1997, Sangam Age Tamil Coins, Garnet Publications, Madras.

Krishnamurthy, R., 1991, Oblong Coin With a Mather Goddess Symbol from Karur, Tamilnadu in Journal of the Numismatic Society of India, 53:59-61.

Lewis, J.R., 1895, Manual of Vanni District-Ceylon, Colombo.

Lewis, J.R., 1916, Some Notes on Archaeological Matters in the Northern Province in Ceylon Antiquary and Literary Register, Colombo, II[II]:94-99.

Lewis, J. R., 1917, Manual of Place Names of Vanni, Colombo.

Liyanagamage, A. 1967, Decline of Polonaruwa and Rice of Dambadeniya, Kelaniya

Mahadevan, I., 1966, Corpus of Tamil Brahmi Inscriptions, Reprint of Seminar on Inscriptions, Department of Archaeology Government of Tamil Nadu, Madras.

Mahadevan, I., 1994a, Recent Epigraphical Evidence for Ancient Tamil Contacts Abroad in Rev. Fr. Thaninayagam Memorial Lecture, Thaninayagam Foundation Trust, Colombo,:1-26.

Mahadevan, I., 1994c, Old Sinhalese Inscriptions from Indian Ports: New Evidence for Ancient India- Sri Lanka Contacts, Paper Presented at the Post-Graduate Institute of Archaeology, Colombo,:1-19.

Mahadevan, I., 1995, Recent Trends in Early Tamil Epigraphy: An Overview in Journal of the Institute of Asian Studies, XIII[1]:1-31.

Mahalingam, T.V., 1967, Early South Indian Palaeography, University of Madras.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Mahalingam, T.V., 1988, Inscriptions of Pallavas, Indians Council of Historical Research New Delhi.

Mahavamsa, 1950, (E.d)Geiger,W., The Ceylon Government Information Department, Colombo.

Maloney,C., 1969, The Paratavar:2000 Years of Culture Dynamics of a Tamil Cast in Man in India,49:[1]:224-240.

Mendis, G.C., 1965, The Vijaya Legend in Paranavitana Felicitation Volume, [E.d], Jeyawickrama, M.A., Colombo,263-279.

Mictchiner, M 1998, The Coinage and History of Southern India, Hawakins Publication.

Narasimha Murthy, A.V. 1975, The Coins of Karnataka, Geetha Book House, Mysore.

Naswamy, R. 1981 Tamil Coins, Madras.

Nagaswamy, 1995, Roman Karur, Brahad Prakashan, Madras.

Navaratnam, C.S., 1958, Tamils and Ceylon, Jaffna.

Navaratnam, C.S., 1960, Vanni and Vanniyas, Elanadu Limited, Jaffna.

Nedumaran, S.D. and Ramachandran, S., 1999, The Velirs: Were the Velalas in journal of the Epigraphical Society, The Epigraphical Society of India, Mysore, XXV:139-152.

Nicholas, C.W. and Paranavitana, S., 1961, A Concise History of Ceylon, Ceylon University Press.

Nicholas, C.W., 1963, Historical Topography of Ancient and Medieval Ceylon in Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, Colombo, VI.

Nilakanta Sastri, K.A., 1958, A History of South India, 2nd[revised] Edition, London.

Nilakanta Sastri, K.A., 1955-56, Vijayabahu I The Leberater of Lanka in Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, Colombo, IV:45-71.

Nilakanta Sastri, K.A., 1984, The Colas, Madras.

Paranavitana, S., 1928, Anuradhapura: Slab-Inscription of Khudda Parinda in Epigraphia Zeylanica, The Archaeological Department of Ceylon, II: 111-114.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Paranavitana, S., 1932-42, Vallipuram Gold Plate Inscription of the Reign of Vasaba in Epigraphia Zeylanica, The Archaeological Department of Ceylon, IV[29]:220-237.

Paranavitana, S., 1959, Aryan Settlements: The Sinhalese in History of Ceylon, [E.d], Ray, H.C., University of Ceylon, Colombo, I[1]:82-97.

Paranavitana, S., 1961, The Arya Kingdom of Northern Sri Lanka in Journal of Royal Asiatic Society of Ceylon Branch, VII:174-224.

Paranavitana, S., 1963, Brahmi Inscriptions in Caves at Three Sites in the Vavuniya District in Epigraphia Zeylanica, The Archaeological Department of Ceylon, V[2]:234-252.

Paranavitana, S., 1966, Ceylon and Malaysia, Colombo.

Paranavitana, S., 1970, Inscription of Ceylon: Early Brahmi Inscriptions, The Department of Archaeology Ceylon, Colombo, I.

Paranavitana, S., 1983, Inscription of Ceylon:Late Brahmi Inscriptions, The Department of Archaeology Sri Lanka, Moratuwa, II[1].

Parkar, H., 1981, Ancient Ceylon, Asian Educational Services, New Delhi.

Pathmanathan, S., 1978, The Kingdom of Jaffna, Arul M.Rajendran, Colombo.

Pathmanathan, S., 1980, Coins of Medieval Sri Lanka: The Coins of the Kings of Jaffna, Spolia Zylanica, Vol. 35, part I and II : 409-417

Peris, P.E., 1922, Nagadipa and Buddhist Remains in Jaffna Part.I in journal of the Royal Asiatic Society Ceylon Branch, 11-20.

Peris, P.E., 1925, Nagadipa and Buddhist Remains in Jaffna Part.II in Journal of the Royal Asiatic Society Ceylon Branch, 40-67.

Pillai, K.K., 1975, South India and Ceylon, [Sir William Meyer Lectures [1958-59] University of Madras, Madras.

Queyroz Fernao, De., 1930, The Temporal and Spritual Conquest of Ceylon, [Tr], Perera, S.G., Colombo.

Prensep's. 1858, Essays on Indian Antiquities, London.

Raghavan, M.D. (n.d) Tamil Culture in Ceylon, Colombo.

Ragupathy, P., 1987, Early Settlements in Jaffna: An Archaeological Survey, Mrs.Thillimalar Ragupathy, Madras.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Ragupathy, P., 1992? , The Language of the Early Brahmi Inscription in Sri Lanka, [Unpublished].

Rajan, K., 1994, Archaeology of Tamil Nadu:(Kongu Country,) Book India Publishing Co, Delhi.

Rajan, K., 1997, Archaeological Gazetteer of Tamil Nadu, ManoPathippakam, Thanjavur.

Rajan, K., 1996, Archaeological Exploration in South Arcot Region, Project Report Submitted to Tamil University Thanjavur, [Unpublished].

Ramchandramurthy, S.S., 1985, A study of the Telugu Place Names, Agamkala Prakasan, Delhi.

Rasanayagam, C., 1926, Ancient Jaffna, A.S., Everyman's Publishers Ltd, Madras.

Schoff, W.H., 1912, [E.d], The Periplus of Erythraean Sea, New York.

Seneviratne, S., 1984, The Archaeology of the Megalithic-Black and Red Ware Complex in Sri Lanka in Ancient Ceylon, Journal of the Archaeological Survey of Sri Lanka, 5:237-307.

Seneviratne, S., 1985, The Baratas: A Case of Community Integration in Early Historic Sri Lanka in Festschrift 1985 James Thevathasan Ratnam, [E.d], Amerasinghe, A.R.B., Colombo:49-56.

Seneviratne, S., 1993, From Kudi to Nadu: A Suggested Framework for Study pre State political Formations in Early Iron Age South India in The Sri Lanka Journal of the Humanitious, XIX[1&2]:57-77.

Senaratne, S.P.F., 1969, Pre History in Ceylon, Colombo.

Seyon, K.N.V. 1998, Some Old Coins Found in Early Ceylon, Nawala. Sri Lanka.

Shanmugam, P., 1994, Two Coins of the Tamil Origin from Thailand in S.S.I.C., IV:95-100.

Singaravelu, S., 1966, Social Life of the Tamils-The Classical Period, University of Malaya, Kula Lumpur.

Sircar, D.C., 1968, Studies in Indian Coins, Motilal Banarsidass, Delhi.

Sircar, D.C., 1971, [E.d], Early Indian Indigenous Coins, Sri Sibendranath Kanjilal, Calcutta.

Sitrampalam, S.K., 1980, The Megalithic Culture of Sri Lanka in Un-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



published Ph.D. Thesis Deccan College, University of Poona, Poona.

Sitrampalam, S.K., 1992 A Note on the Lakshmi Plaques of Sri Lanka in S.S.I.C. II:151-158.

Sitrampalam, S.K., 1993, The Parumakas of the Sri Lankan Brahmi Inscriptions in Kalvettu, Tamil Nadu Archaeological Department, 29:19-28.

Sitrampalam, S.K. and Pusparatnam, P., 1985, The Potsherd Inscriptions from Poonakary-An Historical Perspective in Abhijnamala, [E.d], Gopalakrishnan, P. Felicitation Volume Presented to Vinayakamoorthy Sivasamy, Jaffna,:150-159.

Sivathamby, K., 1998, Studies in Ancient Tamil Society, New Century Book House, Chennai.

Subbarayalu, Y., 1973, Political Geography of the Chola Country, State Department of Archaeology, Madras

Subbarayalu, Y., 1991, Kodumanal, Excavation 1985-1990 [unpublished Interim Report], Tamil University, Thanjavur.

Subbarayalu, Y., 1984, Vallam Excavation, Tamil Civilization, Vol.2, No4.

Subbarayalu, Y.,. Brahmi Graffity on Potshes From Kodumanal Excavation (unpublished article)

Thapar, Romila., 1995, [E.d], Recent Perspectives of Early Indian History, Popular Prakashan, Bombay.

Vasudeva Rao, B. 1998, , Peacock-type Mysore Wadeyars Coins in S.S.I.I, V.I.I.I.: 114-6.

Veluppillai, A., 1980, Tamil Influence in Ancient Sri Lanka with Special Reference to Early Brahmi Inscriptions in Journal of Tamil Studies, 17:6-19.

Veluppillai, A., 1980a, Epigraphical Evidences for Tamil Studies, Publisher International Institute of Tamil Studies Madras.

Zeuner, F.E., and Allchin, B. 1956, The Microlithic Sites of Tinnavelly District, Madras State in Ancient India, 12:4-20.

Zvelebil, V.Kamil., 1997, Dravidian Linguistics An Introduction, Pondicherry Institute of Linguistics and Culture, Pondicherry.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அகநானூறு, 1974, பெருமழைப்புலவர் உரை, கழகப்பதிப்பு, சென்னை, மூன்றாம் பதிப்பு.

சங்க இலக்கியம், 1967, (இரண்டு தொகுதிகள்), வையாபுரிப்பிள்ளை,எஸ். (ப.ஆ), பாரிநிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு.

சிலப்பதிகாரம், 1927, சாமிநாதையர், உ.வே., பதிப்பு, சென்னை.

செகராசசேகரம், 1932, (பதிப்பு). இரகுநாதையா, இ.சி. அச்சுவேலி.

செகராசசேகர மாலை, 1942, (பதிப்பு) இரகுநாதையா, இ.சி. யாழ்ப்பாணம்

நற்றிணை, 1976, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை, கழகப்பதிப்பு, ஐந்தாம் பதிப்பு.

பத்துப்பாட்டு, 1976, நச்சினார்க்கினியர் உரை, உ.வே.சா., பதிப்பு, சென்னை, ஐந்தாம் பதிப்பு.

பதிற்றுப்பத்து, 1904, பழைய உரை, உ. வே.சா., பதிப்பு, சென்னை.

பல்லவ செப்பேடுகள் முப்பது, 1999, உலகத் தமிழாராச்சி நிறுவன வெளியீடு.

புறநானூறு, 1971, பழைய உரை, உ.வே.சா., பதிப்பு, சென்னை, ஏழாம்பதிப்பு.

மணிமேகலை, 1971, சோமசுந்தரனார், பொ.வே., சென்னை.

ஸ்ரீ தஷ்ண கைலாசபுராணம் 1942, (பதிப்பு)இரகுநாதையா, இ.சி. யாழ்ப்பாணம்

இந்திரபாலா, கா., 1972, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், கண்டி.

இந்திரபாலா, கா., 1999, (இரண்டாம் பதிப்பு), இலங்கையில் திராவிடக்கட்டிடக் கலை, குமரன் பப்பிளிர்ஸ், சென்னை.

இந்திரபாலா, கா., 1969, யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுக்கள், சிந்தனை, தொகுதி.2, இதழ்.4. பேராதனை.

www.tamilarangam.net



இந்திரபாலா, கா. 1973, வன்னிக்காட்டில் ஒரு அரண்மனை, தினபதி (வாரப்பத்திரிகை 28.5.1973), கொழும்பு.

இராசகோபால், சு., இலங்கை தமிழக பிராமி எழுத்துக்கள் ஓர் ஒப்பாய்வு, (கையெழுத்துப் பிரதி)

இராசவேலு, க., 1995, நெகனூர்பட்டி தமிழ் பிராமிக் கல்வெட்டு, சித்தன்னவாசல் களஆய்வு, ஆவணம், தமிழகத் தொல்லியல் கழகம், 6:7-12.

இராசவேலு, க. திருமூர்த்தி, கோ., 1995, தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள், பண்பாட்டு வெளியகம், சென்னை.

இராசு, செ. 1963, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள், தஞ்சாவூர்.

இராஜன், கா., 1994, கொடுமணல் அகழாய்வு ஓர் அறிமுகம், மனோபதிப்பகம், தஞ்சாவூர்.

இராஜன், கா., 1991, குறியீடுகளும், எழுத்துக்களும், கல்வெட்டியலும், தமிழக வரலாறும், (ப.ஆ), சுப்பராயலு, ஏ. இராசு, செ., கல்வெட்டியல்துறை. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1-12.

காசிநாதன், நடன., 1995, தமிழர் காசு இயல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

கிருஷ்ணராசா, செ., 1998, தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும், பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம்.

கோவையூர் கிழார், 1972, கொங்குநாட்டு வரலாறு, முதலிரண்டு பகுதிகள், கோயம்புத்தூர்.

சதாசிவபண்டாரத்தார், தி. வை. 1974, பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

சபாநாதன், குல. 1953, (பதிப்பு), யாழப்பாணவைபவமாலை, கொழும்பு.

சிவகளை சுப்பையா, 1967, கொங்கு நாட்டுக்கோயில்கள், சென்னை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிவசாமி, வி., *1974*, யாழப்பாணக் காசுகள், நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள் (ப.ஆ), வித்தியானந்தன், சு., அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கை கிளை, கொழும்பு. 26-36.

சிற்றம்பலம், சி.க., *1993*, யாழ்ப்பாண தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

சிற்றம்பலம், சி.க., *1996*, ஈழத்து இந்து சமய வரலாறு, பாகம் *1*, கி.பி. 500 வரை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, கொழும்பு.

சிற்றம்பலம், சி.க., *1998*, ஈழம் சில வரலாற்றுக் குறிப்புக்கள், வரலாற்றுக் கலம்பகம், பேரா சிரியர் செ. இராசு அவர்களின் மணிவிழா ஆய்வுக்கோவை, மனோபதிப்பகம், தஞ்சாவூர். *113-116*.

சீதாராமன், ஆறுமுக, *1994*, தமிழகத் தொல்லியல் சான்றுகள் அண்மைக்காலக் கண்டு பிடிப்புகள், தொகுதி-*1*. தனலஷ்மி பதிப்பகம், தஞ்சாவூர்.

சீதாராமன், ஆறுமுக. *1996*, தென்னிந்தியக் காசுகள் புதிய கண்டுபிடிப்புகள், வரலாறு ஆய்விதழ்; 6:89-8.

சீதாராமன், ஆறுமுக, *1989*, மறவர் நாணயங்கள், 9.12. *1989* இல் சிவகங்கை வரலாற்றுப் பேரவையில் நடந்த வரலாற்றுக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை.

சீதாராமன், ஆறுமுக. *1986*, இராஜராஜனின் ஈழக்காசுகள், தமிழ் நாடு நாணயவியல் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை.

சீதாராமன், ஆறுமுக, *1985*, பல்லவர் காசுகள், CoinsX 95 Madras, Madras Coins Society, Madras.

சீதாராமன், ஆறுமுக, *1986*, தஞ்சைமராட்டியர் காசுகள், ஆவணம், தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.

சிறிவீர, டபிள்யு. ஐ. *1985*, துட்டகைமுனு - எல்லாளன் வரலாற்று நிகழ்வு : ஒரு மறு மதிப் பீடு, இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும், யாழ்ப்பாணம் : 119 – 140.

சுசீந்திரராஜா, சு. *1999*, தமிழ் மொழியியற் சிந்தனைகள், (ப. ஆ), இராசாராம், சு. சுபதினி, ஆர், ரிஷபம் பதிப்பகம், சென்னை.

சுப்பராயலு, எ., *1983*, பொருளியலும் வணிகமும், தமிழ நாட்டு வரலாறு சங்ககாலம் -வாழ்வியல். தமிழ்நாட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை :146-156.

சேதுராமன், என். 1989, பாண்டியர் வரலாறு(கி.பி.550-1371), கும்பகோணம்.

சௌந்தரபாண்டியன், சு., 1997, பாலி மொழி பெற்ற தமிழ்ச் சொற்கள், கல்வெட்டு, தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை. 50-51:

சேதுப்பிள்ளை, ரா.பி., 1956, தமிழக ஊரும் பேரும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

ஞானப்பிரகாசர், சுவாமி.. 1928, யாழ்ப்பாண வைபவவிமர்சனம், அச்சுவேலி.

தங்கேஸ்வரி, க, 1995, கலிங்கமாகோன் வரலாறு, அன்பு வெளியீடு, ஆரையம்பதி

திருநாவுக்கரசு,க.த., 1978, இலங்கையில் தமிழர் பண்பாடு, சேகர்பதிப்பகம், சென்னை.

பத்மநாதன், சி. 1992, ஆரியச்சக்கரவர்த்திகள் காலம், யாழ்ப்பாணஇராச்சியம், (ப.ஆ) சிற்றம்பலம், சி.க. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.

பத்மநாதன், சி. 1962, வன்னியர். பேராதனை.

பத்மநாதன், சி. 1972, தமிழ்ச் சாசனங்களும் ஈழ வரலாற்றாராச்சியும், இளந்தென்றல், கொழும்பு.

பத்மநாதன், சி. 1984, இலங்கையில் தமிழ் வணிக கணங்களும் நகரங்களும்(கி.பி1000.1200), சிந்தனை, தொகுதி.2. யாழ்ப் பாணம்.

பத்மநாதன், சி. 1998, (ப.ஆ), தக்ஷிணகைலாச புராணம், இலங்கை இந்து கலாசாரத் திணைக்கள வெளியீடு. கொழும்பு.

பாலசுப்பிரமணியம், குடவாயில். 1988, ஈழத்து வெற்றியும் ராஜராஜன் காசும், தினமணி (9.12.1988)

புஷ்பரட்ணம், ப., 1993, பூநகரி-தொல்பொருளாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.

புஷ்பரட்ணம், ப., 1998. பூநகரியில் கிடைத்த அரிய சங்ககால நாணயங்கள், ஆவணம், தமிழகத் தொல்லியல் கழகம் 9 :114-119.

www.tamilarangam.net



புஷ்பரட்ணம், ப., 1998அ, அண்மையில் வட இலங்கையில் கிடைத்த லஷ்மி நாணயங்கள் ஒரு மீள் பரிசீலனை, ஒன்பதாவது தமிழக தொல்லியல் கழக ஆய்வரங்கு, புதுக்கோட்டை. 1-12.

புஷ்பரட்ணம், ப., 1999அ, வட இலங்கையில் அரச தோற்றமும் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களும், தமிழ் நாட்டு நாணயங்கள், அருங்காட்சியகங்கள். சென்னை.: 6-9.

புஷ்பரட்ணம், ப., 1999ஆ, தென்னிலங்கையில் கிடைத்த பண்டைய தமிழ் நாணயங்களின் வரலாற்றுப் பின்னணி, நாவாவின் ஆராய்ச்சி, ஜூலை 49 : 55-70.

பூங்குன்றன், ஆர்., 1989, செங்கம் நடு கற்களில் தொறுப்பூசல், தொல்குடிகள், அரசியல், ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

பூங்குன்றன், ஆர்., 1999, பண்டைய தமிழகத்தில் அரச உருவாக்கம், முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வேங்கடசாமி, மயிலை. சீனி., 1983, இலங்கையில் தமிழர், தமிழ்நாட்டு வரலாறு சங்ககாலம் அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை :592 -639.

வேங்கடசாமி, மயிலை. சீனி., 1983, அடிப்படைச் சான்றுகள் I, தமிழ்நாட்டு வரலாறு சங்ககாலம் அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை :37-91

வேலுப்பிள்ளை, ஆ., 1986, தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.

வேலுப்பிள்ளை, ஆ., 1985, தமிழர் சமய வரலாறு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை.

www.tamilarangam.net

www.tamilarangam.net

# இந்நூல்

தொல்லியல் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இந்நூலில் இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறு, பண்பாடு தொடர்பாக இதுவரை கூறப்படாத புதிய கருத்துக்கள் உரிய சான்றாதாரங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளது. தமிழ், சிங்களப் பண்பாடு இந்தியாவின் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ந்தாலும் அவற்றிடையே பிரதேசரீதியான தனித்துவம், ஒருமைப்பாடு பண்டுதொட்டு இருந்து வந்ததையும், இலங்கையிலேயே உருவான சுதேச தமிழ் அரச மரபிலிருந்து வந்தவர்களே பண்டைய காலத்தில் இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்கள் என்ற கருத்தையும் த்க்க சான்றுகளுடன் விளக்குகிறது. இந்நூலின் பெரும்பகுதி இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் பெயர் பொறித்த நாணயங்களை வெளியிட்டு வந்ததையும், கி.பி. 7ஆம் நூற்றாண்டில் ஒரு மன்னன் ஆளுகைக்குட்பட்ட அரசு வட இலங்கையில் தோன்றியதையும் உறுதியான தொல்லியல் சான்று களுக்குரிய புகைப்படங்களுடன் விளக்குவதாக அமைந்துள்ளது.

*இந்நூலாசிரியர் வட இலங்கையில் கி.பி. 7ஆம் நூற்றாண்டிலேயே தமிழ் அரசு ஒன்று உருவாகி விட்டது என்பதை 'பத்தாம் நூற்றாண்டில் கதிரமலையும் சிங்கை நகரும்' என்ற நீண்ட அதிகாரத்தில் பல வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் நிறுவியுள்ளார்.*

**தொல்லியல் பேராசிரியர் எ.சுப்பராயலு**

*தொல்லியல் முதன்மைச் சான்றுகளின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள இந்நூல் இதுவரை அறுதியிட்டுக் கூறப்பட்ட சில முடிவுகளைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.*

**தொல்லியல் இணைப் பேராசிரியர் கா.இராஜன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்